உயிர்நிழல்



Uyirnizhal
VOL VI - N°1 - ISSUE 22

January - March 2006

ஓவியம் : ரஞ்சினி

தவிர்க்கமுடியாத இடைவெளிக்குப் பின் மீண்டும் உயிர்நிழல் உங்களிடம் வருகிறது. உங்கள் பங்களிப்பும் ஒத்துழைப்பும் உயிர்நிழலின் வரவைத் தொடர வைக்கும் என்னும் நம்பிக்கையில் உங்களோடு பேசவும் உங்களுடன் பகிர்ந்து கொள்ளவும் இந்த இதழ் உங்கள் கைகளில்.

பின்னட்டை : முன்னட்டைப் புகைப்படக் கவிதை

முன்னட்டை புகைப்படம் : தமயந்தி

உயிர்நிழல்

Uyirnizhal

22

Vol. VI No. 1
Jan. - Mar. 2006

தயாரிப்பில் உதவி:
பிரியதர்ஷினி
தயாநிதி
பிரஷாந்தி
தமயந்தி

தொகுப்பாசிரியர்கள் :
லக்ஷ்மி
கலைச்செல்வன்

தொடர்புகளுக்கு:
EXIL
27 Rue Jean Moulin
92400 Courbevoie
France.
e-mail: uyirnizhal.exil@wanadoo.fr

அன்பளிப்பு: வருட சந்தா - 15 euros
(4 பிரதிகள : தபாற் செலவு உட்பட)

N° d'enregistrement de l'association : 13023204

வெளியீடு: எக்ஸில்

Uyirnizhal
VOL VI - N°1 - ISSUE 22
January - March 2006
Published by Exil

சுந்தர ராமசாமி 04

கலைச்செல்வனோடு.... ❶
முகம் கொடுத்தலே வாழ்வாகிப்போன காலம்
அருந்ததி 05

முகமது முதல் மார்க்ஸ் வரை
கலையரசன் 07

கண்ணாடியினூடாக....
தமிழில்: தயாநிதி (மூலம்: லைலா ஸ்ரீபன்) 21

கவிதை
ரஞ்சினி (பிராங்ஃபோட்) 28

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம்: எதை நோக்கி?
வி. சிவலிங்கம் 29

சிறுகதை
சி. புஷ்பராஜா 33

மூச்சோடு கலந்து விடு
மெலிஞ்சிமுத்தன் 39

நோர்வேஜியக் கவிதைகள் இரண்டு
தமிழில்: பானுபாரதி (மூலம்: தக்வம் மரிய) 40

புலம்பெயர்நாடுகளில் பெண்ணியக் கருத்துகள்
றஞ்சி (சுவிஸ்) 42

Paradise Now அல்லது ஒரு தற்கொலைப்போராளியின் உருவாக்கம்
வாசுதேவன் 45

உலகமயமாக்கல், "புதிய ஏகாதிபத்தியம்": சில குறிப்புகள்
சமுத்திரன் 50

வாசுகனின் ஓவியக்கண்காட்சி - ஒரு பார்வை
அர்விந் அப்பாதுரை 55

ஜேர்மனி: மாற்றை விரும்பும் சூழலும் தேர்தலும்
சந்துஷ் 57

காதல் பற்றிய ஒரு கவிதை
தமிழில்: கலைவாணி (மூலம்: Simen Skjønsberg) 61

பழி
திருமாவளவன் 62

ஸார்த்தரின் இரண்டாம் வருகை
யமுனா ராஜேந்திரன் 69

நினைவின் ஓரத்தில் ஒரு அழியாச் சுவடு
சந்துஷ் 87

32வது இலக்கியச் சந்திப்பு - பாரிஸ்
மானசி 90

காத்திருப்பு
தமயந்தி 100

சுந்தர ராமசாமி

1931-2005



"அந்தப் பூ காற்றில் எழுதிக் கொண்டிருக்கும்
கவிதையின் பொருள் எனக்குப் புரியவில்லை
அது தன்னைப் பற்றி தன் அழகைப் பற்றி
எழுதவில்லை என்பது தெரிந்தது.
அது துக்கம் கொண்டிருப்பது தெரிந்தது.
அந்தத் துக்கம் மாலையில்
தான் வாடிவிடுவது பற்றி அல்ல
என்பது தெரிந்தது..."

- பசுவய்யா

1

கலைச்செல்வனோடு...

அருந்ததி

முகம் கொடுத்தலே வாழ்வாகிப்போன காலம்...!

உயிர்நிழல் மறுபடியும் வெளிவருகின்றது என்னும் செய்தி இயல்பாகவே இதன் ஸ்தாபகரும், ஆசிரியர்களில் ஒருவருமாகிய கலைச்செல்வனின் நினைவுகளுக்குள் எம்மை இழுத்துச் செல்லும் என்பது தவிர்க்க முடியாததாகிறது. எனக்குள் அவருடனான பலதரப்பட்ட அனுபவங்கள் பதிவாகியிருப்பினும் எனது 'முகம்' திரைப்படத்தில், என் இயக்கத்தில் அவர் நடித்த அந்த படப்பிடிப்புக் காலங்களை எளிதில் மறந்து விடமுடியாது.

'முகம்' வெளிவந்து எல்லோரது பாராட்டுக்களையும் பெற்றபோது, குறிப்பாக இவரது நடிப்பு விதந்துரைக்கப்பட்டது. அதுவரையில், ஒரு சமூகப்போராளியாக, ஒரு எழுத்தாளனாக, ஒரு இலக்கிய வாதியாக அறியப்பட்ட கலைச்செல்வன் ஒரு தேர்ந்த நடிகனாகவும் இனம் காணப்பட்டது என்பது அவருக்குள் ளிருந்த பன்முக ஆளுமைகளில் மேலும் ஒன்றினை வெளிச்சமிட்டுக் காட்டிய தாயிற்று. இசையில் மிகுந்த ஆர்வமும், பாடுவதில் திறமையும் பெற்றிருந்த கலைச்செல்வன், இசை வடிவம் பெற்ற ஈழத்துக் கவிதைகளை அதற்குரிய உணர்ச்சி பாவத்தில் கண்களை மூடியவாறு பாடுவதைக் கேட்பது ஒரு சுகானுபவம், இது அவரது நண்பர்கள் பலருக்கு வாய்த்திருக்கிறது.

எளிதில் உணர்ச்சிவசப்படுவது, கண்ணீர் விடுவது, கோபப்படுவது பின்னர் குழந்தையைப் போல் அணைத்துக் கொஞ்சுவது, மிகப்பெரிய நகைச்சுவையுணர்வு இவையெல்லாமே ஒரு கலைஞனுக்கேயுரிய பண்புகள், இவைகளின் கலவைதான் கலைச்செல்வன்.

எண்பதுகளின் இறுதியில் நானும் அவரும் மற்றைய எம் நண்பர்களுமாகச் சேர்ந்து ஆரம்பித்த 'தேடல்' சஞ்சிகையுடன் எமக்குள் கருத்து வேறுபாடும் அதன் பின்னான விலகலும் ஏற்பட்டது. எனினும்அதற்குப் பிற்பட்ட காலங்களில் ஏதோவோர் வகையில் நாம் இருவரும் ஏறத்தாழ ஒரு தளத்தில் எம்மை அறியாமலே பயணித்ததை இப்போது நினைத்துப் பார்க்க முடிகிறது.

'உயிர்நிழல்'இல் நான் எழுதியதும், 'முகம்' திரைப்படத்தில் இவர் நடித்ததும் கூட இத்தகையது தான். இதுவெல்லாம் வெறும் தற்செயல் நிகழ்வு

களுமல்ல. இங்குதான் முரண்பாடுகளுக் கப்பால் எல்லோரையும் நண்பர்களாக்கும் அவரது வசீகரம் தெரிய வருகிறது. 'முகம்' படப்பிடிப்புக்கான எல்லா ஏற்பாடுகளும் தயார் செய்யப்பட்ட நிலையில் 'யோகேஸ்' என்னும் பாத்திரத்துக்கு கலைச்செல்வன் பொருத் தமாக இருப்பார் என்று என் மனதுக்குப் பட்டது. நான் கேட்டபோது மறுக்காமல் முழு விருப்பத்துடன் சம்மதித்தார். சமூக அரசியல் தளத்தில் தீவிரமாக இயங்கிய அவர், படம் முடியும் வரை திரைக்கதை சார்ந்து எந்தக் குறுக்கீடுமின்றி ஒத்துழைத்ததை இன்றளவும் மறக்க முடியாது. அக்காலங்களில் படப் பிடிப்பின் இடைவேளைகளின்போது பல விடயங்களைப் பற்றிய பேச்சு, தவிர்க்க முடியாமல், அரசியல் பக்கமும் திரும்பும், இப்படியான சந்தர்ப்பங்களில் நாங்கள் மோதிக்கொள்ளாத கணங்கள் மிகக்குறைவு. சில கணங்கள்தான், அதன்பின் சகஜ நிலைக்குத் திரும்புதல் இயல்பாகும். எப்போதும் கிளர்த்திக் கொண்டிருக்கும் ஓர் படைப்பாக்க மனோநிலையின் பிரதிபலிப்புக்களில் ஆக்கக் கூறுகள் மட்டும்தானே புலப்படும். இதுதான் அவரோடு தொடர்ந்து பழகவும், விவாதிக்க வுமான தளங்களை உருவாக்குகின்றன.

எக்ஸில் - உயிர்நிழல் என்று, ஒன்று முடிந்ததும், இன்னொன்று ஆரம்பித்ததற் குமான இடை நிலையில் நம்பிக்கைக்கும், அவநம்பிக்கைக்குமான, விழுதலுக்கும், எழுத லுக்குமான போராட்டமும், அவரது இறுதி வெற்றியும் இத்தகைய அவரது பண்புகளி லிருந்தே சாத்திய மாகியிருக்கின்றன. ஒரு பொதுத்தளத்தில் முரண்பாடுகளுக்கப்பால் ஒருமித்து இயங்கும் சாத்தியம் பற்றி நிறையவே ஆதங்கப்பட்ட கலைச்செல்வன், அதற்கான முயற்சிகளிலெல்லாம் ஈடுபட்டிருக்கிறார்.

ஆனால் வாழ்ந்த காலத்திலும் சரி, அதன் பின்னரும் சரி இவரது முரண்பாடுகளே மிகப் பிரதானமானதாக முக்கியப்படுத்தப்பட்டு, அதன் காரணமாக நிறையவே கல்லடியும் பட்டிருக்கிறார். காரணமின்றியே இவர் மிக அதிகமாக 'விமர்சனம்' என்ற பெயரில் வசை பாடுதலுக்குள்ளாகியிருந்தமை கருத்துகளுக் கப்பால் நிலவும் இன்றைய தனிமனித தாக்கு தல்களின் வீரியம் பற்றிய புரிதலைச் சுலப மாக்கும்.

பல தளங்களில் இவர் எதிரிகளைச் சந்தித் தார். ஒன்று இவரது அரசியல், மற்றையது பழமை வேர்களில் ஆழ்ந்து உக்கிப் போயிருக்கும் 'கலாச்சாரக் காவலர்களால்' ஏளனப்படுத்தப்பட்ட வாழ்வு. இன்னொன்று சமதளத்திலேயே நிலவிய அரசியல் இலக்கிய காழ்ப்பு.

இவற்றிற்கெல்லாம் முகம் கொடுத்தலே வாழ்வாகிப்போன நிலையில் தான் கலைச் செல்வனின் காலம் நகர்ந்தது. இருப்பினும் தனது இருத்தலுக்கான எந்த சமரசத்தையும் தன் வாழ்நாளில் அவர் செய்ததில்லை. ஏறத் தாழ தனது உழைப்பு முழுவதையுமே சஞ்சி கைக்காக செலவளித்தும் கூட அதன் எதிர்த் தாக்கத்தில் எழுந்திருக்க முடியாத சுமை களின் அழுத்தத்தில் நம்பிக்கையினைக் கைவிடாத பயணம் அவருடையது.

ஒரு தலித்தாக எனக்கும் அவருக்கு மிடையிலான முரண்பாடுகள் நிறையவே எழுந்திருக்கிறது. அது சில சமயங்களில் கருத்தியல் தளத்துக்கப்பாலும் சென்றிருக் கிறது. எனினும் அவரை ஒரு தலித்திய எதிரி யாக நிலை நிறுத்துதல் ஒருபோதும் சாத்திய மில்லை. அவருடனான எனது அனுபவத்தி லிருந்து இதனை நான் கூறமுடியும்.

'முகம்' திரைப்படத்தில் வரும் கலைச்செல் வனின் முகம் நிஜத்தில் அவரது முகத்தோடு பெருமளவில் ஒத்துப்போனது. திரைப்படத்தில் இவர் பேசுவதாக ஒரு வசனம் இப்படி வரும். "கொஞ்சமும் ரசனையும், கலையுள்ளமும் இல்லாதவங்களோட எப்படிப் பழகிறது, கஸ்டம், பெரிய கஸ்டம்"

உண்மைதான், தன் வாழ்நாளில் கலைச் செல்வன் இத்தகைய 'பேதம்' பற்றிய பிரக்ஞை அற்றிருந்ததுதான் சிலருக்கு வாய்ப்பாகிப் போயிருக்கிறது.



I. ஜிகாத் உலகமயமாகிறது

"புலியூருக்குப் பயந்து நரியூர் வந்தால்
நரியூரும் புலியூராகியதாம்"

- ஒரு பழமொழி.

உலகை உலுக்கிய லண்டன் மாநகரக் குண்டுவெடிப்புகள், யுத்தம் தற்போது ஐரோப்பாவரை வந்துவிட்டதை நிரூபித்தது. அதுமட்டுமல்லாது தனக்கென்னவென தன்னலம் கருதி வாழ்ந்து வந்த சாதாரண மக்களையும் அரசியல் சகதிக்குள் தள்ளிவிட்டது. இன்றைய உலகில் யாருமே தப்ப முடியாத கசப்பான உண்மையிது. சாதாரண மக்கள் ஒதுங்கி இருந்தாலும் அதே மக்களின் பெயரில்தான் அரசியல் நடத்தப்படுகின்றது. அமெரிக்க, பிரித்தானிய அரசாங்கங்களும், அல்கைதாவும் தமக்குப் பின்புலமாகவுள்ள பொது மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறித்தான் அரசியல் நடத்துகிறார்கள்.

நாலாபக்கமும் இருந்து கிளம்பிய கண்டனக் கணைகள் (வெள்ளையின) ஐரோப்பியரிடம் இருந்து மட்டும் வரவில்லை. பன்னாட்டுக் குடியேறிகளிடம் இருந்தும் வந்தன. குறிப்பாக, அரேபிய அல்லது இஸ்லாமியப் பொது மக்களும் தனிநபர் பயங்கரவாதச் செயல்களை நிராகரிப்பவர்களாக பகிரங்கமாக இனங்காட்டிக் கொண்டனர். அவர்களின் கண்டனம் தம்மீது தொடரும் சந்தேகத்தைத் தடுப்பதற்காக மட்டும் வரவில்லை. அது அவர்களின் முழுமனதான எதிர்ப்பு. அவர்களில் பெரும்பான்மையானோர் குண்டுதாரிகளுக்கு எதிராகவிருப்பது அவர்களின் இயற்கையான குணாம்சம். அதாவது. அவர்களின் வர்க்கம் சார்ந்த குணாம்சம். ஐரோப்பாவில் குடியேறி வாழும் பிறநாட்டு மக்களைப் போலவே, அரேபிய, இஸ்லாமியக் குடியேறிகளும் தத்தமது நாடுகளில் நிலவும் பொருளாதாரக் கஷ்டங்கள், சமுதாய இன்னல்களில் இருந்து தப்பிப் பிழைப்பதற்காக வந்து சேர்ந்தவர்கள் தாம். இவர்கள் மேற்கு ஐரோப்பாவில் வளமான வாழ்வு, பொருதார வளங்கள் மட்டுமல்லாது பாதுகாப்பையும் தேடி வந்த கீழ் மத்தியதர மக்கள் அல்லது வசதியான வாழ்வு கிடைத்த பின்னர் மத்தியதர வர்க்க சிந்தனையை வரித்துக் கொண்ட உழைப்பாளர் வர்க்கம். என்றுமே வாழ்க்கையை அனுபவிப் பவர்கள், அற்ப ஆயுளில் மரணிக்க விரும்புவதில்லை.

மேற்கத்தைய அரசியல்வாதிகளும், புத்திஜீவிகளும் தமது மக்களுக்குப் பிரச்சாரம் செய்வதைப்போல, தற்கொலைக் குண்டுதாரிகளின் தத்துவத்திற்கும் இஸ்லாமிய மதத்திற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. அல்கைதாவும் பிற இஸ்லாமிய இயக்கங்களும் இஸ்லாமைத் தமது நிறுவனத்தின் அரசியல் தத்துவமாக பயன்படுத்துவதுடன் தாம் மட்டுமே இஸ்லாமிய மதத்தின் மீட்பாளர்களாக, அதையும் ஆயுதப் போராட்டத்தின் மூலம் மட்டுமே சாதிக்கமுடியும் என நம்புபவர்கள். அவர்களைப் பொறுத்த வரையில் தற்கொலைக் குண்டுவெடிப்புகள் பரந்துபட்ட ஆயுதப் போராட்டத்தின் ஒரு பகுதி. மற்றும்படி தற்கொலை செய்வதை குர்ஆன் கௌரவக் குறைவான குற்றமாகப் போதிக்கின்றது. மேலும் பல இஸ்லாமிய மதத் தலைவர்களும், மத நம்பிக்கையாளரும் அரசியலைப் புறக்கணித்து ஆன்மீகத்தை முன்னெடுக்கவே விரும்புகின்றனர். இந்த இடத்தில் மீண்டும் வர்க்க அரசியல் தன்னை இனம் காட்டுகின்றது. தமது வாழ்க்கைக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் பெற்றுக் கொண்ட மத்தியதர வர்க்கத்திற்கு "இஸ்லாம்" ஆன்மிகத் தேடலை மட்டும் பூர்த்தி செய்தால் போதும். அப்படியாயின் அல்கைதா போன்ற இயக்கங்கள் எப்படித் தோன்றின? அவர்களின் ஆதரவுத்தளம் எங்கேயுள்ளது? இயக்க உறுப்பினர்களின் பின்னணி என்ன?

சவுதிஅரேபியா:

இது அல்கைதாவின் பிறந்த வீடு மட்டுமல்ல, இஸ்லாமிய அடிப்படை வாதத்தின் நதிமூலமும் அதுதான். 'பெற்றோல்' டொலர்கள் என்று அழைக்கப்படும், பெற்றோல் விற்று வந்த லாபம் செய்த முதலீடு,

இஸ்லாமிய அடிப்படைவாதமாகப் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.

சவூதிஅரேபியா, இஸ்லாமியப் புனித ஸ்தலங்களான மெக்கா, மெதினாவைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அத்துடன் இறைதூதரும், மத ஸ்தாபகருமான முகம்மதுவின் தாயகம். இந்தக் காரணங்களுக்காக மட்டுமே சவூதிஅரேபியாவைத் தாம் மதிப்பதாகவும், ஆட்சியாளரை அல்ல என சர்வதேச இஸ்லாமிய அடிப்படைவாதிகள் கூறுகின்றனர். சவூதி அரேபிய மன்னர் பரம்பரைபரம்பரையாக 'புனித ஸ்தலங்களின்' பாதுகாவலர் பட்டத்தைப் பெற்றுக்கொள்கின்றார். முதலாம் உலக யுத்த முடிவில் ஆங்கிலேயர் உதவியுடன் அரேபியாவில் ஆதிக்கம் செலுத்திய துருக்கியரை விரட்டிவிட்டு ஆட்சியமைத்தவர்கள்தான் சவூதி மன்னர் குடும்பம். துருக்கி மன்னர் பரம்பரை ஓட்டோமான் ஆட்சியின் முடிவு, இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் அல்லது இஸ்லாமிய தாயகத்தின் முடிவாக அமைந்தது.

1923 :

புதிய தலைமுறை இஸ்லாமிய அடிப்படைவாதிகளுக்கு நினைவு கூரப்படவேண்டிய முக்கியமான ஆண்டு. அப்போதுதான் சுமார் அறுநூறு வருடங்கள் நிலைத்திருந்த, இறைதூதர் முகம்மது நபியினால் நிறுவப்பட்டு, ஷரியா எனப்படும் மதச் சட்டங்களால் ஆளப்பட்டு, அனைத்து முஸ்லிம்களுக்குமான தாயகமாகக் கருதப்பட்ட மாபெரும் அரசு மறைந்து போனது. அதன்பின் வந்த காலங்கள் ஐரோப்பியக் காலனியவாதிகளின் ஆதிக்கத்தின்கீழ் வந்தன.

ஐரோப்பியர்களான ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும் அரேபியர்மீதான அன்பினால் துருக்கியிடம் இருந்து விடுதலை பெற்றுக் கொடுக்கவில்லை. முன்னாள் இஸ்லாமிய அரசு பல்வேறு தேசிய அரசுகளாகப் பிரிக்கப்பட்டது. அங்கே உள்ளூர்த் தலைவர்கள் மன்னர்களாக முடிசூட்டப்பட்டனர். தொடர்ந்து முதலாளித்துவப் பொருளாதாரம், ஐரோப்பியக் கல்வி முறை என்பன அறிமுகப்படுத்தப்பட்டன. இன்றைய ஜிகாத் குழுக்கள், தீவிர இஸ்லாமியக் கட்சிகள் தமது பிரதேசத்தில் ஐரோப்பியக் கலாச்சாரமயப்படுத்தலை வன்முறைகொண்டு எதிர்ப்பதை, பிறர் நினைப்பதற்கு மாறாக, காலனீய எதிர்ப்புப் போராட்டமாகக் கருதுகின்றனர்.

"இன்றைய ஜிகாத் குழுக்கள், தீவிர இஸ்லாமியக் கட்சிகள் தமது பிரதேசத்தில் ஐரோப்பியக் கலாச்சாரமயப்படுத்தலை வன்முறைகொண்டு எதிர்ப்பதை, பிறர் நினைப்பதற்கு மாறாக, காலனிய எதிர்ப்புப் போராட்டமாகக் கருதுகின்றனர்."

ஆரம்ப காலங்களில் இஸ்லாமிய மத அடிப்படைவாத இயக்கங்களை அமெரிக்காவோ அல்லது மேற்கு ஐரோப்பாவோ தமக்கு எதிரான சக்திகளாகக் கருதவில்லை. அன்று அவர்களின் போராட்டம் தத்தமது நாடுகளில் செல்வாக்குப் பெற்ற (ஐரோப்பியப்பாணி முதலாளித்துவப் பொருளாதாரத்தின் எதிர்விளைவான) கம்யூனிஸ்டுகளுக்கும் சோசலிஸ்டுகளுக்கும் எதிராகவே இருந்தது. மேற்கத்தைய நாடுகளைப் பொறுத்தவரை இது விரும்பத்தக்க ஜிகாத். அப்போதும் பல புத்திஜீவிகள் இஸ்லாமியமத அடிப்படைவாதத்தால் திரட்டப்படும் பிற்போக்காளரின் எதிர்கால அபாயம் பற்றி எச்சரித்தனர். ஆயினும் இதே கம்யூனிஸ்டுகளும் சோசலிஸ்டுகளும் மேற்கத்தைய நாடுகளுக்கும் எதிரிகளல்லவா! அவர்களை அழிக்க எந்தப் பிசாசுடனும் கூட்டுச்சேர முன்வந்தனர். இஸ்லாமிய அடிப்படைவாதக் கருத்துக்கள் மிக வேகமாகப் பரவுவதை ஒரு நல்ல விடயமாகவே பார்த்தனர். அமெரிக்காவின் இணைபிரியா நண்பனான சவூதிஅரேபியா இஸ்லாமிய அடிப்படைவாத சித்தாந்தத்தை உலகநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வல்லமையை பெற்றுக் கொண்டதும் மேற்குறிப்பிட்ட பின்னணியில்தான். அறுபதுகளின் இறுதியில் உலகச்சந்தையில் திடீரென ஏறிய பெற்றோலின் விலை சவூதி அரேபியாவுக்கு முன்னர் கண்டிராத செல்வத்தைக் கொண்டு வந்தது. கோடிகோடியாக வந்து குவிந்த இலாபப் பணத்தை ஊதாரித்தனமாகச் செலவழித்த மன்னர் குடும்பம் ஒரு பகுதியை பொது மக்களுக்கும் கொடுத்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியது. அதேநேரம் பெருமளவு பணத்தை மதநிறுவனங்களுக்கும் அள்ளிக் கொடுத்தது. சவூதிமன்னர் பரம்பரை இஸ்லாமிய மதத்தின் ஒரு பிரிவான வாஹபிஸ வழியைப் பின்பற்றுபவர்கள். கடும் போக்காளர்களான வாஹாபிகள் ஒரு காலத்தில் பலரால் அறியப்பட்டிராத மிகச்சிறுபான்மையினராக இருந்தவர்கள். சவூதி மன்னரின் அரசியல் பொருளாதார பலம் அவர்களைச் சவூதிஅரேபியாவில் ஒரே ஒரு அங்கீகரிக்கப்பட்ட

மதப்பிரிவினராக்கியது. அரசியல் செல்வாக்கைப் பெற்றுக்கொண்ட வாஹாபிகள் தமது மதக் கொள்கைகளை பிற இஸ்லாமிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்ய விரும்பினர்.

சவுதி அரேபியாவில் இருந்து வாஹாபிகள் வெளியிட்ட பிரசுரம் ஒன்றில், வெகுவிரைவில் தமது கொடி லண்டனில் பறக்கும் என எழுதியுள்ளனர். அதன் அர்த்தம் நாம் வெகுவிரைவில் முழுஉலகையும் இஸ்லாமியமயப்படுத்துவோம் என்பதுதான். 'மரபுவழி' இஸ்லாமிய நாடுகளான எகிப்து, பாலஸ்தீனம் ஆகிய நாடுகளில் தோன்றிய இஸ்லாமிய அடிப்படைவாத இயக்கங்கள், கட்சிகள் அனைத்தும் சவுதி அரேபியாவின் நிதிஉதவியில் வளர்ந்தன. முன்னாள் சோவியத் யூனியனில் இருந்து உடைந்த 'புதிதாக' இஸ்லாமைக் கண்டு பிடித்த மத்திய ஆசிய நாடுகளில் சவுதி அரேபியா புதிய மசூதிகளைக்கட்டிக் கொடுத்தது. முஸ்லிம் என்ற பெயருடன் மட்டும் வாழ்ந்து வந்த பொஸ்னியர்களுக்கு இஸ்லாமியமதக் கல்வியூட்டியது. இன்றும் கூட, அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் இயங்கும் இஸ்லாமிய மத நிறுவனங்கள் சவுதி அரேபியாவில் இருந்து நேரடி நிதிஉதவியைப் பெற்று வருகின்றன. அங்கெல்லாம் கடுமையான மதச் சட்டங்களைக் கொண்ட வாஹாபிச சித்தாந்தம் போதிக்கப்படுவதில் சந்தேகத்திற்கு இடமில்லை. ஆனால், ஆச்சரியப்படத்தக்கதாக இதுவரையில் அமெரிக்க, ஐரோப்பிய அரசுகள் சவுதி அரேபிய நிதி உதவிபற்றி ஆராய்ந்ததில்லை.

சவுதி அரேபியாவில் மட்டுமல்ல, எண்ணை வளத்தால் திடீர் பணக்காரநாடுகளாக மாறிய குவைத் முதல் ஓமான் வரையிலான வளைகுடாநாடுகளிலும் தமது இளஞ் சந்ததியினருக்கு மதஅடிப்படைவாதக் கல்வியூட்டுவதில் ஆட்சியாளர்கள் ஆர்வம் காட்டினர். பிற்போக்கு மதவெறி தமது இருப்பிற்கு சாதகமானது என அதிகாரத்தைக் கையில் வைத்திருக்கும் ஷேக்குகள் நினைத்திருக்கலாம். ஆனால், 'பூனைக்கும் தோழன்; பாலுக்கும் காவல்' என்று இரட்டை வேடம் போடும் இந்த சர்வாதிகாரிகளின் சுயரூபம்

"சவூதிஅரேபியாவில் இருந்து வாஹபிகள் வெளியிட்ட பிரசுரம் ஒன்றில், வெகுவிரைவில் தமது கொடி லண்டனில் பறக்கும் என எழுதியுள்ளனர். அதன் அர்த்தம் நாம் வெகுவிரைவில் முழு உலகையும் இஸ்லாமிய மயப்படுத்துவோம் என்பதுதான்."

அம்பலப்பட்ட காலத்தில்தான் அல்கைதா உருவானது. மதவெறியூட்டி வளர்க்கப்பட்ட இளைய தலைமுறைக்கு சுயமாகச் சிந்திக்கும் அறிவு வந்தபோது, தமது அரசியல் தலைவர்கள் மாபெரும் அயோக்கியர்கள் என்பது தெரிந்தது.

இதற்கிடையே ஒரு காலத்தில் எகிப்திய நாசர், லிபிய கடாபி, மற்றும் பாத் கட்சியினால் உருவாக்கி வளர்க்கப்பட்ட அரபு தேசிய சித்தாந்தம் பலவீனப்பட்டுச் சிதைவடைந்து மக்கள் ஆதரவை இழந்து விட்டிருந்தது. அப்போது ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்ப வந்தது இஸ்லாமியவாதம். அரபு தேசியம் இன/மொழி அடிப்படையில் அரபு மக்களை மட்டும் சகோதரர்களாகப் பார்த்தது. இதற்கு மாறாக, இஸ்லாமியவாதம் ஆபிரிக்கா முதல் இந்தோனேசியாவரை பரந்து வாழும் பன்மொழிபேசும் மக்களை சகோதரர்களாகப்பார்த்தது. இதனடிப்படையில் பார்த்தால் அல்கைதா போன்ற இயக்கங்களின் ஆதரவுத்தளம் பிரமாண்டமானது. அரபு நாடுகளில் மட்டும் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழவில்லை. பெரும்பான்மையான முஸ்லிம்கள் இந்தோனேசியா, பங்களாதேஷ், பாகிஸ்தான், இந்தியா ஆகியநாடுகளில் வாழ்கின்றனர்.

எழுபதுகளில் ஆப்கானிஸ்தானில் சோவியத் இராணுவத்தை எதிர்த்துப் போரிட்ட பன்னாட்டுத் தொண்டர் படையணிகளைச் சேர்ந்தவர்கள், பனிப்போர் முடிவில் புதிய அரசியல் - இராணுவ சக்தியாக உருவாகினர். அவர்களில் ஒரு சிலர் தமது அரசியல் எதிர்காலத்தை வரையறுத்து தளம் என்று அர்த்தப்படும் 'அல்கைதா' என்ற இயக்கத்தை உருவாக்கியபோது, தாம் விரைவில் உலகப்புகழ் பெறுவோம் என எதிர்பார்த்திருக்கமாட்டார்கள். 'பயங்கரவாதத்திற்கெதிரான போர்' மூலம் அமெரிக்கா தேடிக் கொடுத்த சர்வதேசப் புகழ் அல்கைதாவின் அரசியல் இலக்கை விரைவுபடுத்தியது

என்றுதான் கூறவேண்டும். இன்று பல அரசியல் ஆய்வாளர்கள் அல்கைதா என்பது ஒரே தலைமையின்கீழ் இயங்கும் நிறுவனப்பட்ட அமைப்பல்ல என ஏற்றுக்கொள்கின்றனர். குறிப்பாக, மேற்கத்தைய ஆய்வாளர்கள் ஒரு காலத்தில் அல்கைதா என்பது பின்லாடனைத் தலைவராகக் கொண்ட ஒரு சிறிய பயங்கரவாத இயக்கம் என்ற தமது அரசுகளின் பிரச்சாரத்தை மறுத்துரைக்க முன்வந்துள்ளனர். அவர்கள் இப்போது அல்கைதா இயக்கம் பலருக்கு 'குத்தகைக்கு' விடப்பட்டுள்ளதாகக் கூறி வருகின்றனர்.

ஈராக் மீதான அமெரிக்கப் படையெடுப்பும் ஆக்கிரமிப்பும் உலகில் 'அல்கைதா அபாயத்தை' அதிகரித்துள்ளதாகப் பலரும் உணருகின்றனர். ஈராக் போர் எதிர்பாராத விதமாக இஸ்லாமியவாதிகளுக்குப் புதிய கூட்டாளிகளைத் தேடிக் கொடுத்திருக்கிறது. ஒரு காலத்தில் எதிரெதிர்த் துருவங்களில் இருந்த அரபுத் தேசியவாதிகளும் இஸ்லாமிய மத அடிப்படைவாதிகளும் சந்தர்ப்பவாதக் கூட்டணி அமைத்துள்ளமை மேற்குலகிற்குப் புதிய தலையிடியைத் தந்துள்ளது. ஈராக் மீது படையெடுப்பதற்கு அமெரிக்கா கூறிய காரணங்களில் ஒன்று, அன்றைய சதாமின் அரசு அல்கைதாவுடன் தொடர்பு வைத்திருந்தது என்பதுதான். அந்நேரம் அப்படி எதுவும் உண்மையில் இருக்கவில்லை. ஆனால், பின்னர் நிகழ்ந்த அமெரிக்கப் படையெடுப்பும் ஆக்கிரமிப்பும் அந்தத் தொடர்பை உருவாக்கி விட்டிருக்கிறது. அதன் அர்த்தம் அரபுத் தேசியவாதிகள் இஸ்லாமிய வாதிகளாக மாறிவிட்டார்கள் என்பதல்ல. இது சீனாவில் யப்பானிய ஆக்கிரமிப்பிற்கெதிராக தேசியவாத குலாமிந்தாங்கும் கம்யூனிஸ்ட்கட்சியும் ஒன்று சேர்ந்து போராடியது போன்றது.

2003:

பாகிஸ்தானில் ஆப்கானிஸ்தான் எல்லையோரமாகவுள்ள தெற்கு வாசிரிஸ்தான் மாகாணத்தில் அல்கைதா, தாலிபான், பாத் கட்சி இவர்களுடன் பல்வேறு சர்வதேச இஸ்லாமியவாதக் குழுக்கள் இரகசியமாகச் சந்தித்து ஒருங்கிணைந்த வேலைத் திட்டம் பற்றிக் கலந்துரையாடினர். இதன்படி போராட்ட வழிமுறைகள், இலக்குகள், புதிய உறுப்பினர்களைச் சேர்த்தல், பயிற்சியளித்தல், நிதி சேகரிப்பு இன்னபிற பற்றி பல முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. பாகிஸ்தானில் அல்கைதா தலைவர்கள் வேட்டையாடப்பட்ட பொழுதும் ஈராக்கில் இராணுவத் தேடுதல் வேட்டைகளின்போதும் பிடிபட்ட ஆவணங்கள் மேற்குறிப்பிட்ட அமைப்பு இயங்கி வருவதை ஆதாரப்படுத்தி உள்ளன. மேலும் 'அமைதியான' (அல்லது ஆக்கிரமிப்பாளருடன் ஒத்துழைக்கும்) குர்திய தன்னாட்சிப் பிரதேசத்தில் நடக்கும் குண்டுவெடிப்புகளுக்கு 'அன்சார் - உல் - இஸ்லாம்' எனப்படும் குர்திய இஸ்லாமியவாதிகளின் இயக்கமே பொறுப்பாகும். அன்சார் - உல் - இஸ்லாம், பாத் கட்சியுடன் கூட்டணி ஏற்படுத்திய பிறகே அதன் தாக்குதல்களில் தீவிரத்தன்மை தெரிகின்றது. அதேநேரம் ஆப்கானிஸ்தானில் ஓரிரு வருடங்கள் 'காணாமற் போயிருந்த' தலிபான் மீண்டும் புதிய உத்வேகத்துடன் தாக்குதல்களில் ஈடுபடுவதும் குறிப்பிடத்தக்கது.

முன்னர் ஈராக்கில் சதாமின் கீழ் செயற்பட்ட புலனாய்வுப் பிரிவு அமெரிக்காவிலும், அதனோடு கூட்டுச் சேர்ந்த ஐரோப்பிய நாடுகளிலும் தாக்குதல்களை நடத்தத் திட்டமிட்டிருக்கலாம் என்ற சந்தேகம் மேற்கத்தைய நாடுகளின் உளவுப்பிரிவுகளுக்கு ஏற்பட்டிருந்தாலும் அதுபற்றி இதுவரை ஆராயப்படவில்லை அல்லது ஆராயவே விருப்பமில்லையோ தெரியாது. வியட்நாம் முதல் யூகோஸ்லாவியா வரையிலான நாடுகள் அமெரிக்காவின் குண்டு வீச்சுகளால் பாதிக்கப்பட்டபோதிலும் அவை எதுவும் அமெரிக்காவினுள் தாக்குதல் நடத்துவதுபற்றி எண்ணியிருக்கவில்லை. ஆனால் "நீங்கள் இங்கே வந்தால் நாங்கள் அங்கே வருவோம்" என்ற போர்த்தந்திரம், பிறநாடுகளை ஆக்கிரமிக்க விரும்பும் ஏகாதிபத்தியப் போக்கிலான தேசங்களின் வயிற்றில் புளியைக் கரைக்கும் விடயம் என்பதில் ஐயமில்லை.

நவீன உலக வரலாற்றில் ஈராக்கும் ஆப்கானிஸ்தானும் புதியதொரு திருப்புமுனையை ஏற்படுத்தியுள்ளன. குறிப்பாக, ஐரோப்பிய நாடுகளில் வாழும், அங்கேயே பிறந்து வளர்ந்த இரண்டாம் தலைமுறை முஸ்லிம் இளைஞர்களைத் தீவிரவாதிகளாக மாற்றியுள்ளது. இவர்களது மனதில் ஏற்பட்ட

"மேலும் தீவிரவாதத்தின் வேர்களை வெளிநாட்டு விவகார அரசியலுக்குள் தேடாமல் இஸ்லாம் என்ற மதத்திற்குள் தேடுதல் பிழையான அணுகுமுறை என்பதுடன் இது பிரச்சனையை நீடிக்கவே வழிவகுக்கும்."

"'அப்பாவிகள் என்று யாரும் இல்லை' என்பது தீவிரவாதிகளின் பிரச்சாரம். 'நீங்கள் எங்களைப் பற்றிக் கவலைப்படாவிட்டால், நாங்கள் உங்களைப்பற்றிக் கவலைப்படமாட்டோம்' என்ற தத்துவத்தினடிப்படையில் செயற்படும் தீவிரவாதிகள் ஐரோப்பாவில் சமூகங்களைப் பிரித்து வைக்க விரும்புகின்றனர்."

தீவிரத்தன்மை ஈராக், ஆப்கானிஸ்தான் படையெடுப்புகள் ஏற்படுத்திய கோபாவேசத்தின் விளைவு. பிரித்தானியப் பிரதமர் என்னதான் இலண்டன் குண்டுவெடிப்புகளுக்கும் ஈராக் போருக்குமிடையில் தொடர்பில்லை என மறுத்து வந்தாலும், உண்மையை மறைக்க முடியாது. மேலும் தீவிரவாதத்தின் வேர்களை வெளிநாட்டு விவகார அரசியலுக்குள் தேடாமல் இஸ்லாம் என்ற மதத்திற்குள் தேடுதல் பிழையான அணுகுமுறை என்பதுடன் இது பிரச்சனையை நீடிக்கவே வழிவகுக்கும்.

தாடி வைத்தவர்கள், மரபுவழி உடையணிந்தவர்கள் என்று பார்த்து சந்தேகப்படுவதென்பது முட்டாள்தனமானது என்பதை ஐரோப்பியப் பொலிஸார் தற்போது ஒத்துக் கொள்கின்றனர். அதுமட்டுமல்ல, ஆயுதப்போராட்டத்தை அல்லது வன்முறையை ஆதரித்துப் பேசும் மத போதகர்கள், மற்றும் ஆதரவாளர்களையே ஐரோப்பியப் பொலிஸார் இவ்வளவு காலமும் கண்காணித்து வந்தனர். ஆனால், இவர்களெல்லாம் வெறும் வாய்வீச்சு வீரர்கள் என்பதும் செயல்வீரர்கள் இந்தக் கூட்டத்தோடு சேருவதில்லை என்பதும் தற்போது ஊர்ஜிதமாகியுள்ளது. செயல்வீரர்கள் நவநாகரீக உடையணிந்து ஐரோப்பிய கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் சமத்துப்பிள்ளைகளாக இருந்து வருவது நிலைமை எவ்வளவு சிக்கலானது என்பதைக் காட்டுகின்றது. ஆயினும் தற்கால சூழ்நிலை ஆபத்தான காலங்களை நோக்கி நகர்வதை அடுத்தடுத்து நடைபெறும் சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன. அரபுக்காரரைப் போல் தோற்றமளித்த பிரேஸில் நாட்டுக்காரரை இரயில் நிலையத்தில் சுட்டுக் கொன்ற லண்டன் பொலிஸின் செயல் வரப்போகும் ஆபத்துகளை கட்டியம் கூறியது. வெள்ளைக்காரர் போல் தோற்றமளிக்காத மத்தியகிழக்கு அல்லது தென்னாசிய நாட்டவர்கள், கறுப்பினத்தவர்கள் அனைவரும் ஒரு பக்கம் சமூக வழக்குகளை மீறும் வெள்ளையரின் வன்முறைக்கும், மறுபக்கம் பொலிஸின் கெடுபிடிக்கும் பலியாகும் சம்பவங்கள் தொடரலாம். வெள்ளையர்களுக்கு, அது பொலிஸாக இருந்தாலும், இந்தியர், இலங்கையர், பாகிஸ்தானியர் என்று வித்தியாசம் பார்க்கத் தெரியாது.

எந்தப் போர் நெறிகளுக்கும் உட்படாத பயங்கரவாதத்தை எதிர்த்துப் போரிடுவது கடினமானது என்பது ஐரோப்பிய அரசுகளுக்கு நன்கு தெரியும். ஆதலால் வருங்காலத் தாக்குதல்களைத் திட்டமிடுபவர்களை முதலில் பிடிக்க வேண்டும் என்ற நோக்குடன் சிறுபான்மை சமூகங்களைத் தங்களுடன் ஒத்துழைக்குமாறு ஐரோப்பியப் பொலிஸார் கேட்டு வருகின்றனர். இந்த சமூகத்தில் பெரும்பான்மையாகவுள்ள மிதவாதிகள் குறைந்த எண்ணிக்கையினரான தீவிரவாதிகளைக் காட்டித்தருமாறு வற்புறுத்தப்படுகின்றனர். குறிப்பாக, முஸ்லிம் சமூகத்திலும், முன்னர் இக்கட்டுரையில் குறிப்பிட்டதுபோல, பூலோக சுகபோகங்களை அனுபவிப்பதால் மத்தியதர வர்க்க சிந்தனைக்குட்பட்ட பெரும்பான்மை மக்கள் மிதவாதிகளாகக் காட்சி தருகின்றனர். அவர்கள் யுத்தங்களும் வன்முறைகளும் தமது இருப்பிற்கே ஆபத்தை உண்டாக்கும் என அஞ்சுகின்றனர். அவர்கள் மதத்தைத் தமது தேசிய வர்க்க அடையாளத்தை வலுப்படுத்தும் காரணியாகவே பார்க்கின்றனர். இதனடிப்படையிலேயே இஸ்லாம் சமாதானத்தை, கருணையைப் போதிக்கும் மதமாக சித்தரிக்கின்றனர். இவர்களைப் போலவே மத்தியதர வர்க்க கிறிஸ்தவர்களும், இந்துக்களும், பௌத்தர்களும் தத்தமது மதங்கள் சமாதானத்தையே வலியுறுத்துவதாகக் கூறி வருகின்றனர். இவர்களது கூற்று மதம் பற்றி ஒருபக்க சார்பான பொழிப்புரை மட்டுமே. உலகில் எல்லா மதங்களும் தமது ஆதிக்கத்தை நிலைநாட்ட வன்முறையில் இறங்கியுள்ளன. அல்லாவிட்டால், அவை ஆயிரக்கணக்கான ஆண்டுகள் உலகளாவிய ரீதியில் நிலைத்து நின்றிருக்க முடியாது.

ஐரோப்பிய முஸ்லிம்கள் மத்தியில் வன்முறைப் போராட்டத்தை ஆதரிக்கும் மதபோதகர்களும்,

பிரச்சாரகர்களும் ஏற்கனவே தமது வேலைகளைச் செய்து முடித்துவிட்டார்கள். இவர்கள் அப்போது செச்சினிய, பொஸ்னிய யுத்தங்களிலேயே கவனம் செலுத்தி வந்ததால், ஐரோப்பிய அரசாங்கங்கள் அவர்களைக் கண்டுகொள்ளவில்லை. குறிப்பாக, சில முஸ்லிம் இளைஞர்கள் களப்பயிற்சி பெற, நிதி வழங்க, தொடர்புகளை ஏற்படுத்த, இன்னபிற காரணங்களுக்காக செச்சினியா போய் வந்ததை ஐரோப்பிய உளவுத்துறையினர் அறிந்திருந்தாலும் நடவடிக்கை எடுக்கவில்லை. அதற்குக் காரணம், ரஷ்யாவிற் கெதிரான செச்சினிய கிளர்ச்சிக்கு உள்ள மேற்குலக ஆதரவு. இப்போது இந்தத் தீவிரவாத முஸ்லிம் இளைஞர்கள் ஈராக் சென்று நகர்ப்புறக் கெரில்லா யுத்தத்தில் பயிற்சிபெற்று வருகின்றனர். இவர்கள் ஈராக் போரை ஐரோப்பாவின் மையத்திற்கு நகர்த்துவார்கள் என்பதில் சந்தேகமில்லை. இந்த இளைஞர்களுடன் சில புதிதாக மதம்மாறிய ஐரோப்பிய (வெள்ளை இன) இளைஞர்களும் சேர்ந்து செயற்படுவது புதிய தலையிடியைத் தோற்றுவித்துள்ளது. இந்த ஐரோப்பிய முஸ்லிம்கள், மத்திய கிழக்காசிய நாட்டு முஸ்லிம்களைவிட தீவிரப் போக்குள்ளவர்களாகக் காணப்படுகின்றனர்.

"அப்பாவிகள் என்று யாரும் இல்லை" என்பது தீவிரவாதிகளின் பிரச்சாரம். இதனை நீண்டகாலமாக பாலஸ்தீன ஹமாஸ் இயக்கமும் கூறிவந்தது. இஸ்ரேல் மற்றும் மேற்குலக நாடுகள் ஜனநாயகத்தைப் பின்பற்றுகின்றன. அதன் அர்த்தம், அங்கு அரசாங்கத்தைத் தெரிவு செய்ய பிரஜைகள் தமது வாக்குரிமையைப் பயன்படுத்துவதன்மூலம் அவர்களும் அரசியலில் பங்குபற்றுகின்றனர். ஆகவே, 'மக்களால் தெரிவு செய்யப்பட்ட' அரசாங்கம் எடுக்கும் முடிவுகளுக்கு பொதுமக்களும் பொறுப்பேற்க வேண்டும். இவ்வாறு போகிறது அவர்களது வாதம். மேலும், ஆப்கானிஸ்தான், ஈராக், பாலஸ்தீனம் இங்கெல்லாம் ஆயிரக்கணக்கான அப்பாவிகள் கொல்லப்பட்டபோது கவலைப்படாத ஐரோப்பியர்கள், எதற்காக சில பத்து ஐரோப்பியர்கள் கொல்லப்படும் போது மட்டும் ஒப்பாரி வைக்கிறார்கள் என்ற கேள்வியை அடிக்கடி கேட்கக் கூடியதாகவுள்ளது. "நீங்கள் எங்களைப் பற்றிக் கவலைப்படாவிட்டால், நாங்கள் உங்களைப்பற்றிக் கவலைப்படமாட்டோம்" என்ற தத்துவத்தினடிப்படையில் செயற்படும் தீவிரவாதிகள் ஐரோப்பாவில் சமூகங்களைப் பிரித்து வைக்க விரும்புகின்றனர். ஐரோப்பிய அரசாங்கங்கள் முழு அரபு அல்லது முஸ்லிம் சமூக மக்களையும் சந்தேகக் கண்கொண்டு பார்த்து அடக்குமுறைகளை ஏவி விட்டால், பெரும்பான்மை மிதவாதிகள் தீவிரவாதிகளுக்கு ஆதரவளிப்பார்கள் எனக் கணக்கெடுக்கப்படுகின்றது. ஐரோப்பிய அரசாங்கங்கள் புத்திசாலித்தனமாக இந்தப் பிரச்சினையைச் சமாளிப்பார்களா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

ஐரோப்பிய அரசாங்கங்கள் இப்போதும் தீவிரவாதத்தின் மூலத்தை மதத்தினுள்ளும் மதராஸாக்களிலும் தேடிக்கொண்டிருப்பதில் எந்தப் பிரயோசனமும் இல்லை. இன்றைய உலகமயமாகிய தொலைத்தொடர்பு ஊடகங்கள் பன்னாட்டு முஸ்லிம் இளைஞர்களை தீவிரவாதிகளாக மாற்றும் காரியத்தை கச்சிதமாகச் செய்துவிட்டன. இதனையும் கவனத்தில் எடுத்துள்ள ஐரோப்பிய அரசியல் ஆய்வாளர்கள் மாற்றுக் கருத்துக்களை (அரபு தேசியப் பார்வையில்) வெளியிடும் அரபுமொழி ஊடகங்கள் தடைசெய்யப்பட வேண்டும் என்று கூறுகின்றனர். அதனர்த்தம் மேற்குலக நலன் பேணும் CNN, BBC என்ன சொல்கின்றதோ, அதையே பிறநாட்டு ஊடகங்களும் திருப்பிச் சொல்ல வேண்டும். சுதந்திர ஊடகம் பற்றிப் பேசுபவர்கள் வாயை மூடிக்கொள்ள வேண்டியதுதான். ஆனால் CNN, BBC போன்றவற்றின் ஒரு பக்கச் சார்பான செய்திகளை பார்த்து வெறுத்துப்போன மக்கள்தான், இந்த மாற்று ஊடகங்களுக்கு ஆதரவு அளிக்கிறார்கள் என்பதை நினைவுபடுத்த வேண்டும். உலகளாவிய ஊடக சர்வாதிகாரம் வதந்திகள் பரவவும், செய்திகள் மீதான நம்பகத் தன்மையைக் குறைக்கவும் வழிவகுக்கும்.

தமது சிறந்த, மேன்மையான (ஐரோப்பிய) கலாச்சாரத்தை இஸ்லாமியவாதிகள் வெறுப்பதாகவும், அதன் நிமித்தமே தம்மீது தாக்குதல் நடத்தி வருவதாக மேற்குலக அரசியல்வாதிகள், புத்திஜீவிகள் நம்புவதுடன் அதையே மக்கள் மத்தியில் பிரச்சாரமும் செய்கின்றனர். ஆனால், தீவிரவாத இஸ்லாமிய வாதிகள் இந்தச் 'சிறப்பான கலாச்சாரம்' பற்றி கணக்கெடுத்ததாகத் தெரியவில்லை. அவர்களின் கருத்துக்களை அல்கைதா தலைவர்களான பின்லாடன், ஸவாகிரி வெளியிட்ட பிரச்சார வீடியோவில் இருந்து அறியலாம். "நீங்கள் எமது நகரங்கள் மீது குண்டு வீசினால், நாங்கள் உங்கள் நகரங்கள்மீது குண்டுவீசுவோம். எமது மண்ணை விட்டு வெளியேறி, தேசவளங்களைக் கொள்ளையிடுவதை நிறுத்தி, ஊழல்மய ஆட்சியாளர்களை உருவாக்



குவதை நிறுத்தினால் நாமும் நிறுத்துவோம்." பல்லாண்டுகளாக இஸ்ரேல் மற்றும் அரபு சர்வாதிகாரிகளுக்கு அமெரிக்கா வழங்கிவரும் இராணுவப் பொருளாதார உதவிகள், பின்னர் ஆப்கானிஸ்தான், ஈராக் மீதான படையெடுப்பு ஆகியன பெருமளவு முஸ்லிம் இளைஞர்கள் தீவிரவாதிகளாக மாறவும், அல்கைதாவின் ஆதரவுத்தளம் பெருகவும் உதவியுள்ளது.

மேற்குலகம் தற்போது எழுந்துள்ள நெருக்கடியைத் தீர்க்க விரும்பினால், அதனது வெளிநாட்டு விவகாரங்களில் மாற்றம் கொண்டு வரப்படவேண்டும். அல்லாவிட்டால் நீண்ட அழிவை ஏற்படுத்தும் போரை அனுபவித்த பிறகுதான் ஞானம் பிறக்கும்.

II. அல்கைதா : நிழல் நிஜமாகிறது

சிரியா, ஈராக் எல்லையோர நகரமொன்று. 2001ம் ஆண்டு செப்டம்பர் 11, நியூயோர்க் தாக்குதல் நடந்து முடிந்த சில மாதங்கள். குறுகிய காலத்தில் பிரபலமான ஒரு மதத் தலைவர், நகர இளைஞர்கள் மத்தியில் அறிமுகமாகிறார். அரசியல் ஈடுபாடு கொண்ட இளைஞர்களைத் திரட்டி ஜிகாத்திற்குத் தயாராகுமாறு அறைகூவல் விடுக்கிறார். செப்டெம்பர் 11 தாக்குதல் வெற்றிவிழாவாகக் கொண்டாடப்படுகிறது. புதிய இஸ்லாமியவாத இயக்கம் உள்ளூர் மக்களைக் கட்டுப்படுத்துகிறது. நீண்டகாலமாக மதச் சார்பற்ற சர்வாதிகாரத்தினுள் வாழ்ந்த உள்ளூர் மக்களுக்கு நடப்பதை நம்ப முடியவில்லை. இவ்வளவு காலமும் தங்களைக் கண்காணித்த இரகசியப் பொலிசார் எங்கே என வியக்கின்றனர். ஈராக் போர் ஆரம்பித்த பின்னர் பல துடிப்பான இளைஞர்கள் எல்லை கடந்து ஈராக்கிற்குப் போகும்போது, சிரிய எல்லைப் பாதுகாப்புப்படை கண்டும் காணாமல் இருந்தது இன்னும் ஆச்சரியம் அளிக்கிறது. ஈராக் அமெரிக்கப்படைகளின் கட்டுப்பாட்டினுள் வந்த பின்னர் அநாதரவாக விடப்பட்ட சிரிய இளைஞர்கள் தாயகம் திரும்பிய பின்னர்தான் உண்மை தெரிய வருகின்றது. இளைஞர்களை இஸ்லாமியத் தீவிரவாதிகளாக்கிய மதத் தலைவர் சிரிய அரசாங்கத்தின் உளவாளி என்பதும், அவர் இவ்விளைஞர்கள் பற்றிய விபரங்களை அரசாங்கத்திற்குக் கொடுத்துள்ளமை தெரிய வர அதிர்ச்சியடைகின்றனர். மேற்குறிப்பிட்ட சம்பவம் அல்கைதாவின் பெயரைச் சிரியா தனது நலன்களுக்காகப் பாவிப்பதைக் காட்டும் ஓர் உதாரணம் மட்டுமே. இன்று 'குத்தகைக்கு' விடப்பட்டுள்ள அல்கைதா பல்வேறுபட்ட நாடுகளாலும், தத்தமது நலன்களுக்குப் பாவிக்கப்பட்டு வருகின்றது. இதைச் செய்வதில் மேற்குலக நாடுகளும் பின்னிற்கவில்லை, அதுவும் பனிப்போரின் முடிவின் பின்பு, அதாவது ஆப்கானிஸ்தானில் சோவியத் இராணுவம் வெளியேறி, அல்கைதா 'வேலையற்றிருந்த' காலத்தில். தொண்ணூறுகளில் ஐரோப்பாவில் பனிப்போர் முடிந்த பின்னர் நிஜப்போர் வெடித்தது. அவற்றில் செச்சினிய, பொஸ்னிய போர்கள் குறிப்பிடத்தக்கவை. இரண்டிலும் இஸ்லாமிய அடிப்படைவாத அரசு அமைக்க முயற்சி நடந்தது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய அல்கைதா உறுப்பினர்கள், தமது இஸ்லாமிய சகோதரர்களுடன் சேர்ந்து போராடப் போனார்கள். இந்த வெளிநாட்டுப் போராளிகள் (பெரும்பாலும் அரேபியர்கள்) இன்னமும் செச்சினியாவிலும் பொஸ்னியாவிலும் தங்கி இருக்கிறார்கள். செச்செனியாவில் அவ்வப்போது ரஷ்யப்படைகளுடன் திடீர்த் தாக்குதலில் ஈடுபடுவதும், சிலநேரம் பிடிபடுவதும் நடந்து கொண்டிருக்கிறது. பொஸ்னியாவில் யுத்தம் முடிந்த கையோடு, இந்த வெளிநாட்டுப் போராளிகளுக்கு பொஸ்னியப் பிராஜாவுரிமை வழங்கப்பட்டு அங்கேயே தங்கிவிட்டனர். அவர்களில் பலர் உள்ளூர்ப் பெண்களைத் திருமணம் செய்து வாழ்கின்றனர். இவ்வாறு பொஸ்னியாவில் தங்கிவிட்ட அல்கைதா உறுப்பினர்கள், சரியான எண்ணிக்கை தெரியா

விட்டாலும், ஆயிரக் கணக்கில் இருப்பதாக, இதைப் பற்றி ஆராய்ந்த பத்திரிகையாளர் ஒருவர் தெரிவித்தார்.

மேற்குறிப்பிட்ட விபரங்கள் அமெரிக்காவிற்கும் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் தெரியாத விடயமல்ல. பொஸ்னிய யுத்தம் நடந்த காலத்தில் ஐக்கிய நாடுகள் சபை ஆயுத விநியோகத் தடை போட்டிருந்தது. இந்தத் தடையை மீறி அமெரிக்கா பொஸ்னிய முஸ்லிம் இராணுவத்திற்கு ஆயுதத் தளபாடங்களை அனுப்பி வைத்தது. அதேநேரம் அல்கைதா உறுப்பினர்கள் பொஸ்னியா வந்ததைக் கண்டு கொள்ளாமல் விட்டது. ஏனெனில் அன்று நடந்த பொஸ்னிய யுத்தம் அமெரிக்க நலன்களுக்கு சாதக மானது. அதேபோலவே ரஷ்யாவிற்குத் தலையிடியைக் கொடுக்கும் செச்சினிய யுத்தமும் அமெரிக்க நலன் களுக்கு ஏற்றதுதான்.

அமெரிக்க - அல்கைதா உறவை முறிக்கும் பல சம்பவங்கள், பொஸ்னிய யுத்தம் முடிந்த பின்னர்தான் நடந்துள்ளன. 2004ம் ஆண்டு இத்தாலியில் வாழ்ந்து வந்த முன்னாள் அல்கைதா உறுப்பினர் ஒருவர் திடீரெனக் காணாமல் போனபோது பல அதிர்ச்சி தரும் தகவல்கள் வெளிவந்தன. எகிப்தியப் பிரஜையான இவர் சிறிது காலம் அல்பேனியாவில் வாழ்ந்தவர். பின்னர் தனது அல்பேனிய மனைவியுடன் இத்தாலி வந்து அரசியல் தஞ்சம் கேட்டு, அங்கேயும் தீவிர இஸ்லாமிய அரசியலில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். ஒருநாள் வீதியில் சென்று கொண்டிருந்த இந்த நபரை சி.ஐ.ஏ. அதிகாரிகள் கடத்திச் சென்று விட்டதாக அவரது மனைவி பொலிஸில் புகார் கொடுத்தபோது யாரும் நம்பவில்லை. ஆனால் சில நாட்களின் பின்னர் அவர் எகிப்தில் சிறைவைக்கப்பட்டி ருப்பது தெரிய வந்தது.

இந்தச் சம்பவம் எமக்குத் தெரிவிக்கும் விடயம் முக்கியமானது. "பயங்கரவாதத்திற்கு எதிரான போரில்" அமெரிக்கா புதிய யுக்திகளைப் பயன்படுத்து கின்றது. பயங்கரவாத சந்தேக நபர்களைத் தான் சித்திரவதை செய்தால், தனது பெயர் கெட்டுவிடும் என அஞ்சும் அமெரிக்க அரசு, அந்த வேலையை மனித உரிமை மீறல்களுக்குப் பெயர்போன நட்புநாடுகளின் பொறுப்பில் விடுகின்றது. இதுவரை பத்து அல்லது இருபது சந்தேக நபர்கள் இவ்வாறு எகிப்து, ஜோர்தான், சவூதி அரேபியா போன்ற நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக நம்பப்படுகின்றது. சிலர் இவற்றை உலக ளாவிய அமெரிக்கச் சிறைகளென வர்ணிக்க ின்றனர். அமெரிக்கா தவிர்ந்த வேறு நாடுகளில் உள்ள இராணுவ முகாம்களில் மட்டுமல்ல, கடற்படைக் கப்பல் களிலும் தற்காலிக சிறைச்சாலைகள் ஏற்படுத் தப்பட்டு கைதிகள் விசாரணை செய்யப்பட்டு வரு கின்றனர். 1998இல் தமது உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டதற்கு எதிர்ப்பாக எச்சரிக்கை செய்யத்தான் ஆபிரிக்காவில் அமெரிக்கத் தூதராலயங்கள் தாக்கப்பட் டதாகக் கதை உலாவுகின்றது.

ஆப்கானிஸ்தானில் இருந்து பாகிஸ் தானுக்கு விரட்டப்பட்ட அல்கைதா தலை வர்கள், அங்கேயும் வேட்டையாடப்பட்டு, கொல்லப் பட்டோ அல்லது கைதுசெய்யப்பட்டோ விட்டதால் அல்கைதா இயக்கம் பலவீனப்பட்டதென்னவோ உண்மைதான். இன்றைய புதிய அல்கைதா அல்லது மறுசீரமைக் கப்பட்ட அல்கைதா, சாம்பலில் இருந்து உருவான பீனிக்ஸ் பறவை. அதன் புதிய தலைமுறைத் தலை வர்கள் படித்த, வேலையற்ற மத்தியதர வர்க்க இளைஞர்கள். இவர்கள் சமூகத்தின் அனைத்து வர்க்கங்களையும் 'முஸ்லிம்' என்ற அடையாளத்தின் கீழ் ஒன்றிணைக்கும் வேலையைச் செய்து வருகின் றனர். உதாரணமாக, மொராக்கோ குண்டு வெடிப்பை நடத்தியவர்கள் (லும்பன்) பாட்டாளிவர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். இதற்கு மாறாக இலண்டன் குண்டு வெடிப்பின் சூத்திரதாரிகள் குட்டிமுதலாளிய வர்க்கப் பிரதிநிதிகள். அல்கைதா தத்துவாசிரியர் ஸவாஹரி கூட ஒரு எகிப்திய மத்தியதர வர்க்கப் புத்திஜீவிதான். ஏழைகள் மட்டுமே தீவிரவாத இயக்கங்களால் கவரப்படுகின்றனர் என்பது முழு உண்மையல்ல. இருப்பினும் மத்தியதர வர்க்க இளைஞர்கள் பெரும்பாலும் உலகப் பிரசித்தி பெறும் வெற்றிகரமான தாக்குதல்களில் ஈடுபட்டு நாயகர்கள் ஆவது, அல்லது

"பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் அமெரிக்கா புதிய யுக்திகளைப் பயன்படுத்துகின்றது. பயங்கரவாத சந்தேக நபர்களைத் தான் சித்திரவதை செய்தால், தனது பெயர் கெட்டுவிடும் என அஞ்சும் அமெரிக்க அரசு, அந்த வேலையை மனித உரிமை மீறல்களுக்குப் பெயர் போன நட்புநாடுகளின் பொறுப்பில் விடுகின்றது."

வேறுவிதமாகக் கூறினால், தமது அரசியல் இலக்கை எட்டத் தனிநபர் பயங்கரவாதத்தில் ஈடுபடுவதில் காட்டும் அக்கறை, அவர்களது குட்டி முதலாளிய வர்க்கக் குணாம்சங்களைப் பிரதிபலிக்கின்றது.

இஸ்லாமிய மீட்சிக்குப் போராடுவதாக அல்லது முழு இஸ்லாமிய மதத்தினருக்கும் தாமே தலைமை தாங்கப் போவதாகக் காட்டிக் கொள்ளும் அல்கைதா முழுக்க முழுக்க நவீன காலத்து அரசியல் இயக்கம் தான். இவர்கள் இழந்த சொர்க்கமாக பிரச்சாரம் செய்யும் பண்டைய இஸ்லாமிய சாம்ராச்சியம் பல்வேறு அரசாட்சிகளாக பிரிந்திருந்தது. அவர்கள் பதவிக் காகத் தமக்குள் சண்டையிட்டனர். ஆரம்பகால இஸ்லாமிய அரசைத் தவிர பிற்காலத்தில் பல அரச பரம்பரைகளை உருவாக்கிய கலீபாக்களும் சுல்தான்களும் நிலப்பிரபுத்துவ அடிப்படையில் ஆட்சி நடத்தினர்.

அல்கைதா அதற்கு மாறாக நவீன காலத்து இஸ்லாமிய தேசிய அரசொன்றைக் கனவு காண்கின்றது. அரசியல்ரீதியாக மேற்கே மொராக்கோமுதல் கிழக்கே சீனாவின் துருக்கிய முஸ்லிம்கள் வாழும் ஸின்ஜியாங் மாநிலம் வரை பரந்திருக்கும். பொருளாதார ரீதியாக சவூதி அரேபியா, உதாரணமாக, பெற்றோல் முஸ்லிம் நாடுகளுக்கு மட்டும் வழங்கப்படவேண்டும். அதற்கு மாறாக, எகிப்தின் விவசாய விளைபொருட்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம். தற்போது இவ்விரண்டு நாடுகளும் தத்தமது உற்பத்திப் பொருட்களை உலகச் சந்தையில் நிர்ணயிக்கப்படும் விலைக்கே விற்கின்றன. அல்கைதா தனது போர்த் தந்திரங்களையும் பொருளாதாரத்தை அடிப்படையாக வைத்தே வகுத்து வருகின்றது.

முதலாவதாக தற்கால சர்வதேச பொருளாதார அமைப்பினால் அல்கைதா பயனடைந்து வருவது சுவாரசியமான விடயம். எண்ணைவள வளைகுடா நாடுகள், எண்ணை விற்று பெருமளவு லாபத்தை சம்பாதித்தன. அந்த இலாபப் பணத்தை வீணாக்காமல் தனது நாட்டுப் பங்குச் சந்தையில் முதலீடு செய்யுமாறு புத்தி கூறியது அமெரிக்கா. அவ்வாறே சவூதி மன்னர் குடும்பமும், ஷேக்குகளும் அமெரிக்க கம்பெனிகளின் பங்குகளை வாங்கி மேலும் பணத்தைப் பெருக்கினர். எண்ணை வாங்கக் கொடுத்த டொலர்கள் மீண்டும் தமது நாட்டிற்கே வந்ததையிட்டு அமெரிக்கர்கள் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைந்தனர். 2001ம் ஆண்டிற்குப் பின்னர் இந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை. அல்கைதா ஆதரவு ஷேக்குகளும், ஏன் ஒசாமா பின்லாடனின் குடும்பம் கூட அமெரிக்காவில் முதலீடு செய்திருந்தமை அப்போது தான் தெரிய வந்தது. இது பற்றிய முழு விபரங்கள் இன்னும் வெளியிடப்படவில்லை. ஏனெனில் பங்குச் சந்தை வர்த்தகத்தை பாதித்துவிடும் என்ற அச்சம். இரண்டாவதாக உலகில் எண்ணெய் ஏற்றுமதி செய்வதில் முதலிடம் வகிக்கும் சவூதி அரேபியா, இது இங்கே முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய விடயம். ஏனெனில், அல்கைதாவின் இறுதி வெற்றி அல்லது வீழ்ச்சி இங்கேதான் தீர்மானிக்கப்பட இருக்கின்றது. ஆப்கானிஸ்தானில் போரிட்டு விட்டுத் தாயகம் திரும்பிய சவூதி ஜிகாத் போராளிகள் அனைவரும் ஒசாமா பின்லாடனின் விசுவாசிகள்.

"இஸ்லாமிய மீட்சிக்குப் போராடுவதாக அல்லது முழு இஸ்லாமியமதத்தினருக்கும் தாமே தலைமை தாங்கப்போவதாகக் காட்டிக்கொள்ளும் அல்கைதா முழுக்க முழுக்க நவீன காலத்து அரசியல் இயக்கம்தான்."

இவர்கள் சவூதி அரேபியாவில் தமது விடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்து நீண்ட காலமாகிவிட்டது. இருப்பினும் அங்கே அவ்வப்போது இடம் பெறும் குண்டு வெடிப்புகளில் வெளிநாட்டவர்கள் கொல்லப்படும் போது மட்டுமே செய்தி வெளியுலகத்தை அடைகின்றது. சவூதி அரசாங்கத்தின் பயங்கரவாதத் தடுப்புப்பிரிவின் அமைச்சு அலுவலகம் தாக்கப்பட்டமை, அதிகாரிகள் கொல்லப்பட்டமை போன்று அன்றாடம் நடைபெறும் சம்பவங்கள் சர்வதேச செய்தி ஊடகங்களின் கவனத்தைப் பெறுவதில்லை.

ஒரு காலத்தில் சவூதி அரசாங்கம் அல்கைதாவிற்கு நிதி வழங்கி வந்தது. சவூதி அரேபியாவில் தமது ஆதிக்கத்திற்கு ஊறு வராமல் இருக்க மன்னர் குடும்பம் கொடுத்த லஞ்சம் அது. 2001ம் ஆண்டின் பின்னர் அமெரிக்கா கொடுத்த அழுத்தம் காரணமாக அந்த நிதி உதவி நிறுத்தப்பட்டது. அது மட்டுமல்ல, அல்கைதா உறுப்பினர்களை வேட்டையாடி அழிக்குமாறு சவூதி பாதுகாப்புப் படைகளுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது.

தான் இதுவரை பல நூற்றுக்கணக்கான பயங்கரவாதிகளைக் கொன்று விட்டதாக அல்லது கைதுசெய்து விட்டதாக சவூதி அரசாங்கம் தினசரி அறிவித்துக் கொண்டிருக்கின்றது. இருப்பினும் கள நிலவரம் அரசாங்கத்தின் பிரச்சாரத்திற்கு எதிர்மாறாக உள்ளது. பாதுகாப்புப் படைகளின் பல மட்டங்களிலும் அல்கைதா உறுப்பினர்கள் ஊடுருவி விட்டனர். இதனால் அரசபடைகளின் தாக்குதல் திட்டம் முன் கூட்டியே தெரிந்து விடுகின்றது. மன்னர் குடும்பத்தைச் சேர்ந்த சில இளவரசர்கள் கூட அல்கை தாவிற்கு உதவி வருகின்றனர். இதனால் மன்னர் குடும்ப உறுப்பினர்கள் எவரும் அல்கைதாவினால் குறி வைக்கப்படவில்லை.

எதிர்காலத்தில் சவுதி அரசாங்கம் அமெரிக்க அழுத்தத்தால் கடும் போக்கைப் பின்பற்றினால், மன்னர் குடும்பத்திற்கு மட்டுமல்ல, எண்ணைக் கிணறுகளுக்கும் ஆபத்து ஏற்படும்.

அத்தகைய நிலைமை எண்ணெய் விலையைப் பன்மடங்கு அதிகரித்து, உலக பொருளாதாரத்தில் பின்னடைவுகளை ஏற்படுத்தும். நிச்சயமற்ற எதிர்காலத்திற்காக காத்திருப்போமாக...

ஆமென்!

III. பிரெஞ்சு 'சேரி'களின் கிளர்ச்சி

"இனி இது பாரிஸ் அல்ல, பாக்தாத்!" என்ற கோஷம் 2005ம் ஆண்டு ஒக்டோபர் 27 அன்று பாரிஸ் நகரின் புறநகர்ப்பகுதியான கிளிஷி சூ-புவா (Clichy Sous-Bois)வின் தெருக்களில் கேட்டது. தெருக்களின் அந்தப்பக்கம் கண்ணீர்ப்புகைக்குண்டுகள், குண்டாந் தடிகள் சகிதம் பாரிஸ் நகரப் பொலிஸ். இந்தப்பக்கம் பெற்றோல் குண்டுகளுடன் 18 வயதையும் தாண்டாத இளைஞர்கள் கூட்டம். அமைதியான தெருக்கள் போர்க்களமாகின. தன்னிச்சையாகத் திரிந்த இளைஞர்கள் வாகனங்களுக்குத் தீவைத்தனர். பாடசாலைகள், தபால் அலுவலகங்கள், கடைகள் எதுவும் தப்பவில்லை. அனைத்தும் எரிந்து சாம்பலாகின. தீயணைப்புப்படையினருக்கு பொலிஸ் பாதுகாப்பு கொடுக்க வேண்டியிருந்தது. இந்தக்கலவரம் ஒரு நாளோடு அடங்கிவிடவில்லை. அடுத்து வந்த ஒவ்வொரு இரவும் தொடர்ந்தது. கலவரத்தீ பாரிஸின் பிற பகுதிகளுக்கும் பரவியது. தொடர்ந்து பிரான்ஸின் பல நகரங்கள் ஒரே மாதிரியான தீவைப்புக் காட்சிகளைக் கண்டது.

பாரிஸ் நகரத்தின் அமைதியான அழகைப் பார்த்துப் பாடிய கவிஞர்களும், உயர்தரப் பொருட்களுக்காக கடைகளை மொய்க்கும் பன்னாட்டு மேட்டுக்குடி மக்களும் காணாத அல்லது காண விரும்பாத பகுதிகள் உள்ளன. அவை பாரிஸ் நகரத்தைச் சுற்றிக் கட்டப்பட்ட புறநகர்ப்பகுதிகள். வருமானம் குறைந்தவர்களுக்காக குறைந்த செலவில் கட்டப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புகள். அங்கே குடியிருக்கும் சமூகத்தின் கீழ்மட்டத்தைச் சேர்ந்த உழைப்பாளிகள். அவர்கள் நாட்டில் குறைந்த ஊதியம் பெறும் ஆலைத்தொழிலாளர்கள், கட்டடத் தொழிலாளர்கள், சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் இன்ன பிற. இவர்களுடன் வேலையற்றவர்களும் வாழ்கின்றனர். இந்தப்புற நகர்ப்பகுதிகளில் வேலையில்லாதவர்களின் எண்ணிக்கை 20 வீதம். இது தேசத்தின் மொத்த எண்ணிக்கையை விட இரு மடங்கு.

"பாரிஸ் நகரத்தின் அமைதியான அழகைப் பார்த்துப் பாடிய கவிஞர்களும், உயர்தரப் பொருட்களுக்காக கடைகளை மொய்க்கும் பன்னாட்டு மேட்டுக்குடி மக்களும் காணாத அல்லது காண விரும்பாத பகுதிகள் உள்ளன. அவை பாரிஸ் நகரத்தைச் சுற்றிக்கட்டப்பட்ட புறநகர்ப்பகுதிகள்."

இந்த புறநகர்ப்பகுதிகளை தற்காலத்தில் 'கெட்டோ' (Ghetto) என்றழைக்கின்றனர். 'கெட்டோ' என்பது 2ம் உலகப்போருக்கு முன்னர் இருந்த ஜேர்மனியில் யூதர்கள் செறிந்து வாழ்ந்த புறநகர்ப் பகுதிகளுக்கு இட்டபெயர். யார் எப்படி அழைத்தாலும் இவை உலகெங்கும் நகரத்தை ஒட்டி ஏழைமக்கள் வாழும் 'சேரி'கள் போன்றவை என்பதைப் பலர் உணர்கின்றனர். மூன்றாம் உலகநாடுகளின் 'சேரி'களில் தகரக் கொட்டில்கள் என்றால், முதலாம் உலக நாடுகளில் அடுக்கு மாடிக்குடியிருப்புகள் என்பதுதான் வித்தியாசம். வேலையில்லாப்பிரச்சினை உருவாக்கும் 'சமூக விரோத'ச் செயல்கள் முதலாம் உலகநாடுகளின் சேரிகளிலும் காணப்படுகின்றன. இவை நகரங்களின் பிரமாண்டங்களுக்குப் பின்னால் மறைந்திருக்கும் இருண்ட பகுதிகள். எப்போதாவது கலவரம் நடக்கும் போது மட்டும் தான் உலகம் இந்த இருண்ட பகுதிகள் இருப்பதைக் கண்டு கொள்கின்றது. ஊடகத்துறையின் கமெராக்களுக்கு நன்றி.

பிரான்ஸின் 'சேரி'களில் ஒருகாலத்தில் (வெள்ளையின) ஏழை பிரெஞ்சுக்காரர்கள் மட்டுமே வசித்து வந்தார்கள். அன்று பாரிஸ் நகர சேரிகள் எப்படிக்காட்சியளித்தன என்பதை அறிய விரும்பின் விக்டர் ஹியுகோ எழுதிய "ஏழை படும் பாடு" என்ற நாவலைப் படிக்கவும். இந்த சேரிகளில் மக்கள் தினம் தினம் நரக வாழ்க்கை வாழ்ந்தனர். மரணம் மட்டுமே அவர்களுக்கு வருத்தத்திலிருந்து விடுதலை பெற்றுத் தந்தது. பாரிஸ் மாநகரில் வறுமையால் கஷ்டப்பட்ட மக்கள் தம்மை பாக்கியவான்களாகக் கருதிக்கொண்டு பரலோக வாழ்க்கைக்காக காத்திருக்கவில்லை. பூலோகத்தில் தமது காலத்தில் சொர்க்கத்தைக்காண ஆயுதம் தூக்கினர்; புரட்சி செய்தனர்; வென்றார்கள் அல்லது தலை கொய்யப்பட்டு செத்துப்போனார்கள். இருபதாம் நூற்றாண்டு வருவதற்கிடையில் பாரிஸ் நகரத்தின் குறுகலான வீதிகள் புரட்சிக்காரர்களுக்கு சாதகமாக இருக்கின்றன என்பதைக் கண்ட அரசாங்கம், தெருக்களை அகலமாகக் கட்ட உத்தரவிட்டது. அன்றைக்கு மாறிய நகரக்கட்டுமானம் தான்

இன்று காணும் பாரீஸ்.

இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் பிற மேற்கு ஐரோப்பிய நாடுகளைப்போலவே பிரான்சும் 'பணக்கார' நாடாக மாறியது. அப்படியானால் சேரிகளில் வாழ்ந்த ஏழைமக்களும் 'பணக்காரர்' ஆவார்களல்லவா? அப்படி ஆனவர்கள் கடினமான அல்லது 'கீழ்த்தரமான'தாகக் கருதப்படும் வேலைகளைச் செய்ய முன்வரமாட்டார்களல்லவா? ஆகவே அந்த வேலைகளைச் செய்ய பிரான்ஸின் காலனி நாடுகளிலிருந்து தொழிலாளர்கள் வரவழைக்கப் பட்டார்கள். இவர்கள் பெரும்பாலும் அல்ஜீரியா, மொரோக்கோ, செனகல் ஆகிய ஆப்பிரிக்க நாடுகளில் இருந்து வந்தவர்கள். முதல் தலைமுறை குடியேறிகளான இவர்கள் முன்பு ஏழை பிரெஞ்சுக்காரர்கள் வசித்த சேறும்சகதியுமான 'சேரி'களில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டனர். ஆனால் இரண்டாம் தலைமுறைக் குடியேறிகளான இவர்களின் பிள்ளைகள் அதிர்ஷ்டசாலிகள். அவர்கள் புதிதாகக் கட்டப்பட்ட புறநகர்ப்பகுதிகளில் அடுக்குமாடிக் குடியிருப்புகளில் வாழும் வசதி பெற்றார்கள். அந்த புதிய நகரங்களை கட்டியெழுப்பியவர்கள் வேறுயாருமல்ல, அவர்களது தந்தைமார்தான். அரசாங்கம் முதல் போட்டது. தனியார் நிறுவனங்கள் கட்டிக் கொடுத்து லாபம் கண்டன.

அது ஒரு பொற்காலம். சீரான பொருளாதார வளர்ச்சி வந்தோரை வாழவைத்துக் கொண்டிருந்தது. எண்பதுகளின் கடைசியில் (பேர்லின் சுவர் விழுந்ததைக் கொண்டாடினார்களே, ஞாபகமிருக்கிறதா?, அதற்குப்பிறகு) என்ன நடந்ததோ, பொருளாதாரம் வளரவேயில்லை. மேலேயும் போகாமல் கீழேயும் வராமல் இடையில் நின்று விட்டது. என்ன காரணம் என்று பொருளாதார அறிஞர்கள் முடியைப் பிய்த்துக் கொண்டிருக்கையில், வர்த்தக நிறுவனங்கள் தமது நிகர லாபம் குறைந்து வருவதைக் கண்டு பதறிப் போயின. முதலாளிகளின் வருமானம் குறையக்கூடாது. ஆனால் வேலை செய்யும் தொழிலாளர்களின் எண்ணிக்கையை குறைக்கலாமல்லவா? இலட்சக் கணக்கானவர்கள் வேலையிழந்தனர். இவர்களில் பெரும்பான்மையானவர்கள் அல்ஜீரியா அல்லது பிற ஆபிரிக்க வம்சாவழியினர்.

வேலையிழந்தவர்கள் மற்றும் பாடசாலை/பல்கலைக்கழக படிப்பை முடித்தவர்கள் ஆகியோர் புதிதாக வேலை தேடினாலும் கிடைக்காததால் விரக்தியில் வாழ்கின்றனர். வெள்ளையின பிரெஞ்சுக் காரருக்கு எப்படியோ புதிய வேலை கிடைப்பது அவ்வளவு கஷ்டமானதல்ல. அதெப்படி சாத்தியம்? பிரான்ஸ்தான் சமத்துவத்தை, சகோதரத்துவத்தை உலகிற்கே சொல்லிக் கொடுத்த நாடாச்சே. ஒரு வேலைக்கான வெற்றிடத்திற்கு வரும் விண்ணப்பங்களில் இருக்கும் பெயர், பிறந்த இடம் ஆகியன விண்ணப்பதாரியின் இனத்தை/மதத்தை காட்டிக் கொடுத்து விடுகிறது. இதை வைத்து நேர்முகத் தேர்வுக்கு கூப்பிடாமலே பெரும்பாலான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுகின்றன. வெள்ளையின பிரெஞ்சுக்காரர்கள் செய்ய விரும்பாத அடிமட்டத் தொழில்களில் மட்டும் எந்தப் பாகுபாடும் காட்டாமல் சேர்த்துக் கொள்வார்கள். இப்படிப்பட்ட யதார்த்தத்திற்கு முகம் கொடுக்கும் அரேபியர்கள் மற்றும் ஆபிரிக்கர்கள் தாம் கடதாசியில் மட்டுமே சமஉரிமை கொண்ட பிரெஞ்சுப் பிரஜைகள் என்பதும் நடைமுறையில் தாம் இரண்டாந்தரப் பிரஜைகளாகவே நடத்தப்படுவதை உணர்ந்து கொள்கின்றனர்.

வறுமை, வேலையில்லாப் பிரச்சினை, எதிர்காலத்தில் வேலை கிடைக்குமென்ற நம்பிக்கையின்மை, குறிப்பிட்ட சமூகப்பிரிவினர் வாழும் 'கெட்டோ'க்களில் இருக்கும் தரங் குறைந்த, கவனிக்கப்படாத பாடசாலைகள் என்பன இளைஞர் சமுதாயத்தை பெருமளவு பாதித்துள்ளது. பல குறைபாடுகளை அரசாங்கம் வேண்டுமென்றே புறக்கணித்து வந்துள்ளது. குறிப்பிட்ட சமூகத்தினர் மட்டுமே வாழும் நகர்ப்பகுதிகளில் துப்பரவாக்கல் பணிகள் அரிதாகவே நடக்கும். (அப்போது தானே இந்த சமூகத்தினர் அசுத்தமானவர்கள் எனக்காட்டலாம்.) சில இளைஞர் குழுக்கள் கிரிமினல் வேலைகளில் ஈடுபடுவதும், சிலநேரம் கோஷ்டிச்சண்டையில் இறங்குவதும் அன்றாடம் நடக்கும் சம்பவங்கள். இதனால் இந்த இளைஞர்கள் சார்ந்த சமூகத்தினர் கூட பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளனர். இதை அடக்க பொலிஸ் எந்த முயற்சியும் எடுப்பதில்லை. (அப்போது தானே இந்த சமூகத்தினரை குற்றவாளிகளாக காட்டலாம்.)

பிரிட்டனிலும், நெதர்லாந்திலும் கடைப்பிடிக்கப்பட்ட 'பன்முகக் கலாச்சாரக் கொள்கை' பிரான்ஸில் இல்லை. பிரெஞ்சுப் புரட்சியின் காலத்திலிருந்தே பிரெஞ்சுமயமாக்கும் கொள்கை பின்பற்றப்பட்டது. அதன் அடிப்படையில், யார் எங்கேயிருந்து வந்தாலும், பிரெஞ்சுப் பிரஜைகள் அனைவரும் சமமான உரிமைகள் கொண்டவர்களாக கருதப்பட்டு நடத்தப்பட்டனர். ஆயினும் அல்சாசியர்கள், பாஸ்குகள், ஒக்கித்தானியர்கள் ஆகியோர் பிரெஞ்சு தேசத்திற்குள் இணைக்கப்பட்டபோது வராத பிரச்சினை, அல்ஜீரியர்கள், செனகலியர் ஆகியோர்



உள்வாங்கப்பட்டபோது வந்தது. இதை எப்படி புரிந்து கொள்வது? முன்னர் குறிப்பிடப்பட்ட இனங்கள் வெள்ளைத்தோல் கொண்டவர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள், பின்னர் குறிப்பிட்ட இனங்கள் பழுப்பு அல்லது கறுப்புத்தோல் கொண்டவர்கள் மற்றும் முஸ்லிம்கள் என்பது மட்டுமே வித்தியாசம்.

பிரான்ஸில் இன, மத அடிப்படையில் சனத்தொகை கணக்கெடுப்பதோ அல்லது புள்ளிவிபரம் சேர்ப்பதோ சட்டவிரோதம். இதனால் எந்தவொரு அரச பதிவேடுகளிலும் ஒருவரது இனம், மதம் பற்றி பதியப்பட்டிருக்காது. இதனால் பிரான்ஸில் எத்தனை முஸ்லிம்கள், எத்தனை அரேபியர்கள், எத்தனை ஆபிரிக்கர்கள் உள்ளனர் என்ற விபரம் யாருக்கும் தெரியாது. ஒருபக்கம் இந்த முறை சிறந்ததாகப் போற்றப்பட்டாலும் மறுபக்கம் பின்தங்கிய சமூகத்தின் முன்னேற்றத்திற்கான திட்டங்களுக்கு தடையாகவுள்ளது. தற்போதைய பிரெஞ்சு அரசியலில் இனப்பிரச்சினை மிக முக்கியமாகக் கருதப்படுவதால் ஆக்கபூர்வமான திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். அப்படியல்லாவிட்டால் அரசாங்கம் தீவிர வலதுசாரி அரசியல் பாதையில் போகும் அபாயம் உள்ளது. தன்னைக் கடும் போக்காளராக காட்டிக் கொள்ள விரும்பும் உள்துறை அமைச்சர் சார்க்கோசியின் முடிவுகள் நிலைமை எப்படி மோசமடையலாம் எனக்காட்டுகின்றன.

ஒக்டோபர் 27 அன்று என்ன நடந்தது? இரு (அரபு) இளைஞர்கள் ஒரு கடையில் திருடும் போது, பொலிஸ் வந்து பிடிக்கப்போக ஓடி ஒழிந்த இடத்தில் மின்சாரம் பாய்ந்து இறந்து போனதாக சொல்லப்பட்டது. ஊடகங்கள் அப்படிக்கூறின. அரசாங்கம் அதை உத்தியோகபூர்வமாக அறிவித்தது. ஆனால் சம்பவம் நடைபெற்ற கிளிஷி சூ-புவா (Clichy Sous-Bois) வட்டார மக்கள் வேறு கதை சொல்கிறார்கள். பிரான்ஸில் அண்மைக் காலமாக பிற மேற்கத்தைய நாடுகள் போன்று, வெளிநாட்டுக் குடியேறிகளை /அகதிகளை கட்டுப்படுத்தும் முகமாக அனைவரும் அடையாள அட்டையுடன் திரியுமாறு நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இதனை நடைமுறைப்படுத்தும் பொலிஸ் தெருக்களில் போகும் கறுப்புநிற அல்லது அரேபியர் போல தோற்றமளிக்கும் மனிதர்களைப் பார்த்து அடையாள அட்டை கேட்பதும், வெள்ளை நிறத்தவர்களை கண்டு கொள்ளாமல் விடுவதுமாக பாகுபாடாக நடப்பது வழக்கம். அடையாள அட்டை வைத்திருக்காதவர்களை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து இம்சைப்படுத்துவதும் சாதாரண நிகழ்வுகள்.

அந்த துக்ககரமான சம்பவம் நடந்த அன்றும் ஒரு மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த 15 - 17 வயதுக்குட்பட்ட இளைஞர்களை அணுகிய பொலிஸ், அடையாள அட்டை சோதனை செய்தது. இதில் அடையாள அட்டை வைத்திராத மூன்று இளைஞர்கள், பின்னால் வரப்போகும் தொந்தரவுகளுக்கு பயந்து ஓடி ஒழிந்த இடத்தில் இருந்த மின்மாற்றியில் அகப்பட்டு, மின்சாரம் தாக்கி இறந்தனர். இதில் அதிர்ஷ்டவசமாக தப்பிய மூன்றாவது இளைஞர் நடந்ததை விபரித்துள்ளார். ஆனால் அரசாங்கம் அவரைப்பேச விடாமல் வாயை அடைத்துவிட்டது. தொடர்ந்து உள்துறை அமைச்சர் தனது அறிவிப்பில், இறந்த இந்த இளைஞர்கள் திருடும் போது பொலிஸ் விரட்டியதனால் ஓடியதாக ஒரு புதுக்கதையை அவிழ்த்து விட்டார்.

அமைச்சர் எதற்காகப் பொய் சொல்ல வேண்டும்? ஒரு குறிப்பிட்ட சமூகத்தினரை திருடர்களாக மாசுபடுத்துவதற்காக "அந்த இளைஞர்கள் ஒரு பிழையும் செய்யாதிருந்தால், எதற்காக பொலிஸிற்கு பயந்து ஓடவேண்டும்?" இவ்வாறான வாதங்களை பெரும்பான்மை சமூகத்தினர் முன்வைப்பார்கள். விசா இல்லாமல் சட்டவிரோதமாக இருப்பவர்களும் அவர்கள் பார்வையில் குற்றவாளிகள்தான். ஆகவே அமைச்சரின் அறிவிப்பு, எதிர்காலத்தில் அனைத்து வெளிநாட்டுக் குடியேறிகள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கவிருப்பதான எச்சரிக்கையாகப் பார்க்கவேண்டியுள்ளது.

உள்துறை அமைச்சர் சார்க்கோசி இன்று ஒரு பிரச்சினைக்குரிய நபர். அவர் எரியும் பிரச்சினையில் எண்ணை ஊற்றி விடும் வேலையை கச்சிதமாக செய்துள்ளார். கலகம் செய்த இளைஞர்களை வேண்டாத குப்பைகளாகவும், அவர்கள் சமூகத்தில் இருந்து துடைத்தெறியப்பட வேண்டியவர்கள் என்றும் கூறியது பரவலாக கண்டனத்திற்கு உள்ளானது. மேலும் கலகக்கார புறநகர்ப்பகுதிகளில் சாதாரண பொலிஸாரை எடுத்துவிட்டு கலகத்தடுப்பு பொலிஸாரை கடமையில் ஈடுபடுத்தியமை குறிப்பிட்ட சமூகத்தினரை பயமுறுத்தும் செயலாக கருதப்பட்டது. இதற்கு ஆதாரமாக கூடிய இளைஞர்களை இனவாத பேச்சுக்கள் மூலம் வலுச்சண்டைக்கு இழுத்தமை, ஒரு பள்ளிவாசலில் தொழுகையில் ஈடுபட்ட நேரம் வந்து விழுந்த கண்ணீர்ப்புகைக் குண்டு, அந்த களேபரத்தில் மசூதியிலிருந்து பயந்து ஓடிய பெண்களை தகாத வார்த்தைகளால் திட்டியமை ஆகிய சம்பவங்கள் அமைந்துள்ளன.

தினசரி இரவுகளில் வீதிகளில் நிறுத்தி வைத்தி

> "பிரான்ஸில் இ[illegible] அடிப்படையில் சனத்தொ[illegible] கணக்கெடுப்பதோ அல்லது புள்ளிவிபர[illegible] சேர்ப்பதோ சட்டவிரோதம். இதனால் எந்தவொரு அர[illegible] பதிவேடுகளிலும் ஒருவரது இனம், மதம் பற்றி பதியப்பட்டிருக்காது. இதனால் பிரான்ஸில் எத்தனை முஸ்லிம்கள், எத்தனை அரேபியர்கள், எத்தனை ஆபிரிக்கர்கள் உள்ளனர் என்ற விபரம் யாருக்கும் தெரியாது."

ருந்த கார்கள் தீப்பிழம்பாகின்றன. கட்டிடங்கள் எரிகின்றன. பாரிஸில் ஆரம்பித்த கலகம் பிரான்ஸ் முழுக்கப் பரவுகின்றது. தேசம் எதிர்நோக்கிய பெரும் நெருக்கடியில் சிக்கிய மக்கள் நாளை என்ன நடக்குமென்று தெரியாமல் பதறுகின்றனர். பாரிஸ் நகரம் பற்றி எரிந்து கொண்டிருந்தபோது ஜனாதிபதி ஜாக் ஷிராக் பிடில் வாசித்துக் கொண்டிருந்தாரா என்பது தெரியாது. சில நாட்களாக மனுசன் தலையே காட்டவில்லை. பின்னர் வலது, இடது என்று எல்லாப்பக்கமும் இருந்து எழுந்த கண்டனக்குரல்களுக்குப் பிறகுதான் ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு உருக்கமாக உரையாற்றினார். அவரும் தனது அரசாங்கத்திற்குள் தொடங்கியுள்ள பதவிச் சண்டையை கட்டுப்படுத்த முடியாத நிலையில் உள்ளார். பிரதமர் தெ வில்பனும் உள்துறை அமைச்சர் சார்க்கோசியும் அடுத்த ஜனாதிபதி யார் என்று இப்போதே போட்டி போடுகின்றனர். தற்கால கிளர்ச்சியை அணுகும் முறையில் இருவருக்கும் இடையில் வித்தியாசம் உள்ளது. பிரதமர் மனிதாபிமான அடிப்படையில் அரச மானியம் அளித்து அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க விரும்புகின்றார். சார்க்கோசி அதற்கு மாறாக தீவிர வலதுசாரி வாக்குகளை குறிவைத்து காய்களை நகர்த்துகிறார்.

பிரான்ஸில் கலகத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் அனைவரும் அரபு இனத்தைச் சேர்ந்தவர்களல்ல. அவர்களுக்கிடையில் கறுப்பினத்தவரும் இருந்தனர். அனைவரும் முஸ்லிம்கள் அல்ல, கிறிஸ்தவரும் கலந்திருந்தனர். இந்த இளைஞர்களின் கிளர்ச்சியானது பொருளாதார ரீதியிலான பின்னடைவு, பாரபட்சமான அடையாள அட்டை சோதனை போன்ற பிரச்சினைகளை முன்வைத்தே எழுந்தது. இஸ்லாமிய அடிப்படைவாதிகளுடன் தொடர்பான பிரெஞ்சு முஸ்லிம்களின் அமைப்பொன்று நடந்த கலவரத்தைக் கண்டித்து .ஃபத்வா (தீர்ப்பு) வெளியிட்டது. வேறுசில முஸ்லிம் மதத்தலைவர்களும் கண்டித்திருந்தனர். பல வசதியான முஸ்லிம்களும் எதிர்த்தனர். ஏனெனில் கலவரத்தில் எரிந்த பல கார்கள் அவர்களுக்கு சொந்தமானவை. நிலைமை இவ்வாறிருக்க இது 'அல்கைதா தூண்டி விட்ட கலவரம்' என்று சார்க்கோசி பகிரங்கமாக புழுகினார். அத்தோடு நில்லாது இது ஏதோ முஸ்லிம்களின் ஜிகாத் சம்பந்தமான பிரச்சினை என்பது போல, இஸ்லாமிய மதத்தலைவர்களை அழைத்து பேசினார். மதத்தலைவர்கள் இளைஞர்களைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இது பிரச்சினையை திசை திருப்பும் வேலை.

ஏனெனில் 'உள்நாட்டுப் போர்' வரும் என்று எச்சரிக்கை விடுக்கும் தீவிர வலதுசாரி லெ பென் விரும்புவதும் அதுதான். இப்போதிருந்தே இஸ்லாமிய பிரெஞ்சுப் பிரசைகளை சிறுபான்மையினமாக பிரித்து வைத்துவிட்டால், பிற்காலத்தில் ஒரு இனக்கலவரத்தை உண்டாக்கி, தமது பேரினவாத ஆட்சியை கொண்டு வரத்திட்டமிடுகின்றனர் புதிய நாசிகள். எதிர்காலத்தில் 'வந்தேறு குடிகளுக்கும்', 'பூர்வீக குடிகளுக்கும்' இடையில் யுத்தம் வருமென்ற கதைகள் சாதாரண (வெள்ளையின) பிரெஞ்சுக்காரர் மத்தியில் உலவுகின்றன. பிற ஐரோப்பிய நாடுகளிலும் இது போன்ற நிலைமையே காணப்படுகின்றது. அரசாங்கம் அல்லது ஆளும் கட்சிகள் அவ்வப்போது பேரினவாத அரசியலை தமது கைகளில் எடுத்து புதிய நாஸிகள் ஆட்சிக்கு வருவதை தடுத்து வருகின்றனர். இந்த அரசியல் தந்திரம் புதிய நாஸிகளுக்கு ஒரு சவால், சிறுபான்மை இனங்களுக்கு ஒரு சாபக்கேடு.

பிரான்ஸ் பற்றியெரிந்த அந்த கிளர்ச்சிகரமான வாரங்களில் தொலைக்காட்சியை பார்த்தவர்கள்.



ஒன்றை அவதானித்திருப்பர். உள்துறை அமைச்சர் சார்க்கோசி தினசரி கமெராக்களுக்கு முன்பு தோன்றினார், கருத்துக் கூறினார், கட்டளைகள் பிறப்பித்தார், அங்கே ஓடினார், இங்கே ஓடினார்... இவ்வாறு தான் சுறுசுறுப்பாக வேலை செய்வதாகக் காட்டியது. ஏதோ நாட்டு நன்மை கருதியல்ல. அடுத்த ஜனாதிபதியாகும் தனது சொந்த நலன் கருதி. யார் இந்த சார்க்கோசி? தீவிர அமெரிக்க ஆதரவாளர், அரசியலிலும், பொருளாதாரத்திலும். அமெரிக்காவுடனும், இஸ்ரேலுடனும் நெருக்கமான உறவுகள் ஒரு பக்கம். பொதுத்துறை நிறுவனங்களை தனியார் துறைக்கு விற்கும் ஒப்பந்தங்கள் மறுபக்கம். சுருக்கமாக பிரான்ஸின் எதிர்கால அரசியல்-பொருளாதாரத்தை தீவிர வலதுசாரி பாதையில் நடத்திச்செல்ல காத்திருக்கிறார். நாடு செழித்தால் தனியார்மயம், நாசமாய்ப்போனால் தேசியமயம் என்று பொருளாதாரம் நடத்திய சோசலிஸ்டுகளின் காலமில்லை இப்போது. ஆகவே விரைவான உலகமயமாக்கல், தனியார் மயமாக்கல், கணணிமயமாக்கல் போன்ற முதலாளித்துவ பொருளாதாரச் சீர்திருத்தங்களும் அதன் விளைவாக ஆட்குறைப்பு, சம்பளக்குறைப்பு, தொழிலாளர் நல சட்டங்கள் குறைப்பு, மானியங்கள் குறைப்பு போன்றவற்றை எதிர்பார்க்கலாம்.

முடிவாக ஒன்று மட்டும் நிச்சயம். அதிகரிக்கப் போகும் வேலையில்லாப்பிரச்சினை, அதனால் வீதிக்கு வரும் விரக்தியுற்ற இளைஞர்கள் ஆகியன மேலும் பல கலவரங்களுக்கு காரணமாகலாம். இந்த இளைஞர்கள் தாமும் இந்த சமுதாயத்தில் வாழ்கிறோம், தமக்கும் பிரச்சினை இருக்கின்றது என்பதை கார்களை, பஸ்களை, பாடசாலைகளை கொளுத்தித்தான் காட்ட வேண்டியிருக்கிறது. அவர்கள் எரிப்பது சிறிதளவு வசதிபடைத்த சாதாரண பொதுமக்களின் கார்களைத்தான், பொதுமக்கள் வேலையிலீடுபடும் பஸ்களைத்தான் மறுப்பதற்கில்லை. ஆனால் எந்தவித அரசியல் அறிவோ அனுபவமோ அற்ற சாதாரண மக்கள் கிளர்ந்தெழும்போது, தமக்குத் தெரிந்த வழியில் தான் அதைச் செய்வார்கள்.

முதலில் பிரான்ஸ் "சுதந்திரம்-சமத்துவம்-சகோதரத்துவம்" என்பது வெற்றுக் கோஷமாகி விடாமல் பார்த்துக் கொள்ளட்டும்.

மீண்டும்
மூன்றாவது மனிதன்

நீண்டகால இடைவெளியின் பின், மீளவும் 'மூன்றாவது மனிதன்' சஞ்சிகையை வெளிக்கொணர உத்தேசித்துள்ளோம்!

ஈழத்து தமிழ் கலை இலக்கிய சமூகத் தளங்களில், அக்கறைக்குரிய பல்வேறு விடயங்களைப்பற்றி உரையாடுவதற்கான களம் இன்மைபற்றிய கவலையை, நமது தமிழ்ச் சூழலில் அக்கறையுள்ள சக்திகளிடமிருந்து பல்வேறு தடவைகள் கேட்கக்கூடியதாக உள்ளன. இத்தகைய கவலையும் நிலைமையும், தனிமனிதர்களுடைய அங்கலாய்ப்பு மட்டுமன்று, ஒட்டுமொத்த ஈழத்தமிழ் இலக்கியத்தின் பின்னடைவு என்றே கொள்ளப்பட வேண்டியுள்ளது.

கலை இலக்கிய நண்பர்களுடனான உரையாடலின் பின், மூன்றாவது மனிதனை வெளிக்கொண்டுவருவதற்கான ஆரம்ப முயற்சிகள் தொடங்கப்பட்டுள்ளன. எதிர்வரும் ஜனவரி மாதத்திலிருந்து மாத இதழாக வெளிவரவுள்ளது. ஒரு சிற்றிலக்கிய ஏட்டின் உயிர்வாழ்வும், அதன் காத்திரமும் அதன் பேசுபொருளிலேயே (படைப்புகள்) தங்கி உள்ளது என்பதை நாமறிவோம்!

படைப்பாளிகள், திறனாய்வாளர்கள், பத்தி எழுத்தாளர்கள், அக்கறை கொண்ட வாசகர்களின் ஒருமித்த பங்களிப்பே நமது முயற்சியை சாத்தியப்படுத்தும். தொடர்ச்சியான உரையாடலும், விரைவான பிரசுர வருகையும் இன்று அவசியமாகி உள்ளது.

617, Awisawella Road,
Wellampitiya - Sri Lanka.
Tel: 077 3131627

Email: thirdmanpublication@yahoo.com

பிரதம ஆசிரியர்
மூன்றாவது மனிதன்.



தமிழில் : தயாநிதி

வைவா ஸ்டீபன்

பெண்கள் பற்றி உளவியலாளர்கள் மற்றும் மனோவியலாளர்கள் கூறியவை

நான் நேரத்தைக் கவனித்துக் கொள்கிறேன்.
நான் நேரத்தைத் தவற விட்டது இதுவரை நிகழவில்லை.
நான் இதில் மிகவும் அவதானமாக இருக்கிறேன்.
நான் இது பற்றிக் கதைகள் வருவதை விரும்பவில்லை.
நான் திரும்பி வந்ததும், ஒரு சிகரெட்டை அல்லது அதன் அரைவாசியைப் புகைத்து முடிக்க எனக்கு நேரம் கிடைத்தது.
நான் புகைப்பதைக் குறைப்பதற்கு முயற்சி செய்கிறேன்.

தொலைக்காட்சியில் மிகவும் கோரமான விடயங்களைக் காட்டு கிறார்கள். கொஞ்ச நாட்களுக்கு முன் சுவாசப்பைச் சத்திரசிகிச்சை ஒன்றையே முழுமையாகக் காட்டினார்கள்.

நான் எங்கே போய் வந்தேன், என்ன வாங்கினேன் என்பன பற்றிக் கேட்பதை அவர்கள் நிறுத்தி விட்டார்கள். கேட்பதற்கு எதுவும் இல்லை என்று நான் அவர்களிடம் சொல்லிவிட்டேன்.

நான் கட்டாயம் வெளியே செல்ல வேண்டும். எங்கேயோ வெளியே செல்ல வேண்டும். இந்தச் சத்தங்கள், மிதப்போக்குகள், நச்சரிப்புகள் எல்லாவற்றிலிருந்தும் விடுபட வேண்டும். அதிக நேரம் கூடவே இருந்தால் எனக்கு விசர் வந்து விடும் போலுள்ளது.

மணத்தைப் பற்றிக் கதைக்கவே தேவையில்லை. பொரித்த எண்ணை யின் மணம் எனது கழுத்தை நெரிக்கிறது. எனது கழுத்தும் நீண்ட கழுத்து டைய தீக்கோழி போலாகிறது. எனக்கு ஒரு அரைமணி நேரம் கிடைத்தால் கூட நான் உடனேயே வெளியே செல்லவே விரும்புகிறேன். இந்தக் குறுகிய நேரத்தில் நான் வெளியே சென்று நல்ல காற்றை சுவாசிக்கவில்லை என்றால் எனது கழுத்து நெரிக்கப்படுவது போல இருக்கிறது.

பனிக்காலம் ஆரம்பமாகும்போது மாய் பென்ந்த ஒரு ஆலோசனையை முன்வைத்தாள். அதாவது, முதல் அரை மணித்தியாலத்தை நானும் அடுத்து வரும் அரை மணித்தியாலத்தை தானும் ஓய்வாக எடுக்கலாம் என்று. இப்படி மாற்றிக் கொள்வோமா எனக் கேட்டாள். பன்னிரண்டு மணிக்கு முதல் அவளுக்கு நல்ல பசி வருவதில்லை எனவும், ஆனால், நாள் முடிவில் படுக்கைக்குச் சென்றால் நன்றாக இருக்கும் என எண்ணுமளவிற்கு வெகுவாக களைத்துச் சோர்ந்து பலவீனமடைந்து விடுவதாகவும் கூறினாள். ஆனால், நான் இதில் உறுதியாக இருந்து விட்டேன். சாப்பாட்டிற்கான இடைவேளை சொல்லப்பட்டபடி இருக்க வேண்டும் என்று கூறினேன். மருந்து எடுப்பதன் காரணமாக நான் பன்னிரண்டு மணிக்கு கட்டாயமாக உணவருந்த வேண்டும் என்று கூறினேன். நான் ஏற்கனவே காலையில் நேரத்துடன் எழும்புகிறேன். இங்குள்ள உணவருந்தும் நேரத்துடன் பொருந்துவதற்கு ஏற்ற வகையில் நான் மருந்து எடுப்பதனால் இப்போது எழும்பும் நேரத்தை விட நடுச்சாமத்தில் எழும்பி மருந்தைப் போட நான் விரும்பவில்லை என்று சொன்னேன்.

காலை உணவு எட்டுமணிக்கும் இடைவேளை உணவு பன்னிரண்டு மணிக்கும் இருப்பது மிகச் சிறந்தது. இப்படியிருந்தால் நான் ஏழு மணிக்கும் பதினொரு மணிக்கும் மருந்தை எடுக்கலாம். இதனை அவள் கருத்தில் கொள்ளத்தான் வேண்டும். அவள் விட்டுத் தந்தாள். அவள் இந்த விடயத்தைப் பற்றி பிரஸ்தாபித்தபோது அவள் பிடிவாதமாக விட்டுக் கொடுக்காமல் இருப்பாள் என்று நான் நினைத்தேன். அத்துடன் பொறுப்பாளர்வரை விடயத்தைக் கொண்டு போவாள் என்று நினைத்தேன். இதற்குத் தீர்வாக பொறுப்பாளர், உதாரணமாக, நீங்கள் ஒன்று விட்டு ஒரு கிழமை மாற்றி மாற்றி இடைவேளையை வைத்துக் கொள்வது நியாயமானதும் புத்திசாலித் தனமானதும் எனக் கூறுவார் என்றெல்லாம் நினைத்தேன். ஆனால், அவள் விட்டுக் கொடுத்து விட்டாள். அதுவும் மிக விரைவாக விட்டுத் தந்தபோது எனது இதயம் துள்ளியது

அவள் எனக்குச் சார்பான ஆலோசனையை முன்வைத்தபோது எனது இதயம் ஒரு துள்ளுத் துள்ளியதை உணரக்கூடியதாக இருந்தது. அவள் விட்டுத் தந்ததை நினைக்கையில் இன்னும் ஒரு தடவை இதயம் துள்ளியது. அந்த குறுகிய இடைநேரம் மிகவும் புளுக்கமாக இருந்தது. நான் மருந்து விடயம் பற்றி நிதானமாகவும், தெளிவாகவும் கச்சிதமான முறையில்

லைலா ஸ்ரியன்.
1946இல் பிறந்த இவர் ஒரு கவிஞர், மொழி பெயர்ப்பாளர், நோர்வேயிலுள்ள சிறுபான்மை மக்களின் சுதேச மொழியான சாமிய மொழியிலிருந்து கவிதைகளை மொழிபெயர்த்துள்ளார். 'புதியபாதை' என்ற சிறுகதைத்தொகுதிக்கு றானா நகரசபையின் கலாச்சார பரிசைப் பெற்றிருந்தார்.

இவரின் முதலாவது சிறுகதைத் தொகுப்பான 'புதிய பாதைகள்' 1979இல் வெளிவந்தது. அதைத் தொடர்ந்து 'பறவைகளுக்குத் தெரியும்', 'இப்படி நடப்பதுண்டு' (இது 1980களில் சிறந்த புத்தகளில் ஒன்றாக தெரிவு செய்யப்பட்டது.) மேலும் இவர் சிறுவர்களுக்கான நூல்கள், கதைகள், கவிதைகள் போன்றவற்றை எழுதியுள்ளார். நாளாந்த வாழ்க்கையில் நிகழும் சந்தோஷமான விடயங்களைக் கொண்டு கனமான கதைகளை சிறப்பாக படைப்பதில் எழுத்தாளர் திறமைசாலி. இவருடைய எழுத்துக்கள் பல வெவ்வேறு மொழிகளுக்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவருடைய புத்தகங்கள் அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளில் வெளியிடப்பட்டுள்ளன. அவருடைய படைப்புக்களில் சில:

சூரிய வெளிச்சமுடைய விறாந்தை (2003)
நீச்சல் பிடிப்பு (சிறுகதைகள் — 2001)
கண்ணாடியினூடாக... (சிறுகதைகள் — 1999)
ஸ்கூட்டரில் ஒரு சிறுமி (1999)
தயார், முடிவு, செய்க! (இளம் பருவத்தினருக்கான நாவல் — 1998)

தெரிவித்தேன். இது இயற்கையாகவே வந்தது. நான் வலிந்து ஏற்படுத்திக் கொள்ளவில்லை. நான் உண்மையிலேயே அமைதியாக இருந்தேன். நான் கிட்டத்தட்ட பனிக்கட்டி மாதிரி குளிராக இருந்தேன். அவள் இதற்குச் சம்மதித்ததும் எனக்கு இதயப்படபடப்பு மீண்டும் வந்து விட்டது.

இதனை முன்பு நான் அனுபவித்திருக்கிறேன். உண்மையிலேயே ஏதாவது செய்ய வேண்டுமானால், எதையாவது கட்டாயம் செய்து முடிக்க வேண்டுமானால், இவ் வேளையில் நான் உணர்ச்சிகளற்றவளாக மாறிவிடுவேன். ரோகருடன் எனக்கு இவ்வாறு அடிக்கடி ஏற்படுவதுண்டு. இப்படி மிகவும் கடுமையாக ஏற்பட்டபோதும் நான் எதிலும் சம்பந்தப் படாதவளாக இருந்தேன்; எதுவும் என்னைப் பாதிக்காதவாறு இருந்தேன்; மிகவும் அமைதியாக இருந்தேன்.

நான் மிகவும் அமைதியாக ரோகருடைய பொருட்களை அடுக்கி பொதிகளாக்கினேன். அவற்றை நாங்கள் தூக்கி வெளியே கொண்டு செல்லும் போதும் நான் மிகவும் அமைதியாக இருந்தேன். வாடகைக் கார் சென்ற பின்பு, ஒரு வளைவில் காரின் பின்பக்க வெளிச்சங்கள் மறைந்த பின்பு, எல்லா வெளிச்சங்களையும் இருள் தன்னுள் கரைத்துக் கொண்ட பின்பு ஒரு விதமான எதிர் விளைவு என்னுள் ஏற்பட்டது. அது விரைவில் மறைந்தும் போயிற்று. ஒரு சிகரெட்டும் கொஞ்சம் விஸ்கியும் எடுத்தேன். எல்லாம் போய் விட்டது. அவன் ஒரு கொஞ்சத்தை மிச்சம் விட்டுச் சென்றான். அதனைத்தான் நான் இப்போது எடுத்து முடித்தேன். இது பல வருடங்களுக்கு முன்பு, நீண்ட காலங்களுக்கு முன்பு நிகழ்ந்தது.

மாய் பென்ந்த மனிதாபிமானற்ற ஆளில்லை. அவள் எந்த விதத்திலும் முழுவதும் மாறுபட்ட எண்ணங்களைக் கொண்டிருப்பவளும் இல்லை. என்னுடைய எதிர்பார்ப்பு என்னவென்று எனக்குத் தெரியவில்லை. இவ்வளவு இலகுவாக இந்த விடயம் முடியும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அவள் நல்லவளாக இருந்தாலும் சற்றுப் பிடிவாதமாக இருப்பவள். அதனால் நான் உடனேயே மிகவும் பயந்து போனேன். இவள் இந்த விடயத்தை இடைவேளை நேரம் எடுத்தபோது என்னுடைய இதயம் தொண்டையில் சிக்கிக் கொண்டது.

நாங்கள் பல வருடங்கள் ஒன்றாக வேலை செய்தவர்கள். ஒரே நேரத்தில் வேலை செய்பவர்கள். மிகவும் கடுமையாக உழைப்பவர்கள். வேலை செய்பவர்கள்; செய்தவர்கள். மோசமான வேலை என்றோ அல்லது வேறெந்தக் குறையுமோ காணமுடியாதவண்ணம் மிகவும் நன்றாக வேலை செய்திருக்கிறோம். சில சமயங்களில் அவள் சற்று அதிகம் கதைக்கக்கூடிய வள். இது ஒன்றுதான் சொல்லக்கூடியது, அதுவும் குறிப்பாக, மகளைப் பற்றித்தான் பெரும்பாலும் அவள் கதைப்பாள். அவற்றையிட்டு நான் மிகவும் சலிப்படைந்து விட்டேன். அவள் என்ன சொல்கிறாள், என்ன கருத்தைக் கொண்டுள்ளாள், எங்கே இருவரும் சென்று வந்தார்கள், என்ன வாங்கினார்கள், என்ன சாப்பிட்டார்கள் போன்ற எல்லா விபரங்களையும் கூறுவாள். இதைத் தவிர மாய் பென்ந்த மிகவும் சிறந்த ஊழியர். அவள் பஞ்சிப் படுவதில்லை. கடுமையாக உழைப்பவள். அவள் இரண்டொரு நாட்கள் சுகயீனம் காரணமாக வேலைக்கு வராமல் இருந்ததுண்டு. இது எல்லோருக்கும் வருவதுதானே. இந் நேரங்களில் நாம் தற்காலிக வேலையாட் களை வேலைக்கு எடுப்போம். பல அனுபவங்கள் கொண்ட தொழிலாளர்களாக அவர்கள் இருந்தாலும் யாரும் மாய் பென்ந்திற்கு இணையாக மாட்டார்கள். அவள் மிகவும் விரைவாகவும், சுறுசுறுப்பாகவும் வேலை செய்வாள். இழுத்தடிப்பதில்லை எல்லாவற்றிற்கும் மேலாக அவள் யாரையும் ஏமாற்றுவதில்லை.

சிலர் தமது நேரத்தைக் கடத்துவதற்காக மேசையைத் துடைத்தபடியும், உருளைக் கிழங்குப் பொரியலை திருப்புவதாக பாசாங்கு செய்தபடியும், அதில் நின்று வேலை செய்வதாக பாவனை காட்டிக் கொண்டும் இருப்பார்கள். இவர்கள் இப்படி நடந்து கொள்வதால் மற்றவர்கள் எல்லா வேலைகளையும் செய்து முடிக்க வேண்டும். என்னுடன் வேலை செய்பவள் அப்படியல்ல. இதற்காக அவளுக்கு நான் நன்றி சொல்ல வேண்டும்.

உண்மையிலேயே என்னுடைய எதிர்பார்ப்பு என்ன என்று எனக்கே தெரியாது. நான் எதை எதிர் பார்த்தேன் என்று கூற முடியாது. பெரிதாக எதையும் எதிர்பார்க்க முடியவில்லை. நான் அவளிடம் சொன்னேன். அவள் மிக விரை வாகப் பின்வாங்கி விட்டாள். தன்னுடைய போராட்டத்தை முன்னெடுக்கவில்லை. அதுவும் கூட மிக விரைவாக நடந்து விட்டது. நான் என்ன உணர்கிறேன் என்பதையே என்னால் உணர முடியவில்லை. ஆனால், நான் உண் மையிலேயே ஆறுதலாக உணர்ந் தேன் என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால், இதையும் விட ஏதோ ஒன்று. நான் ஜக்கற்றினை போடும்போது சற்று நடுங்குகிறேன். விரல்கள் கட்டுப் பாட்டுக்குள் வர மறுக்கின்றன. நான் பொத்தான் களைப் பூட்டாமல் விடுகிறேன். ஜக்கற் திறந்தபடியே தொங்க அனுமதிக்கிறேன். கன தூர மில்லை, அடுத்த மூலையில் தான். இருநூறு மீற்றர் தொலைவில் இருக்கிறது. ஒரு சில நிமிடங்கள் தான் எடுக்கும்.

நான் முதலில் சற்று நேரம் நிற்பேன். நடைபாதைக்கு வந்ததும் அதில் சற்று நின்று பார்ப்பேன். காற்றை நுகர்ந்து பார்ப்பேன். எனக்குத் தெரியும் என்னில் சாப்பாட்டு மணம் மணக்கிறது என்று. ஜக்கற்றை அலுமாரிக்குள் தொங்க விட்டிருந்தாலும் என்னில் இருந்த மணம் மேலோங்கியி

நாங்கள் கூட்டில் பழங்கள் பிடுங்குவதற்காகச் சென்றிருந்தோம். காட்டின் நடுப்பகுதிக்குச் சென்றோம். இருள் நிறைந்த காடு. அங்கும் இந்த மணத்தைத் திடீரென்று உணரக் கூடியதாக இருந்தது.

ருந்தது. நான் எனது ஏப்பிரனைக் கழற்றி வைத்துவிட்டுத்தான் வந்திருந்தேன். அப்படியிருந்தும் மணம் என்னுடன் கூடவே வந்து விட்டது. என்னருகே செல்பவர் களுக்கு, என்னைக் கடந்து செல்ப வர்களுக்கு மணக்கலாம். மணம் தலைமயிரிலும் தோலிலும் ஒட்டிக் கொண்டிருக்கிறது. சிலவேளை களில் இந்த மணம் தோலுக்கு கீழே மிகவும் ஆழமாக புதைந்துள் ளதாக உணர்கிறேன். நான் எவ்வ ளவு குளித்தாலும் வாசனைத் திரவியங்களைப் பூசினாலும் அந்த மணம் அங்கேயே இருக்கிறது. ஒரு போதும் அழிந்து போவதாக இல்லை. விடுமுறைக் காலத்தில் கூட இது என்னுடனேயே இருப்ப தாக உணர்கிறேன்.

ஒரு தடவை விடுமுறைக் காலத்தில் நான் எனது தாய் தந்தையர் வீட்டிற்குச் சென்றி ருந்தேன். என்னுடைய பெற்றோர் கிராமப்புறத்தில் வசிக்கின்றனர். ஒரு மலைப்பிரதேசத்தில் அது அமைந்துள்ளது. மிகத் தொலை வில் இருக்கிறது. நாங்கள் காட்டில் பழங்கள் பிடுங்குவதற்காகச் சென் றிருந்தோம். காட்டின் நடுப் பகுதிக்குச் சென்றோம். இருள் நிறைந்த காடு. அங்கும் இந்த மணத்தைத் திடீரென்று உணரக் கூடியதாக இருந்தது. அந்த மணத் தைத் தாங்கிய எந்த உடையையும் நான் அணிந்திருக்க வில்லை. ஒரு வாரமாக விடுமுறையில் இருந் தேன். பல தடவைகள் குளித்தி ருந்தேன். நாங்கள் ஓரிடத்தில் அமர்ந்து உணவுப் பொதியைப் பிரித்து சுடுதண்ணீர்ப் போத்த லையும் எடுத்து முன்னுக்கு வைத் தோம். உண்மையிலேயே இது ஒரு சந்தோஷமான வேளை. அவர்கள், ஆம் எனது பெற்றோர் கள். இன்னும் ஆரோக்கியமாக இருக்கிறார்கள். எனது சகோதரியும் கூட வந்தி ருந்தார். அவர் பேர்கனிலிருந்து வந்திருந்தார். சாப்பாடு மற்றும் ஏனைய சாமான்களையும் முதுகுப் பையில் சுமந்தபடி வந்தார். நல்ல காலநிலையும் நிறையப் பழங்களும் இருந்தன. எல்லோரும் வாளிகள் நிறையப் பழங்கள் சேகரித்திருந் தோம். நாங்கள் நிலவிரிப்புக்களை நிலத்தில் விரித்து விட்டு அமர்ந்தி ருந்தோம். நான் மிகவும் ஆறுத லாக இருந்தேன். இப்படி இருந்து நீண்ட காலத்திற்கு மேலாகி விட்டது. நாட்களை பின்னோக்கி நகர்த்திக் கொண்டது போலத் தென்பட்டது. கடந்த காலத்தை நோக்கியதாக இருந்தது. சிறுபிள் ளைப் பருவகாலத்தை நினைவு படுத்துவதாக அமைந்திருந்தது. அதாவது ரோகருக்கு முன்பு, எல்லாவற்றிற்கும் முன்பான மிக மகிழ்ச்சியான காலம். அம்மா தான் செய்த இனிப்பான கேக்குகளை கொண்டு வந்திருந்தார். என்னு டைய அம்மா வீட்டில் தயாரிக்கும், முட்டை வெண்கருவை நடுவில் விட்டு சீனித்துகள்களை தூவித் தயாரித்திருக்கும் இச்சிறிய கேக்கு களுக்கு நிகராக எதுவும் இருக்க முடியாது. அப்பா பிளாஸ்ரிக் கோப் பைகளை எடுத்து அதற்குள் வார்த் தார். அவரிடம் ஒரு அரைப் போத் தல் eau de vie பாலுடன் கலந்த குடிபானத்தை எடுத்து வந்திருந் தார். அப்பா கோப்பிக்கும் பால் கலந்துதான் குடிப்பார். சில நேரங் களில் பால் கலந்த கோப்பி நல்ல சுவையாக இருப்பதாக நானும் நினைப்பேன். நான் சிறிதளவு குடித் திருப்பேன் என்று நினைக் கிறேன்.

பின்னேர வெய்யிலில் வாளி நிறைந்த பழங்களுடனும் தாங்கக் கூடிய இடுப்பு நோவுடனும் அமர்ந்தி ருப்பது இதமாக இருந்தது. வய தான எனது பெற்றோருக்கும் இடுப் பில் நோ ஏற்பட்டிருக்க வேண் டும். ஆனால் அவர்கள் அதைப் பற்றிக் கதைக்கவில்லை. எதுவும் சொல்ல வில்லை. இந்த மாதிரியான விட யங்கள்பற்றி அவர்கள் குறிப்பி டவில்லை. இது இயற்கையானது. பழம் பிடுங்கினால் நோ ஏற்படுவது வழமையானது. இப்படியே எப்போ தும் இருந்து விட்டால் என்ன என்று மனசு ஏங்கியது. சந்தோஷத்தை உணரக் கூடியதாக இருந்தது. இது நன்றாக இருந்தது. மிகவும் அற்பு தமான நேரமாக இருந்தது. எங்கே கண்ணீர் வந்து விடுமோ என்பது போல இருந்தது.

அந்தச் சந்தோஷமான வேளை யில்தான் ஏதோ ஒன்று அவசரமாக கடந்து சென்றது போல இருந்தது. ஏதோ ஒன்றின் ஆவி. மிக வித்தியா சமானது. சாப்பாட்டு மணம். ஏதோ ஒருவித சாப்பாட்டு மணம் அல்ல. சாப்பாட்டுக் கடையில் இருந்து

வரும் அந்த குறிப்பான மணம். அதே சாப்பாட்டு மணம். தேநீர்க்கடையிலிருந்து வரும் அதே மணம். ஒரு ஆவி கண்ணுக்குப் புலப்படாது சத்தம் எதுவுமின்றி எங்களைக் கடந்து ஊடறுத்துச் சென்று விட்டது. ஆனால் மணம் மட்டும் தங்கி விட்டது. காற்றுத் துகள்களில் தொங்கிக்கொண்டு நின்றுவிட்டது, என்னுடைய மூக்குத் துவாரங்களை துளைத்துக் கொண்டும், தலைமயிரினுள்ளும், உடுப்புக்களிலும் எல்லாவற்றிலும் வலுக்கட்டாயமாக நுழைந்து கொண்டது. மற்றவர்களும் அதை உணர்ந்திருக்க வேண்டும். அந்தக் குறிப்பிட்ட மணத்தை உணராவிட்டாலும், ஏதோ ஒன்றை உணர்ந்திருக்க வேண்டும். "பாய் பிரித்" என்று குரல் கொடுத்தாள் எனது சகோதரி. "நீங்கள் எங்கேயோ கனதூரத்திற்கு அப்பால் போய் விட்டீர்கள் போல. என்ன ஏதாவது புதிய யோசனையா?" எனக் கேட்டு விட்டுச் சிரித்தாள். அம்மாவும் அப்பாவும்கூட புன்னகைத்துக் கொண்டார்கள். மணம் அவ்வளவு கடும் மணமாக இருந்தது.இதைத்தான் அவளும் உணர்ந்திருக்கலாம்.

நான் இப்படி சற்று நேரம் நிற்பது வழக்கம்.

நேரே முன்பாக.

நல்ல காற்றைச் சுவாசிப்பேனோ என்னவோ தெரியாது. ஆனால் நான் நல்ல காற்றைச் சுவாசிப்பதாக கற்பனை செய்யலாம்தானே. நான் நடக்கிறேன். வீதியின் அதே பக்கத்தில் நடையைத் தொடர்கிறேன். பயணமுகவர் அலுவலகம் சற்று போக்குவரத்துக் கூடிய அகலமான வீதியில் எதிர்ப் பக்கத்தில் அமைந்துள்ளது. எங்களுடைய கடை குறுக்கு வீதியில் அமைந்துள்ளது.

நான் இரண்டு நாட்களுக்கு தொடர்ச்சியாக ஒரே உடுப்பை ஒரு போதும் அணிவதில்லை. வீதி மிக அகலமானது. போக்குவரத்து நிறைந்தது. கார்கள் மிக வேகமாகக் கடந்து செல்கின்றன. பகலில் இந்த நேரத்தில் வாகனங்கள் வேகமாகச் செல்வது வழக்கம். பின்பு மிகவும் அமைதியாகிவிடும். இந்தப் பாதையின் பச்சை விளக்கிற்காக காத்திருக்கிறேன். ஆனால் இப்போது வேகமாக நகருகின்றன எல்லா விதமான கார்களும். சிலவற்றின் சத்தம் காது மென்சவ்வை அதிரவைக்கின்றன.

கார்களுக்கிடையில் அவளை நான் பார்க்கிறேன். ஒரு கணநேர தரிசனம். நான் அதிக நேரம் நிற்கவில்லை. ஒரு கணம்தான். வீதி விளக்குச் சந்தியை நோக்கித் திரும்பி நகர்கிறேன். சற்றுநேரம் நிற்கிறேன். மற்றப் பாதையை நோக்கி நடக்கிறேன். நான் புறப்பட்ட இடத்திற்கே திரும்பி வருகிறேன். அதிலிருந்து போவதும் வருவதுமாக சில தடவைகள் நடை பயில்கிறேன்.

அவள் வரவேற்பறையில் குனிந்தபடி இருந்தால் பெரிதாக எதுவும் தெரியாது. குனிந்த தலையின் பிடரியையும் தலைமயிரையும் நெற்றியின் சிறுபகுதியையுமே எனக்குத் தெரிகிறது. அவள் ஏதோ ஒற்றைகளைப் புரட்டிக் கொண்டிருக்கிறாள் அல்லது ஏதோ எழுதிக் கொண்டிருக்கிறாள். அவள் தனது வலது தோளைச் சற்று உயர்த்தினால் அவள் எழும்புகிறாள் என்று எனக்குத் தெரியும். மற்ற நேரங்களில் அவள் எழுந்து நிற்கிறாள் அல்லது சற்று முன்னும் பின்னுமாக நடக்கிறாள். இப்போது நான் அவளைச் சற்று அதிகம் பார்க்கக் கூடியதாக இருக்கிறது. அவள் வரவேற்பறை மேசையின் முன்பக்கத்தை நோக்கிச் சரிந்து வாடிக்கையாளரைக் கவனித்துக் கொள்ளும்போது அவள் சிரிப்பதுண்டு. நான் அவள் சிரிப்பைப் பார்த்து ரசிப்பேன். சில சந்தர்ப்பங்களில் நான் பதிலாக சிரிப்பதும் உண்டு.

பாதசாரிகளுக்குரிய பாதையில் நடுவில் அசடு வழியும் முகத்தை வைத்துக்கொண்டு நான் நிற்கிறேன் ஒரு முட்டாள் மாதிரி. ஆனால் என்னைத் திடப்படுத்திக் கொண்டு நடக்கிறேன். இந்த நாட்களில் நான் இலகுநடை பயில்கிறேன்.

திடீரென வீசும் காற்று மாதிரி பின்னறைக்கு வருகிறேன். அமைதியாக அமர்ந்து மிகுதிச் சிகரட்டை அனுபவித்து புகைக்கிறேன். ஒரு தடவை கதவை வேகமாகத் தள்ளியபடி திடீரென்று அவள் வெளியே வந்தாள். அவள் என்னைக் கண்டு விட்டுத்தான் வருகிறாள். நிச்சயமாக என்னை நோக்கித்தான் வருகிறாள் என்று நான் நினைத்தேன். அத்துடன் என்னைக் கண்டபடியால்தான் அவள் இவ்வளவு விரைவாக வருகிறாள் என்று நினைத்தேன். நான் அரைவாசி மறுபக்கம் திரும்பி ஒரு சிறுகுழந்தை இனிப்புப் போத்தலினுள் கையை விட்டு எடுக்கும்போது கையும் களவுமாகப் பிடிபட்டால், அருகே வந்தால் பிளாஸ்ரிக் முள்ளுக்கரண்டியால் கையில் அடி விழும் என்ற எச்சரிக்கையுடன் நிற்கிறேன். விறைத்துப்போய் நிற்கிறேன்.

ஓவியம் : ரஞ்சினி

ஆனால் அவள் தொடர்ந்து வேகமாகச் சென்றுவிட்டாள். அவள் நடையில் வேகம் இருந்தது. கோட்டின் பைகளுக்குள் கைகளைச் செலுத்தியபடி நடைபாதைக்குச் சென்று விட்டாள். தோள் பை இடுப்பைத் தொட்டது. அவள் மூலையில் சென்று மறைந்து விட்டாள். அவள் எங்கே செல்வதற்கு இவ்வளவு அவசரமாக செல்கிறாள்? நான் நின்ற இடத்திலிருந்து இரகசியமாக வெளியேறுகிறேன். நான் அடுத்த மூலைக்கு வந்து சேர்ந்தேன். இதயம் மிக வேகமாக அடிக்கத் தொடங்கியது. களவு செய்தவர் போல இதயம் துடித்தது. அவள் வெளியே சென்று விட்டாள். இதுமாதிரி ஒரேயொரு தடவை மட்டும் நிகழ்ந்தது.

சிலநாட்களில் நான் அவளைக் காண்பதில்லை. அவள் அங்கே இருந்திருக்கலாம். அநேகமாக அவள் அங்கேயே இருந்திருப்பதற்கான சாத்தியம் பெரும்பாலும் உண்டு.

அவர்களுக்கு இன்னுமொரு அலுவலகமும் உள்ளே இருக்கிறது. இருந்தாலும் நான் சற்றுத் திகைப்படைகிறேன். இது முட்டாள்

தனமானது. அறிவுகெட்டதனம் என எனக்கு நான் சொல்லிக் கொள் கிறேன். நான் என்னால் இயன்ற வரை என்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு வேலை செய்தாலும் நான் இதனை இனங் காண்கிறேன். நான் விருந்தாளிகளுடன் உரையாடு கிறேன். என்னால் முடிந்தவரை அதைச் சொல்கிறேன். ஆனாலும் அது வழமையாக இருப்பது போல அமையவில்லை. ஆனால், சற்று வித்தியாசமாக இறுக்கமானதா கவும் அமைகிறது. நான் மிகவும் விரைவாக களைத்து விடுகிறேன்.

நான் அந்த நீலநிற ஜக்கற் வைத்திருக்கிறேன். அது இடுப் புக்கு கீழே வருமளவிற்கு நீள மானது. கடும்நீலமும், சிவப்பும் சேர்ந்தது. கால்கள் ஒடுங்கியது. டெனிம் ஜீன்ஸ். சற்று மெல்லிய நீலம். ஆனால் மிகவும் வெளிர் நீலம் என்று சொல்ல முடியாது. நீலம் ஒரு நல்ல வர்ணம். நீலநிற உடை அணிந்து சென்றால் கவனத்தைக் கவராது சென்று வரலாம். தார் ரோட்டும் நீலம்தான். அது கறுப் பல்ல, முழுமையான கறுப்பு அல்ல அது நீலம்.

அவள் என்னைக் காணவில்லை அல்லது இன்னும் கண்டுபிடிக்க வில்லை என்று நினைக்கிறேன். அப்படி எதுவும் இன்னமும் நிகழ வில்லை. இந்தத் தடவை அவள் வெளியே அவசர அவசரமாக வந்த போதும் கண்டுபிடிக்கவில்லை. நான் கவனமாக நடந்து கொண் டேன். பொதுவாக அவள் அதிக வேலையாக இருப்பாள். நிறைய விருந்தாளிகள் எப்போதும் வந்தபடி இருப்பார்கள். ஏனெனில் இந்த இடம் மத்திய பகுதியில் அமைந்தி ருக்கிறது. பல விருந்தினர்கள் அங்கு வருவதுண்டு. நானும் அதிக நேரம் ஒய்வாக நிற்க முடியாது. இந்தப் பக்கம் பார்த்தபடி நிற்பது குறைவு. நான் சற்றுச் சரிந்து பார்த்தபடி நிற்பதுண்டு. கட்டிடத் தின் சுவரில் சாய்ந்து.

அவர்களுக்கு நேர் எதிரான கட்டிடத்தில் துணிகளை வாங்கும் விற்கும் விற்பனை நிலையம் இருக்கிறது. நேர்எதிராக. ஒரே ஒரு வீதி மட்டும்தான். இடையில் நடை பாதைகள். எப்போதும் ஆட்கள் நடந்து சென்றபடி. இவர்களும் இடையிடையே வந்தபடி. இந்த நிலையில் நான் மிகவும் மறைவாக இருக்கிறேன். நான் பனிக்கால நடுப்பகுதியில் சிறந்த பார்வை யைக் கொண்டுள்ளேன். ஏனெனில் இந்தக் காலப்பகுதி மிகவும் வெளிச்சமாக இருக்கும். அத்துடன் கோடைகால நடுப்பகுதியில் சூரிய ஒளி மேல்பக்கத்தில் இருந்து வரும் போது நான் நன்றாகப் பார்க்கிறேன். ஏனைய பருவகாலங்களில், உதார ணமாக, இலையுதிர் காலத்தில் வெளிச்சம் சரிவாக வருகிறது. சிலவேளைகளில் ஒரு விதமாக ஒளி தெறிப்படைவது போலத் தெரி கிறது. இது ஒருவகை தடையாகத் தெரிகிறது.

இவ்வாறான சிலவேளைகளில் நான் மிகவும் குறைவான பார்வை யைக் கொண்டுள்ளேன். பார்வை தெளிவற்றதாகவும் அலுவலகங் கள் எங்கே இருக்கின்றன என்பது பற்றிய ஒரு மட்டுப்படுத்தப்பட்ட படமும் அங்கு இருக்கும் மனிதர் களின் முகங்கள் தெளிவாகத் தெரியாமல் அல்லது அவள் எப்ப டித் தலையை அழகு செய்துள் ளாள் என்பதையோ, அல்லது காதில் என்ன அணிந்துள்ளாள், உதாரணமாக, வெள்ளை முத்து தோடுகளை அணிந்து இருக்கி றாளா, என்பதையோ தெளிவாகப் பார்க்க முடிவதில்லை. மழை பெய்

பின்னேர வெய்யிலில் வாளி நிறைந்த பழங்களுடனும் தூங்கக் கூடிய இடுப்பு நோவுடனும் அமர்ந்திருப்பது இதமாக இருந்தது.

தால் பார்வை இன்னும் மங்கி விடும். மழையிலிருந்து பாதுகாத்துக் கொள்ள எதுவும் இல்லை. ஒரு பீலி போன்று ஆனால் மிகவும் அகலம் குறைந்த ஒன்று இருக்கிறது. கடு மையான மழை என்றால் நீர் நேரடி யாக யன்னலில் விழும். இந்த நாட் களிலும் நான் நடக்கிறேன். சரிவான வெளிச்சத்தில் குழம்பிய பார்வையாக இருந்தாலும் சரி. மழை பெய்து யன்னல்களில் ஒரு சவ்வு போல படிந்து விடும். இது பழைய கால வாழ்க்கையை நினை வூட்டுவது போல அமைகிறது. இதை முழுக்க முழுக்க ஒத்தது எனக் கூறமுடியாது. ஒப்பிடவே முடியாது. ஆனால் சில நினைவு கள் இப்படித்தான்.

அப்போது மழை பெய்ய வில்லை. உண்மையிலேயே மழை யில்லை. ஆனால் கண்கள். நான் அநேகமாக அழுதிருக்க வேண்டும். அதனால்தான் என்னால் தெளி வாகப் பார்க்க முடியாமல் போனது. சுவர்கள் இரண்டாகவும், கண்ணா டிச்சுவர்கள் இரண்டாகவும், இவற் றுக்கிடையில் ஆவி அடைபட்டுப் போனது போல மங்கலாகவும், தண்ணீர்த் துளிகள் மிகமிக நெருக்கமாக இருந்தன. ஒரு புயல் அடித்து ஓய்ந்த பின்பு இருக்கும் யன்னல் போல அவைகள் இருந் தன. ஆனால் அவைகள் உண்மை யிலேயே இரண்டாக இருக்கும் என நான் நினைக்கவில்லை. அவைகள் ஒற்றையானவை. ஒரு படை கண் ணாடியும் செயற்கையான மூலப் பொருட்களும் தான்.

நீங்கள் ஒரு பக்கம்தான் நிற்க லாம். அடுத்த பக்கம் மிகவும் அரு காமையில் இருந்தாலும் எட்ட முடியாது. நான் எவ்வளவு கஸ்டப் பட்டேன் அடுத்த பக்கத்திற்கு என்னை இணைத்துக் கொள்வதற்

அவள் என்னைக் காணவில்லை அல்லது இன்னும் கண்டுபிடிக்கவில்லை என்று நினைக்கிறேன். அப்படி எதுவும் இன்னமும் நிகழவில்லை. இந்தத் தடவை அவள் வெளியே அவசர அவசரமாக வந்தபோதும் கண்டு பிடிக்கவில்லை.

காக என்பதை நினைத்துப் பார்க்கிறேன். தடைகள் இடையில் இருக்கும்போது நீங்கள் ஒன்றை எட்ட முயற்சிக்கும்போது தடைகள் வரைதான் கைகள் எட்டும் என்பதை நீங்கள் அறிவீர்கள். இருந்தாலும் நான் முயற்சி செய்திருக்கிறேன். கண்ணாடிகள் வரை சென்று அவர்களுடன் தொடர்பு கொள்ள முயற்சித்திருக்கிறேன். மருத்துவர் பக்கத்தில் நிற்கிறார். அவர் ஏதோ சொல்கிறார். எனக்கு எதுவும் கேட்கவில்லை.

இன்று நான் பார்க்கிறேன். நான் விரைவாக இருக்க வேண்டும். நான் பார்த்தேன். அவள் அந்த வெள்ளை மேலாடையை அணிந்து கொள்கிறாள். அவளுடைய தோல் நிறம் எப்போதும் ஆரோக்கியமான வெளிர் நிறம்தான். அவள் வெள்ளை ஆடையை அணிகிறாள். அங்கே வேலை செய்பவர்கள் எல்லோரிலும் இவளுக்குத்தான் இந்த உடைகள் மிகப் பொருத்தமாக அமைவது. மேலாடைக்கு மேல் நீல நிறத்தில் கையில்லாத அழகிற்கான மேலாடை அல்லது ஜக்கற்றை அணிந்திருப்பாள். பனிக்காலத்தில் பொதுவாக ஜக்கற்தான் அணிவார்கள். அவளுக்கு வெள்ளை நிறம் மிக அழகாக இருப்பதால்தான் நான் வெள்ளை நிற முத்து காதணிகளை வாங்கிக் கொடுத்தேன். அவள் அவற்றை அடிக்கடி பாவிக்கிறாள். இதைத்தான் எல்லாவற்றிற்கும் முதல் பார்ப்பேன். அவள் காதில் என்ன அணிந்துள்ளாள் என்பதுதான். வெளிச்சமுள்ள நாட்களில் யன்னலினூடான வெளிச்சம் தெளிவாக விழுந்து பிரகாசிக்கும் வேளையில் அவளை நான் தெளிவாகப் பார்க்கலாம். அந்த காதணிகள் உண்மையான முத்துக்கள். அதில் எந்தவித போலிப் பித்தலாட்டங்களும் இல்லை. அவளுக்கு மலிவான, தரம் குறைந்த எதையும் வாங்கிக் கொடுப்பது பயன்தரப் போவதில்லை என்பது எனக்குத் தெரியும். அவள் இவ்வாறான விடயங்களில் அதிக கவனம் செலுத்துபவள். நாங்கள் புதிய இடங்களுக்கு பிரயாணம் செய்யும்போது புதுப்புது விடயங்களை கற்றுக் கொள்கிறோம் அல்லவா அதில் இதுவும் ஒன்று. நான் மிகவும் எதிர்பார்ப்புடன் காத்திருந்தேன். அவளுக்கு எனது அன்பளிப்பு பிடித்திருக்கிறதா என்று. என்னால் எதையும் நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை. உண்மையிலேயே அவைகள் சிறந்த முத்துக்களாக இருந்

ஓவியம் : ரஞ்சினி

தாலும்கூட. ஆனால் அவள் தனக்கு அவைகள் பிடித்திருப்பதாக கூறினாள். அவைகள் மிகவும் அழகானவை என்று கூறினாள். அவைகள் ஆடம்பரமற்றதாக எளிமையான அழகைக் கொண்டிருப்பதால் தனக்கு பிடித்திருப்பதாக கூறினாள். நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். நான் பல ஆண்டுகளுக்கு அழுது கொண்டிருக்க தேவையில்லை. நான் தொடர்ந்து பல வருடங்களுக்கு அழுதிருந்தால் வெள்ளம்தான் வந்திருக்கும். நான் அழுவதை நிறுத்திக்கொண்டு விட்டேன். கண்ணீர் வற்றிவிட்டது. அதுவும் ஒருவகையில் நல்லதிற்குத்தான். ஆனால் சந்தோசம் வந்துவிட்டது. துவாய்கள் பற்றிய நினைவுகள் வருகின்றது. நான் அன்பளிப்பாக நான்கு துவாய்கள், இரண்டு பெரிய துவாய்களும், இரண்டு சிறு துவாய்களும் வாங்கியிருந்தேன். அவளுக்கு அந்த நிறங்கள் பிடிக்கவேயில்லை. நான் நினைத்தேன் கதிரை விரிப்புக்களதும் தலையணைகளதும் நிறங்களைத்தான் சிலவேளை வெறுக்கிறோம் என்று. ஆனால் அவளுக்கு எல்லாவற்றிலும் வெறுப்பு வருவதாக பதிலளித்தாள். அவள் என்னைப் பார்த்து சின்னப் பிள்ளைகளுக்குச் சிரிப்போமே அது மாதிரியான ஒரு சிரிப்பை உதிர விட்டாள். பின்பு மன்னிப்புக் கேட்டுக் கொண்டாள். ஆம், உண்மையிலேயே அவளுக்கு அது பிடிக்கவில்லை என்பதையிட்டும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டாள். பின்பு அவளுக்கு நான் பணம் கொடுப்பதாகவும் அவள் தனக்கு பிடித்தமான வர்ணத்தில் துவாய்களை வாங்கிக் கொள்வதாகவும் இணக்கம் கொண்



டோம். நான் வாங்கிய அந்த ரோஸ் நிற துவாய்களை நான் பாவிக்க வேண்டும் அல்லது அப்பம்மா அல்லது சித்தியிற்கு அன்பளிப்பு செய்ய வேண்டும். அன்பளிப்பு கொடுக்க வேண்டிய நேரத்திற்காக காத்திருந்தேன். அவள் மிகவும் அன்பாக நடந்து கொண்டாள். மேலதிகமாக கோப்பி ஊற்றித் தந்தாள். பிஸ்கட்டுக்களை உண்ணும்படி கேட்டுக் கொண்டாள். இது நிகழ்ந்தது அவளுடைய வீட்டில் பிறந்த நாளுக்கு சில நாட்கள் முன்பாக. இரண்டு வருடங்களுக்கு முன்பாக.

நாங்கள் இரண்டு பேரும் வரலாம் என்ற யோசனையைக் கூறினேன். சில வேளைகளில் நாங்கள் மூன்று பேரும் சந்தித்துக் கொள்ளலாம் என்று கூறியிருந்தேன். ஆனால் அவள் என்னை அந்த இடத்தில் தடுத்து நிறுத்தினாள். புன்னகைத்தபடி, ஆனால் திடமாக. நாங்கள் மூவரும் சந்திப்பதானால் என்னுடைய வீட்டில்தான் சந்திக்க வேண்டும். வேறொரு இடத்திலும் இல்லை, என்னுடைய வீட்டில் தான்.

அவள் வந்தாள். இரு வாரங்களுக்குப் பின்பு. அவளுக்குப் போதியளவு நேரம் இருந்தது. தந்தை அவளுக்காக பூக்களை வாங்கியிருந்தார். உண்மையான ரோசாப் பூக்கள். அவள் சுமார் ஒரு மணி நேரம் அல்லது அதற்குக் கூடவும் இருக்கலாம் எங்களுடன் இருந்தாள். இருந்து கதைத்துக்கொண்டிருந்தோம். மிகவும் சந்தோசமாக இருந்தது. அவள் தன்னைப் பற்றி எதுவும் பெரிதாக கூறிக் கொள்வதில்லை, ஆனால் கேட்பாள். நாங்கள் எப்படி இருக்கிறோம் என்பதை மட்டும் பல தடவைகள் திரும்பத் திரும்பக் கேட்டாள். நாங்கள் நன்றாக இருக்கிறோம் என்பதை திரும்பத் திரும்பச் சொன்னோம். ரோகர் அன்று சந்தோசமான மன நிலையிலும் குடிக்காமலும் இருந்தார். ஆனால், மேலதிகமாக கதைத்து விட்டார். ஸ்ரீய்தி என்பதற்குப் பதிலாக அவளது பெயரைப் பிழையாக கூறினார். அவள் பெயரை திருத்திச் சொன்னாள். அவருக்குப் பெயர்கள் சரியாக ஞாபகம் வருவதில்லை. அவள் தனது பெயரைச் சில காலத்திற்கு முன்புதான் மாற்றிக் கொண்டாள். வாழ்க்கைக் காலத்தின் பெரும் பகுதியில் அவள் மற்றப் பெயரைத் தானே பாவித்தாள். நான் தேவையில்லாமல் வார்த்தைகளை பிரயோகிப்பதில்லை. இந்த விடயத்தில் நான் மிக மிகக் கவனமான ஆள். நான் எப்போதும் அவளது பழைய பெயரை நினைவில் வைத்திருப்பேன் என்றே நினைக்கிறேன். அதை நான் மறந்து விடமாட்டேன் என்றுதான் நினைக்கிறேன். மற்றப் பெயரை நான் இயன்றவரை துடைத்து எறிந்துவிட விரும்புகிறேன் அவளைப் போல.

அந்த நாள் எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. அந்தக் கணம் கூட, மிக கச்சிதமாக. நான் எங்கே நின்றேன் என்பதுகூட ஞாபகம் இருக்கிறது. நான் சூப்பிற்கான மரக்கறிகளை துண்டாக்கிக் கொண்டிருந்தேன். அவள் பள்ளிக்கூடத்திலிருந்து வந்து விட்டாள். அவள் அப்போதுதான் வந்திருக்க வேண்டும். பாடசாலையில் உயர்கல்விக்கான முதல் ஆண்டு. என்னை நோக்கி ஆத்திரத்தோடு வந்தாள். நீங்கள் எப்படி இப்படி ஒரு முட்டாள் தனமான பெயரை எனக்கு வைக்க முடியும் என்று கேட்டாள். கோபமாக இருந்தாள். அவள் தன்னுடைய புத்தகப்பையை வாசலின் முன் பக்கமாகத் தூக்கி எறிந்திருந்தாள். நான் அவளுக்கு முதுகைக் காட்டியபடி நின்றுகொண்டு தொடர்ந்தும் மரக்கறிகளை வெட்டினேன்.

நீங்கள் எங்கே இந்தப் பெயரைப் பொறுக்கி எடுத்தீர்கள் எனத் தொடர்ந்தாள். ஒரு புத்தகத்தில்?

நான் திரும்பவில்லை. கரட்களை வெட்டிப் பிளந்து சிறிய சிறிய துண்டுகளாக்கிக் கொண்டிருந்தேன், சூப்பிற்காக.

ஆம் என்று பதிலளித்தேன். வேறெதுவும் சொல்லவில்லை. மேலதிகமாகச் சொல்வதற்கு எதுவும் இருக்கவில்லை. நான் ஒரு புத்தகத்தில் வாசித்திருந்தேன். அவள் சொன்னது மிகச் சரி. ரோகரும் அது நல்ல பெயர் என்று சொன்னார். பிள்ளையை ஞானஸ்நானம் செய்த வேளை ரோகர் மிகவும் பெருமையாக சந்தோசமாக இருந்தார். அவருடைய சகோதரிதான் பிள்ளையை பாதிரியார் நிற்கும் இடத்திற்குத் தூக்கிச் சென்றார். அவர்தான் முதன்முதல் அந்தப் பெயரை உச்சரித்தார். பிள்ளை சிணுங்கத் தொடங்கியது. பாதிரியார் தலையைத் தண்ணீரால் நனைத்தார். பாதிரியாருக்குரிய மேடையில் அலுவல்கள் முடியும் முன்பே பிள்ளை கடுமையாக அழத் தொடங்கி விட்டது. ரோகர் தூக்கிக் கொண்டார். பிள்ளை சற்று நேரத்தில் அமைதியாகி விட்டது. ரோகர் சூரியனைப் போல சந்தோசமான நபர். இந்த ஆண்களின் பெரிய கைகளில் ஏதோ ஒரு அதிசயம் இருக்க வேண்டும். அப்படித்தான். அவர் பிள்ளையை உயரத் தூக்கிப் பிடிப்பதுண்டு. உயரத் தூக்கி அங்கே சில கணநேரம் வைத்திருப்பார். பிள்ளை காற்றில் அலைவது போல இருக்கும். பிள்ளை தொடர்ச்சியாகச் சிரிப்பதால் அவளுக்கு விக்கல் ஏற்பட்டு விடும். ஆனால் சந்தோசமாக இருப்பாள். ரோகர் என்னையும் சில தடவைகள் தூக்கியிருக்கிறார். ஆனால் பிள்ளையை உயர்த்தும் உயரத்திற்கல்ல.

முத்துத்தோடுகளை அவள் அணிகிறாள். அவை அவளுக்கு மிக அழகாக இருக்கின்றன. வெள்ளை நிறத்திற்கு அவை மிகவும் அழகாக இருக்கின்றன. அவளுக்கும் அது தெரிகிறது. அவைகள் கொலருக்கு அருகாமையில் இருக்கின்றன. அவளுடைய நிறத்திற்கு மிகப் பொருத்தமானவை. இவைகள் அவளுடைய அழகிற்கு மேலும் மெருகூட்டுபவையாக இருக்கின்றன. நான் கேட்காவிட்டாலும் அவள் அழகாக இருப்பதாகச் சொல்லுவாள். அந்த முத்துக்கள் மிகவும் அழகானவை என அவள் கூறுவதுண்டு.

நான் திடுக்குற்றுப் போனேன் என்பதை நான் ஒத்துக் கொள்ள வேண்டும். இடைவேளை நேரத்தில் மாய் பென்ந்த வந்திருந்தாள், இடைவேளைபற்றிக் கதைப்பதற்காக. அவள் நேரத்தை மாற்ற விரும்பினாள். நான் எனது சாப்பாட்டு இடைவேளை நேரத்தை முதலில், அதாவது பதினொன்றரைக்கு மாற்ற முடியுமா என்பதுதான் கேள்வி.

அவர்கள் நால்வர். இரண்டிரண்டு பேராக சாப்பாட்டு இடைவேளையை எடுத்துக் கொள்வார்கள், மதிய உணவருந்தும் அறையில் என்று கூறினாள். அவள் மதிய உணவருந்தும் அறை என்று

சொல்கிறாள். அந்த அறை எப்படியிருக்கும் என்பதை நான் ஒரு போதும் கேட்டு அறிந்து கொண்ட தில்லை. உதாரணமாக, அங்கு மேசையில் மேசைவிரிப்பு விரிக்கப் பட்டிருக்குமா என்பதைக் கூட கேட்கவில்லை. நான் இதைப் பற்றிக் கேட்டால் சிலவேளை முட்டாள்தனமான கேள்வியாகக் கூட இருக்கலாம். ஆனால் நான் மேசைவிரிப்புடன் கூடிய மேசை இருப்பதாக நினைத்துக் கொள்கி றேன். அது மிகவும் சிறியதாக இருக்கும். அதில் கோப்பி அருந்தும் கோப்பைகள் இருக்கும். அவை வெள்ளையாக இருக்கும்.

அவள் வேலைக்குரிய சீருடை யில் மிக அழகாக இருக்கிறாள். மேலாடைக்கு மேலே அழகிற்காக அணியும் மேலாடை இடுப்பில் வளைத்து தைக்கப்பட்டுள்ளது. இந்த உடை அவளுடைய சிறிய இடையுடைய அழகான தோற் றத்தை வெளிக்காட்டுகிறது. வேலை செய்யும் இன்னொருவர் சற்று பெரியவர். அவருடன் தான் இவள் உணவருந்துவாள், இடை வேளையின் போது. உயரம் மிகவும் கூடினாலும் அது அவ்வளவு அழ காக இருக்காது.

அவள் தலைமயிருக்கு வர்ணம் பூசியிருக்கிறாள் என ஆட்கள் நினைப்பார்கள். ஆனால் அவளுக் குப் பிறக்கும்போதே இந்த நிறம் தான். அப்போதே கடும் பொன்னிற மான கூந்தல். அடர்த்தியானது. சிறுமியாக இருக்கும்போதும் அவ ளது அடர்த்தியான தலைமயிரைப் பற்றி ஆட்கள் பேசிக்கொண்டார் கள், அது அழகாக இருப்பதாக.

அவர்கள் நல்லவர்கள். என்ன ருகே நிற்கிறார்கள், மருத்துவ தாதிகள். அவர்களுக்கு நேரம் இருந்தது. அங்கே பாருங்கள் அவள் எவ்வளவு அழகாக இருக்கி றாள் என்று கூறினார்கள். எல்லாம் சரிவந்துவிடும். எல்லாம் நாளடை வில் சரியாகிவிடும் என்றார்கள்.

நான் தொடர்ந்தும் அங்கேயே நிற்கிறேன். எனது கைகள் எதிர்த் திசை நோக்கி நீளுவதற்குத்தானா கவே முயற்சிக்கின்றன. கைகள் உயருகின்றன.என்னால் அவற் றைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அவைகள் முன்னோக்கி கண் ணாடியை நோக்கி நீளுகின்றன. ●

கவிதை

என் மௌனங்களை
நீ உடைக்கச் சொல்கிறாய்
அவை உனக்காக உடைவதாக இல்லை.
அதற்கான
தகுதியை அவை கேட்கின்றன

நிராகரிப்பின் வலி உனக்கு மட்டும்தானா?

நீ யாரென்று அறியுமுன்
என் முத்தங்களை
உன்னுடன் வீணடித்து
என் உணர்வுகளை
உன்னோடு சாகடித்து
என் இதயத்திற்கு
உன்னால் வலிகொடுத்து
என் பொழுதுகளை
உன்னால் நானிழந்து

மொத்தத்தில்
என் சுயத்தையே இழந்திருந்தேன்

இல்லை
என் மௌனங்கள் உனக்காக இல்லை.

ரஞ்சினி (பிராங்போட்)



தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் எதை நோக்கி...?

வி. சிவலிங்கம்

உலகம் முழுவதிலும் ஓர் விரைவான மாற்றம் நிகழ்ந்து வருகிறது.

தொழில் நுட்பம், மற்றும் தகவல் தொடர்புத் துறைகளில் ஏற்பட்டு வரும் மாற்றங்களும், பொருளாதார உற்பத்தி உறவுகளில் காணப்படும் மாற்றங்களும் உலகத்தை சிறு கிராமமாக மாற்றியுள்ளன. கடந்த 25 வருடங்களாக செயற்பாட்டில் இருந்து வரும் திறந்த பொருளாதார நடைமுறைகள், பல்வேறு நாடுகளின் பொருளாதாரக் கட்டுமானங்கள், அதற்கேற்றவாறான அரசியல் அமைப்பு மாற்றங்கள் என்பனவற்றைத் தூண்டியுள்ளன.

உலகப் பொருளாதார உறவு முறைகளில் ஏற்பட்டு வரும் துரித மாற்றங்களால் நாட்டின் எல்லைகள் அகலத் திறந்து விடப்பட்டுள்ளன. கடந்த காலங்களில் தேசியம், இறைமை என்ற கோட்பாடுகளின் காரணமாக,

"ஒரு நாட்டில் நிலவும் பொருளாதார ஒழுங்கு முறையே அதன் அரசியல் கட்டுமானத்தையும் தீர்மானிக்கிறது."

நாட்டின் எல்லைகள் மூடப்பட்டு அதன் பொருளாதாரமும் மூடியதாகவே அமைந்திருந்தது. தேசங்களின் இவ்வாறான மூடிய பொருளாதார உறவுகளால் பல நன்மைகளுடன் கூடவே தீமைகளும் இருந்தன. கலாச்சாரம், பண்பாடு, உள்ளூர்க் கைத்தொழில் என்பன விருத்தியடைந்த அதேவேளை, நாட்டின் மக்கள் தொகை வளர்ச்சிக்கு ஏற்றாற் போல் பொருளாதார வளர்ச்சி ஏற்படவில்லை.

தற்போது அறிமுகமாகியுள்ள திறந்த பொருளாதாரம் தேசிய பொருளாதார வளர்ச்சியில் காணப்படும் மந்த நிலையைப் போக்கி, துரித வளர்ச்சிக்கு எடுத்துச் செல்லும் என்ற நோக்கில், கட்டுப்பாடற்ற விதத்தில் நாட்டின் எல்லைகள் வெளிநாட்டு முதலீடு என்ற போர்வையில் திறந்து விடப்பட்டன. இதன் காரணமாக ஓர் கலாச்சார ஊடுருவலும் நடந்தேறி வருகிறது.

கட்டுப்பாடற்ற பொருளாதார நடவடிக்கைகளின் பின்னால் பல பல்தேசிய நிறுவனங்களே உள்ளன. பல நாடுகளின் மொத்த தேசிய வருமானங்களைவிட பல மடங்கு வருமானத்தைப் பெறும் இப்பல்தேசிய நிறுவனங்கள், தேசிய அரசுகளை மாற்றி அமைக்கும் சக்தி வாய்ந்தனவாகவும் உள்ளன.

இவ்வாறான சர்வதேசிய பின்னணியை அடித்தளமாகக் கொண்டே இலங்கையில் நிலவும் இன்றைய அரசியல் பிரச்சினைகள் குறிப்பாக தேசியவாதம், சுயநிர்ணய உரிமை என்ற கோரிக்கைகள் ஆராயப் படுகின்றன.

ஒரு நாட்டில் நிலவும் பொருளாதார ஒழுங்கு முறையே அதன் அரசியல் கட்டுமானத்தையும் தீர்மானிக்கிறது. அந்த வகையில் இலங்கையில் நிலவும் பொருளாதார செயற்பாடுகளை அவதானிப்போமாயின் அதற்கேற்றாற்போல் அமைந்திருப்பதை அவதானிக்கலாம்.

எழுபதுகளின் பிற்பகுதியில் உலகம் முழுவதிலும் மிகவும் தீவிரமாக அறிமுகப்படுத்தப்பட்ட திறந்த பொருளாதாரக் கோட்பாடுகள், ஏற்றுமதி வர்த்தகத்தில், குறிப்பாக, அந்நியச்செலாவணி வருமானத்தில் பெரிதும் தங்கியுள்ள நாடுகள், அதன் உள்நாட்டுச் சந்தையை திறந்து விடவேண்டும் என வற்புறுத்தப் பட்டன. இதன் மூலம் உள்நாட்டு மூலவளங்களை அதிக பட்சம் பயன்படுத்தலாம் எனவும், வெளிநாட்டுத் தொழில் நுட்பங்கள் நாட்டுக்குள் நுழைவதால் உள்நாட்டு உற்பத்தியின் தரம் அதிகரித்து பொருளாதார வளர்ச்சியும், வேலைவாய்ப்பும் பெருகும் எனவும் வாதிடப்பட்டது.

வெளிநாட்டு முதலீடுகளுக்கு நாட்டின் பொருளாதாரம் திறந்துவிடப்படும்போது, அதன் நடவடிக்கைகளில் அரசின் தலையீடு இருக்கக் கூடாது எனவும், சந்தையின் சுமுகமான செயற்பாடுகளுக்கு பங்கம் தரும் வகையில் சட்டங்கள் இருப்பின் அவை தளர்த்தப்பட வேண்டுமெனவும், பதிலாக அப்பொறிமுறை நன்கு செயற்படுவதை உறுதி செய்யும் வகையில் அரசு சட்டங்கள் இயற்ற வேண்டும் என்பதும் நிபந்தனையாகிறது.

பொருளாதார உறவுகளை சுமுகமாக்குவதற்கு சட்டங்கள் இயற்றப்பட வேண்டு

மாயின், பாராளுமன்றம் இதற்கு ஏற்றாற்போல் ஒத்து ழைக்க வேண்டும். ஆனால், இலங்கையின் அரசியல் இத்தகைய மாற்றத்தை துரிதமாக ஏற்றுக் கொள்ளும் நிலையில் காணப்படவில்லை. குறிப்பாக, அரசியல் கட்சிகள் மத்தியிலே இக்கொள்கை பற்றிய பொது வான உடன்பாடு இல்லாமை, தொழிற்சங்கங்களின் பலம் என்பன பொருளாதாரத் தீர்மானங்களை துரித கதியில் மேற்கொள்வது சாத்தியமற்றது எனக் கருதப் பட்டதால் தனி மனிதரின் கையில் அதிகாரங்களைக் குவிப்பது அவசியத் தேவையாக உணரப்பட்டு அதற்கு ஏற்றவாறான அரசியல் அமைப்பை நோக்கி பிரச்சா

"பலம் பொருந்திய அதிகார அமைப்பினால் மட்டுமே பிரிவினை வாதத்தினையும், பயங்கரவாதத்தினையும் கையாளலாம் எனக் கருதியே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறை கொண்டுவரப்பட்டது."

ரங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இப்பொருளாதாரக் காரணிகளை மையமாக வைத்தே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை அறிமுகப்படுத்தப்பட்டதாயினும் அதற்கான பலமான அரசியல் காரணங்களும் இருந்தன. 1970ம் ஆண்டு முதல் 1977 வரை சிறீலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி என்பன இணைந்த ஐக்கிய முன்னணி அரசு பதவியி லிருந்தது. இவ் இடைக்காலத்தில் நாட்டின் ஏகாபதி பத்திய ஆதரவு அரசியல் அமைப்பு மாற்றப்பட்டு முதலா வது குடியரசு யாப்பு உருவாக்கப்பட்டு, சுதந்திர நாடாக

"குடும்பம் என்ற சமூகக் கட்டுமானம் முன்னெப்போதையும் விட மிக அதிகளவு அழுத்தத்தை அனுபவிக்கிறது."

மாற்றப்பட்டது. இம்மாற்றத்தைத் தொடர்ந்து தேசிய பொருளாதாரத்தைச் சீரமைக்கும் விதத்தில் பல தேசிய உற்பத்தித் துறைகள் தேசிய மயமாக்கப் பட்டன. அத்துடன் மக்கள் தமது எதிர்காலத்தைத் தாமே தீர்மானிக்கும் விதத்திலான பல ஜனநாயக விஸ்தரிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. இவை யாவற்றையும் மாற்றி அமைக்க வேண்டிய தேவையும் திறந்த பொருளாதாரத்தை ஆதரிப்ப வர்களின் தேவையாக அமைந்தது.

இதே காலத்தில் தமிழ்ப்பகுதிகளில் ஆயுதப் போராட்டத்திற்கான, குறிப்பாக, பிரிவினைக் கோரிக் கைகள் தீவிரமடைந்து காணப்பட்டன. இதுவரை காலமும் பாராளுமன்றத்திற்குள் விவாதிக்கப்படும் பிரச்சினையாக அமைந்த இனப்பிரச்சினை, அவ்வப் போது அகிம்சாவழிப் போராட்டங்களாகவும் இருந்த நிலைமாறி, பாராளுமன்றத்திற்கு வெளியில் பேசப்படும் பிரச்சினையாக மாறிச் சென்றது. மிக உக்கிரமாக வளர்ந்து சென்ற இப்பிரச்சினையைப் பாராளுமன் றத்தால் கையாள முடியாது எனக் கருதி, பலம் பொருந் திய அதிகார அமைப்பினால் மட்டுமே பிரிவினை வாதத் தினையும், பயங்கரவாதத்தினையும் கையாளலாம் எனவும் கருதியே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறை கொண்டுவரப்பட்டது. இவ் வாட்சிமுறையைக் கொண்டு வருவதற்கு பொருளா தாரக் காரணங்களே மிக முக்கியமானவைகளாக இருந்த போதிலும், இவை மிகவும் திட்டமிடப்பட்ட விதத்தில் பெரும்பான்மைச் சிங்கள மக்கள் மத்தியிலே மறைக்கப்பட்டு இனப்பிரச்சினையே கூர்மைப்படுத்தப் பட்டது.

புதிய அரசியல் அமைப்பின் தோற்றத்திற்கான அரசியல் மற்றும் பொருளாதாரப் பின்னணி இவ்வாறு இருந்தபோதிலும், இனப்பிரச்சினையானது ஆயுதப் போராட்டமாக தொடர்ந்து உக்கிரமடைந்து சென்ற போதிலும், அது பொருளாதார செயற்பாடுகளுக்கு மிகவும் தடையாக இருந்த போதிலும், கடந்த 25 வருடங்களுக்கு மேலாக வெளிநாட்டு முதலீடுகள் நாட்டுக்குள் நுழைந்தன. இது எவ்வாறு சாத்திய மாயிற்று?

கடந்த 25 வருட காலத்திற்குள் நாட்டின் பிரதான மூலவளத்துறைகள் தனியார் மயமாக்கப்பட்டன. அரச கட்டுப்பாட்டிலிருந்த பல உற்பத்தித்துறைகள் தனியார் கம்பனிகளுக்குக் கையளிக்கப்பட்டன. இதனால் பல ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். இதனை எதிர்த்து போராட்டம் செய்ய முடியாதவாறு நாட்டில் நிலவும் போரைக் காரணமாக வைத்து அவசரகால நிலையைப் பிறப்பித்து தடை செய்தனர். போரை மையமாக வைத்துப் பிறப்பிக்கப் பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தொழிலா ளர்கள், அரசியல் எதிரிகள் துன்புறுத்தப்பட்டனர். குறிப்பாக இப்போர்க்காலங்களில் எதிர்க்கட்சிகள் செயற்பட முடியாத நிலை காணப்பட்டது.

கடந்த கால் நூற்றாண் டிற்குள் போர்ப் பின்னணியைக் காரணம் காட்டி மிகப் பிரமாண் டமான அளவில் இராணுவ அமைப்புகள் தோற்றுவிக்கப் பட்டன. உளவுத்துறை என்பது அரசியல், தொழிற்சங்கம், ஊடகம் போன்ற பல்வேறு துறைகளுக்குள் விஸ்தரிக்

கப்பட்டு அரசாங்கத்தின் முக்கிய தீர்மானங்களில் பெருமளவு ஆதிக்கம் செலுத்தும் நிலைமைக்கு பாது காப்புத்துறை வளர்ந்துள்ளது.

திறந்த பொருளாதாரத்தால் ஏற்பட்ட சமச்சீரற்ற பொருளாதார வளர்ச்சி அதிக மக்களை வறுமைக் கோட்டின் கீழ் தள்ளியுள்ளது. கிராமியப் பொருளா தாரம் சீரழிந்து அங்கு வேலையற்றோர் தொகை பெருகியுள்ளது. பொருளாதார ரீதியாக நலிவுற்ற மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த மானியக் கொடுப் பனவுகள் நிறுத்தப்பட்டதால் சிறுவர்களுக்கான சத்துணவுப் பொருட்களின் விலை அதிகரித்ததால் சிறுவர் மரணங்கள் அதிகரித்தன. குடும்பத் தொல்லை கள் அதிகரித்ததால் தற்கொலை விகிதமும் அதிக ரித்தது. மொத்தத்தில் குடும்பம் என்ற சமூகக் கட்டு மானம் முன்னெப்போதையும்விட மிக அதிகளவு அழுத் தத்தை அனுபவிக்கிறது.

நாட்டின் பாரம்பரிய கைத்தொழில் துறைகள் கட்டுப்பாடற்ற இறக்குமதி வர்த்தகத்தால் நலிவடைந் ததால் மக்கள் வேலை தேடி நகர்ப்புறங்களை நோக்கி விரைந்தனர். தனிமனித இச்சைகளுக்கு சுதந்திரமான வாய்ப்புகளைத் திறந்த பொருளாதாரம் வழங்கியதால் நகர்ப்புறங்கள் குற்றச் செயல்களின் மையங்களாகின. இதனால் நகரப்புற, நாட்டுப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தில் பெரும் ஏற்றத்தாழ்வு ஏற்பட்டது.

சிங்களவர்களே. இம்மக்களை ஒடுக்க இராணுவமே பயன்படுத்தப்பட்டது. இவர்கள் மிகவும் கொடூரமான விதத்தில், தமிழ்மக்கள் எவ்வாறான துன்பத்திற் குள்ளாக்கப்பட்டார்களோ அதேயளவு கொடுமை களுக்குள்ளாக்கப்பட்டார்கள். ஜே. வி. பி. இனர் பேரின வாதிகள் என்றால் இவர்களைப் பாதுகாக்கும் இராணுவம் எவ்வாறு இவர்கள் மேல் ஏவிவிடப்பட்டது?

தேசியவாதம் என்பது வலதுசாரிச் சந்தர்ப்ப வாதிகளின் தந்திரோபாயமே தவிர வேறு எதுவுமல்ல. தமது இருப்பைப் பலப்படுத்தவும், அதிகாரத்தைக் கைப்பிடிக்கவும் தேசியவாதம் என்ற கோஷத்தை இவர்கள் முன்வைக்கின்றனர். இந்த மூலோபாயத்தைக் கையாள்வதில் தமிழ், சிங்கள அரசியல் சக்திகள் மத்தியிலே வேறுபாடுகள் இல்லை. இரு சாராருக்கும் இராணுவமே மிகப் பெரும் பலமாக உள்ளது. நாட்டில் பயங்கரவாதம், பிரிவினைவாதம் எனக்கூறி எவ்வாறு அரச இராணுவம் கட்டப்படுகிறதோ இதேபோன்று தமிழ்த் தேசியவாதம், சிங்கள பேரினவாத எதிர்ப்பு என்ற கோஷங்களின் பின்னால் பலமுள்ள தமிழ் இராணுவம் கட்டப்படுகிறது. திறந்த பொருளா தாரத்தின் கொடுமையான அம்சங்களால் ஏற்பட்டு வரும் சமூக முரண்பாடுகள், போரைக் காரணியாக முன்வைத்து எவ்வாறு ஒடுக்கப்படுகின்றனவோ, அதேபோன்று தமிழ் மக்கள்மீது சுமத்தப்படும்

"தமிழ்த் தலைமைகள் குறிப்பிடுவது போல சிங்கள ஆட்சியினர் மகாவம்ச மனநிலையில் இருப்பதாக எடுத்துக் கொண்டால் சிங்கள மக்கள் மத்தியிலே இத்தனை பொருளாதார இடைவெளிகளும், குழப்பங்களும் நிகழ்வதற்குக் காரணம் என்ன?"

இத்தகைய சமூக ஏற்றத்தாழ்வுகள் திறந்த பொருளாதாரத்தினால் மிகவும் கூர்மை அடைந்த நிலையில் அரசியலும் அதற்கு ஏற்றவாறு மாறிச் சென்றுள்ளது. தேசத்தின் இறைமை, சுயநிர்ணய உரிமை என்பன அர்த்தமற்ற கோட்பாடுகளாகி உள்ளன. தேசத்தின் அரசியல், மற்றும் பொருளாதார கொள்கைகள் தொடர்பாக சுதந்திரமான கொள் கையை முன்னெடுக்க முடியாத நிலையில் அரசு யந்திரம் உள்ளது. இன்று தமிழ்த் தலைமைகள் குறிப்பிடுவது போல, சிங்கள ஆட்சியினர் 'மகாவம்ச' மனநிலையில் இருப்பதாக எடுத்துக் கொண்டால், சிங்கள மக்கள் மத்தியிலே இத்தனை பொருளாதார இடைவெளிகளும், குழப்பங்களும் நிகழ்வதற்குக் காரணம் என்ன? ஏற்கனவே குறிப்பிட்டதைப்போல சமச்சீரற்ற பொருளாதாரமும் இதனால் ஏற்பட்டு வரும் சமூக முரண்பாடுகளை ஒடுக்க அரசு யந்திரம் பயன் படுத்தப்பட்ட விதத்தையும் நாம் ஆராய்வோமாயின் 'மகாவம்ச' மனநிலைவாதம் அடிபட்டுப் போகிறது. சாமான்ய மக்களின் பொருளாதார விடுதலைக்காக குரல் கொடுக்கும் ஜே.வி.பி. ஊடகவியலாளர்கள், மாணவர்கள், தொழிற்சங்கவாதிகள், அரசியல் வாதிகள் போன்றோர் தமிழர்கள் அல்ல. அனைவரும் பொருளாதார, மற்றும் சமூக ஒடுக்குமுறைகளுக்கு எதிராக தமிழ் இராணுவம் பயன்படுத்தப்படுகிறது. இரு சாராருக்கும் தேசியவாதம் என்ற போலிவாதமே பக்கபலமாக உள்ளது.

நாட்டின் பொருளாதார எல்லைகளை அந்நிய நாடுகளின் சந்தையாக மாற்றியுள்ள ஆட்சியினர், வளர்ந்துவரும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை சரி செய்ய முடியாத ஓர் அரசு தனது இறைமை அதிகாரம் பற்றிப் பேசுவது போலியானது, அர்த்தமற்றது.

தேசியவாதத்திற்குள் புதைந்து கிடக்கும் சுயநிர்ணய உரிமை, இறைமை அதிகாரம் என்பன போலித்தனமானவை. தேசத் தின் எல்லைக்குள் நிகழும் பொருளாதார உறவுகளில் மாற்றம் செய்ய வலுவற்ற, இன்னும் அவை தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ள முடியாத அரசுகளால் எவ்வாறு தமது சுயநிர்ணய உரிமை யையோ, அல்லது இறைமை அதிகாரத்தையோ பிரயோ கிக்க முடியும்?

"தேசியம் என்பது வெறுமனே மொழி, எல்லை, பாரம்பரியம் என்ற வரையறுப்புகளுடாக அமைந்தது அல்ல."

இப்படி இருக்கும்பொழுது தமிழ்த் தலைமைகளால் முன்வைக்கப்படும் சுயநிர்ணய உரிமை, இறைமை என்பன எவ்வளவு பலவீனமானவை என்பதை விபரிக்கத் தேவையில்லை. சிங்கள ஆட்சியாளர் களால் பாதுகாக்க முடியாத ஒன்றைத் தாம் பாதுகாக்கப் போவதாகக் கூறி மக்களை வழிநடத்திச் செல்வது ஓர் ஏமாற்று வித்தையேயாகும். தமிழர்கள் பாரம்பரிய வாழ்வு உரிமையாலும், ஒரே மொழி பேசுவதாலும், ஒரே உளவியல் போக்கைக் கொண்ட பிரதேசத்தில் வாழ்வதாலும் அவர்கள் ஒரு தேசியம் எனக் கோட் பாட்டு அடிப்படையில் கூறி தமிழர் ஒரு தேசியம் என்ற வாதமும் முன்வைக்கப்படுகிறது.

இவை தேசியம் என்பதை அடையாளப்படுத்து வதற்கான அறிமுகமே தவிர, இவை மட்டும் தேசிய உருவாக்கத்தின் அம்சங்களாக அமைந்து விடுவ தில்லை. தேசிய உருவாக்கம் என்பது உள்ளார்ந்த ரீதியில் கட்டப்படுகிறதா? என்பதும், அதன் பொதுவான கலாச்சாரம், பண்பாடு, வாழ்வியல் என்பன தொடர்ந்து வளர்ச்சியுற்றுச் செல்கிறதா? என்பதும், அச்சமூகம் வாழும் அவ்வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் ஏற்பட்டு வரும் மாற்றங்களும் இத்தேசிய உருவாக்கத்திற்கான காரணிகளாக அமைகின்றன.

மேலே குறித்த அம்சங்களை விரிவாகப் பார்க் கையில் தேசியம் என்பது வெறுமனே மொழி, எல்லை, பாரம்பரியம் என்ற வரையறுப்புகளுடாக மட்டும் அமைந்தது அல்ல என்பதை உணர முடியும்.

25 வருடங்களுக்கு முன்னர் விடுதலைப் போராட் டம் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட ஆயுதப் போராட்டமும் இதே காலப்பகுதியில் அறிமுகப்படுத்தப் பட்ட திறந்த பொருளாதாரமும் இருவேறு அதிகார வர்க்கங்களை இரு பகுதியிலும் தோற்றுவித்திருப் பதையும், இதற்கான தோற்றுவாயாக அல்லது ஊக்கு சக்தியாக ஆயுதப் போராட்டம் அமைந்திருப்பதையும் காணலாம். இலங்கை அரசு பழமை வாய்ந்த அதிகார அமைப்பாக இருந்த போதிலும் நிறைவேற்று அதிகார முள்ள ஆட்சி அதிகாரத்தின் இருப்புக்கு பக்க பலமாக இருப்பதனையும் காணலாம்.

இலங்கை ஆட்சி அதிகாரமானது சட்டங்களை இயற்றும் இயல்பை படிப்படியாக இழந்து, சர்வதேச சட்டங்களின் பிரகாரம் ஒழுகும் ஓர் நிறுவனமாக மாறிவரும் இன்றைய சூழலில், தேசத்தின் சுயநிர்ணய உரிமை, இறைமை அதிகாரம் என்பவற்றை பெயரளவில் மட்டுமே கூறும் உரிமை கொண்டதாகவே உள்ளது. இவ்வாறான மிகவும் பலவீனமான அரசிடமிருந்து தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமை, இறைமையை வேண்டிப் போராடுகிறார்கள் எனக் கூறுவது அர்த்தமற்றது. எனவே, இதற்காக ஆயிரக்கணக்கான மக்களைப் பலிகொடுப்பதும் நியாயமற்றது.

இரு தரப்பினருமே அக்கோரிக்கையிலுள்ள வெற்றுத் தன்மையை நன்கு அறிவர். அவ்வாறானால் இவர்கள் ஏன் இந்த வெற்றுக் கோஷங்களின் பின்னால் மக்களைப் பலி கொடுக்கிறார்கள்?

மக்கள் இதன் தாற்பரியத்தைப் புரிந்து கொள்ளாதவரை இக்கொடுமைகளுக்கு இரையா வதைத் தடுக்க முடியாது.





முழுதாகப் புகைக்கப்பட்டும், அரைகுறையாகப் புகைக்கப்பட்டும் எறியப்பட்ட சிகரட் துண்டுகள் அந்த அறையில் அங்கும் இங்குமாகப் பரவிக் கிடந்தன. படுக்கைகூட ஒரு ஒழுங்கில்லாது அது பாட்டுக்கு குழம்பிப் போயிருந்தது. தேநீர்க் கோப்பைகளும், உணவுத்தட்டுகளும் கழுவாமல் வீசப்பட்டுத் தொட்டியில் நிறைந்திருந்தது. இவைகளுக்கிடையே அறையின் ஒரு மூலையில் நாடியில் கையை வைத்து நீண்ட தூரத்துக்குப் பார்வையை எறிந்து எத்தனை மணி நேரம்தான் இருப்பேன். எனக்கே வெறுப்பாக இருந்தது.

தலை போகிற விடயம் ஒன்றும் நடந்து விடவில்லை. உலக நடப்புகளைக் கண்டு ஏங்கிப் போயுமல்ல. ஏதோ ஒன்று குறைவது போல், யாரோ பக்கத்தில் இல்லாததுபோல் ஒரு உணர்வு வாட்டிக் கொண்டுதான் இருந்தது. யாரிடமாவது சொன்னால் "சீ இதற்குப் போயா..." நளினம் பண்ணிவிடுவார்கள். உண்மைதான். ஆனால் மனதை சரியானதொரு நிலைக்குக் கொண்டு வரும் அளவுக்கு முயற்சிக்க முடியாமல் இருந்தது. அட இதுவென்னடா கோதாரியாக் கிடக்குது எனத் திட்டவேண்டும் போலும் இருக்கிறது. மெதுவாக எழுந்து முகத்தை அலம்பிவிட்டு வேலைக்குப் புறப்பட்டாயிற்று. வேலை முக்கியம்.

அடிக்கடி நண்பன் கூறுவான். தான் அந்த இடத்துக்குப் போவது வழக்கம் என்று. அவன் அதை ரசித்து, கனவு காண்பது போல், ஒளிவு மறைவின்றிச் சொல்லும்பொழுது ஒரு திரில்லாகவிருந்தாலும் மனசுக்குள் அவளை ஒரு அசிங்கமாகவே எண்ணத் தோன்றும். அவனுடன் சேர்ந்து விஸ்க்கி அடிக்கத் தொடங்கினால் போதும் இரண்டாவது கிளாஸ் பாய்ந்ததும் அவள் அலாவுதீனாக மாறி கம்பளத்தில் மிதக்கத் தொடங்கி விடுவாள். இப்படி ஒரு நாள் அவனுடன் தண்ணி அடிக்கேக்கை ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, மனிசனைக் கடித்த கதை என்பதுபோல் திடீரென அவன் "நீயும் வாவன். நான் கூட்டிக் கொண்டு போறன். கூச்சப்படாதை மச்சான் . வாழ்றதே சந்தோசத்துக்குத்தானே" என்றான். வியர்த்து கறுப்பாகிப் போயிருந்த அவனது முகத்தைப் பார்த்தேன். பகிடிக்கல்ல. அவன் மிக ஆர்வத்துடன் கேட்பது போல்தான் என்னைப் பார்த்துக் கொண்டிருந்தான். கோபமாக வந்தது; காட்டிக் கொள்ளவில்லை. வெறுமையாக இருந்த கோப்பைகளை நிரப்பிவிட்டேன்.

மிகவும் திடமாக இருக்கிறேன். 'உது எல்லாம் அசிங்கம். வாழ்வில் ஒழுக்கம் முக்கியம்' என நான் கண்ட கனவுகள் அடிக்கடி எனது நண்பன் வருகையால் உடையத் தொடங்கியது. உடைத்தது அவன்தான் எனச் சொல்லிவிட முடியாது. எனது அடிமனதில் இதற்கான பலங்கள் இருக்கவில்லை. பலவீனங்களே இருந்திருக்கின்றது. வெளியே பலமாக இருந்த அனைத்தும் கறையான் அரித்த மரம் போல் போலியானது என்பதை உணர்ந்து கொண்டேன். நண்பனின் வரவை அடிக்கடி எனது மனது வரவேற்றது. அசிங்கமாக அவன் சொன்ன கதைகளெல்லாம் இப்போது மயக்கத்தை ஏற்படுத்தியது. தண்ணியடித்துவிட்டு சிலநேரங்களில் அவன் தனது ஊரைப்பற்றியும், குடும்பத்தைப்பற்றியும் கலங்கிய கண்களுடன் பேசும்பொழுது , "சரி, சரி ஏதாவது முசுப்பாத்தியாய்க் கதையன்" எனச் சொல்லி அவனது வேதனைகளில் கவனம் செலுத்தாமல், வேதனையின் மாற்றாக அவன் சென்ற இடங்களைப் பற்றி அறிவதில், கதை கதையாகக் கேட்பதில் எனக்கு சுகமாக இருந்தது; ஆர்வமாகவிருந்தது. இப்படி ஆரம்பித்ததன் அறுவடைதான் அறையெங்கும் சிதறிக் கிடக்கும் சிகரட் துண்டுகள். மனம் நொந்து போனது.

அவன் சொல்வதெல்லாம் நியாயமாகவிருந்தது. சும்மா அவசரப்பட்டுக் கலியாணத்தைக் கட்டி மனைவி, பிள்ளைகள், வாடகை, உடைகள், நகைகள் என நாராய்ப் போவதை விட இப்படிப் பெண்களிடம் போய் வந்தால் பிரச்சினை இல்லாத வாழ்வாகிவிடும். அவர்களும் அதற்கென்று இருக்கிறார்கள்; நாங்களும் அதற்கென்று போகிறோம்; பேந்து என்ன பிரச்சனை. சின்னதாகக் காசு மாறும் அவ்வளவுதான் பிரச்சனை. பிறகு பார்க்கலாம் கலியாணம் கட்டுவதுபற்றி, அது மட்டுமில்லை. விதம் விதமான பெண்களையும் பார்க்கலாம். கலியாணம் என்றால் சாகும் வரை ஒரு பொம்புளையுடன் குப்பை கொட்ட வேண்டியதுதான். அவனது

விளக்கங்கள் மனதுக்கு இதமாகவே இருந்தது. அந்த இடத்துக்குப் போறதென்று அன்றைக்கு எடுத்த முடிவு... அறையில் புகைத்தெறிந்து கிடந்த சிகரட் துண்டுகள் வேடிக்கை பார்ப்பதுபோல்... கண்கள் சூடாகியது.

பாரிசில் அந்த வீதிகளில் எத்தனையோ தடவைகள் போய் வந்திருக்கிறேன்; மடியில் கனம் இல்லை. ஆனால், இன்று முதல் தடவையாக நடப்பதுபோல் ஒரு உணர்வு. வீதிகளின் இரு பக்கங்களையும் உற்றுப் பார்த்து புதிய உலகத்தைப் புரிந்துகொண்டு, இரண்டு வீதிகளுக்கு நடுவே மரங்கள் நாட்டப்பட்டிருக்கும் நடைபாதையில் சிகரட் ஒன்றைப் பற்ற வைத்து நடக்கும்பொழுது மரங்களில் இருந்து கொட்டிய சருகுகளின் சத்தம் வழக்கத்தைவிடப்பெரிதாகக்கேட்பது புது அனுபவம்தான். வீதியின் இருமருங்குகளிலும் வித்தியாசமான வயதில், வேறு வேறு இனங்களைச் சேர்ந்த, மாறுபட்ட உடைகளுடன் தனியாகவும் கூட்டமாகவும் எதையோ எதிர்பார்த்துக் காத்து நிற்கின்றார்கள். அவர்களில் பலர் சிகரட் புகைத்துக் கொண்டிருக்கிறார்கள். இது மாலைப்பொழுதின் வழமையான காட்சியானாலும் இன்று அவைகள் புதிய காட்சியாக, கள்ளப்பட்ட மனதில் தோன்றியது. அடிக்கடி நண்பன் 'பயப்பிடாதை' என்பதுபோல் முதுகில் தட்டி சிரித்துக் கொண்டான்.

உடைகள் விற்கும் கடை ஒன்றுக்கும், துரித உணவுச்சாலை ஒன்றுக்கும் இடைப்பட்ட வாசற்கதவில் நின்றிருந்த மூன்று நான்கு பெண்கள் நண்பனின் பெயர் சொல்லி அழைத்துச் சுகம் விசாரித்தார்கள். "அடப்பாவி, இவன் பெரிய கில்லாடியாக இருப்பான்போல் இருக்கிறதே" என நினைக்கத் தோன்றியது. அந்தப் பெண்கள் கதவைத் திறந்து உள்ளே அழைத்தார்கள். நண்பன் பெருமையுடன் என்னைப் பார்த்தான். உள்ளே சென்றோம். வரவேற்பறை மிகவும் சீராகவிருந்தது. நிறையப் பொருட்கள் இருக்கவில்லை. ஒரு தொலைக்காட்சிப் பெட்டி, மூன்று நான்குபேர் உட்காரக் கூடிய இரண்டு மென்மையான இருக்கைகள் இருந்தன. மூலை ஒன்றில் தேவதை போல் அழகான ஒரு வெள்ளைச்சிலை வைக்கப்பட்டிருந்தது. அந்தப் பெண்கள் மிகவும் கலகலப்பாகக் கைகளைக் காட்டி, தோள்களை உயர்த்தி அழகான சீனப் பொம்மை போல் கதைத்துக் கொண்டிருந்தார்கள். சில நிமிடங்களின்பின் அதில் ஒரு பெண் எங்களில் யார் வேண்டும் என்பதுபோல் மெல்லிய குரலில் கேட்டாள். நண்பன் என்னைப் பார்த்தான்.

அங்குள்ள ஒரு அறைக்குள் அழைத்துச் சென்று கதவைப் பூட்டியவள் புன்சிரிப்புடன் பார்த்தாள். அவளது தலைமயிர் சுருளாக கட்டையாக வெட்டப்பட்டிருந்தது. அந்த அறையிலும் பெரிதாக பொருட்கள் இருக்கவில்லை. இரண்டு பேர் படுக்கக்கூடிய ஒரு கட்டில், அளவான அலுமாரி இருந்தது. சிகப்புப் பூக்கள் நிறைந்த பரந்த புல்வெளியில் பறவைகள் பறப்பது போன்ற அகன்ற Claude Monet யின் ஓவியம் ஒன்று சுவரில் மாட்டப்பட்டிருந்தது. 'இந்த இடத்தில் அந்த ஓவியம் எப்படி?' கேட்க நினைத்ததை பண்புடன் கேட்காது விட்டேன். இவைகளே அந்த அறைக்குப் போதுமானவை என்பது போல் இருந்தது. மீண்டும் அதே புன்னகையுடன் அழைத்தாள். படுக்கையில் ஒரு பெண்ணுடன்... கனவு காண்கிறேனா என்பது போல் ஒரு மயக்கம். உடலெல்லாம் ஒரு விதமான கிளர்ச்சி. மிகவும் நாகரிகத்துடன் அனுமதி கேட்டேன். ஆச்சரியமாக

என்னைப் பார்த்து அப்படி ஏன் சிரிக்கிறாள்? புதிய புதுமையான அனுபவம். எழுந்திருக்கையில் பிரியப் போகிறோமே என்ற நினைவு வாட்டுவது போல் இருந்தது. கட்டிய ணைத்து முத்தம் கொடுத்தேன். இப்பவும் சிரித்தாள். அறைக் கதவைத் திறந்து கொண்டாள்.

என்றுமில்லாதவாறு நல்லதொரு மதுச் சாலைக்குச் சென்று நண்பனுடன் மது அருந்தி சுகமான நினைவுகளுடன் சிகரட் புகையை அலை யலையாக விட்டு, பிறவிப்பயன் இப்படியும் உண்டா என ஏங்கி உறைந்திருந்தேன். மிக நெருக்கமாக எனது முகத்தை உற்றுப் பார்த்த நண்பன் தனது புருவங்களை உயர்த்தி,

"எப்படி?" என்று பிரெஞ்சில் கேட்டான்.

"மிக அதிசயம். மிக நன்று" என்று நானும் பிரெஞ்சிலேயே பதில் சொன்னேன்.

தண்ணி ஏற ஏற, தமிழை மறந்தோம். பிரெஞ்சில் பேசினோம். ஆங்கிலத்தில் பேசினோம். சிறிது நேரம் கழித்து என்ன மொழியில் பேசுகிறோம் என்பது எமக்கே புரியாமல் தடுமாறினோம். அதனால் பிரெஞ்சில் மட்டும் பேசுவோம் என்று ஒரு உடன்பாட்டுக்கு வந்தோம். நடந்து முடிந்த அனுபவத்தை மிக இரகசியமாக நான் பேச, மிக அருகில் நெருங்கி விடுப்புப் பிடுங்குவதுபோல் கேட்டுக் கொண்டிருந்த அவன் தனது கிளாசில் இருந்த விஸ்க்கியை ஒரே இழுவையில் முடித்து விட்டு தனது அனுபவங்களையும், இந்த சமாச்சாரத்தில் உள்ள நெளிவு சுளிவுகளையும், இதில் எமது கெட்டித்தனம் எங்கே தங்கி யிருக்கிறது எனவும் பிரெஞ்சில் நன்கு தேர்ந்தெ டுக்கப்பட்ட வார்த்தைகளில் அவன் பேசிக் கொண்டிருந்த பொழுது திறமையுடன் விரிவுரை செய்யும் ஒரு பேராசிரியர் போல் இருந்தது. முதன்முதலாக காதல் கைகூடிய பாடசாலை

மாணவன் போல் நித்திரை இல்லாது அன்றைய இரவு கழிந்தது.

பல நாட்களாக அங்கு சென்று வந்துவிட்டேன். அந்த சுகத்தின் நினைவுகள் மீண்டும் அங்கு போகவேண்டும், அதே பெண்ணைச் சந்திக்க வேண்டும் என்ற விருப்பு இப்போவாட்டத் தொடங்கியது. இப்போதெல்லாம் தனியவே நான் சென்று வந்தேன். மிக ஆவலுடன் சருகுகளை மிதித்து வேகமாக அங்கு சென்ற பொழுது;அப்பாடா... அவள் நின்றிருந்தாள். "†லோ நண்பரே!" எனச் சிரித்தாள். எனது அவசரத்தை அவள் புரிந்திருக்க வேண்டும்; என்ன என்பதுபோல் கள்ளச் சிரிப்புடன் கண்களை ஆட்டினாள். இப்படிக் கண்களால் கதைக்கும் அழகு பிரான்சில் எல்லாப் பெண்களிடமும் நான் காணும் அதிசயம். அதுவும் இப்படிப் பட்ட பெண்களுக்கு புதிதாகவா சொல்லித் தரவேண்டும். அவளது கையைப் பிடித்து இறுக்கி, எனது வருகையின் நோக்கத்தைப் புரிய வைத்தேன். இவளுக்கு எங்கிருந்து தான் இந்த அழகிய புன்னகை வருகின்றது.

அறையின் கதவைப்பூட்டியவள் என்னைப் பார்த்து முத்தம் கொடுப்பதுபோல் பாவனை செய்தாள். நண்பன் அடிக்கடி சொல்லுவான்; இந்தப் பெண்கள் எல்லோருடனும் இதுபோன்று நட்பாக நடக்க மாட்டார்கள். வந்தியா, அலுவலை முடித்தியா போ என்பதுபோல் பழகிப் பழக்கப் பட்டுவிட்டார்கள். ஆனால் தங்களுக்குப் பிடித்த, தங்களையே விரும்பித் தேடி வரும், உறவின் போது கொடுமையாக நடந்து கொள்ளாத, தங்கள் பூராயத்தைக் கேட்டுத் தொந்தரவு பண்ணாத ஆண்களுடன் அவர்கள் தாராள மாகவே நடந்து கொள்வார்கள். அவளது செய்கைகளில் இருந்து, அவளுக்கு என்னைப் பிடித்திருக்க வேண்டும் என்னும் நினைப்பு மகிழ்வாகத்தானிருந்தது. அருகில் வந்து உட்கார்ந்து மெதுவாக எனது காதின் சோணையை அவள் கடித்தபோது அவளது சுவாசம் புதியதொரு வாசனையாகத் தோன்றியது.

"உனது பெயரை நான் தெரிந்து கொள்ளலாமா?"

"ரோசலின். ஏன்? பெயர் கண்டிப்பாகத் தெரிய வேண்டுமா?"

"கூப்பிட வசதியாக இருக்குமே"

"அப்போ நீ என்னிடம் அடிக்கடி வருவாயா?"

"ஆம்"

அவளது மார்பகங்களுக்கிடையே முத்தமிட்டேன். கூச்சத்துடன் கைகளால் எனது முகத்தைத் திருப்பியவள் புதியதொரு உறவுடன் என்னைப் பார்த்தாள். சிறிது நேரம் அவள் மௌனமாக இருந்தாள். அவளது முகத்தில் தோன்றி இருக்கும் வெட்கம் ஏதோவொரு மாற்றத்தைப் புரிய வைத்தது.

"உனது பெயரென்ன?" மௌனம் உடைந்தது.

நான் சொன்னேன்.

"அய்யோ உனது பெயரைச் சொல்வது மிகவும் கடினம்" என்றவள், எனது பெயரைத் திரும்பவும் சொல்லச் சொன்னாள்.

சொன்னேன்.

மீண்டும் மீண்டும் எனது பெயரைச் சொல்ல முயற்சித்துத் தடுமாறி நின்றாள்.

"சரி, உனது பெயரை நீயே வைத்துக்கொள். நான் உன்னை இப்படித்தான் அழைப்பேன் "என எனக்கொரு பெயர் சூட்டினாள்.

பல காலம் பழகிய காதலியைப் போல் எனது தோளில் கை போட்டுக் கதைத்துக் கொண்டிருந்தாள். நண்பன் சொல்வான், அவர்கள் இப்படிப்பட்ட பெண்களாக இருந்தாலும் அவர்களது வாழ்வில் மறுபக்கமும் இருக்கிறது. சாதாரண ஒரு பெண்ணைப் போன்ற எல்லாவித விருப்பங்களும், குண இயல்புகளும் அவர்களுக்கும் இருக்கும் என்பதை நாம் கண்டிப் பாகப் புரிந்து கொள்ள வேண்டும். எல்லாவற்றையும் விட அவர்களை மனிதப் பிறப்புகளாக மதிக்க வேண்டும்.

"நீ பிரெஞ்சுப் பெண்ணா?" பார்வைக்கு அவள் எந்த நாட்டுப் பெண் என்று புரிந்து கொள்ள முடியாமல் இருந்தது.

"நோ, நான் போர்த்துக்கல் ... ஏன் நண்பரே, பிரெஞ்சுப் பெண்கள் என்றால் உனக்கு விருப்பமா..."

அவள் முடிக்கவில்லை. கட்டிலில் வீழ்த்திவிட்டேன்.

எழுந்திருந்தபோது வியர்வை கொட்டிக் கொண்டிருந்தது. நான் ஆடை போட்டுக்கொள்வதை அவள் படுக்கையில் படுத்திருந்தே பார்த்துக் கொண்டிருந்தாள். அவளது குறும்பான சிரிப்பு பல அர்த்தங்களை உணர்த்தி என்னை மகிழ்வாக்கியது. எழுந்து வந்தவள் எனது வியர்வையைத் துடைத்து விட்டாள்.

"ஏய் ரோசலின் நீ உடைகளை அணிந்துகொள்."

அவசியமா என்பதுபோல் பாரத்தவள் அலுமாரியைத் திறந்து Hugo Boss போத்தலைத் தந்தாள். எனக்கு வியர்த்திருந்ததால் அதை அவள் எனக்குத் தந்தாள். நான் நன்றி சொன்னேன். அது ஆண்கள் பாவிக்கும் perfum. உன்னிடம் எப்படி வந்தது என நான் கேட்கவில்லை. வாசல்வரை வந்தவளிடம் "நீ முழு இரவுக்கு வருவியா? எவ்வளவு கேட்பாய்?" என்றேன்.

"கண்டிப்பாக வருவேன். உனக்குக் கட்டுப்படியாகவே கேட்கிறேன். எங்கே, இங்கேயா அல்லது உன்னிடம் இடமிருக்கா?" எனது தோளில் கையைப் போட்டுக் கொண்டாள்.

"எனது அறைக்கு வாயேன். நான் தனியாகத்தான் அங்கிருக்கிறேன்."

"ஓகே."

நாளைக் குறித்துக் கொண்டோம்.

ஒரே பரபரப்பாக இருந்தது. ரோசலினைப் போய் அழைத்து வரவேண்டும். இப்போதுதான் வெளியே போய் சாமான்கள் வாங்கிவந்தது. வழக்கம்போல் விஸ்க்கியுடன், எனக்குப் பழக்கமில்லாத பியர், வைன் போன்ற குடிவகைகளையும் வாங்கி வந்தேன். ரோசலின் குடிப்பாளோ என்பது இதுவரை எனக்குத் தெரியாமல் போய்விட்டது. அவள் விஸ்க்கி குடிக்க மறுத்து பியர், வைன் கேட்டால் உடன் தயார் நிலையில் இருக்கட்டுமேயென எல்லாவற்றையும் வாங்கி வைத்தேன். வெள்ளை வைன், சிகப்பு வைன், ரோஸ் வைன் இதில் எந்த வைனைப் பெண்கள் விரும்பிக் குடிப்பார்கள், ஒரு நாசமும் விளங்கவில்லை. ஆனால் சிகப்பு

வைன் மட்டும் Bordeaux வைனாகப் பார்த்து அதுவும் விலை உயர்ந்ததைத் தேர்ந்தெடுத்தேன். இத்தனைக்கும் இடையில் உடம்பு வேதனையாக இருந்தது. நேற்று வெள்ளிக் கிழமை என்பதால் வேலை செய்யுமிடத்தில் கடுமையான வேலை. ஆனாலும் ரோசலினின் வருகையின் மகிழ்ச்சி அனைத்து வேதனையையும் களைப்பையும் மறைத்து உடலில் ஒரு உற்சாகத்தை ஏற்படுத்தியது. பெரியதொரு விருந்தினர் வருவதுபோல் அறையைச் சுத்தமாக்கி, அலங்கரித்து திடீரென நினைவுக்கு வர கீழே ஓடிச் சென்று ஒரு பூங்கொத்தையும் வாங்கிக் கொண்டேன். எல்லாம் சரி என்ற திருப்தி வரும்வரை அறையை ஒழுங்கு செய்து home sprayயையும் கொஞ்சம் அடித்து விட்டேன்.

ரோசலின் இருக்குமிடத்திற்கு அண்மையில் கார் விட இடம் தேடுவது எப்பவும் கடினம் என்பதால் நான் அவளிடம் மெற்றோவில் போய்க்கொள்வேன். இன்று நேரம் சொல்லி வெளியே காத்திருக்கும்படி சொல்லி இருந்ததால் பயமின்றி காரை எடுத்துக் கொண்டேன். காருக்குள்ளும் கொஞ்சம் வாசனையை அடித்து விட்டேன். எனது காரைக் கண்டவள், ஸ்ரீஹஸி என ஆச்சரியத்துடன் உள்ளே ஏறிக் கொண்டாள். எனக்கு முத்தம் கூடத் தரவில்லை. "ஏய், இது பெரிய பெரிய முதலாளிமார் ஓடும் காரல்லவா?" எனக்கேட்டு, அது எந்த ரகக் கார் என்பதையும் அவளே கூறி தான் நினைத்ததை உறுதி செய்து அதிசயித்துப் போனாள்.

"இந்த அழகிய காருக்கு நான்தானே முதலாளி" என்று நான் சொன்னபோது கண்கள் கலங்க என்னைப் பார்த்தாள். சிறிது நிமிடத்தின் பின் டாஸ் போர்ட்டைத் திறந்து அங்கேயிருந்த hand towel ஐ எடுத்து முகர்ந்து பார்த்தவள், மிகவும் மென்மையான வாசனையாக இருப்பதாகக்கூறி தனது முகத்தைத் துடைத்தாள்; திடீரென, "ஏய், இது நீ மட்டும் பாவிப்பதுதானே" எனக் கேட்டுத் திருப்திப்பட்டுக் கொண்டாள்.

எனது அறையைச் சுற்றி ஒரு நோட்டம் விட்டாள். சுவரில் மாட்டப்பட்டிருந்த படங்களையும், அடுக்கி வைக்கப்பட்டிருந்த புத்தகங்களையும் அந்நியத்துடன் பார்த்தாள். சில புத்தகங்களை எடுத்து பக்கங்களைத் தட்டிப் பார்த்தவள் பிரெஞ்சுமொழியில் அவள் எடுத்த புத்தகங்களிலிருந்தும் அதற்கும் தனக்கும் சம்பந்தமில்லை என்பது போல் உதடுகளைச் சுழித்துவிட்டு தொலைக்காட்சியில் கவனம் திருப்பினாள். நான் அவளை வரவேற்பதில் கவனமாக இருந்தேன். மேசையில் வைக்கப்பட்டிருந்த சிற்றுண்டிகளை அவளுக்குக் காட்டினேன். என்னையும் வந்து தன்னுடன் உட்காரும்படி கேட்டாள். எனக்கு ஒரே மகிழ்ச்சி. என்னிடம் விருந்தினர்கள் என்று யாரும் வந்ததில்லை. அதுவும் இப்போ வந்திருப்பது பெண் விருந்தினர் மட்டுமல்ல. என்னுடன் எப்பவும் உடலுறவு கொள்ளத் தயாரான விருந்தினர் என்பது ஒருவித கிளர்ச்சியை ஊட்டும் உண்மை.

அவள் விருப்பப்படி ஒலிவ் எண்ணெயில் பிரட்டி எடுத்த மீனையும், உருளைக்கிழங்குத் துண்டு களையும் சூட்டில் வைத்துவிட்டு, தக்காளி, சோளம், பயித்தம் முளை ஆகியவைகளை பச்சை சலாட் இலைகளுடன் கலந்து மேசையில் வைத்து விட்டு



அவளருகே சென்று "விஸ்கி...,பியர்..., வைன்..." என இழுத்தேன்.

இரண்டு கிளாஸ்களில் விஸ்க்கியை ஊற்றி வைத்தேன். மகிழ்வுடன் இரண்டு கிளாஸ்களும் உரசப்பட்டன. நான் சமையலில் ஈடுபட்டிருக்கும் பொழுது அடிக்கடி வந்து "உதவட்டுமா?" என்று கேட்டுக் கொண்டிருந்தாள்.

நாங்கள் இடைவெளிகளில் முத்தங்கள் பரிமாறிக் கொள்ளவும் மறக்கவில்லை. இதற்கிடையில் நான் மூன்று கிளாஸ் விஸ்க்கி ஊற்றி விட்டேன். அவள் ஒரு கிளாஸின் பாதிகூட முடிக்காமல் போதை ஏறியதுபோல் கொஞ்சத் தொடங்கினாள்.

இந்த வெள்ளைகள் இப்படித்தான். ஒரு கிளாஸ் விஸ்க்கியை வைத்துக் கொண்டு ஒரு விருந்து முடியும்வரை சொட்டு சொட்டாக அடித்துக் கதைத்துக் கொண்டிருப்பார்கள். எங்கடை சனம் எண்டால் குறைந்தது ஆளுக்கு அரைப் போத்தல் அடித்துவிட்டுத் தடுமாறுவார்கள்.

ஒரு முறை பெரியவர் ஒருவர் சொன்னார், "தம்பி வெள்ளைச்சனம் வெளியில் இருந்து தண்ணியடிச்சிட்டு மெதுவாக வீட்டுக்குள் போய்விடும். ஆனால், எங்கடை சனம் வீட்டுக்கை தண்ணி அடிச்சிட்டு அட்டகாசம் பண்ணிக் கொண்டு வீதிக்கு வந்து விடும்." உண்மைதான் இறுதிவரை அவள் ஒரு கிளாசுக்கு மேல் ஊற்றிக் கொள்ளவில்லை; சாப்பிட்டு முடிந்து எழுந்தபோது தடுமாறினாள்.

அன்றைய இரவு சுகமான இரவு. தூங்கவேயில்லை. அவள் எனது விருப்பங்களுக்குத் தாராளமாக நடந்து கொண்டாள். அவைகளை அவள் விரும்புவது போலவும்

இருந்தது. நண்பன் சொல்வான், மனம் ஒப்பிய காமத்தில் களைப்புத் தெரியாது. இப்படியான இரவுகள் எனக்கு விருப்பமாகிக் கொண்டு வந்தது. அவளும் அப்படியான ஒரு உறவை விரும்பி நின்றாள். ஓய்வான நாட்களிலும், அவளுக்கு வெறுமையாக இருக் கும் நாட்களிலும் எனது அறைக்கு வந்து போகத் தொடங்கினாள். கண்களுக்குத் தெரியாமல் இருவரி டையேயும் ஒருவிதமான உரிமை வளரத் தொடங்கியது.

நாளடைவில் அவளுடனான உடலுறவுக்கு அப்பால் அவளைத் தினமும் பார்க்கவேண்டும், அவளு டன் பேசிக் கொண்டிருக்க வேண்டும் என்பது போன்ற ஒரு பைத்தியநிலைக்கு நான் தள்ளப் பட்டுக் கொண்டிருந்தேன். ஆனால், அவளது சூழ்நிலை கருதி இப்படிப் பட்ட ஆசைகளைத் தவிர்த்துக் கொள்வேன். இதே மனக் குழப்பத்தில் அவளும் இருந்தி ருக்கலாம். கைத்தொலைபேசியில் நி னைத் த பொழுதெல் லாம் அழைத்துக் கதைக்கத் தொடங் கினாள். அவளை எப்படியும் பார்த்து விட வேண்டுமென அன்று மனம் அரித்ததால் அங்கு சென்றேன். அவளது வீட்டு வாசலில் நின்ற பெண்மூலம் அவள் உள்ளே இருப்பதை உறுதிசெய்து கொண்டு வரவேற்பறையில் நுழைந்தேன். அவளை அங்கு காணவில்லை. அவளது அறை பூட்டப்பட்டிருந்தது. எங்கே போயிருப்பாள்? இங்கிருப்ப தாகத்தானே அவளுடன் இருக்கும் பெண் சொன்னாள். காத்திருப்போம் என எண்ணியபோது அவளது அறை திறக்கப்பட்டது. அதற்குள் இருந்து உயரமான இத்தாலியன் போல் தோற்றம் கொண்ட ஆண் வெளி யேறினான். திடீரென அதிர்ச்சி யாகவும் பொறாமையாகவும் பொறுக்க முடியாமலும் இருந்தது. அவள் கதவிடுக்கில் எட்டிப் பார்த்து "ஒரு நிமிஷம்" எனச் சொல்லிச் சிரித்தாள்.

ஏன்தான் எனது மனம் இப்படி அலைகிறது. அவள் என்ன என்ரை பொண்டாட்டியா? காதலியா? அல்லது தன்னைப் பத்தினி என்று எப்போதாவது சொன்னவளா? நான் அவளைக் காணும்போது அப்படி யானதொரு பெண்ணாகத்தானே கண்டேன் என மனதைத் தேற்ற முயன்றாலும் ஏதோ ஒரு முள் குத்துவது போல் இருந்தது. அவள் என்மீது கொண்டிருக்கும் அன்பை நினைத்தபோது அவள் மீது பச்சாதாபம் ஏற்பட்டது. அவள் பாவம். நான் அப்படி சொல்லாமல் கொள்ளாமல் வந்திருக்கக்கூடாது. அவளது மனம் வருத்தப்பட்டி ருக்குமா; என்னைப்பற்றி என்ன நினைத்திருப்பாள்? இப்படி வேதனையுடன் சிந்தித்துக் கொண்டிருந்தபோது ரோசலின் handyயில் பேசினாள்.

"ஏய் நண்பரே எங்கே ஓடிவிட்டீர்? வெளியே வந்து பார்த்தால் காணவில்லையே"

நான் மௌனமாக.

"கோபமா, எனக்கெல்லாம் புரியும். நீ உனது வக்கிரத்தைக் காட்டி விட்டாய்"

"இல்லையே, அப்படி என்ன நடந்து விட்டது"

"சரி. இன்றிரவு நீ எனது விருந்தாளி. ஆமாம் எனது அறையில்தான்! மறுக்காமல் வந்து விடு. காத்திருப்பேன்."

அவள் எனது பதிலை எதிர்பார்க்கவில்லை. தொடர்பைத் துண்டித்துக் கொண்டாள்.

தான் செய்தது தவறு என்று எண்ணியா சமாளிக்கக் கூப்பிடுக றாள். இல்லையே , அவள் எந்தத் தவறும் செய்து விடவில்லையே. அவள் தனது தொழிலைச் செய்தாள். எனது அன்பை, எனது உள்ளத்தில் ஏற்பட்ட நோவை, எனது நிலைமையைப் புரிந்து கொண்டு நல்ல உள்ளத்துடன் அழைக்கிறாள். அவள் மீதான மரியாதை என்னிடத்தில் அதிகரிக் கத்தான் செய்தது.

எல்லா ஏற்பாடுகளும் அவளது அறையிலேயே செய்யப்பட்டி ருந்தது. சின்னதான ஒரு மேசை போடப்பட்டிருந்தது. பூக்களால் ஆங்காங்கு அலங்கரிக்கப் பட்டிருந்தது. உள்ளே நான் சென்றபோது முத்தமிட்டு வரவேற்றாள். அவள் சந்தோ ஷமாக இருந்தாள். எனது வரவு அவளுக்கு அளவிட முடியாத

மகிழ்ச்சி என்பதை அவள் முகம் காட்டியது. அவளிடம் வழமையாக வேறு எதையோ அடைய வரும் நான் இன்று ஏதோ ஒரு உறவினன்போல் அவளுக்கு மிக வேண்டியவன்போல் வந்திருப்பது இருவருக்கும் மகிழ்ச்சியே. நீண்ட நேரமாகப் பேசிக்கொண்டிருந்தாள். தனது சக நண்பிகள் சமைப்ப தாகவும், எனது சுவை, உணவுத் தேவை அவளுக்குத் தெரிந்திருந் ததால் என்னிடம் உணவுபற்றி அனுமதி கேட்கவில்லை எனக் கூறினாள்.

நான் விரும்பும் டிம்பிள் விஸ்கியை மேசையில் வைத்து விட்டு என்னைப் பார்த்துக் கண்ணடித்தாள். ஓகே என்பது போல் தலையை ஆட்டினேன். விஸ்கியை ஒரு மிடறு விழுங்கிக் கொண்டேன். உடம்பின் நரம்புகள் சிலிர்த்தது. சிகரட்டை எடுத்து உதட்டில் வைத்தபோது, தான் பற்ற வைப்பதாகக் கூறி அருகில் வந்தாள். அவளில் இருந்து மிக மென்மையான, ஏதோ ஒரு மலரை நினைவுபடுத்துவது போல் வாசனை வந்தது.

வெண்ணெயில் வறுத்த முந்திரிகைப் பருப்பைக் கொண்டு வந்து வைத்தவளின் கைவிரலில் நான் தயாராகக் கொண்டு வந்த தங்க மோதிரத்தைப் போட்டேன். உருகியே விட்டாள். கன்னத்தில் பத்துத் தடவைக்கு மேல் முத்த மிட்டவள் கண்கள் கலங்கி என்னைப் பார்த்தாள். "நான் உனது நல்ல நண்பனாக எப்பவும் இருப்பேன் " என நான் கூறியதும் தனது இடது மார்பில் கை வைத்து "†ம்துல்லா" என அரபில் அவள் கூறியதும் நான் திடுக்கிட்டுப் போனேன்.

"ஏய், நீ அரபுப் பெண்ணா?"

"ஆ ம்"

என்பதுபோல் தலையை ஆட்டியவள்,

"நீ என்னில் இவ்வளவு அன்பாக இருக்கும்போது எனது தொழிலுக்கான பொய் அறிமுகத் தைத் தொடர்ந்தும் பேண விரும்ப வில்லை. எனது பெயர் தஸ்லிமா. நான் மொராக்கோ நாட்டைச் சேர்ந்தவள்" என அவள் பேசிக் கொண்டிருக்கும்போது இதுவரை அவதானிக்காத அவளது அழ கான பிரெஞ்சு மொழி உச்சரிப்பை அவதானித்தேன்.

சிறியதோர் மௌனம்.

இருவரும் ஒன்றும் பேசவில்லை. இப்படியானதொரு இடைவெளியை நான் விரும்பவில்லை.

"நீ ஒரு முஸ்லிம் பெண்ணா? உங்கள் ஆகமத்தின்படி நீ செய்வது பாவமில்லையா?"

மெதுவாக சிரித்துக்கொண்டு எனது விரல்களைத் தடவியபடி, "ஏன் உங்கள் ஆகமத்தில் மட்டும் இது புண்ணியம் என்றா எழுதி இருக்கு" என அவள் கேட்டது ஆயிரம் கரங்கள் சேர்ந்து எனது முகத்தில் அறைந்ததுபோல் பதறிப் போனேன். எமது தேவை, நோக்கம் எதுவோ அதை விடுத்து இது போன்ற தேவையில்லாத அதிகப் பிரசங்கித்தனம் பற்றிய தவறை உணர்ந்தேன்.

என்னதான் இருந்தாலும் அன்றைய இரவு மிகவும் இனிமை யாகவே கழிந்தது. நான் அவளை மகிழ்விப்பதாக அவள் கூறும் போதெல்லாம் எனக்குப் பெருமை யாகவே இருக்கும். இப்படியான பெண்கள் உணர்வுபூர்வமாக எல்லோருடனும் உறவுகொள்ள மாட்டார்கள். சும்மா கடமையெனப் படுத்திருப்பார்கள். இவள் என்னுடன் உணர்வுபூர்வமாக உறவு கொள்கிறாள் என்பதை அவளுடன் உறவு கொள்ளும்போதெல்லாம் உணர்கிறேன். உறவின் போதெல் லாம் அவள் சுகம் பெறுகிறாள், என்மூலம் திருப்தி கொள்கிறாள் என்பது எனக்கு மகிழ்ச்சியே. ஆயிரம் தருமம் செய்வதை விட தன்னிடம் அடைபவளை மகிழ் விப்பதே உலகில் உயர்ந்தது என நான் நம்புகிறேன்.

காலையில் சிறியதொரு பாண் துண்டும் அருமையான காப்பியும் தந்தாள். சிறிது நேரம் வரவேற் பறையில் இருந்து பேசிவிட்டு விடைபெற்றேன். வாசல்வரை வந்தவளின் கையில் எவ்வளவு என்று கணக்குப் பார்க்காமல் பணத்தைத் திணித்தேன். செல்ல மாகக் கோபம் கொண்டவள் எனது கையில் மீண்டும் பணத்தைத் தந்து,

"நண்பரே! விருந்தாளியிடம் இருந்து யாராவது பணம் பெறுவ துண்டா? அது மட்டுமல்ல, இனி மேல் எம்மிடையே உறவு மட்டுமே இருக்கும். வியாபாரம் எதுவும் இருக் காது. இருக்கக் கூடாது" எனக் கூறி எனது உதடுகளில் தனது சுட்டு விரலால் தடவி விட்டாள்.

இரண்டு நாட்கள் இருக்காது. தனது தாய் இறந்துவிட்டதாகவும் தான் தனது நாட்டுக்குப் போவ தாகவும் தொலைபேசியில் கூறினாள். அவளை ஏற்றிய எனது கார் விமானநிலையம் நோக்கிப் புறப்பட்டது. போகும் வழியெல்லாம் பெருமூச்சு விட்டபடி இருந்தாள். அவளது தாயார் இறந்த துயரம் ஒரு புறம், என்னைப் பிரியும் துயரம் ஒரு புறம் அவளை வாட்டியது.

விமானநிலையத்தில் பயணத் துக்கான சம்பிரதாயங்களை முடித்துக்கொண்டு உள்ளே புறப்பட்டவளின் கண்கள் சிவந்து கலங்கி உதடுகள் காய்ந்தி ருந்தது. என்னையே குத்திட்டுப் பார்த்துக் கொண்டிருந்தாள். முகவரி, தொடர்பு கொள்ள தொலை பேசி இலக்கம் கேட்டேன். அது ஒன்றும் வேண்டாம் உடனே வந்துவிடுவேன். அடிக்கடி எனக் குத் தொலைபேசி எடுப்பதாகக் கூறி விடைபெற்ற அவளது உதடு களில் முத்தம் கொடுத்தேன். அது மகிழ்ச்சியான முத்தமல்ல. அவள் உள்ளே சென்ற பாதையைப் பார்த்துக்கொண்டு எவ்வளவு நேரம்தான் நிற்பது?

சில நாட்கள் வேலை, வேறு சோலி என்று நாட்கள் கடந்தது. அவளிடம் இருந்து எந்தவித தொலைபேசி அழைப்புகளும் வரவில்லை என்பதுடன் அவள் பற்றிய எந்தத் தகவலும் பெற முடியாதிருந்தது. அவளது சக தொழிலாளிப் பெண்களிடம் சென்று விசாரித்தேன். அனைவரும் ஒன்று சேர தெரியாது எனக் கூறினார்கள்.

நாளாக நாளாக வேதனையாக இருந்தது. அவள் போனால் இன்னொரு பெண் என்னும் நினைப்பு உயிரைக் கொல்லுவதுபோல் இருந்தது. என்னில் ஏற்படும் மாற்றம் என்னையே ஆச்சரியம் கொள்ள வைத்தது. அவளுக்கும் எனக் குமான உறவின் ஆழம் அவளின் பிரிவின்போது தெரிகிறது. சரி வந்து விடுவாள்தானே என்னும் நினைப்பிற்கு இடமில்லாது உடனே அவள் வரவேண்டும் என மனம்

ஏங்கியது. தினமும் அவளது இடத்துக்குச் சென்று வந்தேன். தகவலே இல்லை.

இரண்டு மாதங்கள் மிகக் கொடுமையாக என்னைத் துன்புறுத்தி உருண்டோடியும் அவள் பற்றிய எந்தத் தகவலையும் என்னால் அறிந்துகொள்ள முடியாமல் இருந்தது.

அவள் பயணம் செய்த விமானக் கொம்பனியின் பிரதான அலுவலகம் சென்று, அவள் ஊருக்குப் போன நேரம், திகதி சொல்லி, அவளது முகவரி கிடைக்குமா எனக் கேட்டேன். பிரயாணிகளின் தகவல்கள் இரகசியமானது எனக் கூறி விபரம் தர மறுத்தார்கள்.

என்ன செய்வதென்றே தெரியாது தடுமாறினேன்.

அன்று மாலை அவளது இடத்துக்குச் சென்றேன். வெளியே நின்ற அவளது தோழி மிக வருத்தத்துடன் தாங்களும் இருப்பதாகக் கூறி அவள் பற்றிய தகவல்கள் கிடைக்காததுபற்றி ஆச்சரியப்பட்டாள். மிகவும் மனமொடிந்த நிலையில் அங்கிருந்து வெளியேறிவந்த போது, உள்ளேயிருந்து

"யார் வந்தது?"

என ஒரு பெண் கேட்டதற்கு, வெளியே நின்றிருந்தவள் "தஸ்லிமாவின் காதலன்" எனப் பதில் தந்ததும் விறைத்துப் போய்நின்று விட்டேன்.

"தஸ்லிமாவின் காதலன்" மீண்டும் மீண்டும் காதுகளில் ஒலித்தது. மனதுக்குள் இனம் புரியாத குதூகலம். மகிழ்ச்சியாக இருந்தது. ஆமாம் இப்போது புரிந்து விட்டது நான் எங்கே நிற்கிறேன் என்பது.

"தஸ்லிமாவின் காதலன்" என்பது எனக்கு மகிழ்ச்சி தரும் செய்தி.

மனவேதனை மறந்து "தஸ்லிமாவின் காதலன்" என்ற நினைப்பில் உறைந்தேன்.

எவ்வளவோ மாதங்கள் ஓடி விட்டது. அவள் வருவாள் எனத் திடமுடன்தான் இருக்கிறேன்.

அந்த மகிழ்ச்சியான செய்தியை தஸ்லிமாவிடம் சொல்லி விட வேண்டும் என்பதற்காக நான் காத்திருக்கிறேன்.

தஸ்லிமாவின் காதலன்.

மூச்சோடு கலந்து விடு

உயிர் வரண்டு
வலிந்தெழும் விழிகள் நோக்கையில்
கடைக்கண்ணீர் துடைக்கும்
உன் விரல்களின் நகங்களில்
நான் புசிய ஏங்கும்
அழியாமல் துடை.

உன் ஒரு துளிக் கண்ணீரேனும்
என் இமைகளின் மீது சிந்து
உதடுகளில் முத்தமிடு
என் கழுத்தி மூச்சையும்
உனக்குள்ளேயே
ஊதிவிட்டுப்போகின்றேன்.

நான் மூச்சுவிட மறுத்தபின்
உடன்கட்டை ஏறாதே
நீ மூச்சுவிடு.
எனதுமூச்சைப் பத்திரப்படுத்து.

என்னுயிர்த்துளியாய்
என்னுறவுகளோடு கட்டியழு
கட்டியழும் ஆறுதல்
தொலைபேசிக் கண்ணீரில்
கிட்டாது உனக்கு.

எனது கடற்கரைக்குபோய்
உனது கைகளை விரித்து
அந்த உப்புக்காற்றை உள்வாங்கி
என் மூச்சோடு ஐக்கியப்படுத்து

பின்னர்
நான் இறக்கவில்லையென்று எண்ணிக்கொண்டு
மனித வாழ்வை
எவ்வி நகைத்துவிடு.

மெலிஞ்சிமுத்தன்

நோர்வேஜியக் கவிதைகள் இரண்டு



மூலம் : *தக்வம் மரிய*
தமிழில் : *பானுபாரதி*

ஒரு பெண்ணின் பணி முடிகின்றது

எனது
குழந்தைகள் எங்கே?

அழகாக ஆடையணிந்து
அந்நிய மனிதர்போல்
என்னிடம் வந்திருக்குமிவர்கள்
இன்று
தங்களது பெயர்களால் அழைக்கப்படுகிறார்கள்.
முன்பொருகால்
இவர்களது பிஞ்சுக்கரங்கள்
எனது
கழுத்தைக் கட்டிக்கொள்ள போட்டியிட்டன
குட்டி இதழ்களென்னை முத்தமிட
ஆவலாய்த் துடித்தன.

ஐந்து தடவைகள்,
ஒவ்வொரு தடவையும் ஒன்பது மாதங்கள்
குமட்டலும், வாந்தியுமாய் அவதிப்படுத்தியது.
சமையல்கட்டின் பல்வேறு வாசனைகள்
என்னை சூழ்ந்துகொண்டு அழுக்குரைத்தன.
கண்ணாடியில் தெரிக்குமென் உருவமோ
பொங்கிய, புளித்த மா போன்றிருக்கும்.
எனது முகம் வெளிறித் தெரிந்து
அடையாளம் தொலைந்து போனது.

ஓ கடவுளே....
படுக்கையறையிலும்
குழந்தைகள் பணியிலும்
எனது காலங்கள் கரைந்தனவே.
எனது இரத்தத்திலும் சதையிலுமிருந்து
ஐந்து உயிர்களை வெளியே தந்தேன்
இன்றோ
ஐந்து அந்நிய மனிதர்களை தரிசிக்கிறேன்.

ஒவ்வொரு பிரசவத்தின்போதும்
உடலம் தளர்ந்து
வலுவிழந்து போயினேன்.
எனது வயிறோ
ஒரு பை போன்று தொங்கியபடி
அடுத்த தடவைக்காக காத்திருந்தது

எனது மார்புகள்
பசித்த உதடுகளால் உறிஞ்சப்பட்டன.
முலைக்காம்புகள்
கடுத்த புதுப்பற்களால்
கடித்துக் கசிந்தன.

எனது மடி
அழுக்கான உடைகளுடனும்,
அழுகை நிறைந்த குழந்தைகளாலும்
நிரவிக் கிடந்தது.

எனது முகம்
அவர்களின்
முத்தங்களாலும் கண்ணீராலும்
ஈரம் காயாதிருந்தது.

எனது சர்வாங்கமும்
திருமணத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுக் கிடந்தது.

'ஒரு பெண்ணின் பணி முடிகின்றது' என்ற கவிதைக்கான ஓவியத்தை உயிர்நிழலுக்காக பிரத்தியேகமாக வரைந்து தந்த நோர்வேஜிய ஓவியர் கார்ல் யொகான்சன் *(Karl Johanson)* அவர்களுக்கு நன்றி !

நோர்வேஜிய பெண்ணியக் கவிஞரான மரியே தக்வாம் *(Marie Takvam)* **1926**ம் ஆண்டு டிசம்பர் மாதம் **6**ம் திகதி நோர்வேயின் வடகிழக்குப் பகுதியில் ஓர்ஸ்தா என்னும் சிறு கிராமத்தில் பிறந்தவர். **1952**இல் இவரது முதல் கவிதை வெளியீடான "ஏழு நட்சத்திரங்களின்கீழ் திருடுமுக்கு" பிரசுரமானது. **1952**ம் ஆண்டிலிருந்து **1997**ம் ஆண்டுகளுக்கிடையிலான காலப்பகுதியில் **13** கவிதைத் தொகுப்புகளையும், இரண்டு நாவல்களையும், சில நாடகப் பிரதிகளையும் படைத்துள்ளார். **97**இற்கும் **81**இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் நான்கு திரைப்படங்களிலும் நடித்துள்ளார். வாழ்க்கையோட்டம், காதல், மனிதப் பருவங்கள் போன்ற விடயங்களை தனது கவிதைகளின் கருப்பொருளாய்க் கொண்டிருந்தார். இவரது அநேகமான படைப்புக்கள் சமூகத்தைப் பற்றிய கடும் விமர்சனங்கள் கொண்டதாய் விளங்குகின்றன. பொதுவாக மரியாவின் எல்லாக் கவிதைகளும் வாழ்வுக்கும், மரணத்துக்குமிடையிலான போராட்டத்தை வெளிப்படுத்துகின்றன. **79**வயதான கவிஞர் மரியே தக்வாம் தற்பொழுது ஒரு கிராமத்துக் கோடியில் இயற்கையோடு சேர்ந்து கவிதை படித்துக்கொண்டிருக்கிறார். இளவேனிற்காலம் இவருக்குப் பிடித்தது. வாழ்வின் தத்துவத்தை விளக்குவது இந்த இளவேனில் என்பது இவரது கவித்துவமான கருத்து.

மீண்டுமொரு முறை

மீண்டுமொரு முறை
ஒரு மனிதன்
எனக்குள் வந்தான்
எனது இரத்த நாளங்களுள்
இதழ்களின் வழியே
அணுசக்தியின் தெறிப்பாய்.

எனது கைகளும்
எனது விரல்களும்
இனி என்னுடையவையல்ல
அவைகள்
அரூபமான நூலிழையால்
எமக்கிடையில்
ஆளுகை செலுத்தப்பட்டன.

என்னுடைய பாதங்கள்
என் சிந்தனையின் பாதைவழியே
போகவில்லை.
எனது சிகையும்கூட
உனது விருப்பப்படியே கூட்டி
முடியப்பட்டுள்ளது.

ஒருபோதும், ஒருபோதும்
என்னால் என்னை
ஆளுமை செய்ய முடியவில்லை.

ஓவியம் : ரஞ்சினி

இதம் வேண்டி கரங்களைப் பற்ற
இன்னொரு முறை
நான் முனையும் போதெல்லாம்
மீண்டும் மீண்டும்
சிறைப்படுத்தப் படுகிறேன்.

நீ என்னருகில்
இல்லாத கணங்களிலும்கூட
எனது மூளைக்குள் குடிகொண்டு
உயிர்க்கலங்களை சிதைக்கின்றாய்,
உனது நாடகமேடையில்
நானொரு
பொம்மை மாத்திரமே.



எழுபதுகளில் பெண்ணின் படைப்புக்கள் பற்றிய கேள்விகள் எழ ஆரம்பித்தன. இந்தக் காலகட்டத்தில் பெண்களின் எழுத்துக்களில் கனதி குறைவாக கருதப்படுவதும் சமூக மதிப்பின்மையும் தெரிந்தது. இதன் பின்னர் உலகளாவிய ரீதியில் இந்த எழுத்துக்கள் பற்றிய பிரக்ஞையும் தேவையும் உண்டாகிற்று. 1980களில் பெண் எழுத்துக்கள் உலகளாவிய ரீதியில் தமக்கென ஓர் இடத்தைப் பெற்றுக் கொண்டன. சிமோன் தி போவுவா, வர்ஜிப் பிறிடன், மேரி வுல்ஸ்டன் கிராப் போன்றவர்களின் எழுத்துக்களை குறிப்பிட்டுக் கூறலாம். இவர்களது ஆக்கங்கள் பெண்ணிய வரலாற்றில் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தின. இவர்களது எழுத்துக்கள் பெண்களது ஒடுக்கப்பட்ட வாழ்வியலைச் சித்தரித்தன. பெண்ணுக்கு பொருளாதார ரீதியான, மனோரீதியான சுதந்திர உணர்வு, பெண்ணின் சுயமதிப்பை உணரச் செய்தல், முடிவெடுத்தலிலும் சமூக வாழ்விலும் அவளது ஆளுமையை ஊன்றச் செய்தல், தொலைத்தொடர்புச்சாதனங்கள் அவளைச் சித்தரிக்கும் முறைமையை கேள்விக்குட்படுத்தல் போன்ற பெண்ணிய நோக்கங்களை மையப்படுத்தியே இவ்வெழுத்துக்கள் அமைந்தன.

இதற்கு முன்னர் பெண்ணின் வாழ்வியல் ஆணின் நோக்கிலேயே ஆராயப்பட்டது. 1983 காலப்பகுதியின் பின்னர் பெருமளவிலான இலங்கைத் தமிழர்கள் இந்தியா, ஐரோப்பா, கனடா, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து என அரசியல் அகதிகளாக புலம்பெயரத் தொடங்கினர். அதுவும் பெருமளவில் ஆண்கள்தான் புலம்பெயர்ந்தார்கள். இந்தப் புலப்பெயர்வின் பின்னர் குறிப்பாக ஐரோப்பா, கனடா போன்ற தேசங்களிலிருந்து தமிழ் இலக்கியச் சஞ்சிகைகளை, எழுத்துக்களை இவர்களில் சிலர் வெளியிடத் தொடங்கினர். அவை பெரும்பாலும் விடுதலை இயக்கங்களோடு சம்பந்தப்பட்டு, இயக்க அராஜகங்களால் புலம்பெயர்வுக்கு நிர்ப்பந்திக்கப்பட்டவர்களாலேயே தொடங்கப்பட்டன. அதன்பின்னரே இதனோடு சம்பந்தப்படாதவர்களிடமிருந்தும் படிப்படியாக எழுத்துக்கள் வர ஆரம்பித்தன.

இந்தப் பின்னணியிலேயே 'புலம்பெயர் இலக்கியம்' என்ற சொற் பிரயோகம் உருவாகியது. ஆனாலும் இந்தப் பெயர் சம்பந்தமான மாற்று அபிப்பிராயங்களும் இன்றுவரை வைக்கப்பட்டுக் கொண்டுதானிருக்கிறது. இவற்றை 'புலம்பெயர் இலக்கியம்' என்பதா அல்லது 'புகலிட இலக்கியம்' என்பதா என்ற சர்ச்சைகள் நிலவவே செய்கின்றன. இதுபற்றிய கட்டுரை அல்ல இது. 'புலம்பெயர் இலக்கியம்' என்பதை ஐரோப்பா, கனடா வாழ்வியலுக்குள் வைத்து நாம் பெண் எழுத்துக்களை பார்ப்போமாகில், புகலிட தமிழ்ச் சூழலில் பெண்ணிய நோக்கு, பெண்ணிய விமர்சனம், பெண்ணிய எழுத்துக்கள் அண்மைக்காலத்திலேயே அறிமுகமாகி விவாதிக்கப்பட்டு வருகிறது. 1986இல் வெளிவந்த ஈழத்துப் பெண்கவிஞர்களின் தொகுப்பான 'சொல்லாத சேதிகள்' பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது எனலாம். ஈழ விடுதலைப் போராட்டம் முனைப்பு அடைந்த பின்னர் பெண்விடுதலைச் சிந்தனைகள் மேலும் தோன்றின. சில பெண் எழுத்துக்கள் - தெரிந்தோ தெரியாமலோ - ஆண் நோக்கு நிலையிலிருந்தும் எழுதப்படுகின்றன.

பொதுவாக, 'புலம்பெயர் தமிழ் இலக்கியம்' என்று எடுக்கும்போது ஆரம்பத்திலிருந்தே அதனைப் படைப்பவர்கள் பெரும்பாலும் ஆண்களாக இருந்து வந்திருக்கிறார்கள். இவர்கள் பெரும்பாலும் விடுதலை இயக்கங்களிலிருந்து வந்ததினால் பெண்ணியச் சிந்தனைகளை உணர்வுபூர்வமாக ஏற்றுக்கொண்டார்களோ இல்லையோ - தமது படைப்புகளில் சிறியளவிலேனும் வெளிப்படுத்தினார்கள். இதற்கு வெளியில் இயங்கிய ஆண்கள் பலர் தமது படைப்புகளுக்கு ஊடாகத் தாம் மறைமுகமாகவோ அல்லது நேரடியாகவோ ஏற்றுக்கொண்டுள்ள ஆணாதிக்கச் சிந்தனைகளை எமது சமூகத்திற்கு ஊட்டி வந்துள்ளனர். எனினும் சிறிய அளவிலேனும் பெண் விடுதலைக் கருத்துக்கள் எமது சமூகத்தில் உள்வாங்கப்பட, இந்தப் போக்கில் பெண்ணிய எழுத்துக்கள் பெண்களிடமிருந்து வீரியமாக வெளிவரத் தொடங்கின. இந்த மாற்றம் மூன்று தசாப்தங்களாக மிகவும் மெதுவாகத் தன்னும் நகர்ந்து வருகிறது எனலாம்.

ஆணாதிக்கக் கருத்துக்களை முன்வைத்து பெண்களாலோ அல்லது ஆண்களாலோ எழுதப்பட்டு வருகின்ற படைப்புக்களில் அக்கருத்துக்களை

நாம் இன்னும் எழுத்தளவில்தான் பெண்ணியம்பற்றி பேசிக்கொண்டும் எழுதிக்கொண்டும் இருக்கிறோமா, நடைமுறைக்கும் வாழ்வியலுக்கும் ஏற்ற வகையில் நாம் பெண் எழுத்துக்களை வெளிக்கொணருகிறோமா என்ற கேள்வி என்னுள் எழுகிறது.

கண்டறிந்து அவற்றை விமர்சித்து பெண் விடுதலைக் கருத்துக்களை முன்வைத்தும், மேலும் பெண் உரிமைகளையும் சமத்துவத்தினையும் வலியுறுத்தி வரும் பெண் விடுதலையை நோக்கிய பெண்களால் எழுதப்படும் அனைத்துப்படைப்புக்களையும் பெண்ணிய எழுத்துக்கள் என்று வரையறுக்கும் கருத்தும், இதே கருத்துகளை முன்வைக்கும் ஆண்களின் படைப்புகளையும் பெண்ணிய எழுத்துக்கள் எனலாம் என்ற கருத்தும் இருக்கிறது. எப்படியோ பெண்கள் எழுதும் அனைத்துப் படைப்புக்களும் பெண்ணிய எழுத்துக்களாக இருக்க முடியாது. புகலிடச் சூழலில் பெண்ணிய எழுத்துக்களை விமர்சனத்திற்கு உட்படுத்தும் போது, பெண்களுடைய பெயரில் மறைவாக எழுதிக்கொண்டிருக்கும் ஆண்களின் எழுத்துக்கள் ஆணாதிக்க கருத்தியலால் மூளைச்சலவை செய்யப்பட்ட பெண்ணின் எழுத்துக்கள் என்பனவற்றை, பெயரை மட்டும் வைத்து பிரித்து அடையாளம் காண்பது எவ்வளவு தூரம் சாத்தியப்படும் என்கின்ற முக்கியமான கேள்வி எம்முன் எழுகிறது.

பெண்களால் எழுதப்பட்ட பெண்ணியப் படைப்புக்கள், ஆண்களால் எழுதப்பட்ட பெண்ணியப் படைப்புக்கள், பெண்கள் படைப்புக்கள் என்று இந்த அடிப்படையில் புகலிடத்தில் பெண்கள் சம்பந்தமான படைப்புக்கள் வெளிவருகின்றன. 15வருடங்களுக்கு முன்னர் மேற்கு ஐரோப்பாவில் பல மாற்றுக் கருத்துக்களை கொண்ட சஞ்சிகைகள் வெளிவந்தன. அவற்றில் பெண்களும் எழுதினார்கள். அநேகமான சஞ்சிகைகளில் பெண்களாலும் ஆண்களாலும் பெண்ணியக் கருத்துக்கள் முன் வைக்கப்பட்டன, விவாதிக்கப்பட்டன. பிரான்சிலிருந்து 'கண்' என்ற பெண்கள் சஞ்சிகை முதலில் கொண்டுவரப்பட்டது. இது பெண்களை ஆசிரியர் குழுவாகக் கொண்டிருந்தது. தொடர்ந்து 'ஊதா', 'பெண்கள் சந்திப்பு மலர்', 'சக்தி' போன்ற பெண்களால் உருவாக்கப்பட்ட சஞ்சிகைகளும் இன்னும் 'மறையாத மறுபாதி', 'புதுஉலகம் எமை நோக்கி', 'ஊடறு' போன்ற தொகுப்புகளும் வெளிவந்தன. புகலிட வாழ்வு, பெண்ணியம், விளிம்பு நிலை மாந்தர்கள், தமிழ் அரசியல் குறித்த படைப்புக்கள் தாங்கிய தொகுப்புக்களாக இவை தம்மை இனம் காட்டியுள்ளன.

இன்று புகலிட இலக்கியத்தில் பெண் எழுத்துக்கள் படைக்கப்படுகின்றன. ஆயினும் ஒப்பீட்டளவில் குறைவாகவே அவை வெளிவருகின்றன. படைப்பவர்கள் கூட பல ஆணாதிக்க கருத்தியலுக்குட்பட்டுதான் எழுதிக் கொண்டிருக்கின்றார்கள். ஆனாலும் இதற்கு முன்னர் பெண்ணின் வாழ்வியல் ஆணின் நோக்கிலேயே ஆராயப்பட்டது. ஆனாலும் இந்த ஆணாதிக்க மொழியைப் புரிந்து கொண்டு பெண் நோக்கு நிலையில் எழுதும் பெண் எழுத்தாளர்களான ஆழியாள், தயாநிதி, உமா, தேவா, லக்ஷ்மி, நிருபா, மைத்ரேயி, ராஜேஸ்வரி பாலசுப்ரமணியம், அருந்ததி, பாமதி, றஞ்சினி(பிராங்பேர்ட்), விஜி, மல்லிகா, சுமதி ரூபன், பிரதீபா, தான்யா, நந்தினி,ஜெபா போன்றவர்களுடன் சந்திரவதனா, நளாயினி(சுவிஸ்) ஆகியோரும் ஓவியப்படைப்புகளில் அருந்ததி, மோனிகா போன்றவர்களும் நாடகத்துறையில் ஆனந்தராணி, சுமதிரூபன், நந்தினி போன்றவர்களும் குறும்படத்துறையில் சுமதிரூபன் போன்றவர்களும் பெண்ணிய சிந்தனைகளில் வேரூன்றி நிற்கின்றனர். (யாராவது பெண் படைப்பாளிகளின் பெயர்கள் விடுபட்டிருந்தால் மன்னிக்கவும்.)

நாடுகளுக்கு நாடு கலாச்சாரத்தின் வேறுபாட்டிற் கேற்ப பெண்களை அடக்கும் செயற்பாட்டில் வேறுபாடுகள் காணப்படுகின்றனவே தவிர பெண்ணின் இரண்டாந்தர நிலை மாறியதாக இல்லை. இந்நிலையிலிருந்து விடுபட இலக்கியத்தினூடாக விழிப்புணர்வை ஏற்படுத்த தமது உணர்வுகளில் அனுபவங்களில் பட்டுத் தெறித்த கருத்துக்களை பெண் எழுத்தாளர்கள் இலக்கியத்தில் தமது எழுத்துக்களால் வெளிக்கொணர்ந்துள்ளனர். பெண்களின் பிரச்சினைகளை கருப்பொருளாகக் கொண்டு இலக்கியத்தினூடாக சமூக விழுமியங்களையும் மரபுகளையும் அடிப்படையாகக் கொண்ட சமூகத்தை மாற்றியமைக்க முற்பட்டனர். உள்ளுணர்வுகளில் பலமாக அழுத்திக் கொண்டிருந்தவற்றை உரத்த குரலாக எழுத்துக்களில் கொண்டு வந்தனர்.

ஆனாலும் புலம்பெயர் தமிழ்ப் பெண் எழுத்தாளர்களிடையே காணப்படும் எழுத்து, நடைமுறை என்பவற்றிற்கு இடையிலான இடைவெளிகள் பற்றியும் நாம் பேசாது மௌனம் காத்து வருகின்றோம். நாம் இன்னும் எழுத்தளவில்தான் பெண்ணியம் பற்றி பேசிக் கொண்டும் எழுதிக் கொண்டும் இருக்கிறோமா, நடைமுறைக்கும் வாழ்வியலுக்கும் ஏற்ற வகையில் நாம் பெண் எழுத்துக்களை வெளிக் கொணருகிறோமா என்ற கேள்வி என்னுள் எழுகிறது. பொதுவாக சொல்லும் போது புகலிடச்சூழலில் பெண்ணியம் புதிய பரிமாணங்களுடன் வளரவில்லை என்ற உண்மையையும் நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஆனாலும், பிரான்சில் நடைபெற்ற பெண்கள் சந்திப்பில் கலந்து கொண்ட தலித் பெண்ணியவாதியும் எழுத்தாளருமான சிவகாமி இப்படி கூறுகிறார்: "பெண்கள் திறந்த மனதுடன் தங்கள் கருத்துக்களையும் அனுபவங்களையும் பரிமாறிக் கொண்டது தமிழ்ச் சூழலுக்கு வித்தியாசமானது. தமிழகத்துப் பெண்களைக் காட்டிலும் புலம்பெயர்ந்த தமிழ்ப்பெண்கள் பெண்விடுதலை பற்றிய அக்கறையும் புரிந்துணர்வும் கொண்டவரகள் என்பதைக் குறித்துக் கொண்டேன்"என்கிறார். சூரிச்சில் 'மனிதம்' சஞ்சிகையிலிருந்த பெண்களை அ. மார்க்ஸ் 1995இல் சந்தித்த போதும் "இந்த வெளிப்படைத் தன்மை தனக்கு புதிய அனுபவம்" என்றார். இவையெல்லாம் புலம்பெயர்

பெண்களுக்கான சான்றிதழ் இல்லை என்றபோதும் இந்தத் தன்மை பெண்ணிய விவாதங்களை ஆரோக்கிய மாக்குவதற்கு சாதகமான அம்சங்கள்தான் என்பதை பார்க்க உதவலாம்.

புலம்பெயர் பெண் எழுத்தாளர்களின் இப்பெண்ணிய ஆக்கங்களில், குடும்பம் என்ற வடிவத்தில் பாலியல் திணிப்பு, முடிவெடுக்கும் சுதந்திர மறுப்பு, பாலியல் பலாத்காரம், தலித்திய பெண்ணியம், பெண்நிலை ஓவியங்கள், இனவாதம், மலையக தொழிலாளிப் பெண்ணின் உரிமைகள், சீதனம் போன்றவை கருக் களாக அமைந்துள்ளன. ஆனாலும், பெண்களின் விடுதலை பற்றி கதைக்கும்போது அது ஆண்களுக்கும் ஆணாதிக்க கருத்துக்களைக் கட்டிக்காத்து வைத்தி ருப்பவர்களுக்கும் எரிச்சலை உண்டாக்குகிறது. பெண்விடுதலை கதைக்கும் பெண்கள் தலைமயிரை கட்டையாக வெட்டக் கூடாது; தாலி, பொட்டு, பூ போன்ற அடையாளங்களை விலக்கக் கூடாது. இதுபோன்ற கலாச்சார வரையறைகளை மீறுபவர்களின் பெண்விடுதலைக் கருத்துக்கள் வெள்ளையர் பாணி என்று அலட்சியம் செய்யப்படுகின்றன. இவர்கள் தமிழ்க் கலாச்சாரத்தை மீறுபவர்கள் என்ற தாக்குதலை எதிர்கொள்கின்றனர். ஆணாதிக்கத்தை, அதன் உளவியலை, அறிவுபூர்வமாகத் தன்னும் கண்டடைய முடியாத அல்லது ஏற்க மறுக்கும் இயலாமையைக் கொண்டு பெண்ணிய எழுத்துக்கள் விமர்சனத்துக்குள் ளாக்கப்படுவதையும் நாம் காணலாம். 'பால்வினைத் தொழிலாளர்கள்' பற்றிய சிறப்பு 'பெண்கள் சந்திப்பு மலர்-2002' இனை சகிக்க முடியாமல் வசைபாடலுக்கு உள்ளாக்கப்பட்டது. பாலியல்ரீதியில் பெண்களை ஒடுக்கும் ஆணதிகாரத்தின் குறியீடாக ஆண்குறியைச் சித்தரித்த ஓவியங்கள் ஒரு கலாச்சார அத்துமீறலாக, மேற்குலகப் பாதிப்பாக விமர்சிக்கப்பட்டது.

இலங்கையின் போர்ச்சூழல், இயக்க அராஜகங்கள், உடனடி உயிர்ப் பாதுகாப்பு என்பவற்றால் மட்டுமன்றி, இதையொட்டி பொருளாதார காரணிகளால் புலம் பெயர்ந்தவர்களிடமும்கூட முற்றுமுழுதாக வேறுபட்ட கலாச்சாரச் சூழல், இந்த நாடுகளின் இயற்கைக்கு முகம்கொடுப்பதில் இருந்த சிரமங்கள், கூட்டுவாழ்க்கை யினைப் பிரிந்து உதிரியானமை, மொழிப் பிரச்சினை, நிறவெறி போன்ற பல காரணிகள் இவர்களின் வாழ்வி யலைத் தாக்கியதால் அவை இலக்கியங்களிலும், பெண்எழுத்துக்களிலும் வெளிப்பட்டன. விடுதலை இயக்கங்களிலிருந்து வந்த ஆண்களால் வெளிப் படுத்தப்பட்ட அரசியல் எதிர்ப்பிலக்கியப் போக்கு

கலாச்சார வரையறைகளை மீறுபவர்களின் பெண்விடுதலைக் கருத்துக்கள் வெள்ளையர்பாணி என்று அலட்சியம் செய்யப்படுகின்றன. இவர்கள் தமிழ்க்கலாச்சாரத்தை மீறுபவர்கள் என்ற தாக்குதலை எதிர்கொள்கின்றனர்.

நாடுகளுக்கு நாடு கலாச்சாரத்தின் வேறுபாட்டிற்கேற்ப பெண்களை அடக்கும் செயற்பாட்டில் வேறுபாடுகள் காணப்படுகின்றனவே தவிர பெண்ணின் இரண்டாந்தர நிலை மாறியதாக இல்லை.

ஆரம்பத்தில் பெண்களின் இலக்கியத்தில் வெளிப்பட வில்லை என்பதை இலங்கையின் போராட்ட அரசியல் நிலைமைக்குள் வைத்தே பார்க்க வேண்டும். விடுதலை இயக்கங்களைப் பொறுத்தளவில் பெண்ணியம் பற்றிய செயல்பாடு, அறிவூட்டல், பெண்களின் பங்களிப்பு அளவு என்பன குறைவாக அல்லது சொற்பமாக காணப்பட் டதையே இது காட்டுகிறது. இந்த நிலைமைகளிலிருந்து எழுந்த இலக்கியங்களை புலம்பல் இலக்கியமென சொல்வது இந்த நிலைமையை உணர்வுபூர்வமாக அல்லது அறிவுபூர்வமாக புரிந்துகொள்ள முடியாமை என்றே சொல்லலாம்.

ஆனாலும் தமிழர்கள் இந்த நாடுகளின் மொழியில் நன்கு பரிச்சயமடையாமல் காலங்கழிப்பதும், பரிச்சயமானவர்கள் இந் நாட்டு இலக்கியங்களை தமிழுக்கு கொணருவதில் அக்கறையற்றிருப்பதும், ஈழப்போராட்ட கருத்தியலும் புலம்பெயர் இலக்கி யங்களின் அழுது வடியும் நிலையை இதுவரையும் கடக்க முடியாமல்பண்ணியிருக்கிறது என்பதையும்நாம் மனங்கொள்ள வேண்டும். பெண்ணியம் பற்றிய அல்லது பெண்ணிய எழுத்துக்களில் குறிப்பிடத்தக்க சில மொழிபெயர்ப்புகளை தயாநிதி, லக்ஷ்மி போன்றவர்கள் கொண்டு வந்தது சிறப்பான அம்சம்தான். ஆனாலும் பெண்ணிய சிந்தனையில் புதிய பரிணாமங்களை ஏற்படுத்துவதற்கு இவை போதியதாக இருக்கவில்லை என்பதையும்நாம்ஏற்றுக்கொண்டுதான்ஆகவேண்டும்.

பெண் எழுத்தாளர்கள் தற்போது எமது நடை முறையில் உள்ள ஆணாதிக்க மொழியை விமர்சனத் திற்கு உள்ளாக்கி பன்முகப்பட்ட சிந்தனையினூடு புதிய மொழியை உருவாக்க முயலவேண்டும். இது இலகுவான காரியமில்லை. உடல் சார்ந்த சொற் பிரயோகங்கள் சில பெண் எழுத்துக்களில் வெளி வருகின்றன. இதுபற்றிய சர்ச்சைகள் கலாச்சாரம் காப்பவர்கள் பக்கங்களிலிருந்து மட்டுமல்ல, பெண்ணியம் பேசுபவர்களாலும் எழுப்பப்படுகின்றன என்றளவில் இவை நம் கவனத்துக்குரியதாகிறது. பெண்ணியம் பற்றிய வரையறை ஒற்றைப் பரிமாணத்துள் அடங்காதது போலவே, இந்தப் பெண்மொழி உரு வாக்கம் பற்றிய பார்வையும் ஒற்றைப் பரிமாணத்துள் அடங்கிவிட மறுக்கிறது. தனிநபர்கள் மீதான பிரச்சினைகளை கடந்து, புத்திஜீவிகளாக தம்மை சேர்ப்பதில் முன்னணிப் படையாக முந்தியடிப்பதைத் தவிர்த்து, படிப்படியாக இந்த விடயத்திலும் முன்னோக்கிய நகர்வை நிகழ்த்த புலம்பெயர் பெண் எழுத்துக்களும் இணைந்துகொள்ள வேண்டும்.

Paradise Now

அல்லது

ஒரு தற்கொலைப்போராளியின் உருவாக்கம்

வாசுதேவன்

இயக்குநர்: ஹனி அபு அசாத்
நேரம்: ஒரு மணி 27 நிமிடங்கள்
மொழி: அரபு (பலஸ்தீனம்)

ஹனி அபு அசாத்தின் இரண்டாவது முழுநீளச் சித்திரம். அரை நூற்றாண்டுக்கு மேலாகத் தொடர்ந்து கொண்டிருக்கும் பலஸ்தீன விடுதலைப் போராட்டப் பின்னணியைப் பின் புலமாகக் கொண்ட கதையாக்கம்.

ஒரு போராட்டத்தின் அரசியல், அதன் உளவியல் எனபவற்றால் துல்லியமாகப் பின்னப்பட்டுள்ள இந்தத் திரைப்படம் அனைத்திற்கும் முதலில் ஒரு போராட்டத்தின் தொடர்ச்சியாகவும் அதன் பகுதியாகவும் அமைந்துள்ளது. பலஸ்தீனத்தின் மீதான இஸ்ரேலிய ஆக்கிரமிப்பே அனைத்திற்கும் ஆரம்ப காரணமானது, இந்த ஆரம்பக் காரணத்திற்குத் தீர்வு எட்டப்படாத வரையிலும் அதன் பக்க விளைவுகளைப் பற்றிய அரசியல், சமூக, அல்லது ஒழுக்கவியல் சார்ந்த தீர்ப்புகள் எல்லாம் வெறும் பிதற்றல்களே என்பதை மிகவும் தெளிவாகவும் நாசூக்காகவும் இயக்குனர் இத்திரைப்படத்தினூடாக முன்வைத்துள்ளார்.

காலெத்தும் சயிட்டும் பால்ய நண்பர்கள். இருவரும் ஒரு கராஜில் வேலை செய்பவர்கள். அதே நேரத்தில் இருவரும் இரகசியமாக இயங்கிக் கொண்டிருக்கும் ஒரு பலஸ்தீன போராட்ட அமைப்பின் உறுப்பினர்கள். இங்கு அவர்கள் சார்ந்த அமைப்பின் பெயர் குறிப்பிடப் படவில்லையெனினும், அவர்களது அமைப்பு இஸ்லாமிய மதக் கோட்பாட்டின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டிருப்பதற்கான ஆதாரங்கள் தென்படுகின்றன. இவ்வமைப்பின் பொறுப்பாளர் ஒருவர் இவர்களை அணுகி அடுத்து வரும் இருபத்தி நான்கு மணிநேரத்தில் அவர்கள் முன்னர் விருப்பம் தெரிவித்த தற்கமைய தெல்-அவிவ் நகரத்திற்குச் சென்று தற்கொலைக் குண்டுதாரிகளாக வெடிப்பதற்குத் தெரிவாகியிருக்கிறார்கள் என்பதை அறிவிக்கிறார்.

இந்நேரத்தில் அந்நிய நாட்டில் வளர்க்கப்பட்ட, விடுதலைப் போராளி ஒருவரின் மகளான சுஹா பலஸ்தீனத்திற்குத் திரும்பி வந்த பின்னர் அவளுக்கும் சயிட்டுக்கும் இடையில் காதலுறவு உருவாகும் வாய்ப்பு உள்ளபோதும் அதற்கான சந்தர்ப்பங்கள் முழுதாகக் கூடி வரவில்லை. சுஹா மேற்கத்தைய நாகரீகத்தையும் சிந்தனை முறையையும் கொண்டவள். அவள் தற்கொலைப்போராட்டம் கைவிடப்படவேண்டியது எனும் கருத்துடையவள். அவள் தற்கொலை தவிர்ந்த வேறு வழிகளில் மட்டுமே போராட்டம் முன்னெடுக்கப்படவேண்டும் எனும் நிலைப்பாட்டை வலியுறுத்துகிறாள்.

தற்கொலைப் போராட்டம் சர்வதேச சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்படாதது. மனிதாபிமானத்திற்கு முரணானது. ஆனால் மனிதக் குண்டு என்னும் ஆயுதம் வேறெந்த ஆயுதமுமற்ற பலஸ்தீனர்களின் இறுதி ஆயுதம் என்பதையும் மறுக்க முடியாது. இம் முரண்பாடான நிலைகளில் ஏதேனுமொன்றைக் கூட உயர்த்தி நிறுத்தாது ஒன்றுக்கொன்று முரணான இரண்டு நிலைப்பாடுகளை கத்தி விளிம்பில் நடப்பது போன்ற சமநிலையுடன் வெளிக்கொணர்வதற்கான ஒரு காரணியாக இக்கதையில் சுஹாவின் பாத்திரம் அமைகிறது. சுஹாவினூடாக தற்கொலைத் தாக்குதலின் மீதான கொடூரத்தை முன்வைக்கும் இயக்குநர், தற்கொலைப்போராளிகளினூடாக அது எவ்வாறான சூழ்நிலைகளில் தவிர்க்க முடியாத ஆயுதமாகிறது என்பதையும் முன்வைக்கிறார். தற்கொலைப் போராட்டத்தின் கோட்பாடு, அதன் நடைமுறைப்படுத்தல், அதில் பங்கு கொள்பவர்களின் உளவியற்பாங்கு, அதன் மூல நியாயங்கள் போன்ற வற்றை குறை கூற முடியாத ஒரு நடுநிலையுடனும், நேரடிப் பங்கெடுப்பில்லாத பாணியிலும் மிகவும் இயல்பான கதையசைவினூடாக இயக்கி ஹனி அபு அசாத் வெற்றி கண்டுள்ளார் என்பது கண்கூடு.

தற்கொலைத் தாக்குதலுக்குப் புறப்படுமுன் தற்கொலைப்போராளியின் இறுதிப் பிரகடனம் வீடியோவில் பதிவாக்கப்படுவது ஒரு முக்கிய காட்சியாக அமைகிறது. இறுக்கமான சூழ்நிலையில் படமாக்கப்படும் இக்காட்சியில் படம்பிடிப்பவர்களும் பொறுப்பாளர்களும் நடக்கவிருக்கும் துன்பியலுக்கும் தமக்கும் இடையில் எவ்வித உணர்வு பூர்வமான உறவுகளும் இல்லாதவர்கள் போலும், தற்கொலைப் போராட்டத்தில் ஈடுபடப்போகின்றவர்கள் வெறும் ஆயுதங்களாக அவர்களுக்குத் தோன்றுவது போலவும்கூடத் தென்படுகிறது.

வாழ்வின் மீது சாமான்யர்கள் கொண்டிருக்கக் கூடிய அர்த்தத்திற்கும் 'விரும்பி' ஏற்கப்பட்ட மரணத்திற்குமான இடைவெளியால் உருவகம் கொள்ளும் கொடூரம் பலஸ்தீன மக்களின் இருத்தலைச் சூழ்ந்து இறுக்கமாகப் படிந்துள்ள வெறுமையை பார்வையாளர்களின் அகத்தில் நுணுக்கமாகத் திணித்து விடுகிறது. தற்கொலைப் போராளிகள் பிரத்தியேகமான துணிவுள்ளம் கொண்ட உயர் மானிடர்கள் என்றல்லாது அவர்கள் சாதாரண மனிதர்களாகவும், ஆனால், சூழ்நிலையால் அசாதாரணமான மனோநிலையைப் பெற்று அவர்கள் தம் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக ஆக்குவதற்கு

அவற்றை ஆயுதங்களாக மாற்றும் நிலைக்கு இட்டுச் செல்லப்படுகிறார்கள் எனும் யதார்த்தத்தை இத்திரைப்படம் பிரயத்தனமின்றி முன்வைக்கிறது.

"நீங்கள் தேசிய வீரர்கள். உங்களின் பலம் எதிரியை நடுங்கவைக்கும் பலம். மரணத்திற்கு அஞ்சாதவர்கள் மரணிப்பதில்லை, நீங்கள் மரணத்திற்கு அஞ்சுபவர்களுக் கெதிராக வெற்றியை மட்டுமே காண முடியும். நீங்கள் மட்டுமே அவர்களின் தலைவிதியை நிர்ணயிப்பவர்கள். அவர்களை உங்களால் ஒன்றுமே செய்யமுடியாது. நீங்கள் ஏற்கெனவே மரணித்தவர்கள்" என்றவாறு அமைப்பாளர் தற்கொலைப் போராளிகளுக்குச் செய்யும் உபதேசம் அவர்கள் முகங்களில் எவ்வித சலனத்தையும் ஏற்படுத்தாதிருப்பதானது அவர்கள் ஏற்கெனவே மரணித்தவர்கள் எனும் யதார்த்தத்தைப் பிரதிபலிப்பது போலுள்ளது.

வீடியோப் பதிவை அடுத்து, அமைப்பாளர்களும் தற்கொலைப்போராளிகளும் அமர்ந்திருந்து உணவருந்து கிறார்கள். இவ்விடத்தில் மிகவும் வலிமை பொருந்திய ஒரு குறியீடு முன்வைக்கப்படுகிறது. இக்காட்சி யேசு கைது செய்யப்படுவதற்கு முன்னான பந்திப் போசனத்தைத் தவிர்க்க முடியாதபடி மனத்தில் பரவவிடுகிறது.

இதன்போது ஹாலெத்திற்குத் தன் குடும்பம் பற்றிய உணர்வு தோன்ற அவன் அமைப்பாளரிடம் தனது குடும்பத் திற்கு உதவிசெய்யுமாறு கேட்கிறான். அமைப்பாளர் அவனது குடும்பம் தேசியக் குடும்பம் என்றும் தாம் முழுமையாக அவர்களுக்கு உதவுவோம் எனவும் பதிலளிக்கிறார்.

அதன் பின்னர் அமைப்பின் காணற்கரிய பெருந் தலைவருடனான சந்திப்பு நிகழ்கிறது. அவர் தற்கொலைப் போராளிகள் எத்தனை தூரம் தமது தேசியப்போராட்டத்தின் பெருமைக்குரிய சின்னமாக இருக்கிறார்களெனவும் உலகம் தம்மைப்பற்றி அறிந்து கொள்வதற்கான வழிவகையாக தற்கொலைத் தாக்குதல்கள் நடாத்தப்பட வேண்டுமெனவும் கூறி விடைபெறுகிறார்.

அமைப்பாளர் போராளிகளை இஸ்ரேலிய எல்லைக்கு அழைத்துச் செல்லும்போது ஹாலெத்திடமிருந்து கேள்விகள் எழுகின்றன.

"நாம் வெடித்துச் சிதறுவோம் அதன் பின்னர் என்ன நடக்கும்?"

"தேவர்கள் வந்து உங்களைச் சொர்க்கத் திற்கு அழைத்துச் செல்வார்கள். இங்கு உங்களது புகைப்படங்கள் சுவர்களெங்கும் ஒட்டப்பட்டு நீங்கள் தேசிய வீரர்களாகப் பிரகடனப்படுத்தப்படுவீர்கள்"

இறுதியாக, தற்கொலைப்போராளிகள் இருவரும் கம்பி வேலிகளைத்தாண்டி இஸ்ரேலிய

இயக்குநர் : ஹனி அபு – அஸத்

மொழி: அரபு (பலஸ்தீனம்)

நேரம்: 1 மணி 27 நிமிடங்கள்

எல்லைக்குள் நுழைய முற்படும்போது இராணுவ வாகனம் ஒன்று அவர்களின் திட்டத்தை முறியடிக்கிறது. அவர்கள் இருவரும் மீண்டும் பலஸ்தீன எல்லைக்குள் ஒட்டம் பிடிக்க வேண்டிய நிலை. ஹாலெத் தப்பியோடி தம்மவர்களிடம் மீண்டு விட்டபோதும், சயிட் உடலைச் சுற்றிக் கட்டப்பட்டிருக்கும் குண்டுகளுடன் அலையவேண்டியேற்படுகிறது.

ஒரு கட்டத்தில் பஸ் நிலையமொன்றிற்கு சயிட் தற்கொலைப்போராளியாக அணுகுகிறான். அங்கு இஸ்ரேலிய யூதக் குடிமக்கள் நிற்கின்றனர். அரபு எனத் தன்னை அடையாளம் காணாதபடி எடுப்பாக உடையணிந்து திருமணத்திற்குச் செல்பவன்போல் சயிட் நிற்கும்போது அவன் மனத்தில் போராட்டம் நிகழ்கிறது. அவன் விரும்பியிருந்தால் அந்த பஸ்ஸில் ஏறிப் பயணித்து தன்னை வெடிக்க வைத்திருக்கலாம். ஆனால் அவன் அப்படிச் செய்யவில்லை. அவனின்றி பஸ் பயணிக்கிறது.

இறுதியில் ஹாலெத்தின் பகீரதப் பிரயத்தனத்தினால் சயிட் கண்டுபிடிக்கப்பட்டு போராளிகள் மறைந்திருக்கும் இடத்திற்குக் கூட்டி வரப்படுகிறான். அமைப்புத் தலைவரால் விசாரணைக்குட்படுத்தப்படும் சயிட்டின் உரையாடல் அவன் தனது இலக்கில் எத்தனை உறுதியாக இருக்கிறான் என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

சயிட்டின் தந்தை இஸ்ரேலியர்களுடன் ஒத்துழைத்ததால் பலஸ்தீனர்களால் மரணதண்டனை வழங்கப்பட்டவர்.

"அவர்கள் எம்மை இழிநிலை மக்களாகவே கருதுகிறார்கள். அவர்களிடம் வெல்லப்படமுடியாத இராணுபலம் உண்டு. அவர்கள் அரசியல் ரீதியாகவும் பலமடைந்து விட்டார்கள். தம்மைப் பலியானவர்களாக உலகிற்குக் காட்டிக்கொண்டே, எம்மைத் தங்களை அழிக்க எண்ணும் பயங்கரவாதிகளாகவும் காட்டுகிறார்கள். பலவீனமானவர்கள் எங்கும் இருக்கிறார்கள். எம்மில் பலவீனமானவர்களை அவர்கள் இலகுவாகப் பயன்படுத்தி எங்களைத் தொடர்ந்து சீரழித்துக் கொண்டிருக்கிறார்கள்" என சயிட் அமைப்பின் தலைவருடன் உரையாடும்போது தன் தந்தை செய்த தவறுக்குப் பரிகாரமாக தான் தன் உடலை வழங்கி தற்கொலைப்போராட்டத்தில் ஈடுபடுகிறானோ எனவும் எண்ணத் தோன்றுகிறது.

"நான் ஒரு அகதிமுகாமில் பிறந்தேன். அகதி முகாமிலேயே வளர்ந்தேன். எனது வாழ்க்கை ஒரு சிறை. சர்வதேச சமூகம் போக்கிரித்தனமானது. அதற்கு எம் போராட்டத்தின் நியாயம் தெரியும். எமது மக்கள் படும் துன்பம் தெரியும். ஆனாலும் அது கோழைத்தனமாக கொடூரமான அநீதியை அனுமதித்துக் கொண்டிருக்கிறது. எமது போராட்டம் இடைநிறுத்தப்பட முடியாதது. எம்மிடம் இருக்கும் ஆயுதங்கள் எமது உடல்கள். எம்மை அவர்கள் இழிநிலை மனிதர்கள் எனக் கருதுகிறார்கள். ஆனால், மரணத்தில் நாம் அவர்களுக்குச் சமமானவர்கள் என்பதை உறுதிப்படுத்த முடியும்" எனும் சயித்தின் உரையாடல் அவனது அரசியல் பிரக்ஞையை, தனது போராட்டத்தின் அரசியல் பரிமாணத்தை அவன் எத்தனை தூரம் புரிந்து கொண்டிருக்கிறான் என்பதைப் புலப்படுத்துகிறது. இஸ்லாமிய மதக் கோட்பாடுகளுக்குள் சிக்குண்டு, 'மூளைச் சலவை' செய்யப்பட்டு தற்கொலைப் போராளிகள் உருவாக்கப்படுகிறார்கள் எனும் கருத்து நிலையை ஆட்டங்காணச் செய்கிறது இவ்வுரையாடல்.

மீண்டும் திட்டமிட்டபடி இருவரும் இஸ்ரேலிய எல்லைக்குள் நுழைந்து தெல்-அவிவ் இற்குச் செல்கிறார்கள். அவர்களைத் தடுப்பதற்குச் சுஹா மேற்கொண்ட பிரயத்தனங்கள் எவையும் பலனற்றவையாகி விடுகின்றன. ஆனால் ஆரம்பத்தில் மிகவும் மன உறுதியும் கொள்கைப் பிடிப்பும் உள்ளவனாகத் தன்னைக் காட்டிக் கொள்ளும் ஹாலெத் துணிவிழந்து பின்வாங்குகிறான். சயிட் தனது திட்டத்தை நிறைவேற்றுகிறான்.

எவ்வித வன்முறைச் சம்பவங்களும் இத்திரைப்படத்தில் இல்லை. வன்முறைகளின் சுவடுகள் கதையோட்டத்தின் பின்னணியெங்கும் இருந்தபோதும் படத்தின் வெற்றிக்கு அதன் இலக்கிற்கு வன்முறையைப் படமாக்கும் அவசியமில்லாமல் கதையோட்டம் அமைந்திருக்கிறது.

உண்மையில் பலஸ்தீன விடுதலைப் போராட்டத்தை நியாயப்படுத்தும் முயற்சி அர்த்தமற்றது. ஆக்கிரமிக்கப்பட்ட தங்கள் நிலத்தை மீளப்பெறவும், தமது அடிப்படை உரிமைகளை வென்றெடுக்கவும், சியோனிச அழிப்பிலிருந்து தப்பி வாழவுமாக அவர்கள் அரைநூற்றாண்டுகளுக்கு மேலாக முன்னெடுக்கும் போராட்டத்திற்கான நியாயம் உலகம் முழுவதினாலும் ஏற்கப்பட்ட ஒன்று.

ஆனால், போராட்ட வழிமுறைகள் சம்பந்தமாக சில நியாயப்படுத்தல்களை அவர்கள் முன்னெடுக்க வேண்டியுள்ளது. மேலெழுந்தவாரியாக தற்கொலைப் போராட்டத்தைப் பயங்கரவாதம் என்று ஒற்றைச் சொல்லில் வர்ணித்துவிடும் 'சர்வதேச சமூகம்' அதன் சிக்கலான உருவாக்க நியாயங்களின் மீது பாராமுகமாய் இருந்து வருவதை இத்திரைப்படம் நகைப்பிற்கிடமானதாய் ஆக்கிவிடுகிறது.

'ஜனநாயகம்', 'மனித உரிமைகள்' என்றெல்லாம் தனக்கு வசதிப்பட்ட நேரத்தில் பிதற்றும் 'சர்வதேசச் சமூகமும்' அதன் வழியொற்றிகளும் தமது பொருளாதார, அரசியல் நலன்களுக்குக் குந்தகம் விளையும் நிலையில் தாம் நம்பும் அனைத்துப் பெறுமானங்களையும் தயவு தாட்சண்யமின்றி குப்பையில் விட்டெறிவதுபற்றி வரலாறு இடைவிடாது சாட்சியம் கூறிக் கொண்டேயிருக்கிறது.

ஆனால் ஒடுக்கப்பட்ட மக்கள் தமது உயிர் வாழ்வதற்கான போராட்டத்தில் தவிர்க்க முடியாதபடி மேற்கொள்ளும் போராட்ட முறைகளைப் பற்றிய 'ஒழுக்கவியற்' தீர்ப்புகளை வெட்கமின்றி வழங்கிக் கொண்டேயிருக்கிறது.

நவதாராளவாதப் பொருளாதார வியாபகத்தையும் உலகமயமாக்கலையும் மட்டும் இலக்காக வரித்துக் கொண்ட மேற்குலக நியாயப்பாடுகளும் அவர்களின் சொல்லாடல்களும் அடக்குமுறைக்கெதிராகப் போராடும் மக்களுக்கும் அதற்கு எதிராகப் போராடுபவர்களுக்கும் எவ்விதத்திலும் பயனளிக்கக்

முடியாதவை என்பது உள்ளங்கை நெல்லிக் கனியாகும்.

ஆகமொத்தத்தில், பலஸ்தீன மக்களின் போராட்டத்தின் நியாயப்பாடுகளை வெளிப்படையாக ஏற்றுக்கொண்ட போதிலும் அதற்கான தீர்வொன்றைக் கண்டடைய முடியாத 'சர்வதேச சமூகம்' தன் நயவஞ்சகத்தை மறைப்பதற்கு அவர்களின் போராட்ட முறைகளைப் பற்றித் தீர்ப்பு வழங்கிக் கொச்சைப் படுத்துவது அதன் அயோக்கியத்தனத்தையே வெளிப்படுத்துகிறது.

போராட்டத்தின் மூலகாரணத்தை இல்லாமற் செய்துவிட்டால் போராட்டம் முடிவடைந்து விடும். இஸ்ரேலிய ஆக்கிரமிப்பிலிருந்து பலஸ்தீன நிலம் விடுபாடடைந்தால் பலஸ்தீனர்களின் போராட்ட முறைபற்றிய நியாயத் தீர்ப்பிற்கான அவசியமே இருக்காது.

ஆனால், 'சர்வதேச சமூகமும்' அதன் சொல்லாடல் வலைக்குள் அகப்பட்டவர்களும் அதன் வழியொற்றி களும் விடுதலைப் போராட்டக்காரர்களின் சொல்லா டல்களையும் அவர்களின் நியாயங்களையும் கொச்சைப்படுத்துவதுடன் தம்மை நாகரீகமான வர்களாகவும் மனித உரிமைப் போராட்டக் காரர்களாகவும் காட்டிக்கொள்வதில் மட்டுமே அக்கறையுடையவர்களாக இருக்கிறார்கள்.

பாரிஸ் கம்யூன் புரட்சியின் போது, புரட்சிக்குழு எதிரிக்கெதிராக பெண்களினாலும், குழந்தைகளி னாலும் கூட உபயோகிக்கக்கூடிய அழிவு ஆயுதங் களைத் தயார் செய்யும் தீர்மானத்தை எடுத்தது. எம் நகரம் இடிந்து வீழ்ந்தால் இடிபாடுகளுள் நெரிந்து இறப்போமே தவிர எதிரிகளிடம் சரணடையமாட்டோம் என செவ்வறிக்கையில் முழக்கமிட்டது. இதுபற்றி இன்றைய மேற்குலகப் புத்திஜீவிகளிடமும் அவர்களின் வழியொற்றிகளிடமும் ஒழுக்கவியற் தீர்ப்புக் கேட்போ மேயானால் நாம் ஆச்சரியமடைய நேரிடும்.

காரண-காரியத் தொடர்பின்றி, சூழ்நிலையின் மீதான பாரதூரமான பார்வையின்றி பலஸ்தீனர்களின் போராட்ட வழிமுறைகளைப் பற்றி சர்வதேச சமூகம் முன்வைக்கும் ஒழுக்கவியற் தீர்ப்புகள் எத்தனை தூரம் அபத்தமானவை என்பதை 'Paradise Now' எனும் இத்திரைப்படம் தெளிவாகக் கூறி நிற்கிறது.

25/09/2005

"ஈடேற வழி பாஷாபிமானம்
தேசாபிமானம் மதாபிமானம்
குலாபிமானம் ஆகியவற்றை
விட்டொழிப்பதே"

எனும் பெரியார் ஈ. வெ. ரா.வின்
மேற்கோளுடன் தனது முதலாவது ஆசிரியர்
தலையங்கத்தைக் கொண்டு
வெளிவந்திருக்கின்றது.

தொடர்புகளுக்கு:

அநிச்ச
45 ஏ இஸ்மாயில் மைதானம்
லாயிட்ஸ் சாலை
சென்னை - 05
தமிழ்நாடு
இந்தியா

தொலைபேசி: 009444272500

ஆசிரியர்:
நீலகண்டன்

ஆசிரியர் குழு:
அ. மார்க்ஸ்
ம. மதிவண்ணன்
கண்மணி
ஓடை பொ. துரையரசன்
தேவதாஸ்
சுகன்

பிரான்ஸ் முகவரி:
ANICHA
3ème DT
1, Rue Honoré de Balzac
95140 Garges Les Gonesse
France.

உலகமயமாக்கல், 'புதிய ஏகாதிபத்தியம்': சில குறிப்புகள்

சமுத்திரன்

ஏகாதிபத்தியமெனும் சொல்லை இப்போது கேட்பது அரிதாகிவிட்டது. மார்க்சிய ஆய்வாளர்கள் கூட இந்தப் பதத்தை பயன்படுத்துவது குறைவு. ஏகாதிபத்தியம் ஒரு இறந்தகால நிலைமை ஆகி விட்டது போலும். நிழற்போர் (cold war) 1989இல் முடிவடைந்த பின்னர் ஏகாதிபத்தியம் பற்றி ஆய்வு ரீதியான விவாதங்கள் அரிதினும் அரிதாகிவிட்டன. அப்படியானால் வரலாறு ஏகாதிபத்தியத்தின் காலகட்டத்தைத் தாண்டி விட்டதா என்ற கேள்வி எழுகிறது.

மார்க்சிய அரசியல் பொருளாதார மரபில் நவீன ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் அபிவிருத்தி யுடன் அதன் சர்வதேசரீதியான பரவலுடன் தொடர்பு டையதாகும். குறிப்பாக மூலதனத்தின் தொடர்ச்சி யான குவியலுடனும் அதன் விரிவாக்கப்பட்ட மீள் உற்பத்தியின் புவியியலுடனும் தொடர்பு டையதாகும். பலம் வாய்ந்த தேசிய அரசின் அதிகா ரத்தின் அதன் ஆக்கிரமிப்பின் உதவியுடன் அந்த தேசியத்தின் மூலதன உடைமையாளர் பலம் குன்றிய நாடுகள் மீது ஆதிக்கம் செலுத்தி அங்குள்ள வளங்களையும் உழைப்பாளர்களையும் மூல தனத்தின் விரிவாக்கப்பட்ட மீள் உற்பத்திக்கு பயன்படுத்துவது நவீன ஏகாதிபத்தியத்தின் பிரதான தன்மைகளில் ஒன்றெனக் கருதப்பட்டது. இதில் குறிப்பிட்ட தேசங்களின் முதலாளித்துவ அரசுகள் பிரதான பாத்திரங்களை வகிக்கின்றன. மூல தனத்தின் விரிவாக்கப்பட்ட மீள்உற்பத்தியின் இயக்கப்பாட்டினை வெறுமனே பொருளியல் சூத்திரங்களினால் மட்டும் விளக்க முடியாது. அதன் அரசியல், சமூக, கலாச்சார பரிமாணங்களையும் உள்ளடக்கிய வரலாற்று ரீதியான அணுகுமுறை மூலமே நவீன ஏகாதிபத்தியத்தை மார்க்சிய மரபு சார்ந்தோர் விளக்க முற்பட்டனர். ஆயினும் இந்த மரபில் மாறுபட்ட விளக்கங்கள் கோட்பாடுகள் முன்வைக்கப்பட்டன. மார்க்ஸ் ஏகாதிபத்தியம் பற்றி கோட்பாட்டு ரீதியான கருத்துக்களை தெரிவிக்க வில்லை. இந்தியாவில் பிரித்தானிய ஆட்சி பற்றி அவர் எழுதிய சில பத்திரிகைக் கட்டுரைகளில் பிரிட்டிஷ் காலத்தின் வரலாற்றுப் பங்கு பற்றிக் குறிப்பிட்டிருந்தார். ஆயினும் இக்கட்டுரைகளை ஏகாதிபத்தியம் பற்றிய கோட்பாட்டு ரீதியான ஆய்வாகக் கருத முடியாது. ஆயினும் மூலதனத்தை ஒரு சமூக உறவாகவும் அதன் உள்ளார்ந்த சர்வ லோக ரீதியான இயக்கப்பாட்டுத் தன்மைகளையும் பற்றிய மார்க்சின் விளக்கம் முதலாளித்துவ ஏகாதி பத்தியம் பற்றிய விளக்கங்களுக்கு அடிப்படையாகக் கருதப்பட்டது. முதலாளித்துவத்தின் உள்ளார்ந்த தவிர்க்க முடியாத பரவலாக்கல் ஆழமாக்கல் தன்மைகளைக் கொள்கை ரீதியில் விளக்கிய முதலாவது சமூகவிஞ்ஞானி மார்க்ஸ் என்பதால் அவரே நவீன உலகமயமாக்கலின் முதலாவது ஆய்வாளர் என இன்றைய சமூக விஞ்ஞானிகள் கருதுகின்றனர். ஆனால் ஏகாதிபத்தியம் பற்றிய மார்க்சிய விளக்கங்களில் பன்முகப் போக்கு களையும் முரண்பாடுகளையும் காண்கிறோம். இதை மார்க்சிய மரபின் குறைபாடெனக் கருதுவது தவறு. அதற்கு மாறாக அந்த மரபானது பன்முக ரீதியான சமூக விஞ்ஞான ஆய்வு சார்ந்த அரசியல் நடை முறைகள் சார்ந்த போக்குகளைக் கொண்டுள்ளது

"ஏகாதிபத்தியம் என்பது பலம் வாய்ந்த ஒரு தேசிய முதலாளித்துவ அரசின் அதிகாரத்திலேயே தங்கி நின்றது. இதன் வரலாறு இப்போது முடிவுக்கு வந்துள்ளதை முதலாளித்துவத்தின் இன்றைய உலகமயமாக்கல் கட்டத்தின் எழுச்சி பறை சாற்றுகிறது."

என்பதே நியாயமான பார்வையாகும்.

இருபதாம் நூற்றாண்டிலேயே நவீன ஏகாதிபத்தியம் பற்றிய மார்க்சிய கோட்பாடுகள் தோன்றின. இவற்றுள் லெனின், Hilferding, Bukharin, Luxemborg, Kautsky போன்றோரின் பங்களிப்புக்கள் முக்கியமானவை. இந்தக் கோட்பாடுகள் இப்போது காலாவதியாகி விட்டன என்ற வாதம் சமீப காலங்களில் பரவலான அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. இந்த வாதம் இன்றைய உலகமயமாக்கல் கட்டம் பற்றிய சில வியாக்கியானங்களுடன் இணைந்ததாகும்.

"ஏகாதிபத்தியத்தின் முரண்பாடுகளை அரசியல்மயப்படுத்தி தொழிலாளர்களை அணிதிரட்டும் அகநிலை சார்ந்த அம்சத்திற்கு லெனின் விசேட முக்கியத்துவம் கொடுத்தார்."

இந்த வாதத்தின் சாராம்சத்தைப் பின்வருமாறு கூறலாம்: ஏகாதிபத்தியம் என்பது பலம் வாய்ந்த ஒரு தேசிய முதலாளித்துவ அரசின் அதிகாரத்திலேயே தங்கி நின்றது. இதன் வரலாறு இப்போது முடிவுக்கு வந்துள்ளதை முதலாளித்துவத்தின் இன்றைய உலகமயமாக்கல் கட்டத்தின் எழுச்சி பறை சாற்றுகிறது. இப்போது ஒரு தேசிய அரசின் ஏகாதிபத்தியம் என்ற நிலையிலிருந்து உலக சாம்ராஜ்யம் 'Empire' எனும் புதிய உலக அமைப்பின் யுகம் ஆரம்பித்துவிட்டது. இந்த சாம்ராஜ்ய யுகத்தில் ஒரு குறிப்பிட்ட தேசம் உலகை ஆளப் போவதில்லை. மூலதனத்தின் புதிய யுகத்தில் பரிணமித்து வரும் சாம்ராஜ்யத்தின் பிரதான போக்குகள் மைய மறுப்பினை (decentring) ஆள்பரப்பின் நிராகரணத்தினை (deterritorialisation) கொண்டுள்ளன. ஆகவே முன்னர் பிரித்தானியா, அதைத் தொடர்ந்து USA என்ற வரலாற்று யுகம் போய் இப்போது தனி மையம் எதுவுமில்லாத உலக அமைப்பு தோன்றுகிறது. இந்த இருபத்தியோராம் நூற்றாண்டின் போக்கினை விளக்க இருபதாம் நூற்றாண்டின் ஏகாதிபத்தியம் பற்றிய கோட்பாடுகள் உதவமாட்டா என்பதே இந்தப் புதியவாதம். இதை மிக ஆணித்தரமாக முன் வைக்கின்றார்கள் Hardt and Negri (2000). இவர்களின் கருத்தில் இந்த சாம்ராஜ்யத்தின் நடைமுறைகள் சுரண்டல் மிக்கவையாயினும் அதன் வரலாற்றுப் போக்கு முழுமையான சமூக வாழ்விற்கும் நிரந்தர அமைதிக்கும் இட்டுச் செல்லும். உலகமயமாக்கலின் பல்வேறு போக்குகளை இந்த இலக்கினை அடையும் வகையில் மீள் ஒழுங்கு செய்வதே வெகுஜன இயக்கங்களின் நோக்கமாக இருக்க வேண்டும் என்கிறார்கள் Hardt ம் Negriயும்.

இந்தக் கோட்பாடும் அது சார்ந்த விளக்கங்களும் பலரால் விமர்சிக்கப்படுகின்றன. மலினப்படுத்தப்பட்ட கற்பனார்த்த யுகமொன்றினைக் கட்டியெழுப்புகின்றனர் சாம்ராஜ்ய கோட்பாட்டாளர்கள். இந்தக் கனவை நியாயப்படுத்த மார்க்சின் கருத்துக்களையும் பயன்படுத்துகின்றனர். அதேவேளை இந்தப் போக்கினை விமர்சிப்போர் உலகமயமாக்கலின் ஏகாதிபத்தியப் பரிமாணங்களைச் சுட்டிக் காட்டுகின்றனர். மேலாட்சி (Hegemony) கருத்துருவும் ஒரு முக்கிய இடத்தினை பெற்றுள்ளது. கிராம்சியின் மேலாட்சிக் கருத்துரு இன்றைய சர்வதேச உறவுகளில் அரசியல், கருத்தியல் மற்றும் கலாச்சார ரீதியான அம்சங்களை ஆழ ஆராயப் பயன்படுத்தப்படுகின்றது. 'நவகிராம்சிய' அணுகுமுறை எனப்படும் சமீபத்தியப் போக்கு பயன்பாடுமிக்கது எனக் கருதுகிறேன்.

முதலில் 'பழைய-புதிய' ஏகாதிபத்தியம் பற்றிய சில குறிப்புக்கள்.

'பழைய' ஏகாதிபத்தியம் - 'புதிய' ஏகாதிபத்தியம்

ஏகாதிபத்தியத்தை 'பழைய-புதிய' என வகைப்படுத்தல் குழப்பத்தை ஏற்படுத்தலாம். ஏனெனில் இப்போது, அதாவது இருபத்தியோராம் நூற்றாண்டில் பழைய ஏகாதிபத்தியம் எனப்படுவது அப்போது புதிய ஏகாதிபத்தியமென அழைக்கப்பட்டது. குறிப்பாக 20 ஆம் நூற்றாண்டில் 'பழைய' ஏகாதிபத்தியம் எனும் பதம் முன்னைய காலத்து காலனித்துவ ஆக்கிரமிப்புகளுக்குக் கொடுக்கப்பட்ட பெயராகும். 20ஆம் நூற்றாண்டில் 'புதிய' ஏகாதிபத்தியம் எனப்படுவது தனியுரிமை மூலதனத்தின் (monopoly capitalஇன்) மற்றும் சிலருரிமையின் (oligopoly) பொருளாதார ஆதிக்கத்துடன் தொடர்புடையதாகும். காலனித்துவ கால ஆதிபத்தியத்துடன் இந்தப் புதிய பொருளாதாரத்தன்மையும் இணைந்த ஒரு நிலையைக் காணக் கூடியதாக இருந்தது. வெளிநாட்டு வளங்களுக்காகவும் சந்தைகளுக்காகவும் ஏகாதிபத்திய அரசுகள் போட்டி போட்டன. இதனால் ஏகாதிபத்திய அரசுகளுக்கிடையே யுத்தங்கள் மூண்டன.

இருபதாம் நூற்றாண்டில் ஏகாதிபத்தியம் பற்றி வெளிவந்த கோட்பாடுகளில் லெனினுடைய கோட்பாடு பிரபல்யம் வாய்ந்தது. வேறு பல ஆய்வாளர்களின் ஆக்கங்களின் உதவியுடன் லெனின் தனது ஆய்வினை மேற்கொண்டு ஏகாதிபத்தியத்தின் முரண்பாடுகள் பற்றியும் அவற்றின் அரசியல் விளைவுகள் பற்றியும் இவற்றை அறிந்து தொழிலாளர்கள், ஒடுக்கப்பட்ட மக்கள் ஏன் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக அணிதிரட்டப்பட வேண்டும் என்றும் விளக்க முற்பட்டார். ஏற்கனவே Hilferding ம் Kautsky ம் முன் வைத்த அடிப்படையான கருத்துக்களை ஏற்ற அதேவேளை லெனின் அரசியல் ரீதியில் அவர்களிடமிருந்து வேறுபட்ட கருத்துக்களை கொண்டிருந்தார். இதை வேறு சொற்களில் சொல்வதானால் மூலதனத்தின் ஏகாதிபத்தியப் போக்கின் உள்ளார்ந்த இயக்கப்பாடு பற்றி இவர்களிடையே ஒருமைப்பாடு இருந்தது. ஆனால் ஏகாதிபத்தியத்தின் முரண்பாடுகளை அரசியல்

மயப்படுத்தி தொழிலாளர்களை அணிதிரட்டும் அகநிலை சார்ந்த அம்சத்திற்கு லெனின் விசேட முக்கியத்துவம் கொடுத்தார். இதில் அவர் Kautsky உடன் மோதினார்.

குறிப்பிட்ட நாட்டிலிருந்து மூலதனத்தின் ஏற்றுமதியுடன் வர்த்தக முரண்பாடுகளும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்தப்போக்கு சர்வதேச ரீதியான அசமத்துவங்களை வலுவடையச் செய்கிறது. தேசிய அரசுகளையும் தேசிய தனியுரிமை ஆதிக்கங்களையும் கொண்டுள்ள நிலையில் உருவாகி வரும் உலக சந்தையில் மூலதனத்தின் இலாப வீதத்தின் சமப்படுத்தல் பல தடைகளை எதிர் கொள்கிறது. இந்த வேறுபாடுகள் சர்வதேச முரண்பாடுகளை அதிகரிக்கின்றன. ஆயினும் நீண்ட காலத்தில் யுத்தங்களுக்கூடாகவும் மற்றும் பல நெருக்கடிகளுக்கூடாகவும் ஒரு அமைதியான அதிஏகாதிபத்தியம் (ultra imperialism) உருவாகும் என Kautsky கருதினார். லெனின் இத்தகைய ஒரு நீண்ட கால சாத்தியப்பாட்டினை ஏற்ற போதும் Kautskyஇன் நிலைப்பாட்டை எதிர்த்து நிராகரித்தார். சமகால முரண்பாடுகளைப் பயன்படுத்தி தொழிலாளர்களையும் மற்றைய சக்திகளையும் புரட்சிக்கு அணிதிரட்டுவதே சரியான வர்க்க அரசியல் என்பதே லெனினுடைய நிலைப்பாடாக இருந்தது.

ஆகவே லெனின் ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் அதி உச்சக்கட்டமென்றும் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் யுகமென்றும் வாதிட்டார். இதன் அர்த்தம் முதலாளித்துவம் தனது மரணத்தை அண்மித்து விட்டது. இந்த மரணத்தை நிஜமாக்கப் புரட்சிகர அரசியல் நடைமுறை அவசியம் என்பது லெனினிசவாதம். அதாவது அகநிலை மாற்றங்களும் இயக்கங்களும் வேண்டும். இந்த நிலைப்பாட்டிற்கு சர்வதேச ரீதியிலான ஆதரவு வளர்ந்ததென்பதை விபரிக்கத் தேவையில்லை. இது உலகறிந்த விடயம். இங்கு ஒரு முக்கியமான லெனினிசக் கருத்தை மறந்து விடமுடியாது. உலக ஏகாதிபத்தியமெனும் சங்கிலித்தொடரின் பலவீனமான இணைப்பிலேயே புரட்சி வெடிக்கிறது. ஆகவே முதலாளித்துவ விருத்தியில் பின்தங்கியிருந்த ரஷ்யாவில் புரட்சி வெற்றி பெற்றது. இதைத் தொடர்ந்து பின்னர் காலனித்துவ அரைக்காலனித்துவ நாடுகளின் விடுதலைப் போராட்டங்கள் பல வெற்றி பெற்றன. அன்றைய காலகட்டத்தில் லெனினிசக் கோட்பாடு பெருமளவிற்கு புரட்சிகர இடதுசாரி இயக்கங்களின் அரசியல் கருத்தியலாக அமைந்தது. ஆனால் தேசிய மட்டத்தில் வெற்றி பெற்ற புரட்சிகள் பலவிதமான சமூக சீர்திருத்தங்களை அமுல் நடத்தியபோதும் காலப்போக்கில் இவை சோசலிசத்திற்கு இட்டுச் செல்லவில்லை. மாறாக சிக்கல்கள் மிகுந்த மார்க்கங்களிற்கு ஊடாக முதலாளித்துவத்திற்கே இட்டுச் சென்றது. இந்த குறுகிய 20ம் நூற்றாண்டின் வரலாறு பற்றிய விளக்கங்களும் வியாக்கியானங்களும் வெளிவந்துள்ளன.

பின்னோக்கிப் பார்க்கும்போது, முதலாளித்துவம் மரணிக்கவில்லை அதற்கு மாறாக மேலும் பலம் பெற்று வீரியத்துடன் உலகை ஆட்கொண்டுள்ளது. இதனை முன்கூட்டியே கண்டவர்போல் Bill Warren எனும் ஆய்வாளர் 'ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் முன்னோடி' எனும் தலைப்பில் ஒரு நூலை 1970களில் வெளியிட்டார். இந்த நூலில் அவர் தென்கொரியா, தாய்வான் போன்ற ஆசிய நாடுகளில் முதலாளித்துவ அபிவிருத்திக்கு எப்படி ஏகாதிபத்தியம் உதவியது எனக்காட்டி லெனினிசத்தையும் அத்துடன் இணைந்த நவமார்க்சிச குறைவிருத்திக் கோட்பாடுகளையும் கடுமையாக விமர்சித்தார். மைய நாடுகளெனக் கருதப்பட்ட மேற்கத்திய நாடுகளைப் பொறுத்தவரை ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் அதி உச்சக் கட்டமாயிருக்கலாம். ஆனால் முதலாளித்துவம் வளராத பின்தங்கிய நாடுகளைப் பொறுத்தவரை ஏகாதிபத்தியம்தான் முதலாளித்துவத்தின் ஆரம்ப கட்டம். இங்கு ஏகாதிபத்தியம் மூலதனத்தின் வரலாற்று ரீதியான செயற்பாட்டின் கருவியாக இயங்குகிறது. இந்த விளக்கத்திற்கு மார்க்சின் எழுத்துக்களிலும் ஆதாரமுண்டு எனும் வாதம் Bill Warren ஆய்வில் பலமாக இழையோடியது.

இன்று முன்வைக்கப்படும் சாம்ராஜ்யவாதத்திற்கும் Hilfeding, Kaustsky போன்றோரின் கருத்துக்களுக்கும் தொடர்பிருப்பதை இக் கட்டுரையை வாசிப்பவர் உணர்ந்திருப்பர்.

Kaustskyஇன் அதிஏகாதிபத்தியம் (ultra-imperialism) எனும் கருத்துடன் நெருங்கியதே இருபத்தியோராம்

"மூலதனத்தின் ஏற்றுமதியுடன் வர்த்தக முரண்பாடுகளும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்தப்போக்கு சர்வதேச ரீதியான அசமத்துவங்களை வலுவடையச் செய்கிறது."

நூற்றாண்டில் எழுந்துள்ள சாம்ராஜ்யக்கோட்பாடு. முதலாளித்துவத்தின் உலகரீதியிலான வளர்ச்சிப் போக்கின் சமகால ஆய்வுகள் முதலாளித்துவத்தின் வரலாற்றின் தொடர்ச்சியையும் அதேவேளை அதில் எற்படும் தொடர்பறுப்புத்தன்மை கொண்ட மாற்றங்களையும் விளக்க முற்படுகின்றன.

ஏற்கனவே குறிப்பிட்டது போல சாம்ராஜ்ய யுகம் ஏகாதிபத்திய காலகட்டத்தைத் தாண்டிய ஒரு காலகட்டமெனும் நிலைப்பாடு விமர்சிக்கப்படுகிறது. இன்று முன்னெப்போதையும் விட மூலதனம் உலகமயமாக்கப்பட்டுள்ளது என்பதும் உலக சந்தையின் பரவலும் ஒருங்கிணைப்பும் முன்னேறியுள்ளதென்பதும் உண்மை. அதே போன்று முதலாளித்துவத்தின் வரலாற்றில் முதல் தடவையாக பல்பக்க

நிறுவனங்கள் (உதாரணம்: உலக வங்கி, சர்வதேச நிதியம், உலக வர்த்தக நிறுவனம்) தேசிய பொருளாதாரக் கொள்கையை நிர்ணயிக்கும் அதிகாரத்தைக் கொண்டுள்ளன என்பதும் உண்மை. இன்று மூலதனத்தின் தலையாய நிறுவனமாக பல்தேசிய கூட்டுத்தாபனம் தேசிய அரசுகளையும் விட பலம் வாய்ந்ததாகி விட்டதும் உண்மை. இவற்றிற் கெல்லாம் தொழில்நுட்பத்தின் நிரந்தரப் புரட்சி உதவுகிறது என்பதையும் மறுக்க முடியாது. ஆனால் சில தேசிய அரசுகளின் ஏகாதிபத்தியமும் தொடர்கிறது என்பதும் உண்மை. இன்று பிரதான ஏகாதிபத்திய அரசு USA என்பதை மறுக்க முடியாது. இதன் போக்கினை புதிய ஏகாதிபத்தியம் எனச் சில ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். விசேடமாக David Harvey சமீபத்தில் எழுதியுள்ள கட்டுரைகளிலும் New Imperialism எனும் நூலிலும் USA இன் ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு போக்கினை ஆய்ந்துள்ளார். ஆயினும் இந்தப் புதிய ஏகாதிபத்தியம் பல வகையில் பழைய ஏகாதிபத்தியத்தின் பண்பினையே கொண்டுள்ளது எனக் கருதலாம். உலக முதலாளித்துவத்தின் பல்வகையான முரண்பாடுகளைப் பார்க்கும் போது புதியனவுடன் பழையனவும் தெளிவாகத் தென்படுகின்றன.

"அமெரிக்க ஆக்கிரமிப்பின் நோக்கம் தனியே வளங்களைக் கட்டுப்படுத்துவது மட்டும்தான் என்பதல்ல. அமெரிக்க அரசியல், கருத்தியல், சமூக விழுமியங்கள், கலாச்சார செயற்பாடுகள் எல்லாவற்றையும் உலக மயமாக்குதலே 'புதிய அமெரிக்க நூற்றாண்டுத்' திட்டத்தின் நிகழ்ச்சி நிரலாகும்."

'புதிய அமெரிக்க நூற்றாண்டு' எனும் ஏகாதிபத்தியக் கனவு

உலகமயமாக்கல் தேசிய அரசின் அதிகார பலத்தை தொடர்ச்சியாக தாக்கி வருகிறது எனும் கருத்து பலம் பெற்று வரும் அதேவேளை, இன்று ஒருமையமற்ற முதலாளித்துவ உலகம் உருவாகிக் கொண்டிருக்கிறது எனும் வாதம் அங்கீகாரம் பெற்று வரும் நிலையில், இருபத்தியோராம் நூற்றாண்டு அமெரிக்காவின் 'புதிய நூற்றாண்டு' எனும் பிரகடனமும் பலமாக ஒலிக்கிறது, எதிர் ஒலிக்கிறது. சுய போட்டிச்சந்தையும் சுதந்திரவர்த்தகமுமே உலக முதலாளித்துவத்தின் முக்கிய தேவைகள் எனக் கருதப்படும் இன்றைய காலத்தில் USA தனது சகாக்களின் ஒத்துழைப்புடன் ஆக்கிரமிப்பு யுத்தங்களில் அதுவும் எண்ணை வளங்களுள்ள பிராந்தியங்களில் இதைச் செய்யும் போது ஓர் தேசிய அரசு தனது உலக ரீதியான மேலதிகாரத் திட்டத்தை உக்கிரமாக அமுல் நடத்துவது வெளிப்படையாகிறது. ஜனநாயகத்தை ஏற்றுமதி செய்யும் போர்வையில் உலக பொருளாதாரம் தங்கி நிற்கும் அடிப்படை வளம் செறிந்த நாடுகளைக் கட்டுப்படுத்த USA எடுத்துள்ள நடவடிக்கைகள் பழைய ஏகாதிபத்தியத்தை நினைவூட்டுகின்றன.

பெற்றோலியம் போன்ற அடிப்படை வளங்களுக்கான சர்வதேசரீதியான போட்டி இப்போது விசுவரூபமெடுத்துள்ளது. இதற்கான பிரதான காரணம் சீனா, இந்தியா மற்றும் ஆசிய நாடுகளின் தொடர்ச்சியான பொருளாதார வளர்ச்சியும் அதன் விளைவாக வளர்ந்து வரும் கேள்வியுமாகும். இன்று இடம் பெறும் பொருளாதார ரீதியிலான போட்டியில் USA பல சவால்களையும் சிக்கல்களையும் எதிர்நோக்குகிறது. ஏற்கனவே அது சீனா, ஜப்பான், தாய்வான் போன்ற ஆசிய நாடுகளுக்கும் பெரும் கடனாளியாகி விட்டது. அமெரிக்க முதலீட்டாளார்கள் சீனாவையும் தென் அமெரிக்காவையும் நோக்கி நகர்ந்த வண்ணமிருக்கிறார்கள். அமெரிக்க மூலதனம் சீனாவிற்கு தொடர்ச்சியாகச் சென்றுள்ளது. பொருளாதார போட்டியில் பல சந்தர்ப்பங்களில் சந்தை விதிகளுக்கமைய ஆதிக்கம் செலுத்த முடியாத நிலையிலிருக்கும் USA தனது இராணுவ பலத்தைப் பயன்படுத்தி அடிப்படை வளங்களைக் கட்டுப்படுத்தி அதற்கூடாகத் தனது ஆதிக்கத்தை பலப்படுத்த முயற்சிக்கிறது. இப்படிச் சொல்லும் போது அமெரிக்க ஆக்கிரமிப்பின் நோக்கம் தனியே வளங்களைக் கட்டுப்படுத்துவது மட்டும்தான் என்பதல்ல. அமெரிக்க அரசியல், கருத்தியல், சமூக விழுமியங்கள், கலாச்சார செயற்பாடுகள் எல்லாவற்றையும் உலகமயமாக்குதலே 'புதிய அமெரிக்க நூற்றாண்டுத்' திட்டத்தின் நிகழ்ச்சி நிரலாகும். இதைத்தான் பலர் "இன்றைய உலக மயமாக்கல் = அமெரிக்க மயமாக்கல்"எனக் கூறுகிறார்கள். இது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மேலாட்சி (Hegemony) திட்டமாகும். ஆகவே ஒரு புறம் பலாத்கார ரீதியான ஆக்கிரமிப்பு மறுபுறம் அரசியல், கலாச்சார ரீதியான, சிந்தனை ரீதியிலான ஊடுருவலும் மேலாட்சியும். இந்த இரண்டாவது அம்சம் அதாவது அரசியல், கலாச்சார ரீதியிலான அமெரிக்க மயக்கமாக்கல் இன்று ஐரோப்பாவிலும் பரவலாகி நிலை கொண்டு வருவதை அவதானிக்கலாம்.

நவதாராளவாதத்தின் உலகமயமாக்கல் திட்டம் தூயபோட்டிச் சந்தையை நடைமுறையாக்கு

வதாகும். இதையே பல்பக்க நிறுவனங்கள் செய்கின்றன. இது USA இன் நலன்களுக்குச் சாதகமாக அமையும் போது, அதை USA அரசு பலமாக ஆதரிக்கும்; பாதமாக அமையும்போது அதாவது பொருளாதார ரீதியான சர்வதேசப் போட்டியில் தனது தேசிய மேலதிகார நலன்களை பாதுகாக்க எந்த விதியையும் மீறத் தயாராகவுள்ளது. இதுவே நாம் காணும் யதார்த்தம். ஆகவே நவதாராளவாதம் எனும் கருத்தியலின் உலக ரீதியான மேலாட்சித் திட்டத்திற்கும் USA இன் தேசிய நலன்களை அடிப் படையாகக் கொண்டுள்ள அந்த நாட்டு ஆட்சியா ளரின் மேலாட்சித் திட்டத்திற்குமிடையே முரண்பாடு எழுவது தடுக்க முடியாதது. இத்தகைய முரண்பாடு மற்ற பல தேசிய அரசுகளுக்குமுண்டு. இதனை ஒரு குறிப்பிட்ட தேசிய அரசு கையாள்வது அதன் அரசியல், பொருளாதார பலங்களில் தங்கியுள்ளது. இந்த வகையில் சீனா கணிசமான தேசிய சுயாதீ னத்தைக் கொண்டுள்ளது எனலாம். இந்தியாவும் பிரேசிலும் தமது சுயாதீனத்தைப் பேண முயல்வ தையும் காணலாம். இப்படியாகத் தனிப்பட்ட சில தேசிய அரசுகள் சில முயற்சிகளை எடுப்பதைக் காணலாம். ஆனால் 'புதிய அமெரிக்க நூற்றாண்டுத் திட்டம்' இவற்றையெல்லாம் மிஞ்சியது. USA இன் தலைமையில் சில செல்வந்த நாடுகள் இந்த திட்டத் திற்கு விரும்பியோ விரும்பாமலோ உதவுகின்றன.

இந்தத் திட்டத்தின் அமுலாக்கல் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கெதிரான போக்குகளையும் போராட்டங்களையும் வலுவாக்குமென எதிர்பார்க் கலாம். இலத்தீன் அமெரிக்காவில் இந்தச் செல்நெறி பலம் பெற்று வருவதைக் காண்கிறோம். அதேவேளை 'புதிய அமெரிக்க நூற்றாண்டுத்திட்டம்' முதலா ளித்துவப் பேரரசுகள் மத்தியில் முரண்பாடுகளை வலுவடையச் செய்யும் என்பதும் உண்மை. USA - ஐரோப்பிய ஒன்றியத்துக்கிடையிலான முரண் பாடுகள் மேலும் வளரும். USA - சீனா உறவுகளிலும் போட்டிகளும் முரண்பாடுகளும் ஏற்கனவே தோன்றி யுள்ளன. இவை சீனாவில் பிராந்திய அரசியலுடன் சம்பந்தப்பட்டவை. குறிப்பாக சீனாவின் தாய்வான் தொடர்பான நிலைப்பாடு மற்றும் சீன -யப்பான் முரண்பாடுகள் இங்கு முக்கியத்துவம் பெறுகின்றன.

இன்றைய உலகமயமாக்கலைப் புரிந்து கொள் வதற்கு மூலதனத்தின் உள்ளார்ந்த இயக்கப் பாடுகளின் சமூக ரீதியான, நிறுவன ரீதியான வெளிப்பாடுகளையும் வல்லரசுகளின் ஏகாதிபத் தியத் தன்மைகளையும் கைப்பற்றவல்ல அணுகு முறைகள் அவசியம். நவீனத்துவத்தை தாண்டிய யுகம் பற்றிய ஆய்வுகள் உலகமயமாக்கலின் சில பரிமாணங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன. இவர்களின் வாதங்களை, இந்த ஆய்வுகளைக் கண்மூடித்தனமாக நிராகரிக்காது அவற்றை விவாதத்திற்கும், விமர்சனத்திற்குமுள்ளாக்கல் அவசியம். இதற்கான ஒரு பொதுவான தளம் தமிழ் பேசும் உலகில் இனிமேல் தான் உருவாக்கப்பட வேண்டும்









தமிழ் ஓவியத்தின் நிலை:

20ம் நூற்றாண்டின் கலையுலகைப் பல பிரளயங்கள் கடந்து சென்ற பிறகும், பாரம்பரிய நுண்கலைகள் இன்றும் வழக்கத்தில் இருந்து வருவது வியப்புக்குரிய விஷயம்தான். தமிழ்க்கலாச்சாரத்தில் சிலை வடிப்பது அரசியல் தளத்தில் இயங்கும் சாகசம். தமிழில் சினிமா பிடிப்பது வணிகத் தளத்தில் நடவடிக்கை. செவ்வியல் நடனம் மேல்தட்டு இளம் பெண்களின் பொழுது போக்கு, இல்லையெனில் ஆன்மீகத் தேடல்.

இன்றைய தமிழ் உலகில் ஓவியத்தின் இடத்தைத் தேடினால், முதலில் கண்களுக்குத் தெரிவது சினிமா பேனர்கள். அவற்றோடு அரசியல் வாதிகளின் உருவங்கள் கொண்ட சுவரோவியங்கள், பத்திரிகைகளை அலங்கரிக்கும் கோட்டோவியங்கள். இவற்றையும், தஞ்சாவூர் - மார்கம் சார்ந்த அலங்கார ஓவியங்களையும் தவிர்த்தால், இன்று தமிழகத்தில் குத்துமதிப்பாக கிட்டத்தட்ட 250 ஓவியர்கள் நுண்கலை ஓவியத்தைத் தொழிலாகக் கொண்டவர்களாக உள்ளனர். இவர்களில் பேனர் ஆர்ட்டிஸ்ட்டுகள், பேக்கேஜ் கிராபிக் கலைஞர்கள் எத்தனை பேர் இருப்பார்கள் என்று எனக்குச் சொல்லத் தெரியவில்லை.

நுண்கலை வெளியில் இயங்கும் ஓவியங்கள் ஒதுக்கி வைக்கப்பட்ட ஒரு கலைவகையைச் சேர்ந்தவை போல் தோன்றும். சோழமண்டலத்தில் ஓவியர்களின் கிராமம் உள்ளது. அவர்களுடைய கலையை இரசிப்பதும், அந்த ஓவியங்களை வாங்குவதும் பெரும்பாலானவர் மேலைநாட்டவர் என்பது உண்மை. இப்படியான சூழலில்தான் இன்று தமிழ்-ஓவியர்கள் இயங்கி வருகின்றனர்.

தமிழ் ஓவியக்கலையின் வரலாறு ஐரோப்பிய ஓவியக்கலையின் அடிப்படைத் தாக்கம் கொண்ட வரலாறு.

வாசுகனைப் பற்றிய சில குறிப்புகள் :

வாசுகன் வட இலங்கையில், அச்சுவேலி என்ற கிராமத்தில் பிறந்தவர். கடந்த நான்கு ஆண்டுகளாக பாரீஸில் வாழ்ந்து வருகிறார். பாரீஸ் பத்தில் அவருடைய அறையும் ஓவியப் பட்டறையும் அமைந்துள்ளன. பாரீஸுக்கு வருமுன் சைப்ரஸில் ஓட்டல் நிர்வாகம் படித்தவர். இலங்கையில் பள்ளிக்கூட நாட்களிலிருந்தே ஓவியக்கலையில் இவருக்கு ஈடுபாடி ருந்தாலும், ஸைப்ரஸ் தீவில் வாழ்ந்த காலத்தில்தான் தீவிரமாக Glyn Hughes என்ற ஆங்கில ஓவியரிடம் ஓவியக்கலையை வாசுகன் பயின்றார்.

பாரீஸ் நகரில் சிறந்த ஓவியர்களின் படைப்புகளைக் காணும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது, இவை இவருடைய கலைப்பயணத்துக்கு உந்துகோலாக அமைகின்றன. இந்த ஓவியக்கலைஞருக்கு இசையில் நல்ல நாட்டம் உள்ளதை என்னால் உணர முடிந்தது.

வாசுகன் படைப்புகள் கண்காட்சிக்கு :

ஓவியரின் படைப்புகளின் கண்காட்சி, 'அப்ஸரா - 5' என்ற தலைப்பில், 06 ஜீலை 2005 முதல் 06 ஆகஸ்ட் 2005 வரை பாரீஸில் 'பயாதர்' என்னும் உடுப்பு வியாபார ஸ்தலத்தின் கீழ் அமைந்துள்ள மண்டபத்தில் நடை பெற்றது. கான்வாஸில் அமைந்துள்ள இவருடைய படைப்புகள், ஆக்ரிலிக், ஆயில் ஆகிய கலை நுட்பத்தின் துணையால் உருப்பெற்றவை. உருவ மற்றும் அரூப ஓவியங்களைக் கொண்ட இவர் படைப்புக்கள் கலைஞனின் பயண அனுபவங்களையும், இயற்கையினுடனான உரையாடல்களையும் பிரதிபலிக்கின்றன. பொதுவாக உருவ ஓவியங்கள், எக்ஸ்பிரஷனிஸ வகையை சேர்ந்தவையாக இருந்தன.

பல கையெழுத்துகள்:

நவீன ஓவியத்தின் பிரதான தன்மையாக நாம் கருதுவது ஓவியனின் காட்சிக் கையெழுத்து. அதாவது, ஒரு ஓவியத்தை நாம் பார்த்தவுடன், இது இந்த ஓவியரின் படைப்பு என்று இனம் கண்டு கொள்ளக் கூடிய அளவில், அந்த ஓவியருக்காண தனித்துவ அழகியல் சமிக்ஞைகள் அடங்கியிருக்கும் படைப்பாக இருப்பது. வாசுகனின் ஓவியங்களைப் பார்க்கையில், படங்களின் அடிவாரத்தில் அவருடைய கைச்சாத்து



இல்லாமல் போனால் அது பொதுப்படையில் எந்த ஒரு ஓவியர் தீட்டியதாகவும் இருக்கலாம். இவரது ஓவியங்கள் வெவ்வேறு பிரபல்யங்களின் பாணியில் அமைந்திருப்பதை அவதானிக்க முடிகிறது. இது கலைஞரின் முதிர்ச்சியின்மையைக் குறிக்கின்றது, காட்சியில் வைக்கப்பட்டிருந்த இருபத்தெட்டு ஓவியங்களில் பெரும்பாலானவை ஓவியரின் ஆரம்ப காலப் படைப்புகளாகத் தோன்றின.

பயணத்தின் சுவடுகள்:

செடிகள், மரங்கள், அருவிகள், பட்டாம் பூச்சிகள், பறவைகள், கடல், மலர்கள், பெண் உருவங்கள், ஊழி அலை, இவற்றைத் தவிர சில ஜியோமித மற்றும் லிரிகல் அரூப ஓவியங்கள்.

நகரங்களை அடையாளம் காட்டும் கட்டிடங்களோ, ஓவியனின் குழந்தைப் பருவத்து நினைவுகளோ, இலங்கைச் சூழலின் தடயங்களோ இல்லாததைச் சுட்டிக் காட்டலாம்.

மயிலின் தோகையைச் சித்தரிக்கும் ஒரு ஓவியம், புடவை அணிந்த பெண்ணின் இடுப்பைக் காட்டும் ஒரு ஓவியம், இவற்றைத் தவிர தமிழ்க்கலாச்சாரத்தின் அடையாளங்கள் எதையும் இந்த ஓவியங்களில் காண முடியவில்லை. மற்றவை பிரான்ஸில் ஓவியரின் பயணங்களின் போது கண்ணில் பட்ட காட்சிகள்.

அரசியலற்ற பயணம்:

தான் அரசியலுக்கு அந்நியன் என்றும், தன் கலை அரசியலுக்கு அந்நியமானது என்றும் வாசுகன் கூறுகிறார். கண்காட்சியில் வைக்கப்பட்ட **'26. 12. 2004'** என்ற ஓவியம் இயற்கையின் விளைவுகளை சித்தரிக்க, இலங்கையில் முப்பது ஆண்டுகளாக நடந்துவரும் போரின் விளைவுகளுக்கு இவருடைய கலை அந்நியமாக நிற்பது அதிசயமாகத்தான் இருக்கின்றது.

மௌனத்தில் வாழ்வோம்

வார்த்தைகளை உடைத்தெறி
இல்லையேல் அதன் கனம்
என்னைக் கொன்று விடும்...
நதிக்கரையோரத்து நாணலைப் போன்று
நான் அச்சமுறுகிறேன்...

அச்சம் கலந்த இரவுகளில்
நான் தூக்கம் கலைந்து துயருறும்
உன் வார்த்தைகளை உடைத்தெறி...

நீ மௌனித்த கணங்களில் மட்டுமே
என் மௌனம் அர்த்தம் கொள்கிறது...

உனக்கும் எனக்குமான உறவுக்கு
உடல்மொழியே போதுமானது...

இயற்கையிடம் நாம் கற்றதெல்லாம்
அங்குலம் அங்குலமாயப் பேசுவோம்
விழிமொழியால்
எனவே
வார்த்தைகளை உடைத்தெறி...

உனக்கும் எனக்குமான
தனித்தனி மௌனத்தைத் தொலைத்து
பொது மௌனத்தில் வாழ்வோம்...

மௌனம்கூட
பேசாத வாத்தைகளே
எனவே
வார்த்தைகளை உடைத்தெறி...

ஏ. ஜோய்

29.07.2005

ஜேர்மனி: மாற்றை விரும்பும் தமிழும் தேர்தலும்

சுற்றுலா

பின் மாலையின் தொடக்கத்தைத் தொட்டுக் கொண்டிருந்த ஓர் பொழுதில் பேர்லின் நகரின் நொய்கோல்ன் (Neukoelln) பகுதியிலுள்ள ஒரு café இற்குள் கூடியிருந்த முப்பது நாற்பது பேரின் பேச்சொலியும் சிரிப்பொலியும் கலந்த ஓசையை ஒருவகை நரம்பொலி வாத்தியத்தின் இசை மீட்டல் தணிக்கிறது. இளைஞனொருவன் இசைக்கருவியை மீட்ட, இன்னொருவன் மேளத்தை இசைக்க, எழுந்து நின்றபடி ஒரு பெண் பாடுகிறாள். இசைக்கருவிகளை இசைப்பவர்களும் இடைக்கிடை அவளுடன் இணைந்து பாடுகின்றனர். நண்பர்களுடன் கூடி நின்று பாடலில் லயித்துக் கொண்டிருக்கிறாள் இன்னொரு இளம்பெண். அடுத்த பாடலைப் பாடுமுன் "இனிவரும் பாடல் எங்கள் 'எவ்ரீமு'க்கு மிகவும் பிடித்தபாடல், அவளுக்காக நான் இதைப் பாடுகிறேன்" என அந்த இளம் பாடகி அந்தப் பெண்ணைக்காட்டிக் கூறிவிட்டுப் பாடுகிறாள். குர்திஸ்தானின் வனப்பையும் மலைகளின் மடிகளில் துயிலும் அதன் ஊர்களையும் மகிழ்வு கொண்ட வாழ்வையும் பற்றிய அந்தப் பாடல் எல்லோரையும் தாளம் போட வைக்கிறது. பாட்டு முடிந்தபின் ஒருவர் எழுந்து "இனி 'இடதுசாரிக் கட்சி'யின் பேர்லின் வேட்பாளரில் ஒருவரான எவ்ரீம் பாபா (Evrim Baba) சில வார்த்தைகள் பேசுவார்" என்கிறார்.

"அன்பான தோழியர், தோழர்களே! தேர்தல் ஆயத்தங்களில் நீங்கள் சிரமத்துடன் உழைத்துள்ளீர்கள். நாளை மறுநாளில் நடைபெறும் தேர்தலில் அரசின் சீரழிவுப் பொருளாதாரச் சமூகக் கொள்கைகளிற் கெதிரான உண்மையான மாற்றுக்குரல் எமது என்பதை நிச்சயம் நிரூபிப்போம்" என்கிறார்.

பேசி முடித்து வந்தமர்ந்த அவரிடம் முதலில் பாடப்பட்ட பாடலைப் பற்றிக் கேட்டபோது "சிறுவயதிலேயே எனக்குள் கரைந்து விட்டபாட்டு. துருக்கியில் நான் பிறந்து வளர்ந்த பிரதேசத்தின் அழகை மாத்திரமல்ல, எனது மக்களின் வாழ்வையும் துருக்கியில் அவர்கள் படும் கொடுமை களையும் துயரையும் இப்பாடல் நினைவுபடுத்துகிறது. இன்று துருக்கி ஐரோப்பியக் கூட்டமைப்பில் இணையும் இத்தருணத்திலும் குர்திஸ் மக்களுக்கு துருக்கிய பெரும்பான்மை சார்பினில் இழைக்கப்படும் இன்னல்களை வெளிக்கொணர வேண்டும் என்ற வேட்கையையும் இது தூண்டுகிறது"என்றார்.

"நான் சார்ந்திருக்கும் இடது சமூக ஜனநாயகக் கட்சி (PDS) சமூக சமநீதியை விரும்புகிறது. அரசின் சீரழிந்த பொருளாதாரக் கொள்கைகள் சமூகத்தில் ஏலவே பின்தங்கியுள்ள மக்கள் தொகையினர் மீது நடத்தும் தாக்குதல்களுக்கு எதிரான மக்கள் குரலாக நாம் ஒலிப்போம். ஜேர்மனியை 7 வருடங்களாக ஆண்டு வரும் சமூக ஜனநாயகக் கட்சியும் பசுமைக் கட்சியும் தம்மை மாற்று (alternative) என்று அழைத்துக் கொண்டாலும், ஜேர்மனிய முதலாளித்துவத்தின் சுமைகளை அதன் முதுகெலும்பான உழைப்பவர்மீதும் வறியவர் மற்றும் வெளிநாட்டவர்மீதும் சுமத்தியுள்ளனர்.

பொருளாதாரச் சீர்திருத்தம் (Reforms) என்ற பெயரில் இவர்கள் அமுல்படுத்தியிருக்கும் (2010 Agenda) திட்டமானது சமூகநலக் குறைவு, வேலை நீக்கம், குறைந்த கூலிக்குச் சுரண்டல், கல்வி/மருந்து வசதிக் குறைப்புக்கள் என சமூகத்தைப் பெரிதும் பாதிக்கின்றன" என்றார்.

"சமூக அரசியலைப் பிரதானப்படுத்தியே தேர்தலில் பங்கெடுத்துக் கொள்கிறோம். ஒரு பலமான இடது அணியாக சமூக நீதிக்காக குரல் கொடுக்க முடியும்" என்று நம்பிக்கை கொண்டுள்ள அவர், மாற்றம் என்பது பல்வேறு தளங்களில் வெவ்வேறு வடிவங்களிலமைந்த நடவடிக்கைகள் மூலமே சாத்தியமென்பதை தனது விளக்கங்கள் மூலம் தெளிவு படுத்துகிறார்.

"எவ்ரீம் (Evrim) என்ற பெயருக்கு என்ன அர்த்தம் தெரியுமா?

எவ்ரீம் என்றால் பரிணாமம் (evolution).

Without evolution there is no revolution" என்று சிரிக்கும் எவ்ரீம்பாபா, 1971இல் துருக்கியில் பிறந்தவர்; குர்திஸ் இனத்தைச் சார்ந்தவர். துருக்கிய அரசுக்கெதிராகச் சதி செய்தார் என்ற குற்றச்சாட்டையடுத்து அவரது தந்தை துருக்கிய இராணுவத்தினரால் தேடப்பட்டார். குர்திஸ் மக்கள் மீதான துருக்கிய இராணுவ அடக்குமுறை சமூக அரசியல் கலாச்சாரத்

தளங்களில் (மொழித்தடை) கட்டவிழ்த்து விடப்பட்டிருந்த எண்பது காலப் பகுதிகளில் எவ்ரீமின் குடும்பம் அகதி களாக ஜேர்மனிக்கு வந்தது. ஒரு அகதிக் குழந்தையாக ஜேர்மனியில் சிறுபராயத் தைக் கழித்த அவர் பள்ளிப் படிப்பை முடித்தபின் சட்டபூர்வ மொழிபெயர்ப்பாளராக வேலை செய்தார்.

ஜேர்மனிகள் இணைக்கப் பட்டதன் பின் உருவாக்கப் பட்ட PDS என்ற இடதுசாரிக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக 1999ம் ஆண்டி லிருந்து இருந்து வரும் எவ்ரீம் பாபா, தொழில்நல, தொழிற் கல்வி வளர்ச்சி போன்ற துறை களிற்குப் பொறுப்பாக இருந்து வருவதுடன் PDS இன் பெண்நிலை அரசியற்துறையின் பேச்சாளராகவுமுள்ளார்.

நான்கு பேருக்கு ஒருவர் என்ற விகிதத்தில் சமூக உதவி பெறுபவர்களையும் வறியவர்களையும் வெளிநாட்டவரையும் அதிகமாகக் கொண்ட நொய் கோல்ன் (Neukoelln) பகுதியிலேயே தான் வாழ்ந்து வளர்ந்து வருவதனால் அதன் பொருளாதார சமூக வளர்ச்சியுடன் தன் செயற்பாடுகளை இணைத்து வருவதாகவும், அத்துடன் ஒரு வெளிநாட்டவள் என்ப தனால் நிறுவனரீதியிலாக வளர்ந்து வரும் இனவா தத்தை அமைப்பு ரீதியில் எதிர்க்கும் கடமையும் தனக்கிருப்பதாகச் சொல்கிறார்.

2005ம் ஆண்டு செப்டம்பரில் நடைபெற்ற பாராளு மன்றத் தேர்தலில் ஆட்சியிலிருந்த Gerhard Schröder இன் சமூக ஜனநாயகக் கட்சி மொத்த 603 ஆசனங்களில் 222 ஆசனங்களையும், 34,3 சதவீத வாக்குகளையும் Angela Merkel ஐத் தலைவராகக் கொண்ட பழமைவாதக் கட்சியான கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி (CDU) 35,2 சதவீத வாக்குகளைப் பெற்று 225 ஆசனங்களையும் பெற்றன. முதலாளித்துவச் சீர்திருத்தங்களை வலியுறுத்தும் லிபரல் கட்சியான FDP ஆனது 9,8 சதவீத வாக்குகளையும் பசுமைக்கட்சி 8,1 சதவீத வாக்கு களையும் PDS உம் SPD இலிருந்து வெளியேறிய Oskar Lafontaineஇன் கட்சியும் இணைந்த இடதுசாரிக்கட்சிக்கு 8,7 சதவீத வாக்குகள் மூலம் 54 பாராளுமன்ற ஆசனங் களும் ஏனைய கட்சிகளுக்கு 3,9 சதவீத வாக்குகளும் கிடைத்தன. (இதற்குள் நியோ நாஜிக்கட்சியான NPD உம் அடங்கும். இவர்களுக்கு ஆதரவாக 750 000 பேர் வாக்களித்திருந்தனர்.)

1982 இலிருந்து FDP (லிபரல் கட்சி) CDU உடன் இணைந்தே ஆட்சி அமைத்து வருகிறது. பசுமைக்கட்சி (Green Party), SPD என்பன இணைந்தே ஆட்சிய மைக்கின்றன.

2002 இல் நடைபெற்ற தேர்தலுடன் ஒப்பிடுகையில் CDU, SPD பசுமைக்கட்சி என்பன குறைந்த வீத வாக்கு களையே பெற்றுள்ளன. இம்முறை தேர்தலைப் பொறுத்தவரை சென்றமுறை 7,4 சதவீதத்தைப் பெற்ற முதலாளித்துவ லிபரல் கட்சி 9,8 சதவீத வாக்குகளைப் பெற்று 47 ஆசனங்களையும் 0,4 சதவீத வாக்குகளுடன் இரண்டு ஆசனங்களைப் பெற்றிருந்த இடதுகட்சி (PDS) 8,7 சதவீத வாக்குகளுடன் 54 ஆசனங்களையும் பெற்றுள்ளனர்.

பழமைவாதக்கட்சியின் செல்வாக்கு மிகுந்த Bayern, Baden Wütemberg, Hessen ஆகிய மாநிலங்களில் கூட ஒப்பீட்டு ரீதியில் கணிசமான வெற்றியை இடது சாரிக்கட்சி பெற்றுள்ளது. ஒரு முனையில் முதலாளித் துவச் சீர்திருத்தவாதத்தின் தேவையும் மறுமுனையில் ஒரு இடதுசாரி மாற்றுக்கான தேவையும் தீவிரமாக உணரப்படுவதையே இம்முடிவுகள் காட்டு கின்றன.

இம்முறை தேர்தலைப் பொறுத்தவரை உண்மை யான வெற்றியாளர்கள் இடதுஅணியினர் தான் என்கிறார் எவ்ரீம் பாபா.

பெரிய கட்சிகள் எதற்கும் ஆட்சியமைக்கக்கூடிய பெரும்பான்மை இல்லாததால் யார் ஜேர்மனியின் அதிபர் என்ற இழுபறியில் மூன்று வாரங்கள் ஓடின.

CDU, SPD இரண்டும் இணைந்து கூட்டாட்சி அமைக் கும் யோசனை Gehard Schröderஐ அதிபராக்க வேண்டு மென்ற SPD இன் நிபந்தனையால் CDU இனால் நிராகரிக் கப்பட்டது. பசுமைக்கட்சியுடனும் SPD உடனும் இணைந்து ஆட்சி அமைப்பதில் FDP (லிபரல் கட்சி) உடன்படவில்லை.

CDU (கறுப்பு), FDP (மஞ்சள்), பசுமைக்கட்சி (பச்சை) இணைந்த 'ஜமேக்கா' கூட்டாட்சிக்கு CDU விரும்பியது.

இடதுசாரியுடன் இணைவதை SPD, CDU, FDP, பசுமைக்கட்சி ஆகியன மறுத்தன. இடதுசாரிக்கான பெரும்பான்மை ஆதரவு கிழக்கு ஜேர்மனியிலிருந்து வருவதனாலும் PDS கட்சியான கிழக்கு ஜேர்மனியைத் தளமாகக் கொண்டு உருவாக்கப்பட்டதனாலும் வெகுஜன ஊடகங்களும் பெரிய கட்சிகளின் ஆதர வாளர்களும் இடது கட்சிக்கான தமது மறுப்பானது அவர்கள் சர்வாதிகாரப் பாரம்பரியத்தை கொண்ட தனாலேயே என்று கூற முயன்றனர். ஆனால் சர்வாதி

காரம் நிலவியதாகச் சொல்லப்படும் கிழக்கு ஜேர்மனியிலேயே இடதுகட்சிக்கு பெரும்பான்மை வாக்குகள் கிடைப்பது இவ்வாதங்களைக் கேள்விக்குறியாக்குவதுடன் CDU, SPD கட்சிகளின் அரசியல் பொருளாதாரக் கொள்கைகளினால் உருவாகும் சமூக நெருக்கடிக் குள்ளாகும் கிழக்கு ஜேர்மன் வாசிகளின் அதிருப்தியும் மாற்றுக்கான விருப்புமே இடதுகட்சிகளுக்கு வாக்களிக்க வைக்கின்றது.

SPD அமுல்படுத்தும் சமூக நலக்குறைப்பு தனியார் மயப்படுத்தல் போன்ற பொருளாதாரச் சீர்திருத்தக் கொள்கைகளை நிறுத்துவதனால் தாம் அவர்களுக்கு ஆட்சியமைக்க உதவுவதாக சில இடது பாராளுமன்ற உறுப்பினர்கள் கூறியுள்ளனர்.

"எங்களைப் பொறுத்தவரை CDU, SPD இணைந்த கூட்டாட்சி அமைந்தால் நல்லது FDP, CDU இணைந்தால் சமூகநலத் திட்டங்கள் ரத்தாவது மிகத்தீவிரமாக அமுலுக்கு வரும்" என்கிறார் எவ்ரீம் பாபா.

இழுபறிகள் ஓய்ந்து CDU வின் Angela Merkel ஐ அதிபராகக் கொண்ட SPD இணைந்த கூட்டாட்சி அமைக்கப்பட்டு விட்டது.

பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள், வேலை வாய்ப்பு, பிரயாணத்துறை உட்பட 8 அமைச்சரவைகள் சமூக ஜனநாயகக்கட்சி (SPD) இடமும் உள்நாட்டலுவல்கள், பொருளாதாரம் போன்ற துறைகள் CDU / CSU இடமும் கொடுக்கப்பட்டுள்ளன.

Edmund Stoiber உள்நாட்டமைச்சராகப் பரிந்துரைக்கப்பட்டார். இவர் Bayern மாநிலத்தில் மட்டுமே தளங்களைக் கொண்ட கிறிஸ்துவ சோசலிசக் கட்சியின் தலைவர்.

வலதுசாரி பழமைவாத, அமெரிக்க ஆதரவுக் கருத்துடைய இவர் Bayern மாநிலத்தை முதலீட்டாளர்களைக் கவரும் பொருளாதாரக் கட்டமைப்பாக மேம்படுத்தி வருபவரென்றும் ஏனைய மாநிலங்களை விட 10% குறைவான குற்றவியல் சம்பவங்கள் கொண்ட மாநிலமாக மாற்றியவர் என்றும் வலதுசாரிகளாலும் முதலீட்டாளர்களாலும் விதந்துரைக்கப்படுபவர்.

ஐரோப்பியக் கூட்டில் ஜேர்மனியின் பொருளாதார பலம் ஓங்கியிருந்தாலும் வேகமாகக் குறைந்து வரும் அதனது முதலீட்டாளர்களின் தொகையும் அவ்வப்போது பயமுறுத்தும் எண்ணெய் விலைகளும் 89 பில்லியனாக அதிகரித்திருக்கும் கட்டப்படாத வரிச் சுமைகளும் உள்நாட்டுப் பொருளாதாரத்திற்கு நெருக்கடிகளைக் கொடுத்து வருகிறது. முதலாவது உலகப்போருக்குப் பின்னான சூழலில் ஜேர்மனியின் மூலதனத்தின் விரிவாக்கத்தை வேண்டிய தவிப்பே பாசிசம் உருவாகக் காரணமானது. அடிப்படையில் இன்றும் ஜேர்மனியின் மூலதனத்திடம் அந்தத் தவிப்பு இருக்கிறது. ஆனால் புறச்சூழல் மிகவும் மாறிவிட்டது. 17 வருட CDU / CSU ஆட்சியும் 7 வருட SPD + பசுமைக் கட்சி ஆட்சியும் முதலாளித்துவப் பொருளாதாரக் கொள்கைகளைக் கடைப்பிடித்தனர். இந்த 24 வருடங்களிலும் இவர்கள் கடைப்பிடித்த உலகமயமாக்கல் கொள்கையானது SPDஇன் இறுதி ஆட்சிக்காலங்களில் அதன் உள்நாட்டு விளைவுகளைக் கண்டது. இவற்றைச் சமாளிக்க அறிமுகப்படுத்தப்பட்ட சீர்திருத்தத் திட்டமானது சமூக நலத்திட்டங்களை ரத்து செய்வதன் மூலமும் கல்வி/மருத்துவ நிறுவனங்களை தனியாருக்குக் கொடுத்து இவற்றிற்கான வசதிகளைக் குறைப்பதன் மூலமுமே மூலதனத்திற்குப் பங்கம் விளையாமல் சமாளிக்க முயன்றது.

இந்தத் சீர்திருத்தத் தொடரில் சமூக உதவி பெறுபவர்களை மணித்தியாலம் 1.50€ கூலி பெறும் தொழில்களுக்குப் போக நிர்ப்பந்திப்பதன் மூலம் நிரந்தரத் தொழிலில் உள்ளவர்களின் வேலை நேரத்தையும் இதன் மூலம் அதற்கான நலன் தொகைகளைக் குறைத்தல், அதிகரித்து வரும் வேலை நிறுத்தத்தினால் கம்பெனிகளுக்கு ஏற்படும் நட்டங்களைச் சமாளித்தல், புள்ளிவிபரத்தில் வேலை இல்லாதவர் தொகையைக் குறைத்துக்காட்டல் என்ற நோக்கங்கள் நிறைவேறுகின்றன.

'1.50€ வேலை' என்ற திட்டத்திற்காக 22,5 பில்லியன் யூரோக்கள் செலவழிக்கப்படுகின்றன. மாதமொன்றிற்கு ஒருவரிற்கு 1,500 யூரோக்கள் எனும்படி செலவளித்தே இந்த 1,50€ வேலைத்திட்டம் நடத்தப்படுகிறது. உண்மையில் இந்தத்தொகையுடன் ஒருவருக்கான தொழில் வாய்ப்பை உருவாக்கலாம். ஆனால் உத்தரவாதமற்ற எந்த நலத்திட்டங்களும் உள்ளடக்கப்படாத இத்திட்டத்தினால் 504,7 பில்லியன் இலாபங்கள் நிறுவனங்களுக்குக் கிடைக்கின்றன.

சுயதொழில் வாய்ப்புத் திட்டங்களில் பெரும்பாலானவர்களை உள்ளடக்குவதன் மூலம் வேலை இல்லாதவர் தொகையைக் குறைத்துக்காட்ட முயன்றாலும் சென்ற அரை வருடத்தில் 210 000 பேர் நிலைமைகளைச் சமாளிக்க முடியாமல் மீண்டும் வேலை தேடும் படலங்களை ஆரம்பித்துள்ளனர். தொழில் நீக்கம், சமூகநலக் குறைப்பு என்பவற்றின் மூலம்

அடுத்த வருடம் 1 பில்லியன் இலாபத்தை தனியார் முதலாளிகளுக்கு ஈட்டிக் கொடுக்கலாம் என்று அரசு அறிவிப்பு சொல்கிறது. Mercedes Crystal என்ற கார் நிறுவனத்திலிருந்து 8,500 தொழிலாளர்கள் செப்டெம்பர் மாதம் வேலை நீக்கம் செய்யப் பட்டுள்ளனர்.

2006 இல் வேலை இல்லாதவர்களிற்கான காப்புறுதி 0,5%இலிருந்து 6%ஆக குறைக்கப் படவுள்ளது. சமூக அசமத்துவத்தின் விளைவுகள் பரவலாகத் தொடங்கியுள்ளன. பிரேம காவன் எனும் பகுதியில் குழந்தைகளும் சிறுவர்களும் வறுமையால் பீடிக்கப்படுவது புகார் செய்யப்பட்டுள்ளது.

மக்கள் நலன்களுக்கெதிரான கொள்கைகள் கொண்ட இருபெரும் கட்சிகளின் கூட்டாட்சி அமைந்துள்ளது.

பாராளுமன்றத்தில் எமது அணியின் முதல் 1000 நாட்களுக்குமுரிய கடமை கேடு விளைவிக்கும் இச்சீர் திருத்தத்திட்டத்தை நிறுத்தி, தொழிற்கல்வி வசதிகளைப் பெருக்கி தொழில் வாய்ப்பளிக்குமாறு ஏனைய கட்சிகளை நிர்ப்பந்திப்பது என இடதுசாரிக் கட்சி அறிவித்துள்ளது.

ஆயினும் நிலைமைகள் அவ்வளவு எளிதாய் இல்லை. மாற்றங்களை பாராளுமன்ற எல்லைகட்குள் செய்வது சாத்தியமல்ல என்றும் PDS மற்றும் Lafontaine இன் இடதுகட்சியையும் தவிர்ந்த ஏனைய கட்சிகளையும் உள்ளடக்கிய அரசியல் நடவடிக்கைகளை இந்த இரு கட்சிகளும் தவிர்த்து வருவதையும் இடதுசாரி விமர்சகர்களும் குழுக்களும் விமர்சித்து வருகின்றன.

PDS கட்சி பல பெண் ஆளுமைகளைக் கொண்டிருந்தாலும் பாராளுமன்றக்குழுவில் மூன்று ஆண்கள் தலைமைப் பிரதிநிதிகளாகும் நிலை தொடர்பான விவாதங்கள் நடைபெறுகின்றன. அண்மையில் ஆப்கானிஸ்தானில் ஜேர்மன் படைகள் நிலைகொண்டிருப்பதை எதிர்த்து இடது பாராளுமன்ற உறுப்பினர்கள் 15 பேர் பாராளுமன்ற முன்றலில் நிகழ்த்திய ஆர்ப்பாட்டத்திற்குத் தலைமைதாங்கிய Gesine Lötch போன்ற அனுபவமும் ஆளுமையுங் கொண்ட பெண்களின் பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

மறுபுறத்தில் NPD என்ற புதிய நாஜிக்கட்சியானது தனக்கிருக்கும் சட்டரீதியான அங்கீகாரத்தைப் பயன்படுத்தி பொருளாதார வாய்ப்புக்களைப் பெற்று வருவதுடன் கிழக்கு ஜேர்மனியின் சில மாநிலங்களில் பலம் பெற்று வருகின்றது. கடந்த தேர்தலில் இவர்களிற்கு கிடைத்த வாக்குகளினால் 630,000 யூரோக்களை வருட வருமானமாகப் பெற்றுள்ளனர்.

இத்தகைய நடவடிக்கைகளைக் கட்டுப் படுத்தும் முகமாக கிழக்கு ஜேர்மனியைப் பொறுத்தளவில் ஒரு 'பாசிச எதிர்ப்பு' சரத்தொன்றின் அவசியம் வலியுத்தப் பட்டு வருகிறது.

* * *

கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி (CDU)இன் தலைவி Angela Merkel கூட்டரசாங்கத்தின் அதிபராக பாராளுமன்றத்தால் தெரிவு செய்யப்பட்டுள்ளார். வெளியுறவுக் கொள்கையைப் பொறுத்தவரை ஒப்பீட்டுரீதியில் அமெரிக்காவுடனான உறவு நெருக்கமாகவும் பிரான்சுடனான உறவு சற்று விலகியும் இருக்கும் என்ற அனுமானம் பொதுவாக உள்ளது.

இது அமெரிக்காவின் போர் முனைப்பு, ஐரோப்பியக் கூட்டில் பொருளாதாரம் தொடர்பான இழுபறிகள் என்பனவற்றைப் பற்றிய நிலைப்பாடுகளில் எத்தகைய மாற்றங்களைக் கையாளும் என்பது இனிவரும் காலங்களில் தெரியும்.

அண்மையில் மொன்றியலில் நடைபெற்ற ஐ.நா. வின் சுற்றுச் சூழல் காலநிலைபற்றிய மாநாட்டில் பூமியின் காலநிலை பாதிக்கப்படுவதைக் குறைக்கவும் சமநிலையைப் பேணவும், உற்பத்தி நாடுகள் வளங்களை விரயம் செய்வதையும் நச்சு வாயுக்களை வெளியேற்றும் செயற்பாடுகளையும் கட்டுப் படுத்த வேண்டும் என்ற தீர்மானத்திற்கு இம்முறையும் அமெரிக்கா சம்மதிக்காமல் வெளிநடப்புச் செய்துள்ளது. குறிப்பாக காபனீரொட்சைட்டு அதிகமாக வெளியேறுவது சூழலின் காலநிலைக்கு அச்சுறுத்தலாக இருந்தாலும் அதைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற தீர்மானம் அமெரிக்காவின் அடிப்படைப் பொருளாதாரத்திற்கு அச்சுறுத்தலாக இருந்து வருகின்றது.

அமெரிக்காவின் எண்ணெய், கார் உற்பத்தி, நிலக்கரி போன்றவற்றைக் கட்டுப்படுத்தும் பெருங் கொம்பனிகள் காலநிலை பாதுகாப்பு பற்றிய தீர்மானத்திற்கு (UNFCC, United Nation Framework Convention on Climate Change) பலத்த எதிர்ப்பு தெரிவித்து வருகின்றது.

உலகப் பொருளாதாரத்தை யார் கையில் வைத்து உருட்டுவது என்ற போட்டியில் முன்னணி வகிக்கும் பெருந்தன நாடுகள் அனைத்தினதும் (ஜேர்மன் உள்ளிட்ட) பொருளாதார இருப்பைத் தற்சமயம் தீர்மானிப்பது கார் உற்பத்தியும் எண்ணெய்ச் சந்தைக்கு யார் தலைமை என்பதுவுமே.

எனவே காலநிலை பற்றிய கட்டுப்பாட்டுத் தீர்மானங்கள் இவர்கள் எல்லோருக்கும் சங்கடங்களே.

புதிய அதிபர் Angela Merkel இத்தகைய விடயங்களில் அமெரிக்காவுக்கு வெளிப்படையான ஆதரவு தெரிவிப்பாரா என்பது காலப் போக்கில் தெரிய வரலாம். ஜேர்மனியின் உள்/வெளிப் பொருளாதாரத்தை

காப்பதற்காக சூழலுக்கு ஒவ்வாத வாயுக்களை வெளியேற்றும் அலுமினியமும் இரசாயனப் பொருட்களும் ஏராளமாக எரிக்கப்படுகின்றன.

❋ ❋ ❋

தேர்தலில் கூட்டாகச் செயற்பட்ட இடதுசாரிக் கட்சியான PDSஉம் சமூக ஜனநாயகக் கட்சி (SPD)இல் இருந்து பிரிந்தவர்களால் அமைக்கப்பட்ட WASG கட்சியும் 2007 வரை கூட்டுக்கட்சியாக இயங்கும் என PDSஇன் மாநாட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது.

"இது ஒரு வரலாற்று நிகழ்வு" என்றும் "கிழக்கிலும் மேற்கிலுமாக எமக்கு ஆதரவளித்த 4,2 மில்லியன் மக்களின் விருப்பம் தமது இரு கட்சிகளும் இணைந்து ஒரு கட்சியாவதே" என இக் கூட்டு சார்பில் அறிவிக்கப்பட்டது.

அதே சமயம் "ஒரு பலமான இடதுசாரி மாற்றீடாக இருக்கவேண்டுமானால் ஆட்சியாளர்களின் வலதுசாரித் திட்டங்களுக்கெதிரான அடிப்படை மாற்றங்களைக் கோருவதே" என PDS கட்சிக்குள்ளிருந்தும் விமர்சனங்கள் வருகின்றன.

இன்னொரு புறம் இக்கூட்டானது அடிப்படையில் ஒரு இடதுசாரி முன்னணி இல்லையெனவும் ஏனைய பல இடதுசாரிக் குழுக்களின் அபிலாஷைகளையும் பிரதிபலிக்கவில்லை எனவும் அடிப்படை மாற்றங்களிற்கான தீவிரமான செயற்திட்டங்களைக் கொண்ட இக் குழுக்களை உள்ளடக்காமல் புறக்கணித்து ஆட்சியாளருடன் சமரசம் செய்யும் கூட்டுத்தான் இது எனக் கூறப்பட்டு வருகிறது.

குறிப்பாக மேற்கு ஜேர்மனியில் பாரம்பரியங்களைக் கொண்ட DKP (முன்னாள் மொஸ்கோ கம்யூனிஸ்ட் கட்சி) மற்றும் KPD (மாவோயிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி) என்பன இவ்விமர்சனங்களை வைக்கின்றன. இப் பெரிய இடது சாரிக் கூட்டானது 'கம்யூனிஸ்ட்டுகள்' என்று தம்மை ஒதுக்குவதாகவும் இவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

காதல் பற்றிய ஒரு கவிதை

மூலம் :
Simen Skjønsberg

தமிழில்:
கலைவாணி

நாங்கள்
காதலைப்பற்றிப் பேசுவோம்:
உனது முறையில்
தேநீர்க்குவளையை வைத்திருப்பதுபோல,
உனது வகையில்
அரசியலை விவாதிப்பதுபோல,
உனது வழியில்
காற்றை எதிர்கொண்டு போவதுபோல.

ஆம்,
நாங்கள் காதலைப்பறிப் பேசும்பொழுது:
உனது தலைமுடி வியர்வையினால் சுருள்கிறது,
உனது ஆடைகள்
தொடைகளோடு இறுகிப்போகின்றது,
உனது கைகளுக்கு
மிகச்சிறிய கையுறையும் பொருதாகி விடுகிறது.

நிச்சயமாக நான்
காதலைப்பற்றித்தான் பேச விரும்புகிறேன்:
நீ இடைநிறுத்தி
கண்தொடு காட்சிகளில் மூழ்கிவிடுகின்றாய்,
ஒரு புத்தகத்தைத் திறந்து
லாகவமாக கைகளில் ஏந்திக் கொள்கிறாய்,
கால்களை நன்றாக நீட்டிக்கொண்டு
உணவை சுவைத்துண்கிறாய்.

இருந்தபோதிலும்
நான் காதலைப்பற்றிப் பேச விரும்புகிறேன்:
நீ மிகவும் நிதானமாய்
ஆடைகளைக் களைகிறாய்,
வெளியிலிருந்து வீடு திரும்பும்போது
செய்தித்தாளொன்றுடன் வருகிறாய்,
நீ வாகனத்தை செலுத்தும்போதெல்லாம்
வழமைக்கு மாறாக
சற்று வேகமாகவே செலுத்துகிறாய்.

இனியும் நான்
காதலைப்பற்றி பேசப்போவதில்லை,
இதை மட்டுமே
இறுதியாகச் சொல்லிவிடுகிறேன்

உனக்குத் துல்லியமாகத் தெரியும்
எவ்வாறு ஒரு சலவை யந்திரம்
கையாளப்பட வேண்டும் என்று,
துகில்கலைந்த தொடைகள்
போர்வையை விட்டு விலகும்போது
என்ன செய்வதென்பதும் உனக்குத் தெரியும்.

நிச்சயமாக
சட்டைப்பொத்தான் தைப்பதற்கும்
உனக்கென்றொரு வழிமுறை
உன்னிடம் இருக்கும்.





விடியக்காலமையே கிளம்பிவிட்டான் சூரியன். வேட்டைநாயைப் போலை நாக்கைத் தொங்கப் போட்டபடி. இரண்டு நாளாய் இவன்ரை தலைக்கறுப்பையே காணவில்லை. கொட்டு மழை. பட்டகாலிலைதான் படும் எண்டது போலை, ஊரைவிட்டுத் துரத்தப்பட்ட சனங்களை பின்னாலை நிண்டு நல்ல துவரந்தடியாலை அடிச்சடிச்சு மாட்டைக் கலைக்கிறது போலை, அடிச்சடிச்சுப் பெஞ்சுது மழை, பாட்டம் பாட்டமாய்.

இண்டைக்கு எண்டால் நரகாலி வெய்யில். வந்ததும் வராததுமாய் அலையுது. ஒரு இடம் மிச்சம் விடாமல் மோந்து மோந்து திரியுது. சனமெல்லாம் போட்டுதோ இல்லாட்டி இன்னமும் மிச்சமிருக்குதோ எண்டு கணக்கெடுக்குமாப் போலை.

"கண்டறியாத சனியன் பிடிச்ச வெய்யில்" வாயுக்குள்ளை திட்டினபடி சைக்கிளை உன்னி மிதிச்சான் மயன். அவன்ரை முழுப்பெயர் மாய்வன். எல்லாரும் அவனை 'மயன்' எண்டு இல்லாட்டி 'மகி' எண்டுதான் கூப்பிடுகிறவை. இப்ப அவனுக்கு அவசரம். எவ்வளவுக்கு முடியுமோ அவ்வளவு கெதியிலை வீட்டை போய்த் திரும்பிவிட வேணும் என்கிற அவசரம்.

ரோட்டெல்லாம் ஒரே சேறும் சகதியுமாய்க் கிடக்கு. ரோட்டெண்டு சொன்னாப்போலை தார்போட்ட ரோட்டில்லை. அது முந்தி. இப்ப எல்லாம் குண்டும் குழியுமாப் போச்சு. பத்தாததுக்கு சனம் தூக்கேலாமல் போட்டிட்டுப் போன மூட்டை முடிச்சுகளும், சில்லறைச் சாமானுகளும், வார் அறுந்து போன செருப்புகளும் இறைஞ்சு போய்க் கிடக்கு. போனவர்கள் யாரோ ஒதுக்கி ஒதுக்கி விட சில இடங்களிலை தொட்டந்தொட்டமாய் குவிஞ்சும் கிடக்கு.

சைக்கிள் முன் சில்லு ஒரு செருப்பிலை இடறுண்டு முன்னாலை கிடந்த கிடங்கிலை விழுந்து நிமிந்திச்சு.

"பூணாவில் செருப்பு... செருப்புப் போட்டுக் கொண்டு வெளிக்கிட்டிட்டுதுகள் நாயள். பொடியள் வெளிக்கிடச் சொன்னால் வெளிக்கிட வேண்டியதுதானே. பிறகென்னத்துக்கு செருப்பும் மசிரும் மண்ணாங்கட்டியும்"

அவன் எதையும் நினைச்சுக் கதைக்கயில்லை. அவனை அறியாமல் வாய் திட்டியது. அவனுக்கு உண்மை தெரியாமல் இல்லை.

யுத்தம்.

யுத்தத்துக்கை வாழுகிற போராட்டம் அவனுக்கு.

ஒவ்வொருத்தனும் சூழலுக்கு ஏற்றபடிதான் இசைவாக்கம் அடைஞ்சிருக்கிறான். சந்தர்ப்பத்துக்கு ஏத்தமாதிரி கதைக்கிறதுக்கும் வாழுறதுக்கும்.

இவனும் இதே சனத்தோடை சனமாய் ஊரைவிட்டு வெளிக்கிட்டவன் தான். இவன் எண்டு சொன்னாப்போலை மயன் தனியாளில்லை. பெரிய குடும்பம். இவன்ரை அம்மா. மூண்டு தம்பியவை. பத்தாததிற்கு அம்மம்மாக் கிழவி. அவள் வருத்தகாரி வேறை. தகப்பன்காரன் பொயிலை சுருட்டு வியாபாரம். கிளிநொச்சியிலை நிண்டவர். இவனும் தேப்பன் காரனோடைதான் நிண்டவன்.

"டேய் மகி, நிலைமை அவ்வளவு நல்லாத் தெரியல்லையடா. ஏதோ நடக்கப் போறதுமாதிரி அசுமாத்தம் தெரியிது. ஒருக்கா வீட்டை போய் செலவுக்குக் கொஞ்சம் காசு குடுத்துப்போட்டு எல்லாரையும் பாத்துக் கொண்டு வா"

தேப்பன்காரன் சொன்னாப்போலை வெளிக்கிட்டவன். வீட்டை வந்து கால் ஓயவில்லை. ஒரு நாளிலை நாட்டு நிலமை தலைகீழாய் மாறிப்போச்சு. ஆமி பலாலியிலை இருந்து ஷெல்லடிச்சுக் கொண்டு வெளிக்கிடத் தொடங்கியிட்டான். அடியெண்டா இம்மை மறுமையில்லாத அடி. மழை கொட்டுறது போலை. ஒண்டு விழுந்த சத்தம் ஓயுறதுக்கு முன்னாலை மற்றது வெடிக்கும். யாருக்கும் சனத்தைப்பற்றிக் கவலையில்லை. எல்லாருக்கும் நிலம் பிடிக்கிற ஆசைதான். பெடியள் சொல்லிப் போட்டாங்கள். எல்லாரும் வீட்டைக் காலி பண்ணிக்கொண்டு ஊரைவிட்டு வெளிக்கிடுங்கோ. இனி ஒண்டுஞ் செய்யேலாதெண்டு. என்னத்தைக் காலிபண்ணுறது. முடிஞ்ச அளவுக்கு எல்லாரும் வெளிக்கிட்டுதுகள். போட்டதுகள் போட்டபடி கிடக்க, கையிலை அம்பிட்டதைப் பொறுக்கிக்கொண்டு.

மயனும் எல்லாரையும் இழுத்துக்கொண்டு வெளிக்கிட்டான். செம்மறிப்பட்டியைப் போலை இரவிரவாய் நடந்துதுகள். இடிபட்டு நெருக்குண்டு களைச்சு விழுந்து. இனித் தொடரேலாது எண்ட நிலை. பளை தாண்டினதுக்குப் பிறகு எல்லாரையும் ஒரு வீட்டுத் தாழ்வாரத்திலை விட்டுப்போட்டு நிமிர்ந்தான் அப்பதான் அம்மா சொன்னாள்:

"தம்பி அம்மம்மாவின்ரை மருந்துப் பொட்டலத்தைக் காணயில்லை. எடுத்து வைச்சதாய் எனக்கு ஞாபகத்தையும் காணயில்லை. அவசரத்திலை மறந்து போனன் போலை கிடக்கு. இப்ப என்ன செய்யிறதெண்டு ஒண்டுமாய் விளங்கயில்லை"

"வெளிக்கிடையிக்க பாக்க வேண்டாம். என்னம்மா நீ. இவ்வளவு தூரம் கஸ்டப்பட்டு அம்மம்மாவை கொண்டு வந்தும் என்ன பிரியோசனம். மருந்தில்லையெண்டால்."

பேசிப்போட்டு வெளியிலை வந்து கொஞ்சநேரம் வானத்தைப் பாத்துக்கொண்டு நிண்டான். ஒரு ஐஞ்சு நிமிசம் வரையில் ஆகியிருக்கும். இருந்தாப்போலை என்ன நினைச்சானோ தெரியாது.

"சரி, சரி. நான் போய் எடுத்துக் கொண்டு வாறன். நீங்கள் கொஞ்சம் அவதானமாய் இருங்கோ"

சொல்லிப்போட்டு சைக்கிள் கட்டையையும் தள்ளிக் கொண்டு வெளிக்கிட்டிட்டான்.

"எட மோனை வந்ததும் வராததுமாய் எங்கையடா போறாய். போகாதையடா மோனை. நான் செத்தாலும் பறவாயில்லை. இந்தக் கிழட்டுக்கட்டை கிடந்து என்னத்தைச் செய்யப்போகுது. உங்களுக்குத்தான் இடைஞ்சல். பிரளுவானுகள். பாடையிலை போவானுகள். எந்தப் பத்தேக்கை படுத்துக் கிடப்பானுகளோ தெரியாது. நீ போகாதையடா மோனை"

கிழவி தலையிலையடிச்சு குழறிக்கூடப் பாத்திச்சுது. அவன் காதிலை விழுத்தாத மாதிரி வெளிக்கிட்டுட்டான். கிழவி தொடர்ந்து திட்டிக் கொண்டே கிடந்தது.

தாய்க்காரிக்கு நல்லாய்த் தெரியும். அவன் சொல்வழி கேளான் எண்ட விசயம்.

"சும்மா கிடந்தேன் பிதற்றிறாய். பேசாமல் கிடவேன்"

அவள் கிழவியைத்தான் அதட்டினாள். மயனுக்கு நல்லாய்த் தெரியும். ஆமி இன்னும் காம்பை விட்டு வெளிக்கிடயில்லை. இப்ப கண்டபடி ஷெல்தான் குத்திறாங்கள். அதுக்கிடையிலை போய் வந்திடலாம் எண்டது எல்லாம் ஒரு விதமான அனுபவந்தான். விருத்தெரிஞ்ச நாளிலை இருந்து போருக்கை வாழ்ந்த அனுபவம்.

இவன் பள்ளிகூடத்துக்கெண்டு திரிஞ்சவன். இவன்ரை தமையன் காரன் இயக்கத்துக்கெண்டு போனவன்.

பின்னாலை சுட்டாங்களோ, முன்னாலை சுட்டாங்களோ, ஆர் சுட்டாங்களோ தெரியாது. இரண்டு கிழமைக்குப் பிறகுதான் சுதன் வந்து சொன்னான், எங்கையோ ஒரு சண்டையிலை செத்துப்போனான் எண்டு. சுதன் எண்டது தமையன் காரன்ரை சினேகிதப் பெடியன். இரண்டு பேரும் சேர்ந்து தான் இயக்கத்துக்கு போனவை.

பதினைஞ்சு நாளாய் தாய்க்காரி அன்னந்தண்ணியில்லாமல் கிடந்தாள். தேப்பன் அடிச்சுப் போட்ட பாம்பு மாதிரி சுருண்டு போனார். கிழவி தன்னாரவாரம் ஒரே ஒப்பாரி. சின்னன்களுக்கு ஒண்டும் விளங்கயில்லை. ஏதோ நடக்கக் கூடாதது நடந்திட்டுது எண்டு மட்டும் தெரியும். ஒவ்வொண்டும் மூலைக்கு மூலை கிடந்ததுகள். கடைசி மட்டும் தாயின்ரை மடியுக்கை சுருண்டு போய் கிடந்திச்சு.

மயன்தான் கொஞ்சம் விருத்தெரிஞ்ச பொடியன். வெளிக்கிட்டிட்டான், குடும்பப் பாரத்தை நான் சுமக்கிறன் எண்டு.

ஊரிலை சுத்துக் கொட்டிலிலை போய் சுருட்டு பொயிலை வாங்கிறது. சைக்கிள் மிதிச்சு மன்னார், வவுனியா, முல்லைத்தீவெண்டு கொண்டு போய் குடுக்கிறது. அங்கை சீனி, பருப்பு, கருவாடு எண்டு கட்டிறது. ஊரிலை கொண்டு வந்து விக்கிறது. மூண்டு நாலு நாள்ப் பயணம். சிலசமயம் வாரக் கணக்கிலையும் ஆகும். மூண்டு நாலு மூடையை ஒண்டாய்க்கட்டி, சைக்கிள் உழக்கி, நோட்டம் பாத்து, கிளாலிக் கடலுக்காலை கொண்டு வந்து சேர்க்கிற தெண்டால் சும்மாவே.

இப்ப மூண்டு வரிசமாய்ப் போச்சு. தேப்பன்காரனும் வியாபாரத்துக்கு நல்ல ஒத்துழைப்பு இவன்தான் எல்லாத்துக்கும் மூப்பு. எந்தச் சிக்கலுக்காலையும் சுழிச்சுக் கொண்டு போய் வருவான். இயக்கப் பொடியளும் வலு சினேகிதம். மாவீர்க்குடும்பமெண்டு சலுகையள் வேறை. ஆளும் வலு சுழியன்.

விடியக்காலமை. இளந்தாரி வெய்யில். சுட்டெரிக்கிது. இரண்டு நாளாய் ஆத்தலைஞ்சு திரிஞ்சது. தலை வேறை கிறுகிறுக்கிது. தேயிலை போட்டு வெறும் சுடு தண்ணியைக் குடிச்சுப் போட்டு வந்தது. வயிறு புகையுது.

விடியப்புறம் சத்தம் கொஞ்சம் ஓய்ஞ்சு கிடந்தது. பழையபடி ஷெல் குத்தத் தொடங்கிட்டாங்கள். ஷெல் குத்திற சத்தம், அது பறக்க எடுக்கிற நேரம், விழுந்து வெடிக்கிற சத்தம், திசை. படபடவெண்டு இரண்டு பக்கமும் மாறிமாறிச் சுடுபடுகிற சத்தம் எல்லாத்தையும் கூட்டிக் கழிச்சுப் பார்த்தான். ஆமி 'காம்ப்' பிலையிருந்து கனதூரம் முன்னேறயில்லை. ஒரு கணம் வெறுத்துப்போனது போலை மனம் பேசத் தொடங்கிச்சுது.

'சீ... எவ்வளவு கஸ்டம். நாய் அலைச்சல். இப்பிடி ஒரு மனிச வாழ்க்கை தேவையா? ஒரு ஷெல் எண்டாக்கூட பறவாயில்லைப் போலை கிடக்கு. ஒரு அறிவு வேண்டாம். கண்டபடி ஷெல் குத்தினா ஆர் மிஞ்சிறது. தங்கடை சனமென்டா இப்பிடி கொல்லுவாங்களோ? பெடியளுக்குத்தான் அறிவு வேண்டாம். உடனை வெளிக்கிடுங்கோ எண்டு சொன்னால் சனம் குழந்தை குட்டியளோடை எங்கை போகும். பாவங்கள். என்னும் எத்தினை காலத்துக்கு ஆத்தலையப் போறோமோ?'

தனக்குத்தானே அலுத்துக் கொண்டான்.

மண்டைக்குள் ளையிருந்து பெரிய குறவணவன் புழுவொண்டு நோண்டத் தொடங்கியிட்டுது. சரியாய் ஐஞ்சு வரியத்துக்கு முந்தி மண்டைக்குள்ளை பூந்த புழு. நினைச்சுப் பாத்தா நேத்து நடந்ததைப் போலைக் கிடக்கு. சரியாய் இதே மாதந்தான், ஒரு பின்னேரம் போலை. ரோட்டுரோட்டாய் லவுஸ் பீக்கர் கட்டி ஒலிபரப்பத் தொடங்கியிட்டாங்கள். இருபத்திநாலு மணித்தியாலத்திலை சோனகர் எல்லாரையும் நாட்டை விட்டு வெளியேறச் சொல்லிப் போட்டாங்கள். ஆளுக்கு ஐந்நூறு ரூபா காசு மட்டும் கொண்டு போகலாம். வேறை ஒரு சாமானும் கொண்டு போக முடியாது எண்டு கடுமையாய் சொல்லிப்போட்டாங்கள். தமிழ்ச் சனமொண்டும் மூச்சுவிடயில்லை.

அதுகள் எங்கை போகுங்கள்? பரம்பரை பரம்பரையாய் வாழ்ந்த வீடு, தொழில்துறை எல்லாத்தையும் விட்டு எப்பிடிப் போகுங்கள்? இரவிரவாக நித்திரையில்லை. எல்லா வீட்டிலையும் இரவிரவாய் விளக்கு வெளிச்சம் தெரிஞ் சிச்சுது. ஆரும் நித்திரை கொள்ளயில்லை. அடுத்த நாள் காலையிலை எல்லாரும் வரிசையிலை நிண்டிச்சுதுகள் சோர்ந்து போய் அழுத முகத்தோடை. குழந்தை குட்டியள், குஞ்சுகள், குருமான்கள் எல்லாரும்.

ஊரிலை சில சனங்கள் விடுப்புப் பார்க்கப் போயிருந்துகள். இவனும் பள்ளிகூடத்தை 'கட்' பண்ணிக்கொண்டு பெடியளோடை பெடியளாய் விடுப்புப் பார்க்கப் போயிருந்தவன். அப்ப அவனுக்கு அது ஒரு பெரிய விஷயமாய் படயில்லை. அதுதான் போகட்டும். பாவங்கள் எண்டுகூட நினைக்கத் தோன்றயில்லை. தனக்குத்தனக்கெண்டு வரயிக்கைதான் சுளகு 'படக்கு! படக்கு!' எண்டுமாம். இப்பதான் அவனைப் புழு அரிச்சரிச்சு நோண்டுது. பழி. பெரிய பழி. அரசன் அண்டறுப்பான். தெய்வம் நிண்டறுக்கும் எண்டு சொல்லுவினம். இப்ப எல்லாம் உடனையுடனையே நடக்குது. நாங்கள் செய்த வினையின் வெளிப்பாடுதானோ இது எண்டிறது போலை நோண்டுது.

இல்லை, இருக்காது எண்டு வலிஞ்சு கட்டி மறுக்கிறான். எப்பிடியாச்சும் புழுவைப் பிடிச்சு வெளியிலை விட முனையுறான். முடியேல்லை. அது குடையுது. பல்லைக் கடிச்சுக்கொண்டு சைக்கிளை மிதிச்சான். இடையிலை ஒரு பொட்டல் வெளி. றோட்டுக்கரையிலை இருந்து கொஞ்சந்தள்ளி ஐஞ்சாறு பேர் கூட்டமாய் நின்று ஏதோ செய்யினம். திரும்பிப் பாத்தான். அவையின்ரை சொந்த அலுவல் மாதிரித் தெரியயில்லை. பாவம். அவையளுக்கு என்ன அவசரமோ தெரியாது. இவன்ரை இளகின மனம் கொஞ்சம் பதகளிச்சுது. தன்ரை உடம்புக்கு கொஞ்சம் ஓய்வு தேவை போலையும் கிடந்திச்சுது. சைக்கிளை பூவரசோடை சாத்தினான். காரியம் நடக்கிற இடத்தைப் பாத்து நடந்தான்.

இரண்டு பேர் கிடங்கு வெட்டுகினம். ஒத்தாசைக்கு இரண்டு மூண்டு சனம் சுத்தி நிக்கிது. பக்கத்திலை ஏதோ காவோலையாலை மூடிக்கிடக்கு.

இவன் எதுவும் கேக்கயில்லை.

"ஆ ரெண்டு தெரியல்லைத் தம்பி. செத்த பிணம். தனிய வந்திச்சுதோ, ஆரும் கூட்டி வந்தினமோ தெரியாது. இரண்டு நாளாய் அனாதையாய் கிடக்கு. மனிசப் பிணம். இப்பிடி விட மனசு கேக்கையில்லை. நாளைக்கு எங்களுக்கும் வரலாம். அதுதான் அடக்கம் பண்ணிறம்"

இவனைப் பாத்திட்டு இயக்கப் பெடியன் எண்டு நினைச்சோ என்னவோ, ஒரு செய்யக்கூடாத காரியத்தை செய்யிறமாதிரிப் பயந்த மனநிலையிலை ஒரு கிழவன் சொல்லி முடிச்சுது.

இவன் ஓலையை தூக்கி பிரேதத்தை பாத்தான் அடையாளந் தெரியேல்லை. கொஞ்சம் உப்பிப் போச்சு. சாதுவாய் மணமும் வரத்

தொடங்கியிட்டுது. காவோலை யாலை மெல்ல மூடினான். தானும் கொஞ்ச நேரம் நிண்டு அவைய ளுக்கு உதவ வேணும் போலை மனசு சொல்லிச்சிது.

நேரத்தைப் பாத்தான். நிக்கிற துக்கு சரிப்பட்டு வராது. இடத்தை விட்டு நைசாய் கழண்டான். சைக்கிளை எடுத்து மிதிக்கத் தொடங்கினான்.

ஒரு முக்கால் மணி நேரத்தை தாண்டியிருக்கும். இப்ப வெடிச் சத்தங்கள் கொஞ்சம் தெளிவாய் கேக்குது. பக்கத்திலை விழுகிறது போலையும் பிரமை. வடக்குப் பக்க மாய் காதைக்குடுத்து அவதானிச் சான். சத்தங் கேட்கிற தூரத்தை அனுமானிக்க முடிஞ்சுது.

கே.கே.எஸ். றோட்டை ஊடறுத் துத்தான் போகவேணும். றோட் டிலை மருந்துக்கு கூட ஒரு சனமும் கிடையாது. சுடலை வெளியைப் போலை நீண்டு கிடந்திச்சு. மனசு 'பக்... பக்...' எண்டு அடிக்கத் தொடங்கியிட்டுது. மேலாலை ஷெல் கூவிக் கொண்டு போகுது. டவுன் பக்கமாய் ஆள்காட்டி ஹெலி ஒண்டு வட்டம் போடுது.

ஒழுங்கையிலை சைக்கிளை விட்டான். இருந்தாப்போலை எங் கையோ ஒரு மனுசக் குரலொண்டு அவலமாய் கேக்குது. பிரமையோ! நம்பமுடியேல்லை. சைக்கிளை நிறுத்தி காதைக் குடுத்துக் கேட்டான். சத்தம் இல்லை. வெறும் பிரமைதான் எண்டு நினைச்சு மனதைத் திடப்படுத்திக் கொண்டு சைக்கிளிலை ஏற திரும்பவும் சத்தம்.

"ஐயோ! ஆராவது காப்பாத் துங்கோ". பேசாமல் போவெண்டு மனசு சொல்லிச்சு. இவன் கேக்க யில்லை. சைக்கிளை வேலி யோடை சாத்தினான். சத்தம் வந்த திசையிலை நடந்தான். ஒரு பழைய கல்வீடு. கதவெல்லாம் திறந்தபடி கிடக்கு. உள்ளுக்கை கால் வைக்கவும் தயக்கமாயிருந்திச்சு.

சத்தம் எங்கையிருந்து வருகு தெண்டு அனுமானிக்க முடி யேல்லை. வீட்டுக்கை நுளைஞ் சான். கண்மூடித் திறக்கிறதுக் கிடையிலை எல்லாப்பக்கமும் பாத்தாச்சு. யாரும் இல்லை. அப்ப சத்தம் எங்கையிருந்து வருகுது. வீட்டுக் கோடிப்பக்கம் போனான். தாழ்வாரத்தோடை சேர்த்து ஒரு பங்கர். பனங்கொட்டுகளாலை மூடி மேலை மண் மூடை அடுக்கிக் கிடக்கு. இறங்கிற படியெல்லாம் மழையீரம். அவசரத்திலை வழுக்கி விழப் பாத்திட்டான். தன்னை சுதாரிச்சுக் கொண்டு கீழை போனான்.

கிழவன்.

பக்கவாதம்.

மழை ஈரத்துக்கு பூத்து சிலிர்த் துப் போய்க் கிடக்கு நெருப்பெ றும்பு. கிழவனை ஈச்சுப் பிடிச்சுக் கடிக்கிது. கிழவன் வலிதாங்காமல் துடிக்கிது. தன்ரை இடக்கை யாலை விறாண்டி விறாண்டி, விறாண்டின இடமெல்லாம் இரத்தம் கசியுது.

இவனுக்கு இப்ப எதைப்பற்றியும் யோசினை இல்லை. முதல் வேலை யாய் கிழவனை வெளியிலை கொண்டு வந்தான். தூக்கிக் கொண்டு போய் கிணத்து மிதி யிலை இருத்தினான். துலாவைத் தாட்டு நாலு வாளி தண்ணி அள்ளி வார்த்தான். வீட்டுக்கை தூக்கிக் கொண்டு போய் கட்டிலிலை கிடத்தி துவாய்த் துண்டாலை துடைச்சான். கொஞ்சம் எண்ணை பூசினால் வேதனை குறையும் எண்டு நினைச்சிருப்பான் போலை. குசினிப் பக்கம் போனான். அடுப்படி புகைக்கூட்டிலை இரண்டு மூண்டு போத்தல் அடுக்கிக் கிடக்கு.

மணந்து பார்த்து நல்லெண் ணைப் போத்திலை எடுத்தான். முடிஞ்சளவுக்கு உடம்பெல்லாம் பூசினான். கிழவன் தன்ரை இடக் கையாலை வலக்கையைத் தூக்கி கும்பிடுகிது. கண்ணிலை கண்ணீர் ஆறாய்ப் பெருகிது. தன்ரை கோணல் வாயாலை தெத்தித் தெத்தி ஏதோ சொல்ல முனையுது. இவனுக்கு விளங்கிக்கொள்ள முடியேல்லை. தெரிஞ்சு கொள்ளி றத்துக்கும் இவனுக்குப் பொறுமை யில்லை. விட்டிட்டுப் போகவும் மனம் இல்லை.

"ஆரோடை இருக்கிறியள்? எங்கை எல்லாரும்?" திருப்பித் திருப்பிக் கேட்கிறான்.

"ம..க..ள் வ..ரு..வா..ள்... மகள் வரு..வா..ள்"

இது மட்டுந்தான் அவனுக்கு விளங்கினது. இவனுக்கு அவையள் மேலை கோவம் கோவமாய் வந்திச்சுது. தூசணத்தாலை பேச வேணும் போலை கிடக்கு.

வெளியிலை வந்தான். மனசு கேட்கயில்லை. காரணமில்லாமல் திரும்பவும் உள்ளுக்கை போனான். கிழவன் கையெடுத்துக் கும்பி டுகிது.

திடீரெண்டு ஒரு ஷெல் எங் கையோ கிட்ட விழுந்து வெடிச்சி ருக்க வேணும். வீடு கோப்புசத் தோடை விழுமாப்போலை அதிருது. கொஞ்சம் பயந்திட்டான். படபட வெண்டு வெளியிலை வந்தான். கிட்டடியிலை ஒரு மோட்டார்

மண்டைக்குள்ளையிருந்து பெரிய நறவணவன்
புழுவொண்டு நோண்டத் தொடங்கியிட்டுது.
சரியாய் ஐஞ்சு வரியத்துக்கு முந்தி
மண்டைக்குள்ளை பூந்த புழு.
நினைச் பாத்தா
நேத்து நடந்ததைப் போலைக் கிடக்கு....

இருபத்திநாலு மணித்தியாலத்திலை
சனங்கள் எல்லாரையும் நாட்டை விட்டு வெளியேறச்
சொல்லிப் போட்டாங்க.
ஆளுக்கு ஐந்நூறு ரூபா காசு மட்டும் கொண்டு
போகலாம். வேறை ஒரு சாமானும்
கொண்டு போக முடியாது எண்டு கடுமையாய்
சொல்லிப்போட்டாங்கள்.



சைக்கிள் சத்தம் கேட்கிது. படலையைத் திறந்து வெளியிலை ஓடி வந்தான்.

ஓ! சுதன்தான்.

நல்லதாப் போச்சு. அவன் நினைக்கிறதுக்கு இடையிலை சுதன் கிட்ட வந்திட்டான்.

"டேய் மயன்... என்னடா! நீ இதிலை நிக்கிறாய்"

"ஒரு அவசரம் மச்சான். நீ வந்தது நல்லதாப் போச்சு. ஒருக்கால் வந்திட்டுப் போ."

மோட்டார்ச் சைக்கிளை மறைவு பார்த்து மரத்துக்கு கீழை விட்டான். தோளிலை கிடந்த 'ஏகே'ஐ கைக்கு மாத்திக் கொண்டான். மயனுக்குப் பின்னாலை நடந்தான்.

கிழவனைப் பார்த்தவுடனை சுதனுக்கு சிரிப்புத்தான் வந்தது.

"ஆரடா இது கிழடு?"

"தெரியாது. ஆனா ஏதாவது செய்யோணும். பாவம் கிழவன்."

"உனக்கென்ன விசரே. இந்த நேரம் தேவையில்லாத சோலி பாத்துக் கொண்டு நிக்கிறாய். நான் போகோணும் விடு"

மயன் பாதையை வழிமறிச்சு நிண்டான். சுதனுக்கு மறுக்க முடியேல்லை. வேற ஆருமெண்டா அவனுக்கும் மறிக்கிற துணிவு வந்திருக்காது. சுதனும் வெடி வைச்சிட்டுப் போயிருப்பான். அண்ணன் காரனை நான்தான் இயக்கத்திலை கொண்டுபோய்ச் சேர்த்து அவன் அநியாயமாய்ச் செத்துப்போனான் எண்டொரு உறுத்தல் எப்பவும் சுதன்ரை மனசுக்கை குடைஞ்சு கொண்டு கிடக்குது.

"சரி இப்ப என்ன செய்யச் சொல்லுறாய்?"

"எங்கையாவது கொண்டுபோய் விடு. நான் தூக்கிப் பின் சீற்றிலை ஏத்தி விடுறன்."

"என்ன கதை கதைக்கிறாய்? சும்மா விசர்க்கதை கதைக்காதை. நடக்கிற காரியமாய்க் கதை."

மயன் கொஞ்சம் உணர்ச்சிவசப் படுகிற சுபாவம் கொண்டவன். முற்கோபி. ஆரோடை என்ன கதைக்கிறதெண்டு தெரியாமல் கதைச்சுப் போடுவான்.

"டேய்!உன்ரை கொப்பர் எண்டா விட்டிட்டுப் போவியா?"

மயன் இப்பிடிக் கேப்பான் எண்டு சுதன் கனவிலையும் எதிர்பார்த்திருக்கையில்லை. பிடரியிலை யாரோ அறைஞ்சது போலை வலிச்சுது. அவன் தன்ரை குடும்பம் பற்றின நினைவே இல்லாமல் இருந்தவன். இப்ப அதுகள் எங்கை ஆத்தலையுதுகளோ?

ஒரு கணந்தான். சுதன் தன்னை சுதாரிச்சுக் கொண்டான்.

"சரி! சரி! இப்ப என்ன செய்யச் சொல்லுறாய்."

"கிழவனை எங்கையாவது கொண்டுபோய் விட்டிட்டுப் போ."

"முடியாதடா.

இதுக்குள்ளை நான் எங்கை கொண்டு போறது? எங்கை விடுகிறது?"

சுதனின் குரல் உடைஞ்சு கெஞ்சல் தொனிப்புடன் வந்திச்சு. மயனுக்கு எப்பிடித் தான் சொல்லத் துணிவு வந்ததோ தெரியாது. டக்கெண்டு சொன்னான்.

"சரி அப்பிடியெண்டால் 'தட்டி'யிட்டுப் போ."

சுதன் திகைச்சுப் போனான்.

"என்ன! கிழவனை கொல்லச் சொல்லுறியா? உனக்கு என்ன நடந்தது? ஏதாவது யோசிச்சுக் கதை. சும்மா விசரைக்கிளப்பாதை. வயசுபோன கிழவன். பாவமடா."

"அதாலைதான் சொல்லுறன், 'தட்டி'ட்டுப் போவெண்டு"

இப்ப மயன்ரை குரலிலை உறுதி இருந்தது. இவன் உண்மையாத்தான் சொல்லுறான் எண்டது சுதனுக்குப் புரிஞ்சு போச்சு. அவனுக்கு என்ன சொல்லுற தெண்டே தெரியேல்லை.

ஒரு நிமிசம் கூடத் தாமதிக்கயில்லை. மயன் திரும்பவும் மௌனத்தை உடைச்சான்.

"இனி ஆரும் வந்து கிழவனைக் கொண்டு போகப் போறதில்லை. கிழவன் பசியிலையும் பயத்திலையும் கிடந்து அழுந்தி அழுந்திச் சாகப் போகுது. பார்! உடம்பெல்லாம் எறும்பு கடிச்சு கிழவன் விறாண்டி விறாண்டி இரத்தம் கொட்டுறதை. பாவம் வலியிலை துடிக்குது. இதைவிடக் கொல்லுறது ஒண்டும் பாவமில்லை. அது தருமம்"

"இல்லை.

நான் கொல்லமாட்டன். என்னாலை முடியாது."

"ஏன்? நீ ஒருத்தனையும் கொண்டதே இல்லையா?"

சுதன் ஒரு கணம் நிலை குலைஞ்சு போனான். அவனுக்கையே அந்தக் கேள்வி இரைஞ்சு கொண்டு கிடந்திச்சு. அவன் நீண்ட காலமாயே வீட்டை விட்டு வெளிக்கிட்டு இயக்கத்தோடை திரிஞ்சவன். அனேகமான சண்டையள்லை முன்னுக்கு நிண்டிருக்கிறான். எல்லாத்தையும் விட இந்தியன் ஆமிக் காலத்திலை கனபேரை 'போட்டுத்தள்ளி'யிருக்கிறான். அவன் பத்து வார்த்தை கதைச்சால் நாலு வார்த்தையாவது 'போட்டுத் தள்ளிப் போடுவன்' என்றுதான் இருக்கும்.

"டேய்... டேய்... சும்மா கதைச் சுக் கொண்டிராதை. போட்டுத் தள்ளிப் போட்டு போயிடுவன்."

"அதைத்தான் நானும் செய்யச் சொல்லிறன்."

சுதன் வாயடைச்சுப்போனான். அவனுக்கு என்ன செய்யிற தெண்டும் தெரியேல்லை. எப்பிடிப் புரிய வைக்கிறதெண்டும் தெரி யல்லை.

"டேய்... இப்ப என்ன செய்யச் சொல்லுறாய்? நான் கொலை செய்திருக்கிறன்தான். இல்லை யெண்டு சொல்லயில்லை. அதெல் லாம் 'தலைமை' யின்ரை ஓடர். நான் வெறும் கருவிதான். அதிலை எந்தப் பாவமும் எனக்கில்லை. எப்பவும் என்னை மனச்சாட்சி உறுத்தினது கிடையாது."

'உறுத்தினது கிடையாது' எண்டு சொல்லேக்கைதான் நெஞ்சிலை முக்கிளுவை முள்ளுக் குத்தினது போலை வலி. தலை கிறுகிறுத்துது. ஓ! அந்தச் சம்பவம். அது மண்டையை குடைஞ்சு கொண் டிருந்தது. கன நாளாய் நித்திரை யில்லாமல் அலைஞ்சிருக்கிறான். ஒருக்கா இந்தத் தொழிலை விட்டிட்டு எங்கையாவது வெளி நாட்டுக்கு ஓடுவமோ எண்டுகூட நினைச்சதுண்டு. முடியேல்லை. அவனாலை மீண்டு வெளியிலை வர முடியேல்லை.

இப்ப பத்து வரிசத்துக்குக் கிட்டவாச்சு. காலம் கொஞ்சம் கொஞ்சமாய் எல்லாத்தையும் மறக்கடிச்சிட்டுது. சண்டை யின்ரை உக்கிரத்திலை நேற்று நடந்ததைக் கூட இண்டைக்கு ஞாபகப்படுத்த சிரமப்பட வேண்டி யிருக்கு. ஆனா, அதே காலம் தேவை வரயிக்கை எல்லாத்தையும் தானாயே கொண்டு வந்து மூடையை முன்னாலை போட்டு முடிச்சை அவிழ்க்கிது. எலுமிச் சங்காய் போலை நினைவுகள் உருண்டோடுது.

* * *

தமிழ் மன்னர்கள் காலத்து தாயாதி சண்டைகளின் தொடர்ச் சியைப் போல சகோதரர்களுக்குள் ஏற்பட்ட ஆதிக்க வெறியில் இவர்களும் ஒருவரை ஒருவர் அழித்துக்கொண்டிருந்த காலத் தில் நடந்தது. இரண்டு நாட் களுக்கு முதல் மாற்றுக் குழுவைச் சேர்ந்த இரண்டு பேரைப் பிடித்திருந்தனர். 'தட்டு'றது எண்டது முதலே முடிவானதுதான். விசாரணை எண்டு சொல்லி கட்டுக் கதைகளை பரவவிட்டு சனங்களி டத்திலை தங்களை நியாயவான் களாக சித்தரிப்பதென்பது இரண் டாவது. ஒரு கல்லிலை இரண்டு மாங்காய். அதனாலைதான் இந்த இரண்டு நாள் அவகாசம்.

அதுவொரு பிரபலமான சந்தி. சனநடமாட்டம் உள்ள இடம். அங்கே வைத்துத்தான் இரண்டு பேரையும் தட்டிறதெண்டு பிளான். இண்டைக்கு இன்ன இடத்திலை வைச்சு இரண்டை போடப்போறம் எண்ட கதைகூட வெளியிலை சில வாலுகளுக்கு கசிஞ்சிட்டுது. இதாலை விடுப்புப் பாக்க எடுபிடி யளும் சைக்கிள்லை சந்தியை வட்டம் போட்டுக் கொண்டு திரிஞ்சதுகள். மத்தியானம் இரண்டு மணியிருக்கும். இரண்டு பேரையும் வேனிலை கொண்டு வந்திச்சினம்.

ஒருத்தன் கிழக்கு மாகாணம். மற்றவன் சுதன்ரை பால்ய நண்பன். சின்னனிலை ஒண்டாய்ப் படிச்சு நீண்ட காலமாய் ஒண்டாய்த் திரிஞ்சவை. இரண்டுபேரும் சேர்ந்து செய்யாத திருகுதாளம் கிடை யாது. இருந்தாப்போலை ஒரு சனிக்கிழமை. அவனைக் காண



யில்லை எண்டு தாய் தேப்பன் அழுது குளறிச்சினம். ஊரிலை உள்ள அவன்ரை சினேகிதப் பொடியள் எல்லாரையும் விசா ரிச்சினம். ஏதோ இயக்கத்துக்குப் போட்டான் எண்டு சாடை மாடையாய் கதை வரத் தொடங் கிச்சுது. உனக்குச் சொல்லாமல் போயிருக்க மாட்டான் எண்டு சொல்லி சுதனையும் வந்து விசாரிச்சினம். உண்மையிலை அவனுக்கு தெரியாது.

இது நடந்து ஒரு நாலு மாசத்திற்குப் பிறகுதான் சுதன் இயக்கத்திற்குப் போனவன். பிறகு ஒருவரை ஒருவர் சந்திச்சதே இல்லை. இவ்வளவு காலங்கழிச்சு இப்பிடி ஒரு சூழல்லை சந்திக்க வேண்டியதாய்ப்போச்சு. திடீரெண்டு ஓடர் வந்திச்சிது. தன்ரை 'குறூப்'போடை இவனும் வெளிக் கிட்டிட்டான். வேனிலை ஏற்றின போதுகூட இண்டைக்கு போடப் போறதிலை ஒருத்தன் தன்ரை பழைய நண்பனாய் இருப்பான் எண்டு சுதன் நினைச்சிருக்க யில்லை. அவனைக் கண்டதும் முகம் கறுத்துப்போச்சு. தனக்குத் தெரியாதவன் போல நடிச்சுக் கொண்டு இருந்திட்டான். வர யிக்கை எல்லாரும் சிரிச்சு கதைச் சுக் கொண்டுதான் வந்தாங்கள். சுதன் மட்டும் கதைக்கயில்லை. பேயறைஞ்சவன் மாதிரி இருந்தான்.

சந்திலை உள்ள தேத்தண் ணிக் கடையுக்கை கொண்டுவந்து விட்டுட்டு விரும்பினதை எடுத்து சாப்பிடுங்கோ எண்டாங்கள். தங்கடை கதை முடியப் போற விசயம் இரண்டு பேருக்கும் தெரிஞ்சிட்டுது. கிடைச்ச இடை வெளியிக்கை தப்பி ஓடத் தொடங் கினான் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவன். கடையைவிட்டு வெளி யிலை வந்து ரோட்டிலை இறங்க வெடி விழுந்திச்சு. சுருண்டு விழுந் தான். அவன்ரை கதை சரி.

மற்றவனைக் கூட்டிக் கொண்டு சந்திக்கு வந்தாங்கள். எல்லாரும் சுத்தவர துவக்கோடை நிக்கி றாங்கள். அவன் நடுவிலை. உயி ருக்கு மன்றாடுறான். ஒவ்வொருத் தராய் கெஞ்சிறான். ஒருத்தனுக் கொருத்தன் கிண்டல் பண்ணி சிரிக்கிறான்கள். எல்லாற்றை கையிலை இருந்த ஏகேயும் லோட்

அவன் நீண்ட காலமாயே வீட்டை விட்டு வெளிக்கிட்டு இயக்கத்தோடை திரிஞ்சவன். அனேகமான சண்டையுள்ளை முன்னுக்கு நிண்டிருக்கிறான். எல்லாத்தையும் விட இந்தியன் ஆமிக் காலத்திலை கனபேரை 'போட்டுத்தள்ளி'யிருக்கிறான்.

பண்ணிக் கிடக்கு. ஆற்றையிலை இருந்து புகை வருமெண்டது தெரியாது.

சுதனுக்கு என்ன செய்யிற தெண்டே தெரியல்லை. அவன் கெஞ்சிறதைப் பார்க்க அவனுக்கு பொறுக்கையில்லை. அவனோடை சேர்ந்து ஒரு சைக்கிள்லை திரிஞ்சது, திண்டது, பேண்டது எல்லாம் தலையை குடைஞ்சுது.

அவனைப் பார்க்க பாவமாய் இருந்திச்சு. எப்பிடி முடிவெடுத்தான் எண்டது யாருக்கும் தெரியாது. சுதன் நினைக்கும் முன்னரே அவன் விரல்கள் இயங்கி விட்டன.

இரண்டு சத்தம் தான்.

சுருண்டு விழுந்தான். சுதன் கண்களை இறுக மூடி தலையை நிமிர்த்தி வானத்தைப் பார்த்தான். அஞ்சலி செலுத்து வதைப்போல இருந்தது. யாருடனும் பேசவில்லை. திரும்பி நடந்தான் வேனை நோக்கி.

✱ ✱ ✱

ஒலி ஒண்டு மேலாலை கடந்து போகுது. ஏதும் அசுகை தெரிஞ்சால் வட்டம் போடத் தொடங்கியிடும். சுதன் ஒரு கணம் கண்ணை மூடினான்.

அவன் முடிவெடுத்துவிட்டான் என்பது மயனுக்குத் தெரியும். யோசிக்காதை. பாவமும் புண்ணியமும் எனக்கு வரட்டும். தைரியம் சொன்னான்.

எப்படி நடந்ததென்பது தெரியாது. இயந்திரம் மாதிரி உள்ளுக்கை போனான்.

ஒரு சத்தந்தான்.

அறைக் குள்ளை எண்டதாலை அடைச்ச குரலிலை உறுமிப் போட்டு அடங்கிச்சுது.

வெளியிலை வந்தான். மயனோடு கூடப் பேசவில்லை. அவன் மேலை கொஞ்சம் கோபம் இருந்தது போலை தெரிஞ்சுது. அவன்ரை பார்வையிலை ஒருவிதமான வெறுமை இருந்திச்சு.

மோட்டச் சைக்கிளை எடுத்து மிதிச்சான்.

உறுமிச்சுது.

மயனும் எதுவும் பேசயில்லை. தன்ரை வீட்டுப்பக்கமாய் சைக்கிளை மிதிச்சான். சுதனின் மோட்டச்சைக்கிள் ஒரு நூறு யார் சென்றிருக்காது. இரண்டு சைக்கிள்கள் எதிரே வந்தது.

மூண்டு பேர். முன்னால் வந்த சைக்கிளின்ரை பின் கரியரில் ஒரு பொம்பிளை. பின்னால் வந்த சைக்கிளின் பின் பக்கம் ஆரும் இல்லை. ஆனால் கரியரில் ஒரு கதிரை கட்டிக்கிடக்கு. அதுவும் நிமித்தி வச்சு ஒராளை இருத்தி றதுக்கு வசதியாய்.

இதுகள் இந்த நேரம் பாத்து எங்கை போகுதுகள். சுதனுக்கு விளங்கயில்லை.

"ஆமி ஷெல் அடிச்சுக் கொண்டு வாறான். உந்தப் பக்கமாய் எங்கை போறியள்?"

தோளிலை கிடக்கிற துவக்கைக் கண்டதும் சைக்கிள் மிதிச்ச ஆம்பிளையள் இரண்டு பேருக்கும் பதில் சொல்லுற துணிவில்லை. பின்னால் இருந்த பொம்பிளைதான் பயந்தபடி வாயைத் திறந்து சொல்லிச்சுது.

"நாங்கள் ஓடேக்கை அப்பாவை விட்டிட்டுப் போட்டம். அவருக்கு நடக்கேலாது. பாரிசவாதம். கூட்டிக் கொண்டு போக ஆள் கிடைக்கயில்லை. இப்பதான் கூலிக்கு ஆட்களை ஒழுங்கு பண்ணிக் கூட்டியாறன்".

✱ ✱ ✱



மார்த்தரின் இரண்டு நம் வழமை

யமுனா ராஜேந்திரன்

நம்மை நாமே உருவாக்கிக் கொள்கிறோமா அல்லது நமக்குள் உள்ளார்ந்து இருக்கும் நமது மனநிலை உட்பட நமது கட்டுப்பாட்டுக்கு அப்பாலுள்ள நிலைமைகள் நம்மைத் தீர்மானிக்கிறதா? ஒரு எதிர்வினை யென்பது நம்மைப் பாதிக்கிற, நமக்குத் தெரிகிற அனைத்துக்கும் நாம்தான் முழுப்பொறுப்பாளிகள் எனும் நிலைப்பாடு, இதனைத்தான் வலதுசாரிகள் மேற்கொள்கிறார்கள். மற்றது ரொம்பச் சௌகரியமான இடதுசாரி பதில்கள்: நாம் எவ்வாறு ஆகிறோம் என்பதனை சமூக நிலைமைகள் வடிவமைக்கிறது, தீர்மானிக்கிறது என்பதாக இவர்களது பதில் இருக்கிறது. இதன்பின்புதான் துவங்குகிறது முழுமனித சுதந்திரத்தின் சம்சயத்தை வலியுறுத்திய ஸார்த்தரின் பங்களிப்பு. ஸார்த்தர் நமது சுதந்திரத்தை நாம் செயல்படுத்த நேர்கிற சமூக, பொருளியல், உளவியல் நிலைமைகளை குறித்து தேடிச் செல்கிறார். ஆமாம், நாம்தான் நம்மை உருவாக்கிக் கொள்கிறோம், ஆனால் நாம் நம்மை உருவாக்கிக் கொள்ளும் சூழ்நிலையானது, அதனோடு நாம் எவ்வாறு உருவாக்கிக் கொள்கிறோம் என்பதுகூட நம்மீது சுமத்தப்பட்டதாக உள்ளது என்கிறார் அவர். அதனோடு நம்முடைய கட்டுப்பாட்டுக்கு அப்பாலும் உள்ளது என்கிறார்.

இரண்டு சாத்தியங்களையும் எடுத்துக்கொண்டு, இரண்டு பக்கத்திலும் முழு உண்மையானது பொதிந்திருக்கிறது என்பதனை ஸார்த்தர் தெளிவு படுத்தினார். பிற்பாடாக, பிளாபர்ட்டின் வாழ்க்கை வரலாற்றினூடாக எவ்வாறு நாம் சமூக வர்க்கத்தினாலும், குடும்ப நிலைமைகளாலும் உருவாக்கப்படுகிறோம் என்பதனை அவர் எடுத்துச் சொல்கிறார். பிற எவரை விடவும் ஒரு மனிதனின் ஆக்கத்தில் சுதந்திரத்திற்கும் நிர்ணயத்துக்கும் உரிய இடத்தை வழங்கியவர் அவர்தான். பிற எவரை விடவும் பொறுப்பாயிருத்தல் என்றால் என்ன என்பதைப் புரிந்து கொள்ள விளைந்தவரும் அவர்தான். ஸார்த்தரின் தொடர்ந்த முனைப்புக்கு இது ஒரு காரணமாக இருக்கிறது. எரிச்சலூட்டக்கூடிய, தொல்லைப்படுத்துவதான கோரல்களை இது முன்வைக்கிறது. நாம் எவ்வாறு ஆகப்போகிறோமோ அவ்வாறு உருவாக்கிக் கொள்ளும் பொறுப்பிலிருந்து தப்பிப்பதற்காக நாம் தொடர்ந்து ஆவலாயிருக்கிறோம், இந்நிலைமை நமக்கு ஆறுதலாகவும் இருக்கிறது. பிரச்சினைகள் நமது கட்டுப்பாட்டுக்கு அப்பால் இருக்கி றது என நாம் நினைக்கிறோம். நம்மை ஆதிக்கம் செய்யும் அதிகாரத் துடன் சமரசத்திற்கு இது நம்மை இட்டுச் செல்கிறது என அவர் நமக்குக் கற்றுக் கொடுத்தார். நாம் நம்மை செயலூக்கமுள்ள பிரதிநிதிகள் எனக் கருதுமாறு ஸார்த்தர் நம்மை வலியுறுத்துகிறார். எம்மை நாம் பாதிக்கப்பட்டவர்களாகப் பார்க்கும் பொறுப்பற்ற தன்மை போல இது தோன்றினாலும் இந்நிலைப்பாட்டை மேற்கொள்ளுமாறு ஸார்த்தர் நம்மை வலியுறுத்துகிறார். இன்றைய தினத்தில் ஸார்த்தர் மென்மேலும் நம்மைத் தொல்லைக்குட்படுத்துபவராகவும் எரிச்சலூட்டு பவராகவும் இருக்கிறார். மனிதத் தேர்வுகளாலும் அதனை உருவாக்கிய அமைப்புகளாலும் உருவாகியிருக்கிற இன்றைய சமூகம் நமது கட்டுப்பாட்டுக்கு அப்பால் போயிருப்பதைக் காணுமாறு அவர் நம்மை வலியுறுத்துகிறார்.

நமது வாழ்க்கைக்கான பொறுப்பை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும் என அவர் நம்மைக் கோருகிறபோது, நமது உலகின் உருவாக்கத்துக்கான பொறுப்பை நாம் எடுத்துக்கொள்ள வேண்டும் என அவர் கோருகிறபோது, குறைந்த சாதகமான நிலையிலும், நமக்காகவும் பிறருக்காகவும், நிச்சயமான, முக்கியமான நிலைமை களை, உலகவயமான உலகின் பொறுப்புள்ள குடிமக்களாக இருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதனை அவர் கோருகிறார். இது காலாவதியாகப் போன புரட்சிகரக் கோட்பாடு அல்ல, மாறாக இது சவாலுக்குரியதும் சமகால தத்துவத்திற்குரியதுமான செய்தியாகும்.

Ronald Aronson in Camus and Sartre : The Story of a Friendship and the Quarrel That Ended It 2003

Jean-Paul Sartre
Les mots

அரசியல் வன்முறை, பயங்கரவாதம் தொடர்பான விவாதங்கள் முன்னுக்கு வந்திருக்கிற காலத்தில், பயங்கரவாதத்தையும் அரசியல் வன்முறையையும் விதந்து போற்றிய ஸார்த்தரின் நூற்றாண்டு வந்திருக்கிறது. ஸார்த்தர் எனும் மனிதனது நடவடிக்கைகளும் அவரது தத்துவக் கருத்துக்களும் தீவிரத்துடன் செயற்பட்ட காலம் முடிவுக்கு வந்து 25 ஆண்டுகள் உருண்டோடி விட்டது. அவரது பிறந்த நூற்றாண்டான 2005ம் ஆண்டு, அவரது தத்துவம் மற்றும் அரசியலின் பொருத்தப்பாடுகள் சர்வதேசிய அறிவுப் பரப்பில் மறுபடியும் பரிசீலனைக்கு வந்திருக்கிறது. ஸார்த்தரின் பேசப்பட்ட நாவலான Nausea (1938), இரண்டாம் உலகப் போருக்கு முன்பாகவும், அவரது தத்துவக் கருத்துக்களைத் தீவிரமாக முன்வைத்த அவரது Being and Nothingness (1944) என்னும் நூல் இரண்டாம் உலகப்போர் தருணத்திலும் வெளியானது. பின் அமைப்பியலாளரான றோலண்ட் பார்த் இலக்கியம் பற்றிய ஸார்த்தரின் What is litterature? (1948) என்னும் நூலுக்கான மாற்றுக் கருத்துக்களை தனது இலக்கிய விமர்சன நூலில் (Writing Degree Zero: 1953) முன்வைத்தார். தாஸ்தயாவ்ஸ்க்கியின் நாவல்களே ஸார்த்தரின்மீது அதிகம் பாதிப்புச் செலுத்திய புனைவிலக்கியப் படைப்புக்களாக இருந்திருக்கின்றன. எழுத்து என்பது இன்னொரு மனித நடவடிக்கையன்றி வேறல்ல என அவரை உணர வைத்தவை இவைதான். ஒரு குறிப்பிட்ட கால, இடப் பரிமாணத்தைச் சேர்ந்த, குறிப்பிட்ட மனிதர்கள், குறித்த வெளிப்பாடுகளை விவரிப்பவையே புத்தகங்கள் எனும் கண்ணோட்டத்தை அவருக்கு இந்நூல்களே உருவாக்கின. 1938ம் ஆண்டு ஹாவ்ர் பல்கலைக்கழகத்தில் இளநிலை விரிவுரையாளராக இருந்த வேளையிலேயே "நோசெயா" எனும் அவரது முதல் நாவலை ஸார்த்தர் எழுதினார். ஜெர்மன் நிகழ்வியல் இயக்கத்தின் (phenomenogical movement) ஒரு காலகட்டத்தை எடுத்துக் கொண்டு இந்நாவலை எழுதப் புகும் அவர், நமது வாழ்வின் பரப்பில் நமது அனுபவத்தின் விளைவானவையே நமது சிந்தனைகள் என்பதனை அவர் நம்பினார். தத்துவக் கோட்பாடுகளை விவரிக்கும் உரையாடல்கள் அளவு பெறுமதியானது, வாழ்வின் அடிப்படையான அனுபவங்களை விவரிக்கும் நாவல்களும் நாடகங்களும் என அவர் கருதினார். இந்த நாவல் சமூகத்தினால் பின்தள்ளப்பட்ட, நிராகரிக்கப்பட்ட ஒரு ஆய்வாளனைப் பற்றிப் பேசுகிறது. அவனது இருத்தலுக்கு எதிராக அவனைச் சார்ந்த சூழலும் புற நிலையும் இருப்பதாக அவன் உணர்கிறான். எத்தனைதான் சுயஉணர்வு கொண்டவனாயிருந்தாலும், இந்த நிலைமைகள் அவனுக்கு எதிராக இருப்பதை இறுதியில் அவன் உணர்கிறான். இந்த வித்தியாசமான, அதனளவிலான பொருண்மைகள்தான் சுதந்திரம் குறித்து அந்நாவலின் நாயகன் சந்திக்கும் பிரச்சினையின் விளைவுகளாக அமைகிறது. எத்தனைதான் அவன் விரும்பினாலும், வேட்கை கொண்டாலும் அவனது சுதந்திரம் பயங்கரமானதாக, அபத்தமானதாக இருப்பதை அவன் அறிகிறான். உலகினுடான தனது செயல்பாட்டில் இந்த பயங்கரமான ஆதாரத்திலிருந்து வெளியேறுவதற்கான வழியற்றுத் தவிப்பவனாக அவன் ஆகிறான். இந்த நாவலே பின்னாளில் 'இருத்தலும் அபத்தமும்' எனும் அவரது தத்துவார்த்த நூலுக்கான ஆதாரமான நூலாகவும் ஆகிறது.

இரண்டாம் உலகப்போர் முடிந்து சில ஆண்டுகளில் இலக்கியம் பற்றிய ஸார்த்தரின் நூல் வெளியானது. இரண்டாமுலகப் போரின் பின் எழுத்தாளனின் பொறுப்பு என்ன?, அரசியல்ரீதியில் அவனது கடமை என்ன? என்கிற கேள்விகள் எழுந்த நிலையிலேயே, ஸார்த்தர் இந்த நாவலில் நவீன இலக்கியத்தின் பிரச்சினைகள் பற்றி அவதானிக்கிறார். இலக்கியம் என்பது ஓவியம் மற்றும் இசை போன்ற கலைகளிலிருந்து எவ்வாறு உடனடியாக வேறுபடுகிறது என்பதனை இந்த நூலில் ஸார்த்தர் அவதானிக்கிறார். இலக்கியத்தில் செயல்படும் மொழிக்கும் எழுதுபவனுக்கும் வாசகனுக்கும் இருக்கும் உறவை அவதானிக்கும் ஸார்த்தர், வாசித்தல் என்பது வாசகனில் செலுத்தப்படும் உருவாக்கம் (reading is directed creation) எனக் குறிப்பிடுகிறார். எழுதுதலின் அர்த்தம் என்பது வாசகனின் சிந்தனையமைப்பிலேயே உயிரடைகிறது என அவர் குறிப்பிடுகிறார். அந்த நூலில் அவர் எழுத்தாளனின் பொறுப்பு என்பது என்ன? என்ற கேள்வியை எழுப்புகிறார். ஸார்த்தரது இருத்தலியல் கோட்பாட்டில் சுதந்திரத்தின்மீதும் நீதியின்மீதுமான கடப்பாடு என்பது முக்கியமானதாகும். மனிதனது இருத்தல் என்பது சாராம்சத்துக்கு முந்தியது எனும் ஸார்த்தர், இவ்வகையில் சுதந்திர மனிதன் என்பவன் சுதந்திரத்தை அது எதிர்கொள்ளும் விதத்திலேயே எதிர்கொள்கிறான் என்கிறார். இலக்கியத்தை அதனது இருப்பு அமைந்திருக்கும் பொருண்மையான வரலாற்றில் வைத்தே விளக்க முடியும் என்றும் ஸார்த்தர் கருதுகிறார். இதன்படி 1789ம் ஆண்டு பிரெஞ்சுப் புரட்சியை அடுத்து உருவான எழுத்தாளன், சுதந்திரத்திற்கான தனது கடப்பாட்டு உணர்வை தனது வர்க்கத்தின் அபிலாஷை என்ற அளவிலேயே வெளியிட்டான் எனும் அவர், பிரெஞ்சுப் புரட்சியை அடுத்து அதிகாரத்தை தன்வசம் குவித்துக் கொண்ட

முதலாளித்துவ எழுத்தாளனுக்கு கடப்பாட்டு உணர்வுடன் தனது வர்க்கம் குறித்தும் தனது வர்க்கத்தவருக்காகவும் எழுதுவதென்பது இயலாமல் போனது என்கிறார். இந்தச் சூழ் நிலையில் அதிகாரத்திலிருக்கிற தமது வர்க் கத்திற்கு எதிராகவே எழுத வேண்டிய நிலைக்கு முதலாளித்துவ எழுத்தாளர்கள் வந்தார்கள். ஸார்த்தரும் சரி, றோலண்ட் பார்த்தும் சரி, ஒரு உண்மையை இங்கு பகிர்ந்து கொள்ள வேண்டி யவர்களானார்கள். முதலாளித்துவ எழுத்தா ளர்கள்தான் இலக்கிய வெளிப்பாட்டுக்கான வடிவங்களைக் கொண்டிருந்தார்கள். தொழி லாளி வர்க்கமோ அல்லது ஒடுக்கப்பட்ட வர்க்கமோ அதனைக் கொண்டிருக்கவில்லை. இந்த நிலையில் இலக்கியம் எழுத வருகிற பாட்டாளி வர்க்கத்தின் எழுத்தாளர்கள், முதலாளித்துவவாதிகள் உருவாக்கி வைத்த வடிவங்களையே எதிர்கொள்ள வேண்டியவர் களானார்கள் எனவும், அவர்கள் உருவாக்கி வைத்த மொழியிலேயே தம்மை வெளிப்படுத்திக் கொள்ளவுமான நிலைமையில் அவர்கள் வைக்கப்பட்டிருந்தார்கள் எனவும் கூறுகிறார். இந்தச் சூழ்நிலையில் ஸார்த்தரது நிலைப்பாடு இலக்கிய நவீனத்துவத்தைக் கடுமையாகத் தாக்குவதாக அமைந்தது. இன்றைய முதலா ளித்துவ எழுத்தாளர்கள் இருவகையில் இயங்கு கிறார்கள் என்றார் அவர். தமது நலன்களையும் ஸ்திதிகளையும் காப்பாற்றிக் கொள்வதற்காக ஒரு சாரார் எழுதுகிறார்கள். மறு சாரார் தமது வாசகர்களையே சாடும் (avant-garde) எழுத்தா ளர்களாக ஆனார்கள் என்கிறார் ஸார்த்தர்.



1938

இவ்வகையில் இலக்கிய நவீனத்துவம் என்பது தொடர் பாடலுக்கு எதிராக (anti-communication) ஆகிறது. அது மட்டுமல்ல, தொடர்பாடலுக்கான வழிகளை நிராகரித்து அந்நியமாதலைக் கொணர்வதாக இலக்கிய நவீனத்துவம் ஆகிவருகிறது என்றார் ஸார்த்தர். இந்த வகையில் முதலாளித்துவ எழுத்தாளன் தனது பொறுப்புணர்வையும் கடப்பாட்டுணர்வையும் வெளிப்படுத்துவது சாத்தியமில்லை என்கிறார். இச்சூழலில் நவீனத்துவ எழுத்தாளன் தன்னால் அந்நியமாக்கப்பட்டிருக்கும் வாசகன்மீது பாதிப்புச் செலுத்த முனைகிறான். இந்த எழுத்தாளன் யாருக்காகவும் எழுது வதில்லை. அதே வேளை வாசகனை நோக்கித் தாக்குதல் தொடுப்பதற்காகவும் எழுதுகிறான் என்கிறார் ஸார்த்தர். இந்தச் சூழ்நிலையில் நாம் அடர்ந்த கானகத்தில் இல்லை என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளவேண்டும் எனவும், இதனை மீறி நாம் செல்ல வேண்டும் எனவும், நம்பிக்கை இல்லையாயினும் இதனை நோக்கி நாம் அடிவைக்க வேண்டும் எனவும் ஸார்த்தர் கருதுகிறார். இந்த நம்பிக்கையற்ற சூழலில் எழுத்தாளர்கள் தம்மை புதுப்பித்துக்கொண்டு கடப்பாட்டு னர்வுடன் நவீன கலாச்சாரத்திலிருந்தும் சமூகத்திலி ருந்துமான அந்நியமாதலிலிருந்து விடுதலை பெற வேண்டும் என்கிறார் ஸார்த்தர்.

ஸார்த்தரின் நிலைப்பாட்டில் விவாதிக்காது விட்டு வைக்கப்பட்டிருக்கும் இலக்கிய வடிவம் என்னும் பிரச்சி னையைத் தனது நூலில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்கிறார் பார்த். இலக்கியத்தில் கையாளப் பெறும் மொழி (language), மற்றும் பாணி (style) என்பதற்கு அப்பால், மூன்றா வதாக எழுதுதல் (writing) எனும் அலகை வலியுறுத்துகிறார் பார்த். எழுத்தாளனுக்கு மொழிசார்ந்தும் பாணி சார்ந்தும் தேர்வு (choice) என்பது இல்லை என்கிறார் பார்த். எழுத்தாளன் ஒரு மொழியில் எழுதியாக வேண்டும். அவனது பாணியில்தான் அவன் எழுத வேண்டும். அப்படியல்லாது எழுதும் எழுத்தாளன் சுயமான எழுத்தாளனாக இருக்க முடியாது. ஆகவே, இந்த இரண்டும் எழுத்தாளனது தேர்வுக்கு அப்பாலான விடயங்கள் என்கிறார் பார்த். பார்த்தைப் பொறுத்து மொழி என்பதும், பாணி என்பதும் இலக்கியத்தில் புறநிலை நிலையிலான விடயங்கள். ஆனால் எழுதுதல் என்பது ஒரு செயல்பாடு (function - personal utterence) என்கிறார். இந்த எழுத்துச் செயல்பாடு என்பதுதான் மனித சுதந்திரம் செயல்படும் வெளி என்கிறார் பார்த். மனித எத்தனமாக வடிவம் பார்க்கப்பட வேண்டும் (writer's zone of freedom, form considered as human intention) என பார்த் குறிப்பிடுகிறார். இந்த எழுதுதல் எனும் செயல்பாடு தொடர் பாடலையோ வெளிப்பாட்டையோ மட்டும் மேற்கொள் வதில்லை. அதனைக்காட்டிலும் மொழி தாண்டிய ஏதோ

வொன்றை அது வழங்குகிறது, அதுதான் வரலாறு மற்றும் நாம் மேற்கொள்ளும் நிலைப்பாடு என்கிறார் பார்த். பாணியும் மொழியும் வரலாற்றுக் குருட்டுத் தனமாக இருக்க, எழுதுதல் எனும் செயல்பாடு வரலாற்றுச் சார்பு கொண்டதாக இருக்கும் என்கிறார் அவர். பார்த்தும் ,ஸார்த்தரும் ஒரு வகையில் உடன் பாடான நிலைப்பாடு கொண்டவர்கள். இலக்கியத்தின் நவீன யுகமானது அந்நியமான எழுத்தாளனுக்கும் முதலாளித்துவத்தால் உள்வாங்கப்பட்ட வாசக னுக்கும் இடையிலானது என்கிறார்கள் இருவரும். இந்தச் சூழ்நிலையில் மொழிக்கு வெளியிலும் இலக்கி யத்திற்கு வெளியிலும் கடப்பாடு என்பதனை எழுதுதல் எனும் இலக்கியச் செயல்பாட்டின் வழி உருவாக்க வேண்டும் என்கிறார் பார்த். மொழியிலும் வெளிப் பாட்டிலும் புதிய வடிவங்களைத் தேடுவதுதான் எழுத் தாளனின் கடப்பாட்டுக்கான தோதான வழியாக இருக்கும் எனக் காண்கிறார் அவர். ஸார்த்தரின் அவநம்பிக்கைக்கு மறுதலை யான நிலைப்பாட்டை பார்த் முன்வைக்கிறார்.

ஆனால் பார்த் சொல்கிற படியிலான கற்பனா இலக்கியம் வர்க்கமும் அதிகாரமும் அற்ற அதற்கு வெளியிலான உலகத் தில்தான் சாத்தியம். வர்க்கத் திலிருந்தும் அதிகாரத்திலி ருந்தும் நகர்ந்ததும் அதற்கு அப்பாலுமான புரட்சிகர உல கில்மட்டுமே பார்த்தின் நோக்கம் சாத்தியமாகும். ஆனால், இவ் வகையிலான நாவலுக்கு நிக ழும் உதாரணமாக காம்யூவின் "அந்நியன்"ஐ பார்த் மேற்கோள் காட்டவும் செய்கிறார். குழப்ப மற்ற கடப்பாட்டுணர்வு அந்த நாவலில் இருக்கிறது எனவும் அவர் தெரிவிக்கிறார். அதே சமயம், இவ்வகையிலான அந்நி யமாகாத இலக்கியம், அது சேவகம் புரியும் வர்க்கத்தினா லும் சமூகத்தினாலும் சுவீகரிக் கப்பட்டுவிடும் எனும் பார்த், என்றென்றும் புரட்சிகரமான தான ஒரு எழுத்துச் செயல்பாடு என்பது இருக்க முடியாது எனவும் தெரிவிக்கிறார். எந்தவிதமான இலக்கிய வெளிப்பாட்டு வடிவத்தையும், மேலாதிக்கம் செய்யும் கலாச்சாரமானது தனக்குள் கரைத்துக் கொள்ளும் என்பதனை பார்த் இவ்வகையில் திட்ட வட்டமாக முன்வைக்கிறார். முதலாளித்துவ சமூகத்தில் எழுத்தாளனின் கடப்பாட்டு உணர்வையும், அதனைக் கடந்து செல்வதனையும் குறித்த செயல் பாட்டில் நிச்சயமாகவே இன்றும் நமக்கு ஸார்த்தரதும் பார்த்தினதும் எழுத்துக்கள் வழிகாட்ட முடியும். எழுத்துக்களின் வர்க்க, இன, மத, பாலியல் தன்மை களைப் பகுத்தாய்ந்து அதன் பிரமைகளிலிருந்தும் நாம் விடுபட அவர்கள் நமக்கு உதவ முடியும்.

II

இரண்டாம் உலகப் போரைத் தொடர்ந்து நாசிகளை எதிர்த்த போராட்டத்தில் கம்யூனிஸ்ட்டுகளின் தீரத் தையும் வெற்றியையும் தொடர்ந்ததாகவும், ஸ்டாலி னியம் உள்ளிட்ட சோசலிச அனுபவங்கள், தேசிய விடுதலைப் போராட்ட அனுபவங்கள் சார்ந்து மார்க்சி யத்துடன் தனது இருத்தியலை இணக்கப்படுத்த முயற்சித்ததாகவும் ஸார்த்தரது மகத்தான தத்து வார்த்த நூல் Critique of dialectical reason (1960) ஐம்பது களின் இறுதியில் வெளியாகிறது. அவரது மார்க்சிய இருத்தலியல் இணக்கம் தொடங்கிய அதே காலத்தில், அதாவது அறுபதுகளில், அமைப்பியல், பின்நவீனத் துவம் போன்ற கருத்துப் போக்குகள் முனைப்புப் பெற்றன. 19ம் நூற்றாண்டு மனிதனாக இருந்து 20ம் நூற்றாண்டுக் கேள்விகளுக்கு விடை தேடிக்கொண்டி ருக்கிறார் என ஸார்த்தரைப் பற்றிக் குறிப்பிட்டார் மிஷல் பூக்கோ. பிறிதொரு அமைப்பியலாளரான அல்துாஸருடன் ஸார்த்தர் கடுமையாக முரண்பட வேண்டியிருந்தது. ஆரம்பகால மார்க்ஸில் அவர் மனி தனை முன்னிலைப்படுத்தியிருந்தமையை முன் வைத்து ஸார்த்தர், மார்க்ஸியர்கள் அமைப்பி லிருந்து அல்ல மனிதனிலிருந்து தமது சிந்தனையைத் துவங்க வேண்டும் என்றார். அதிகாரம் தற்போது நேரடியாக அல்ல (not only repressive state apparatus) கருத்தியல் வகையிலும் (ideological state apparatus) செயல்படு கிறது என ஸார்த்தரை மறுத்த அல்துாஸர், முதிர்ச்சியடைந்த பிற்கால மார்க்ஸிடம் விஞ்ஞா னக் கோட்பாடுகளே இருந்த தாகக் குறிப்பிட்டார். அமைப்பு மற்றும் மனித இடையீடு (structure and human action) சார்ந்த நேரடி யிலான இந்த விவாதத்தில் ஸார்த்தர் பின்னடைவைச் சந்தித்தார் என்றும், நேரடியான பொது விவாதமொன்றில் அவர் பின்னடைவைச் சந்தித்தது இதில் மட்டுமே என்று பிரெஞ்சு வரலாற்று விமர்சகர்கள் குறிப்பிடுகிறார்கள். மனிதனது முனைப்பைக் கொண்ட சோசலிசத்திட்டம் தோல்வி யடைந்து வந்துகொண்டிருந்த ஒரு காலத்தில், அதற்கான காரணங்களை அமைப்பு, அமைப்பு சார்ந்த கருத்தியல், அறிவுத் தோற்றவியல் போன்றவற்றில் விசாரித்துக் கொண்டிருந்த காலம், அது ஸார்த்தரின் இயங்கியல் காரணியம் குறித்த விமர்சன நூல் வெளியான காலம். அறுபதுகளின் பின் ஸார்த்தரின் அரசியல் நடவடிக் கைகள் பெற்ற முக்கியத்துவத்தினை அவரது இயங் கியல் காரணியம் குறித்த விமர்சன நூல் பெறவில்லை என்கிறார், அல்துாஸர் - ஸார்த்தர் இடையிலான விவா தங்களை விரிவாகத் தொகுத்திருக்கும் அலின்ஸன்.

மனிதன் சுதந்திரமானவனாயிருக்க விதிக்கப் பட்டவன் என்ற ஸார்த்தர்தான், அடுத்த மனிதனே நமக்கு நரகம் என்றும் சொன்னவர். வன்முறையை விதந்து போற்றிய தத்துவவாதி ஸார்த்தர். ஒடுக்கு முறைக்கு எதிரான வன்முறையை மனித விமோசனத்தின் கருவி என்றவர் அவர். நெருக்கடியான அரசியல் தருணங்களில் அவர்போல்



கடப்பாடு மிக்க தெளிவான அரசியல் நிலைப்பாடு எடுத்த தத்துவவாதி ஒருவரைக் கடந்த ஒரு நூற்றாண்டுப் பிரெஞ்சு அறிவுப் பாரம்பரியத்தில் பிறிதொருவரில்லை. அமைப்பியல்வாதிகள், பின்நவீனத்துவவாதிகளுடனான ஸார்த்தரின் விவாதங்கள், காம்யூவோடு நடத்திய பொது விவாதம் போன்றதாக இருக்கவில்லை. காம்யூவை அடுத்து பொதுவில் நேரடியாக நடந்தது அல்தூஸர் - ஸார்த்தர் விவாதமாகும். அமைப்பியல்வாதியான அல்தூஸரையடுத்து, பின்அமைப்பியல்வாதியான பூக்கோவுடன் நேரடியிலான விவாதங்களை ஸார்த்தர் மேற்கொள்ளாவிட்டாலும், அவர் உயர்த்திப் பிடித்த மேற்கத்திய மார்க்சியம், மனிதனை மையமாகக் கொண்ட மனிதாபிமானம் போன்றவற்றை உள்ளிட்ட கோட்பாடுகள் அனைத்தையும் மொத்தத்துவப்போக்கு (totalising) என நிராகரித்தவராக பூக்கோ இருந்திருக்கிறார். தொழிலாளி வர்க்கத்தவரிடம் நம்பிக்கை வைத்தவர்களாக ஸார்த்தரும் அல்தூஸரும் இருந்திருக்கிறார்கள். தொழிலாளி வர்க்கம் தோல்வியுற்றதற்கான காரணங்களை புறநிலை அமைப்பில் காணுபவராக அல்தூஸர் இருக்க, பிளவுண்ட தொழிலாளி வர்க்கம் சமூகக் குழுக்களாகப் பிரிந்து பகைமை கொண்ட சூழ்நிலையில் தனித்தனிக் குழுக்களுக்குள்ளான மனிதர்களாக அவர்களது அன்றாட வாழ்வு, வீடு, இருப்பிடம், தெரு போன்றவற்றினால் உருவாக்கப்படும் அவர்தம் உளவியல் கட்டமைப்பை ஆய்பவராக ஸார்த்தர் இருந்தார்.

தொழிலாளி வர்க்கம் சமூகத்தின் உந்துசக்தி என்பதை மறுத்தவர் பூக்கோ, தொழிலாளி வர்க்கம் என்பதற்கு மாற்றாக அவர் உரையாடலை மையப்படுத்திய ஆய்வுகளை, சிறைச்சாலைகள், சமப் பாலுறவாளர்கள், மனநிலை பிறழ்ந்தவர்கள் என தனித்தனியே உடலையும் சிந்தனையையும் கட்டுப் படுத்தும் அமைப்பின் அதிகாரத்தை ஆய்வு செய்பவராக ஆகினார் அவர். அல்தூஸரை கருத்தியல் சட்டகம் வழி நடத்த, பூக்கோவை உரையாடல் வழி நடத்த, ஸார்த்தரை மனிதரின் அன்றாட அனுபவங்கள் எனும் வெளி வழி நடத்தியது. 1968க்கு முன்பாக மனித காரணி, மனிதனது அகநிலை, ஒன்றுபட்ட இயக்கம் போன்றவற்றை நிராகரித்தவராக இருந்த பூக்கோ, 1968 மாணவர் எழுச்சியின் பின் அந்தக் கிளர்ச்சி கட்டவிழ்த்துவிட்ட பெண்ணிலைவாதம், சமப்பாலுறவு விடுதலை, சிறைச்சாலைச் சீர்திருத்த இயக்கம், சூழலியல் இயக்கம், உளவியல் சிகிச்சைகளுக்கு எதிரான இயக்கம், யுத்த எதிர்ப்பு இயக்கம் என்பன போன்று, பரவலாக அந்தக் கிளர்ச்சியிலிருந்து எழுந்த ஒன்றுபட்ட இயக்கம் உருவாக்கிய விளைவுகளை அடுத்து பின் நவீனத்துவவாதிகள் தமது நிலைப்பாடுகளை மாற்றிக் கொண்டனர். இருப்பினும் தொழிலாளி வர்க்க - மாணவர் ஒற்றுமையை வலியுறுத்திய ஒரு மகத்தான ஆளுமையாக ஸார்த்தர் எழுந்ததைப்போல பின்நவீனத்துவவாதிகள் எவரும் எழவில்லை என்பது வரலாறாக இருக்கிறது. எழுபதுகளில் அமைப்பியல் உச்சத்தில் இருந்த வேளையிலும் வெகுமக்கள் அளவில் தத்துவ விவாதங்களையும் கருத்தியல் விவாதங்களையும் கொண்டு சென்றவராக, இந்த விவாதங்களை பல்கலைக்கழகம் தாண்டி வெகுமக்கள் மயப்படுத்திய ஜனநாயகவாதியாக ஸார்த்தர்தான் இருந்தாரேயல்லாது பின்நவீனத்துவவாதிகள் இருக்கவில்லை. புதிய அரசியல் யதார்த்தங்களுக்கு எதிர்வினையாற்றிய வெகுமக்கள் அறிவுஜீவிகளாக பின்நவீனத்துவவாதிகள் என்றுமே இருக்கவில்லை. இதனை மிஷல் பூக்கோ ஒப்புக்கொள்ளவே செய்கிறார். ஆகவே தான், பிரெஞ்சு இடதுசாரிப் பாரம்பரியத்தில் வெகு மக்கள் மட்டத்தில் தீவிரமான விவாதங்களைத் தூண்டிய அறிவுஜீவிகளாக ஸார்த்தரையும், ஸார்த்தரது நண்பரான மேர்லோ பொன்ரியையும் அவர் குறிப்பிடுகிறார்.

III

ஸார்த்தரின் பிறந்த நூற்றாண்டு 2005ம் வருடம் ஜூன்மாதம் உலகெங்கிலும் நினைவுகூரப்படுகிறது. மூன்றாம் உலகைச் சேர்ந்த சிந்தனையாளர்களான எட்வர்ட் ஸைத் முதல் ஆரியல் டோர்ப்மென் வரை தமது தலைமுறையை ஸார்த்தர் எவ்வாறு பாதித்தார் என்பதனைப் பதிந்திருக்கிறார்கள். ஸார்த்தரின் நூற்றாண்டுத் தருணத்தையொட்டி ஸார்த்தரின் வன்முறை குறித்த எழுத்துக்களினதும் மூன்றாம் உலகின் விடுதலை குறித்த எழுத்துக்களினதும் தொகுதியொன்றும் (Colonialism and Neocolonialism : Jean Paul Sartre, Routledge, 2001) **ஸார்த்தர் பற்றிய புதிய வாழ்க்கை வரலாற்று நூலொன்றும்** (Jean-Paul Sartre: A Life, Annie Cohen Solal, 2005) **பிரெஞ்சுக் காலனியாதிக்கத்திலிருந்து விடுதலை பெற அல்ஜீரியர்கள் நடத்திய போராட்டம் தொடர்பாக ஸார்த்தருக்கும் காம்யூவுக்கும் நடந்த விவாதங்கள் குறித்த ஆய்வு நூலொன்றும்** (Camus and Sartre : The Story of a Friendship and the Quarrel That Ended It, Ronald Aronson,2003) **சமவேளையில் சிமொன் தீ போவுவாவின் வாழ்க்கை வரலாற்று நூலொன்றும்** (Simone De Beauvoir : Lisa Appignanesi, 2005) **வெளியாகியிருக்கின்றன. செப்டம்பர் பதினொன்றிற்குப் பின்பு 'வன்முறை தொடர்பான ஸார்த்தரின் கருத்துக்கள் எவ்வாறு அணுகப்பட வேண்டும்' எனும் பொருளில் அமெரிக்க ஸார்த்தர் கழகம் விரிவான கருத்தரங்கொன்றினை** (Sartre and Terror: Sartre Studies International Journal : Issue 2, 2003) **நடத்தியிருக்கிறது. ஸார்த்தர் கடுமையான ஸ்டாலினிய**

வாதியெனவும் அவர் நாஜிகளை எதிர்த்த போராட்டத்தில் முன்னணியில் நிற்காது மௌனம் காத்தவர் எனவும் அவர்மீதான குற்றச்சாட்டுக்கள் அவரது பிறந்த நூற்றாண்டு சந்தர்ப்பத்தில் எழுந்திருக்கிறது. 1980ம் ஆண்டு அவர் மரணத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்பாக வெளியான ஸார்த்தரின் இறுதி நேர்முகங்கள் கொண்டதான தொகுதியொன்று 1996ம் ஆண்டு ஸார்த்தர் குறித்த அமெரிக்க ஆய்வாளரான அரோன்சன் பதிப்பில் (The Hope: 1980 Interviews : Jean Paul Sartre and Benny Levy : translated by Adrian van den Hoven, University of Chicago Press, 1996) வெளியாகியிருக்கிறது. இந்த நேர்முகங்களின்படி ஸார்த்தர் முன்னர் கொண்டிருந்த பல நிலைப்பாடுகளை அவர் மறுத்திருக்கிறார். வன்முறையை ஒரு விமோசனக் கருவியாகத் தான் ஆதரித்தமையை அவர் தவறு எனத் தெரிவித்திருக்கிறார். மார்க்சியத்தைத்தான் கைவிட்டுவிட்டதாகவும் யூதமத நம்பிக்கையாளராகத்தான் மாறிவிட்டதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார். இந்த உரையாடல்கள் பிரான்சில் வெளியான காலத்தில் இவற்றின் நம்பகத்தன்மையை ஸார்த்தரின் வாழ்நாள் தோழியான சிமோன் தீ போவுவா மறுத்திருக்கிறார். ஸார்த்தரின் நண்பியும் பின்னாளில் அவரது தத்து மகளாக ஆனவருமான அல்ஜீரிய யூதப்பெண்ணான ஆர்லெத்தும் ஸார்த்தரின் உதவியாளரான எகிப்திய யூதரான பியரே விக்டர் எனும் பெனி லெவியும் திட்டமிட்டு ஸார்த்தரை இம்மாதிரி சொல்லச் சொல்லுமாறு செய்திருக்கிறார்கள் எனவும் அவரது செவிப்புலன்கள் முற்றிலும் மங்கிய அவரது தளர்ந்த காலத்தில் அவரைத் தமது கருத்துக்களுக்காக வளைத்திருக்கிறார்கள் எனவும் தீ போவுவா தெரிவித்திருக்கிறார். ஸார்த்தர் இந்த நேர்முகங்களின் அசல் தன்மை குறித்துச் சொல்லாத வேளையில் இந்த நேர்முகங்கள் மோசடியானவை எனவும் அவர் தெரிவித்திருக்கிறார். ஆனால் துரதிருஷ்ட வசமாக ஸார்த்தர் இறக்கும் தருவாயில் இந்த நேர்முகங்களில் சொல்லப்பட்ட கருத்துக்கள் தன்னுடையவைதான் என வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார். ஸார்த்தர் இக்கருத்துக்களை வெளிப்படுத்திய காலத்தில் அவர் முற்றிலும் கண்பார்வையற்றவராகவும் காதுகேளாதவராகவும் இருந்திருக்கிறார் என்பதனை பாலஸ்தீன அறிஞரான எட்வர்ட் சைத்தின் ஸார்த்தருடனான 1979ம் வருடச் சந்திப்பு கோடி காட்டுகிறது. மாவோயிஸ்ட்டாக இருந்து யூதமதவாதியாக மாறிய பியரே விக்டரின் முழுக் கட்டுப்பாட்டில் ஸார்த்தர் அப்போது இருந்தார் என்பதனையும் எட்வர்ட் சைத்தின் சந்திப்பு (Sartre and The Arabs : a footnote : Edward Said, Alaram weekly, May 2000) தொடர்பான கட்டுரை உறுதிப்படுத்துகிறது.

பியரே விக்டர் யூத அறிஞரான லெவினாஸின் பாதிப்புக்கு ஆட்பட்டவர் என்றும் அவர் லெவினாஸினது சிந்தனையை பிற்காலத்தில் ஸார்த்தருக்கு அறிமுகப்படுத்தினார் என்றும் தற்போது செய்திகள் வெளியாகியிருக்கின்றன. 1906ம் ஆண்டு லித்துவேனியாவில் பிறந்து ஜெர்மனியில் கல்வி கற்று, ஸார்த்தரின் இருத்தலியல் முன்னோடிகளான ஹஸர்ல், ஹைடேக்கர் போன்றவர்களின் சிந்தனைகளுக்கு ஆட்பட்டவர் லெவினாஸ். யூதமதச்சட்டத்தை வாழ்வில் கடைப்பிடித்தவர். அன்பும் கருணையும் அடுத்தவருக்கான பொறுப்புமே மனிதனுக்கு சுதந்திரத்தை அளிக்கும் என்று பேசியவர் அவர். 1968 மாணவர் - தொழிலாளர் புரட்சி, பின் தொடர்ந்த மாவோயிசம், தனிநபர் வன்முறை போன்றவற்றின் பின், 1968 புரட்சியின் தலைவர்களில் ஒருவரான பியரே விக்டர் லெவினாஸைப் படிக்கத் துவங்குகிறார். இரண்டு ஆண்டுகள் லெவினாஸைத் தொடர்ந்து

படித்ததாகக் கூறும் அவர், பிற்பாடு அந்த எழுத்துக்களை, தான் ஸார்த்தருக்கும் அறிமுகப்படுத்தியதாகக் கூறுகிறார். வன்முறைக்கு மாற்றாக லெவினாஸ் முன்வைக்கும் மற்றவருக்கான தனது பொறுப்பு என்பதிலேயே மனிதனது ஈடேற்றம் இருக்கிறது என்பதனை அவர் ஸார்த்தரோடு பகிர்ந்து கொள்கிறார். ஸார்த்தருக்கு மட்டுமல்ல, பெர்னார்ட் ஹென்றி லெவி போன்ற முன்னாள் மாவோயிஸ்ட்டுகளுக்கும் லெவினாஸை அறிமுகப்படுத்தும் அவர், லெவினாஸின் ஆய்வு நிறுவனம் ஒன்றையும் இஸ்ரேலில் அமைக்கிறார். புதிய இடதுசாரிகளை மட்டுமல்ல, பின்நவீனத்துவவாதிகளையும் ஆகர்ஷித்தவராக லெவினாஸ் இருக்கிறார். தெரிதாவின் Specters of Marx எனும் நூலில் லெவினாஸின் இறையியல் பாதிப்புகள் அதிகம் என்பதனை ஐரோப்பிய விமர்சகர்கள் அவதானிக்கிறார்கள். 1995ம் ஆண்டு லெவினாஸ் மரணமுற்றபோது அல்ஜீரிய யூதரான தெரிதா அவருக்கென ஒரு உருக்கமான அஞ்சலியையும் வழங்கியிருக்கிறார். பெருங்கதையாடல்களாக மிஞ்சிப்போன தத்துவங்களின் தோல்வியோடு நவீனத்துவத்தை இனம் காணும் பின்நவீனத்துவவாதிகள், மற்றவருக்கென (responsibility to others) பொறுப்புணர்வுடன் நீதியானதும் அறவுணர்வு கொண்டதுமான ஒரு எதிர்காலத்தை விளையும் லெவினாஸிடம் ஆர்வம் கொண்டதில் எதுவும் ஆச்சரியமிருக்கப் ' போவதில்லை எனக் குறிப்பிடுகிறார், பிரெஞ்சு யூத உரையாடல்களை சூர்ந்து அவதா

னித்து வரும் பிரெஞ்சுப் பத்திரிகையாளரான லாரன் கேபன்.

சார்த்தரிடம் நேர்ந்த மாற்றத்துக்கான காரணம் பியரே விக்டர்தான் என்பதைத் தனது கட்டுரையில் எரிச்சலுடன் குறிப்பிடுகிறார் எட்வர்ட் ஸைத். 1979ம் ஆண்டு பாரிஸில், மார்ச் மாதம் 14ம், 15ம் திகதிகளில் பாலஸ்தீனம் - இஸ்ரேல் தொடர்பாக சார்த்தர் கூட்டிய கூட்டத்தின் அனுபவங்கள் பற்றிய பதிவுகளிலேயே இதனை ஸைத் குறிப்பிடுகிறார். அந்தக் கூட்டத்திற்கு ஸைத் வந்தபோது நடந்த சம்பவங்களை அவர் நக்கலான தொனியில் விவரிக்கிறார். பாதுகாப்புக் காரணங்களுக்காக கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்ட இடத்திலிருந்து மாற்றப்பட்டு மிஷேல் பூக்கோவின் இல்லத்தில் நடைபெறும் என்பதுதான் தான் கூட்டம் பற்றிப் பெற்ற முதல் குறிப்பு என்கிறார் ஸைத். கடைசி வரையிலும் என்ன விதமான பாதுகாப்பு அச்சுறுத்தல் என்பதனை தனக்கு யாருமே சொல்லவில்லை என்பதனையும் ஸைத் குறிப்பிடுகிறார். அந்தக் கூட்டத்திற்கு வந்திருந்த சிமொன் தீ போவுவா, கேட் மில்லட்டுடன் முக்காடு எதிர்ப்புப் போராட்டத்திற்காகத் தான் ஈரானுக்குச் செல்ல இருப்பதைப்பற்றி சதா தம்பட்டம் அடித்துக் கொண்டிருந்ததாகவும் அவருடன் உரையாடுவதென்பது சாத்தியமாயிருக்கவில்லை எனவும் குறிப்பிடும் ஸைத், ஸார்த்தர் வருவதற்கு முன்பாகவே தீ போவுவா அங்கிருந்து சென்று விட்டார் என்கிறார். அதற்குப் பின்பாக அவரைத்தான் காணவேயில்லை என்றும் குறிப்பிடுகிறார். நடைபெற்ற கருத்தரங்கில் பூக்கோ எந்தவிதமான ஈடுபாட்டையும் காட்டவில்லை எனக் குறிப்பிடும் ஸைத், இஸ்ரேல் - பாலஸ்தீனப் பிரச்சினையில் தனது பாலஸ்தீன ஆதரவு நிலைப்பாடும், பூக்கோவின் இஸ்ரேல் ஆதரவு நிலைப்பாடும் தங்களுக்குள் விவாதத்தை ஏற்படுத்திய பிணக்கில் பிரிந்ததாகவும் ஜில்லஸ் தெலூரஸ் என்பதுகளின் இறுதியில் தன்னிடம் சொன்னதாகவும் குறிப்பிடுகிறார். இதுவன்றி துனிசியப் பல்கலைக்கழகத்தில் பயிற்றுவித்துக் கொண்டிருந்த பூக்கோ சொல்ல முடியாத காரணங்களால் அங்கிருந்து திரும்பியதாகவும், 1967 இல் அரபு - இஸ்ரேல் போரைத் தொடர்ந்து அரபு உலகில் இடம்பெற்றிருந்த யூத எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் தென்பட்ட கோரத்தைக் கண்டேதான் வெளியேறியதாகச் சொல்லியிருந்தார் எனவும் ஸைத் குறிப்பிடுகிறார். அதுவல்லாமல் பூக்கோ துனிசியப் பல்கலைக் கழகத்தில் சில மாணவர்களுடன் கொண்டிருந்த சமப்பாலுறவுக் காரணத்துக்காகவே துனிசிய அரசு அவரை நாடு கடத்தியது என்கிற காரணமும் இருந்ததாக துனிசியப் பேராசிரியர் ஒருவர் சொன்னதாகவும் ஸைத் குறிப்பிடுகிறார். எவ்வாறாயினும் பூக்கோ அந்தக் கருத்தரங்கில் ஈடுபாடு காட்டாததற்கு நிறையக் காரணங்கள் இருக்கத்தான் செய்தன என்கிறார் ஸைத். ஸ்டாலின் தொடர்பான கடுமையான விமர்சனத்தை பூக்கோ செய்ததற்கான காரணங்களிலொன்றாக, யூத எதிர்ப்பு நடவடிக்கையாக அவரது பழிவாங்கும் கொள்கை இருந்தது என அவர் புரிந்து கொண்டிருந்தார் என்பதும் இங்கு நினைவு கூரத் தக்கது.

அன்றைய சந்திப்பில் ஸார்த்தர் எந்தவித சலனமும் காட்டாது மௌனமாகவே இருந்தார் எனவும், எந்த விதமான அபிப்பிராயங்களையும் அவர் தெரிவிக்கவில்லை எனவும் ஸைத் குறிப்பிடுகிறார். அன்றைய சந்திப்பில் அவரோடு நெருக்கமாக இருந்தவர்கள் மட்டுமல்ல, அவரை முழுக்கவும் கட்டுப்படுத்துபவர்களாக இருந்தவர்களில் முதலாமாவர் பியேர் விக்ரர் என அறியப்பட்ட பிரபல மாவோயிஸ்ட்டாக இருந்து யூதமதவாதியாக மாறிய பெண்ணி லெவி. மற்றவர் ஸார்த்தரின் தத்துமகளும் அல்ஜீரிய யூதப் பெண்ணுமான ஆர்லெத். மூன்றாமவர் ஸார்த்தரின் ஜெர்மானிய ஆங்கில மொழிபெயர்ப்பாளர் என்கிறார் ஸைத். ஸார்த்தர் ஜெர்மனியில் சிலகாலம் இருந்து ஹைடேக்கர் பற்றியெல்லாம் எழுதியிருந்தாலும்கூட அவருக்கு துப்பரவாக ஆங்கிலமோ ஜெர்மன் மொழியோ தெரிந்திருக்கவில்லை என்பது தனக்கு ஆச்சரியமாகவிருந்தது என்று குறிப்பிடுகிறார் ஸைத். முதல் நாள் கூட்டம் முழுக்கவும் ஸார்த்தர் எதுவுமே பேசவில்லை எனக் குறிப்பிடும் ஸைத், முழுக்கூட்டத்தையும் மூர்க்கமாகக்



கட்டுப்படுத்துபவராக பியரே விக்டரே செயலாற்றினார் எனவும் குறிப்பிடுகிறார். தான் ஸார்த்தரோடு நேரடியாக உரையாடலில் ஈடுபட முயற்சி செய்ததாகவும் அது சாத்தியமில்லாமல் போனது எனவும் தெரிவிக்கும் ஸைத், ஸார்த்தர் முற்றிலும் செவி கேளாதவராக ஆகிப்போயிருக்கக் கூடும் எனவும் தெரிவித்திருக்கிறார். ஆனால், கூட்டத்தின் இடையில் அடிக்கடி பியரே விக்டரும் ஸார்த்தரும் வெளியே எழுந்து சென்றதாகவும், பியரே சொல்வதற்கெல்லாம் ஸார்த்தர் தலையாட்டினாரென்றும், பிற்பாடு ஸார்த்தருக்காக பியரே பேசினார் என்றும் தெரிவிக்கும் ஸைத், தான் ஸார்த்தர் பேசட்டும் என்று வலியுறுத்தியதால் எரிச்சலுற்ற பியரே, அடுத்த நாள் ஸார்த்தர் அறிக்கை வெளியிடுவார் எனத் தெரிவித்ததாகவும் குறிப்பிடுகிறார்.

இரண்டாவது நாள் ஸார்த்தர் பேசுவதற்கு மாற்றாக இரண்டு பக்கத் தட்டச்சு செய்யப்பட்ட அறிக்கை தரப்பட்டதாகக் குறிப்பிடும் ஸைத், அது பியரே விக்டரால் எழுதப்பட்டதாகவே தான் கருதுவதாகவும் குறிப்பிடுகிறார். அந்த அறிக்கை முழுக்கவும் சதாத்- இஸ்ரேல் சமாதான ஒப்பந்தமே அதிகம் குறிப்பிடப் பட்டதாகவும், முழு அரபு உலகும் இஸ்ரேலும் சமாதானத்துக்கு வர வேண்டும் என மட்டுமே வலியுறுத்தப் பட்டிருந்தது என்றும், வியட்நாம், அல்ஜீரியா போன்ற முக்கியத்துவமுள்ள பாலஸ்தீன மக்களின் துயரம், அவர் தம் போராட்டம், இஸ்ரேலியக் காலனியாதிக்கம் போன்ற விடயங்கள் குறித்த வார்த்தைகள் எதுவுமே அந்த அறிக்கையில் இல்லை எனவும் குறிப்பிடும் ஸைத், ரோய்ட்டர் செய்தி ஸ்தாபனத்தின் அறிக்கையை ஒத்ததாக, ஸார்த்தரின் பெயரிலான இந்த அறிக்கை

இருந்தது எனவும் குறிப்பிடுகிறார். ஸார்த்தரின் இந்த நிலைப் பாட்டுக்கான காரணமாக அவரது இஸ்ரேல் ஆதரவு நிலைப்பாடு அல்லது கலாச்சார அல்லது மதம் சார்ந்த காரணங்களும் இருந்திருக்கக் கூடுமா என்பது தனக்குத் தெளிவாகத் தெரியவில்லை என்பதனையும் குறிப்பிடுகிறார். இந்த ஒரேயொரு கட்டுரையில் பூக்கோ, ஸார்த்தர், தீ போவுவா போன்றவர்களிடம் பாலஸ்தீன மக்களின் போராட்டம் தொடர் பாகத் தெரிந்த அசிரத்தையை ஆழமாகப் பதிந்திருக்கிறார் ஸைத். ஸார்த்தரிடம் இறுதிக் காலத்தில் ஏற்பட்ட இந்த மாற்றத்தின் காரணிகளாக அவரது தத்துமகளான ஆர்லெத் தையும், பியேரே விக்டரையும் தீ போவுவா உள்ளிட்ட பிரெஞ்சு விமர்சகர்கள் குறிப்பிட்டாலும், அவரது மரணத்தின் முன்பாக விக்டருடனான தனது உரையாடலின் நம்பகத்தன்மையை உறுதி செய்த ஸார்த்தரின் கூற்று அந்தரத்தில் ஆடிக் கொண்டிருக்கிறது என்கிற உண்மையையும் நாம் சேர்த்துப் புரிந்துகொள்ள முனைவதுவே சரியான பார்வையாக இருக்க முடியும். அதே வேளையில் தனது இறுதிக் காலத்தில், தான் இறந்த மனிதனென்றே கருதப்படவேண்டும் என ஸார்த்தர் பிரகடனப்படுத்தியதாக அவரது வரலாற்றாசிரியர் அனி கோஹன் ஸொலால் குறிப்பிடுவதையும் நாம் ஞாபகப்படுத்திக் கொள்ளத்தான் வேண்டும். பிறப்பிலேயே ஒரு கண்ணில் குறை யோடு பிறந்த ஸார்த்தருக்கு எழுபதுகளின் ஆரம்பத்தில் மறு கண்ணிலும் இரத்தக்கசிவு ஏற்பட்டிருக்கிறது. நான்கு முறை அவருக்கு மாரடைப்பு நேர்ந்திருக்கிறது. கண்கள் முற்றிலும் தெரியாத நிலையில் செவிப்புலனும் மந்தமான நிலையில் படிப்பதற்கான தேர்வுக்கும் தொடர்பாடலுக்கும் அவரது நண்பனும், பின்னாளில் ஸார்த்தரின் சிந்தனைகளைக் கட்டுப்படுத்தியவருமான விக்டர் பியரேவின் மூர்க்கமான நடத்தையையும் அவதானிக்கிறபோது, ஸார்த்தரின் இயலாமையையும் அது அவரது செயல்பாட்டில் செலுத்திய முடக்கத்தினையும் நாம் அவதானிக்கத்தான் வேண்டியி ருக்கிறது. பெனி லெவியுடனான உரையாடல் குறித்துப் பேசும் ஸார்த்தர் ஆய்வாளரான ரொனால்ட் அரன்சன் குறிப்பிடுவது போல, அந்த உரையாடல் களில் வெளிப்படுவது நாம் அறிந்த முன்னைய ஸார்த்தர் அல்ல என்றுதான் நாம் கொள்ள வேண்டும்.

IV

1905ம் ஆண்டு ஜூன் மாதம் 21ம் திகதியில் பிறந்த ஸார்த்தர், 1980ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15ம் திகதியன்று தனது 75வது வயதில் மரணமுற்றார். பாரிஸில் நடைபெற்ற அவரது இறுதிச் சடங்கில் 50000 பேர் கலந்து கொண்டார்கள். ஸார்த்தரின் மரணத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டம் (a protest against sartre's death) என அதனை அவரது அபிமானி ஒருவர் குறிப்பிட்டார். தமிழ்ச் சூழலில், ஸார்த்தரின் கருத்துக்கள் உலக அளவிலான அறிவாளிகள் மத்தியில் உச்ச நிலையில் பாதிப்பை ஏற்படுத்திய எழுபதுகளின் மத்தியிலேயே, ஸார்த்தரின் விரிவான அரசியல், கலை இலக்கியப் பார்வைகள் தவிர்த்த, ஸார்த்தரின் தத்துவ நிலைப்பாடு குறித்த மிக விரிவான கட்டுரையொன்றினை எஸ்.வி. ராஜதுரை தனது நூலில் (எக்ஸிஸ்டென்ஷியலிஸம் : முதல் பதிப்பு, 1975 & திருத்திய இரண்டாம் பதிப்பு, 1983, க்ரியா, சென்னை, இந்தியா) நூலில் இடம் பெறச் செய்திருந்தார். ஸார்த்தர் குறித்து ஞாபகப்படுத்திக் கொள்கிறபோது அவர் அல்ஜீரிய தேசிய விடுதலைப் போராட்டத்தில் அரசியல் வன்முறையின் தவிர்க்கவியலாமை குறித்து எழுதிய, அல்ஜீரிய விடுதலைக் கோட்பாளர் பிரான்ஸ் பனான் Wretched of the earth (1961) நூலுக் கான முன்னுரை ஞாபகம் வருகிறது. கொலையாளியாகவும் இருக்கவியலாது பலியாளாகவும் இருக்கவியலாது (neither victim nor executioner) என்ற விளக்கத்துடன், தான் அன்றாடம் எதிர்கொள்ளும் பிரெஞ்சுக் காலனியாதிக்கத்தை ஆதரித்த காம்யூ, அதேவேளையில் தொலைதூர நாட்டின் ஸ்டாலினி



யத்தை விமர்சித்தார். ஹங்கேரி மீதான சோவி யத் யூனியனின் தலையீட்டையும் கண்டித்தார். காம்யூவின் இரட்டை நிலைப்பாட்டைக் கண்டித்த ஸார்த்தர், விடுதலைப் போராட்டம் சார்ந்த, ஒடுக்குமுறைக்கு எதிரான வன்முறையை ஆதரித்து இரண்டு சந்தர்ப்பங்களில் காம்யூ வைக் கடுமையாகக் கண்டித்து எழுதினார். காம்யூவின் "கலகக்காரன்" நூல் குறித்த சர்ச்சையிலும், பனானது நூலுக்கான முன்னுரை யிலும் அவர் வன்முறையை விதந்து போற்றினார். ஒடுக்குமுறைக்கு எதிரான வன்முறையென்பது இரண்டு வகையில் அடிமைத்தனத்துக்கு முடிவு கட்டுகிறது என எழுதினார் ஸார்த்தர். ஐரோப்பி யனைக் கொல்வதன் மூலம் ஒரு ஆபிரிக்கப் போராளி தனது ஒடுக்குமுறையாளனை அழித் தொழிக்கிறான். அதேவேளை தன்மீதான அடிமை எனும் உணர்வையும் அழித்தொழிக் கிறான் என்றார் அவர்.

நாசி எதிர்ப்புக் காலகட்டம் முதல், 1950 களின் ஆரம்பம் முதல், இடதுசாரி நடவடிக்கை களில் தொடர்ந்து ஈடுபட்டு வந்த காம்யூவுக்கும் ஸார்த்த ருக்கும் அல்ஜீரிய விடுதலையை முன்வைத்தும், கம்யூனிஸ்ட்டுகளின் வன்முறை தொடர்பான நிலைப்பாடுகளை முன்வைத்தும், குறிப்பாக வன்முறைக்கும் விடுதலைக்குமான உறவை முன்வைத்தும் கடுமையான விவாதம் மூண்டது. 1952ம் ஆண்டு ஏற்பட்ட இந்த மோதலை அடுத்து காம்யூவின் மரணம் வரையிலும் ஒருபோதும் நண்பர்களாயிருந்து இந்த இருவரும் பேசிக்கொள்ளவே யில்லை. காம்யூவின் "கலகக்காரன்" The Rebel (1951) எனும் நூல் வெளியா

சேகுவாராவுடன் 1960

னதையடுத்து, ஸார்த்தர் ஆசிரியராகவிருந்த Les Temps Modernes பத்திரிகையில், அந்நூல் தொடர்பாக இருபத்தொரு பக்க விமர்சனக் கட்டுரையொன்று பிரசுரமானது. இதைத் தொடர்ந்து, காம்யூ - ஸார்த்தர் இடையிலான விவாதம் மூண்டது. காம்யூ கோபத்துடன் 17 பக்கங்களில் பதில் எழுதினார். அதற்கு ஐம்பது பக்கங்களில் இரண்டு எதிர்வினைகள் வெளியாகின. அந்த இதழ் விற்றுத் தீர்ந்தபின் மறுபதிப்பும் விற்றுத் தீர்ந்தது. புரட்சிகர வன்முறை குறித்த கடுமையான விமர்சனங்களை காம்யூ அந்த நூலில் முன்வைத்திருந்தார். கடுமையான கம்யூனிஸ எதிர்ப்பாளராக காம்யூவும் மறுதிசையில் கம்யூனிஸ ஆதரவாளராக ஸார்த்தரும் பரிமாணமெய்திய காலம் அது. கம்யூனிஸ்ட்டுகளும் வன்முறையும் சமாதானமும் குறித்து ஸார்த்தர் ஒரு முழுமையான நூலை The Communists and The Peace (1952) எழுதிய காலமும் அதுதான். ஸார்த்தர் - காம்யூ இடையிலான விவாதங்களுக்கான துவக்கப் புள்ளியை காம்யூ 1946ம் ஆண்டில் எழுதிய, "பாதிக்கப்பட்டவனாகவும் இருக்க விரும்பவில்லை. கொலையாளியாகவும் இருக்க விருப்பமில்லை" எனும் கட்டுரையின் தடங்களில் நாம் காணமுடியும். ஸார்த்தர் பிரெஞ்சு யூதர். காம்யூ அல்ஜீரியாவில் பிறந்த பிரெஞ்சுக்காரர். ஸார்த்தரைப்போல் அல்லாது காம்யூ அல்ஜீரிய வன்முறைகளை அன்றாட வாழ்வில் அனுபவித்தவர். பிரெஞ்சுக்காரர்களும் அல்ஜீரியர்களும் பரஸ்பரம் வன்முறையை நிறுத்தி அவர்களுக்குள் சமரசமாகப் போகவேண்டும் எனக் கருதியவர் காம்யூ. பிரெஞ்சுக் காலனியாதிக்கம், அல்ஜீரியர்களின் தேசிய உணர்வு, அவர்களது விடுதலைப் போராட்டம், பிரெஞ்சுக்காரர்கள் அல்ஜீரியாவினின்று வெளியேறவேண்டும் போன்ற பிரச்சினைகள் காம்யூவின் கவனத்திற்குள் வரவில்லை. சாதாரணமான வார்த்தைகளில் சொல்வதானால் காலனியாதிக்கத்திற்கு முடிவு கட்டுவது தொடர்பாகவோ, மக்களது தேசிய விடுதலை உணர்வு தொடர்பாகவோ நினைத்திராத காம்யூ, சாராம்சத்தில் பிரெஞ்சுக் காலனியாதிக்கத்தை அல்ஜீரியாவில் தொடர்வதற்கான ஆதரவாளராகவே இருந்தார். மாறாக பிரஞ்சுக் காலனியாதிக்கத்திற்கு முடிவு கட்டும் அடிமைத்தனத்தை எதிர்த்த விடுதலைப் போராட்டமாகவே அல்ஜீரிய விடுதலையைக் கருதினார் ஸார்த்தர். பாதிக்கப்பட்ட மக்களின் நேரடி இராணுவ எதிர்ப்பு அரசியல் வன்முறையையும், பிரெஞ்சுக் குடியேற்றக்காரர்கள் மீதான பயங்கரவாத வன்முறையையும் ஒரே நிலையில் வைத்துப் பார்த்து ஆதரித்தவராக ஸார்த்தர் இருந்தார். யுத்தத்தினாலான வன்முறை, தனிநபர் பயங்கரவாதம் போன்றவற்றுக்கு இடையிலான வித்தியாசங்களை ஸார்த்தர் மறுதலித்தார். இரு வகையிலான வன்முறைகளையும் அவர் போராட்டத்தின் அங்கமாகவே பார்த்தார்.

ஒடுக்குமுறைக்கெதிரான வன்முறை தொடர்பான பனானின் பார்வையை ஸார்த்தர் முற்றிலும் ஒப்புக் கொண்டார். அடக்கப்பட முடியாத இந்த வன்முறை கோபத்தினால் விளைந்தது அல்ல, அல்லது காட்டுமிராண்டித்தனமான இயல்புணர்வின் மறு உயிர்ப்பில் விளைந்ததும் அல்ல, அல்லது ஒவ்வாமையின் விளைவும் அல்ல. இதனால் மனிதன் தன்னையே மறுஉருவாக்கம் செய்து கொள்கிறான் எனும் பனானது கருத்தை அப்படியே ஏற்கிறார் ஸார்த்தர். இவ்வகையிலான வன்முறையில் ஒடுக்குமுறையாளன் மரணமுறுகிறான். அடிமைத்தனத்தினின்றும் விமோசனம் பெற்ற ஒரு மனிதன் தோன்றுகிறான் என்றார் ஸார்த்தர்.

1960ம் ஆண்டு காம்யூ சாலை விபத்தில் மரண மடைகிறார். அவர் தனது இருத்தலியல் தத்துவத்தில் பேசிய வாழ்வின் அபத்தம் போலவே அவரது வாழ்வின் முடிவும் அபத்தமாகவே அமைந்தது. மரணமுறும்போது காம்யூவுக்கு 45 வயதே ஆகியிருந்தது. அதே ஆண்டில் தான் செக்கோஸ்லாவாக்கியா, கியூபா போன்ற நாடுகளுக்கும் விஜயம் செய்கிறார். காஸ்ட்ரோ, குவேரா போன்றவர்களையும் சந்திக்கிறார். கம்யூனிஸ எதிர்ப்பு நோக்கி காம்யூ நகர்ந்து கொண்டிருக்க, அதிகம்யூனிஸ்ட்டாக ஸார்த்தர் உலகை வலம் வந்த காலங்கள் அவை. காம்யூ அல்ஜீரிய மக்களின் அபிலாஷைகளைப் புரிந்து கொள்ளத் தவறிய காலத்தில், ஸார்த்தர் எந்தப் பிரெஞ்சுக்காரரும் செய்யத் துணியாத காரியத்தைச் செய்கிறார். பிரெஞ்சுக் காலனியாதிக்கம் முடிவுக்கு வர, பிரெஞ்சு இராணுவத்தினர் பிரெஞ்சு அரசாங்கத்தின் கட்டளைகளுக்கு கட்டுப்பட வேண்டாம் என அறிக்கை விடுகிறார். ஸார்த்தரின் இருப்பிடம் இதனால் இரண்டு முறை வலதுசாரி அல்ஜீரிய பிரெஞ்சுப் பயங்கரவாதிகளால் குண்டு வைத்துத் தகர்க்கப் படுகிறது. கொலை முயற்சியிலிருந்து அவர் தப்பிக்கிறார். பாதிக்கப்பட்டவனாகவோ கொலையாளியாகவோ இருக்க விரும்பாத சாத்வீகவாதிகளை, காம்யூவை முன்னிறுத்தி தன்னுடைய பனான் நூலுக்கான முன்னுரையில் ஸார்த்தர் பேசுகிறார் : பாதிக்கப்படாதவர் எனும் அளவில் நீங்கள் பிரெஞ்சு அரசாங்கத்திற்கு வாக்களிக்கிறீர்கள். நல்லது. ஆனால் உங்களது சகோதரர்கள், இராணுவத்தினர் அல்ஜீரியாவில் புரியும் இனக்கொலை தொடர்பான எந்தக் குற்றவுணர்வும் இல்லாமல் அங்கு கொலைகளில் ஈடுபடுகிறார்கள் என்றால், சந்தேகமேயில்லாமல் நீங்கள் கொலைகாரர்கள்தான் என்கிறார் ஸார்த்தர். இந்த வகையிலான தெளிவுடன் பிரெஞ்சு அறிவு ஜீவிகளான பூக்கோவோ அல்லது காம்யூவோ அரசியல் நிலைப்பாடுகள் எடுக்கவில்லை என்பது இங்கு நினைவுகூரத்தக்கது.

V

1961ம் ஆண்டு அல்ஜீரிய விடுதலைப் போராட்டம் உச்சத்திலிருந்த காலத்தில் பனானது நூலுக்கான முன்னுரை எழுதிய சந்தர்ப்பத்தினையடுத்து, ஸார்த்தர் இரண்டு பயங்கரவாத நடவடிக்கைகளை வெளிப் படையாக ஆதரித்து நின்றார். 1972ம் ஆண்டு ஜெர்ம னியில் நடந்த மூனிச் ஒலிம்பிக் பந்தயத்தில் பங்கு பெற வந்திருந்த இஸ்ரேலிய விளையாட்டு வீரர்களை கறுப்பு செப்டம்பர் இயக்கத்தைச் சேர்ந்த பாலஸ்தீனப் போராளிகள் கடத்திச் சென்றதை அவர் ஆதரித்து (About Munich : Jean Paul Sartre ,15 October 1972. Reproduced in Sartre Studies International Journal : Issue 2, 2003) எழுதினார். கறுப்பு செப்டம்பர் போராளிகள் நிகழ்த்திய அந்தக் கடத்தல் பாலஸ்தீன தேசவிடுதலைப் போராட்ட வரலாற்றில் இடம் பெறுகிறது. 1972ம் ஆண்டு அதி காலை செப்டம்பர் மாதத்தின் நாளொன்றில் ஐந்து மணியளவில் இஸ்ரேலிய விளையாட்டு வீரர்கள் தங்கியிருந்த விடுதியில் இந்தத் தாக்குதல் இடம் பெற்றது. ஐந்து பாலஸ்தீனர்களும் பிற மூன்று பேருமாக 8 பேர் இந்தத் தாக்குதலில் ஈடுபட்டனர். இஸ்ரேலியச் சிறைகளில் வாடும் 200 பாலஸ்தீனர்களை விடுதலை செய்யவேண்டும் என்பதுதான் போராளிகளின் கோரிக் கையாக இருந்தது. அப்போதைய இஸ்ரேலியப் பிரதமர் கோல்டா மேயர் பாலஸ்தீனர்களின் கோரிக்கையை உடனடியாக நிராகரித்துவிட்டார். ஜெர்மானிய உள் துறையமைச்சரும் ஒலிம்பிக் விளையாட்டுக்குழுத் தலைவரும் அரபு லீக் பிரதிநிதிகளும், துனிசியத் தூதரக அதிகாரியும் உள்ளிட்ட பேச்சுவார்த்தைக் குழு அமைக்கப்பட்டது. பேச்சுவார்த்தைக் குழுவின ருக்கும் பாலஸ்தீனப் போராளிகளுக்கும் ஒரு ஒப்புதல் ஏற்பட்டது. அதன்படி ஒலிம்பிக் தங்கும் விடுதியின் அருகிலிருக்கும் ஒரு ஜெர்மனிய ராணுவத் தளத்திற்கு உலங்கு வானூர்தியில் பாலஸ்தீனர்களும் இஸ்ரே லியப் பிணைக்கைதிகளும், 3 ஜெர்மானிய அதிகாரி களும் செல்வதென்றும், அங்கிருந்து அவர்கள் விமானத்தின் மூலம் துனிசியாவிற்கு எடுத்துச் செல்லப் படுவார்கள் எனவும் ஒப்பந்தம் ஆனது. உலங்கு வானூர்தியிலிருந்து விமானத்துக்கு மாறும் தருணத் தில் ஒலிம்பிக் கமிட்டியின் தலைவரிடமிருந்து ஒரு செய்தி வந்தது. இஸ்ரேலியர்களுடன் பாலஸ்தீனர்கள் நாட்டைவிட்டு வெளியேற அனுமதிக்கக் கூடாது என்பதுதான் அந்தச் செய்தி. ஜெர்மானிய உலங்கு வானூர்தியிலிருந்து விமானத்திற்கு மாறும் தருணத் தில் துப்பாக்கிகள் வெடித்தன. அனைத்து இஸ்ரேலி யர்களும், ஐந்து பாலஸ்தீனர்களும் கொல்லப்பட்டனர். மூன்று பாலஸ்தீனர்கள் காயம்பட்டுப் பிற்பாடு பிடிபட் டனர். "நாங்கள்தான் முதலில் சுட்டோம் என நான் நினைக்கிறேன்" என ஜெர்மானிய போலீஸ் தலைமை யதிகாரி பின்னாளில் அது பற்றி நியூயார்க் டைம்ஸ் பத்திரிகைக்குப் பேட்டியளித்தார். இயற்கையாகவே போலீஸ்தான் முதலில் சுடவேண்டும் என பவேரிய உள்துறை அமைச்சர் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து தனது சகோதர நாடுகளுடன் இணைந்து பயங்கரவாதத்திற்கு எதிரான உலக அமைப்பை உருவாக்குவதென அமெரிக்கா அறிவித்தது. இந்தக் குழுவில் அமெரிக்க உளவுத்துறையான சி.ஐ.ஏ. மற்றும் எப்.பி.ஐ. பிரிவுகள் அங்கம் வகிக்கும் எனவும் சொல்லப்பட்டது.

1972ம் ஆண்டு அக்டோபர் 15 ம் திகதி ஸார்த்தர் இந்தச் சம்பவம் குறித்த அறிக்கையொன்றினை வெளியிட்டார். சின்னஞ்சிறு கட்டுரையான அதில்

வரலாற்றுரீதியில் பாலஸ்தீனர்களுக்கும் இஸ்ரேலியர் களுக்கும் இருக்கும் பிரச்சினைகளையும், அவர்கள் ஒரு யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதனையும் ஸார்த்தர் சுட்டிக் காட்டுகிறார். இஸ்ரேலியர்களின் இறையாண்மையை அங்கீகரிக்கும் அவர், பாலஸ்தீனர் களின் இறையாண்மைக்கான அவர்களது உரிமை யையும் அங்கீகரிக்க வேண்டும் என்கிறார். அல்ஜீரிய விடுதலைப் போராட்டத்தில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல்களை ஒப்புக்கொள்வது போலவே பாலஸ் தீனர்களின் தாக்குதல்களையும் ஒப்புக்கொள்ள வேண்டும் என்கிறார் ஸார்த்தர். இந்த யுத்தத்தில் பாலஸ்தீனர்களிடம் இருக்கும் ஒரே ஆயுதம் பயங்கர வாதம்தான் எனும் அவர், இது பயங்கரமான ஆயுதம், ஆனால், ஒடுக்கப்பட்ட ஏழை மக்களிடம் இது தவிரவும் வேறு ஆயுதங்கள் இல்லை என்கிறார். இஸ்ரேலிய நிலைப்பாடு தொடர்பாகவும் இதே அளவிலான சமதூரத்தை அவர் கடைப்பிடிக்கிறார். இஸ்ரேலியத் தரப்பு பாலஸ்தீனர்களின் கோரிக்கையை ஒப்புக் கொள்ளாததில் இருக்கும் நியாயத்தைத் தான் விளங்கிக் கொள்வதாக அவர் தெரிவிக்கிறார். யுத்தத்தில் இருக்கும் வேளையில் பாலஸ்தீனர்களுக்கு எந்தவிதமான சலுகைகளும் தரப்பட வேண்டியதில்லை எனும் அவர்களது நிலைப்பாடு புரிந்துகொள்ளக் கூடியதாகவே இருக்கிறது என்கிறார் அவர். இந்தச் சிறு கட்டுரையில் பிறிதொரு விடயத்தையும் அவர் முன் வைக்கிறார். பாலஸ்தீனர்களுக்கு முன்னால் இரண்டு பிரச்சினைகள் இருக்கிறது என்கிறார் அவர். நிலப் பிரபுத்துவ மதிப்பீடுகளால் வழிநடத்தப்படும், சோச லிசத் திட்டமில்லாத மத்திய கிழக்கு ஆட்சியாளர்களும் பாலஸ் தீனர்களை வாயளவில் ஆதரித் தாலும் அவர்களை இனக்கொலை செய்கிறார்கள். பாலஸ்தீனர்களின் போராட்டம் எதற்கு தற்போது முக்கி யத்துவம் தரவேண்டும் எனும் கேள் வியையும் அவர் அக் கட்டுரையில் எழுப்புகிறார்.

இடமிருந்து வலம்: Jean Pouillon, Pierre Victor (Benny Levy), Claire Etcherelli, François George, Gerard Horst, Simone de Beauvoir, Jean-Paul Sartre, Pierre Rigoulot

இந்தத் தாக்குதல் பாலஸ்தீனர்களின் நோக்கத்தை எந்த விதத்திலும் முன்னெடுத்துச் செல்லாது எனினும், இந்தப் பிரச்சினையை உலகறியச் செய்திருக்கிறது என்றும் குறிப்பிடுகிறார். அனைத்துக்கும் மேலாக இந்தத் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு எந்த விதத்திலும் பாலஸ்தீனர்களைக் குற்றம் சாட்ட முடியாது எனவும் அவர் தெரிவிக்கிறார். பாலஸ்தீனர்கள் இஸ்ரேலிய விளையாட்டு வீரர்களைக் கொல்வதை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை, அவர்கள் பேச்சுவார்த்தையில் ஈடுபடவே விரும்பினர். தாக்குதலை ஜெர்மானியப் போலீசாரே மேற்கொண்டனர். கொலைகளுக்கு அவர்களே பொறுப்பு எனவும் அவர் தெரிவிக்கிறார். பாலஸ்தீனர்களின் நடவடிக்கை இந்தப் பிரச்சினையை அனைவரது பிரச்சினையாகவும் ஆக்கியிருக்கிறது. ஐக்கிய நாடுகள் சபையின் முன்பும் இப்பிரச்சினையை முன்வைத்திருக்கிறது. இதுவே இந்தக் கடத்தலின் முக்கியத்துவம் எனவும் அவர் தெரிவிக்கிறார். இஸ்ரேலிய நகரான டெல் அவிவில் குண்டு வெடிக்கிறபோது அதனை எந்த வியாக்கியானமும் அற்று வறட்டுத்தனமாக வெளியிடும் பத்திரிகைகள் மூனிச் சம்பவத்தில் தீர்ப்பு சொல்ல வந்திருக்கின்றன எனக் குறிப்பிட்ட ஸார்த்தர், இச்சம்பவம் தொடர்பான பிரெஞ்சுப் பத்திரிகைகளின் நிலைப்பாட்டையும் மறுத்திருக்கிறார். வரலாற்றரீதியிலான அல்ஜீரியப் பிரச்சினை, அதன் பின்பான பாலஸ்தீனப் பிரச்சினை, அதில் இடம்பெறும் பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பாகவே ஸார்த்தர் தன்னுடைய அபிப்பிராயங்களை முன்வைத்திருக்கிறார். போராட்டத்தில் நேரடியாக சம்பந்தப்படாத வெகுமக்கள் மீதான வன்முறையை அல்ஜீரியாவில் ஆதரித்த ஸார்த்தர், அதேவகையிலான நிலைப்பாட்டை பாலஸ்தீனர்களின் இத்தாக்குதல் தொடர்பாக ஸார்த்தர் எடுக்கவில்லை என்பதனை இந்த அறிக்கையை ஆழ்ந்து வாசிக்கிறவர்கள் அறிந்து கொள்ளமுடியும். அதுவன்றி பிரெஞ்சுக் காலனியாதிக்க வன்முறை, சட்டபூர்வமற்ற முறையிலான பிரெஞ்சுக் குடியேற்றங்கள் போன்றவற்றை அல்ஜீரியப் பிரச்சினையில் தீவிரமாக விவரித்து எழுதிய ஸார்த்தர், இப்பிரச்சனையில் இஸ்ரேல் தொடர்பாக தெளிவான நிலைப்பாடு எடுக்கவில்லை என்பதனை அறிக்கையை கூர்ந்து வாசிக்கிற எவரும் அறிந்து கொள்ள முடியும்.

VI

1968 மாணவர் தொழிலாளர் எழுச்சியைத் தொடர்ந்து உலகெங்கும் மாவோ, குவேரா போன்றவர்களால் ஆகர்ஷிக்கப்பட்ட ஒரு தலைமுறை தோன்றியது. கொரில்லா யுத்தத்தை வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் நகரங்களுக்கும் நகர்த்துவதாக சிவப்புப் படையணி என்ற ஒரு அமைப்பு வெவ்வேறு நாடுகளில் சுயாதீனமாகச் செயல்படத் துவங்கியது. இத்தாலியில் ரெட் பிரிகேட்ஸ் எனவும், ஜப்பானில் ரெட் ஆமி எனவும், ஜெர்மனியில் ரெட் ஆமி பேக்ஸன் எனவும் இந்த அமைப்புகள் செயல்படத் துவங்கின. அமெரிக்காவினதும் மேற்கத்திய நாடுகளதும் மிகப்பெரும் ஆலை முதலாளிகளையும் ராணுவ அதிகாரிகளையும் கடத்திச் சென்று கொலை செய்வதென்பது இவர்களது பிரதான போராட்ட வடிவமாக இருந்தது. ஜெர்மனியில் சிவப்புப் படையினர் - ரெட் ஆமி பேக்ஸன் - எனும், ஆந்திரியே பாதர் மற்றும் பத்திரிகையாளரான பெண்மணி மேயின் காம்ப் தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட பயங்கரவாதத் தாக்குதல்களை ஸார்த்தர் ஆதரித்து எழுதினார். அதனோடு 1974ம் ஆண்டு சிறையில் சென்று (The Slow Death of Andreas Baader : Libération, December 7, 1974 : marxists.org by Mitch Abidor) அவர்களைச் சந்திக்கவும் செய்தார். பாதார் மேயின் காம்ப் அணியின் நடவடிக்கைகள் பிரம்மாண்டமான சூப்பர் மார்க்கெட்டுகளைத் தகர்ப்பதாகவும் வங்கிகளைக் கொள்ளையடிப்பதாகவும் அமைந்தது. பல்வேறு கொலைகளுக்குப் பிறகு பாதார் மேயின் காம்ப் அணியினர் ஜெர்மன் போலீசாரின் வேட்டையில் பிடிபட்டனர். ஸ்டாயின்

ஹெம் எனும் இடத்திலுள்ள சிறைச்சாலையில் தனிமைச் சிறையில் வைக்கப்பட்டவர்கள் மீதான சித்திரவதையினை எதிர்த்தும் அவர்கள் அங்கு நடத்தப்பட்ட விதத்தினை கண்டித்தும் உண்ணா விரதத்தினை மேற்கொண்டனர். இவர்களைச் சந்திப் பதற்காக ஸார்த்தர் ஜெர்மனி சென்றார். சந்திப்பதற்கு முன்பாக ஜெர்மனியின் டெர் ஸ்பீகல் பத்திரிகைக்கு அளித்த நேர்முகத்தில், அவர்கள் புரட்சியாளர்கள். அவர்களைத் தான் விரும்புகிறேன் என அறிவித்திருந்த ஸார்த்தர், அவர்களைச் சந்திக்க ஜெர்மனிக்கு வந்த வேளையில் அவர்களது தனிநபர் பயங்கரவாத நடவடிக்கைகளில் தனக்கு உடன்பாடு இல்லை எனத் தெரிவித்தது மட்டுமல்ல, அவர்களது நடவடிக்கை இடதுசாரிகளின் நடவடிக்கைகளைப் பின்னுக்குத் தள்ளிவிடும் எனவும் குறிப்பிட்டார். ஸார்த்தரை சிறையில் வரவேற்ற பாதார், ஒரு நண்பரை நாங்கள் எதிர்பார்த்தோம், ஆனால் ஒரு நீதிபதி வந்திருக்கிறார் என அந்தச் சந்திப்பினைப் பற்றிக் குறிப்பிட்டதாக ஸார்த்தர் தெரிவித்திருக்கிறார். பாதாரைத் தான் இரண்டு நோக்கங்களுக்காகவே சிறையில் சந்தித்த தாகப் பிற்பாடு ஸார்த்தர் இந்தச் சந்திப்பு குறித்து எழுதும்போது குறிப்பிடுகிறார். முதலாவதாகத் தான் உடன்படாத விஷயங்கள் தவிர்த்து, தான் வெளியில் சென்று என்ன சொல்ல முடியும் எனத் தான் நினைக்கிறாரோ அது பற்றிப் பேசுவதற்காக அவர்களைச் சந்தித்தேன் என்கிறார். இரண்டாவதாக அவர்கள் சொல்ல முயலும் விஷயத்தைச் சொல்ல இயலாமல் ஆக்கும் அளவிலான ஜெர்மானிய சிறைச்சாலைச் சித்திரவதைகளை நிறுத்துவதற்கென ஒரு இயக்கத்தை உலகெங்கும் துவங்கும் நோக்கத் திலும் அவர்களைச் சந்தித்தேன் என்றும் எழுதுகிறார். சிறைக்குள் சுற்றுச்சூழல் தொடர்பாடல்களையும் சப்தத்தையும் தடை செய்து, மனிதஜீவி எனும் அளவில் மூளையைக் கொல்லும் நடவடிக்கையை ஜெர்மானிய அரசு மேற்கொள்கிறது என ஸார்த்தர் தெரிவிக்கிறார். பாதார் மேயின் காம்ப் குழுவினர் தொடர்பாக, ஸார்த்தர் அவர்களது தனிநபர் பயங்கரவாதத்தை முற்றிலும் ஆதரித்தார் என்பதற்கான எந்தச்சான்றும் இல்லை. தொலைக்காட்சிப் பேட்டியிலும் சரி, பாதார் குழுவைச் சந்தித்த பின் எழுதிய கட்டுரையிலும் சரி இதனைத் தெளிவுபடுத்துகிறார். ஐரோப்பியனைக் கொல்வதன் மூலம் ஒரு அடக்குமுறையாளனையும் கொல்லும் அடிமையாளனை ஸார்த்தர் இங்கு குறிப்பிடவில்லை. பின்னாளில் பாதார் மேயின் காம்ப் குழுத் தோழர்கள் சிறையில் தூக்கிலிட்டுக் கொண்டும் துப்பாக்கியால் சுட்டுக் கொண்டும் மரணமுற்றதாக ஜெர்மானிய அரசு அறிவித்தது. ஆனால் அவர்களை ஜெர்மானிய அரசு திட்டமிட்டுக் கொலை செய்திருக்கிறது என்பதுதான் இன்றளவும் ஜெர்மானிய இடதுசாரிகளிடம் நிலவும் நம்பிக்கையாக இருக்கிறது.

கறுப்பு செப்டம்பர் போராளிகள் தொடர்பாக எடுத்த நிலைப்பாடு போன்றதொரு நிலைப்பாட்டையே பாதார் மேயின் காம்ப் தீவிரவாதிகளின் வன்முறை தொடர் பாகவும் ஸார்த்தர் எடுத்தார் என்பது தெளிவு. ஆபத்திலிருக்கும் ஒரு இடதுசாரி அமைப்புக்கு ஆதரவு தெரிவிக்கும் நடவடிக்கையே தனது பாதார் குழுவின ருடனான சந்திப்பு என்பதை அவர் தெளிவுபடுத்து கிறார். அவர்களது நடவடிக்கையைத் தான் ஒப்புக் கொள்ளவில்லை என்றும், இவ்விதமான நடவடிக்கை இடதுசாரிகளின் தொடர்ந்த நடவடிக்கைகளையும் பின்னடையச் செய்துவிடும் என்றும் அவர் கருத்துத் தெரிவிக்கிறார்.யுத்தச் சூழல் தவிர்ந்ததொரு நிலை மையில் நேரடியாகப் பிரச்சினையில் சம்பந்தப்படாத வர்கள் மீதான வெகுமக்கள் கொலைகளை ஸார்த்தர் ஆதரிக்கிறார் என்று சொல்ல முடியாது. குறிப்பாக தனிநபர்களைக் கடத்திச் சென்று கொல்லும் நடவடிக் கையை ஸார்த்தர் ஆதரிக்கிறார் என்றும் கொள்ள முடியாது. அல்ஜீரிய விடுதலைப் போராட் டத்தில் இடம்பெற்ற வன்முறைகள், பிரெஞ்சுக் குடியேற்றக்காரர் களை எதிர்த்த அல்ஜீயர்களின் பயங்கரவாத வன்முறைகள் போன்றவற்றை ஆதரித்த அதே தொனியில் பாலஸ்தீனர்களின் வன்முறையையும் பாதார் மேயின் காம்ப் குழுவினரின் வன்முறையையும் ஸார்த்தர் ஆதரிக்கவில்லை என்பது மட்டுமல்ல, இந்தச் சம்பவங்களுக்கும் அல்ஜீரிய விடுதலைப் போராட்ட வன்முறை குறித்து ஸார்த்தர் எழுதிய காலகட்டத்திற்கும் இடையில் வன்முறை குறித்து அவர் ஆற்றிய இரண்டு உரைகளில் வன்முறை பாவிக்கப்படுவதற்கான அறவியல் அடிப்படைகளையும் ஸார்த்தர் முன்வைத்திருக்கிறார். அதனோடு பயங்கர வாதம், புரட்சிகர வன்முறை மற்றும் வன்முறையின் அறவியல் தொடர்பான கேள்விகளிலும் அவர் அதிகமாக ஈடுபடுகிறார் என்கிறார் அமெரிக்க ஸார்த்தர் ஆய்வாளரான ரொனால்ட் ஸன்டோனி.

VII

செப்டம்பர் 11ம் தேதி நிகழ்ச்சிக்குப் பிறகாக, வன்முறை தொடர்பான ஸார்த்தரின் எழுத்துக்கள் தீவிரமான மறுவாசிப்புக்கு உள்ளாகின்றன. மூனிச் மற்றும் ஜெர்மன் சிவப்புப் படையணி தொடர்பான அவரது எழுத்துக்களோடு, அல்ஜீரிய விடுதலைப் போரில் வன்முறை தொடர்பான அவரது எழுத்துக் களும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இதனோடு 1960ம் ஆண்டின் மத்தியில் அவர் எழுதாது கைவிட்ட அறவியலும் வரலாறும் (Morality and History) நூலுக்கான முன்வரைவுகளின் பிரசுரிக்கப்படாத கையெழுத்துப் படிகளை முன்வைத்து (Rome Lecture: 1964) விவாதங்கள் மேற்கொள்ளப்படுகிறது. உலக வர்த்தகக் கட்டிடத்தின் கீழ் வாழ்ந்த வீடற்றவர்களும் அப்பாவிகளுமான வெகுமக்கள் கொல்லப்பட்ட நியூயார்க் சம்பவத்தை ஸார்த்தர் ஆதரிப்பாரா அல்லது கண்டனம் செய்வாரா என்ற கேள்விகளுடன் இது தொடர்பான கருத்தரங்கொன்றினை அமெரிக்க ஸார்த்தர் ஆய்வுக் கழகத்தினர் நடத்தியிருக் கிறார்கள். குறிப்பிடப்படும் இந்த கையெழுத்துப் படிகள் இரண்டு உரைகளுக்காகத் தயார் செய்யயப்பட்ட தாகும். முதலாவது உரையை ஸார்த்தர் ரோமிலுள்ள கிராம்ஸி இன்ஸ்டிட்யூட்டில் 1964ம் ஆண்டு மே மாதம் 23ம் திகதி அறவியலும் சமூகமும் (Morality and Society) எனும் தலைப்பில் நிகழ்த்துகிறார். இரண்டாவது உரையை அதே தலைப்பில் அமெரிக்காவிலுள்ள கார்னல் பல்கலைக் கழகத்தில் 1965 மார்ச் அல்லது ஏப்ரல் மாதத்தில் நிகழ்த்த ஸார்த்தர் ஒப்புக் கொண்டிருந்தார். வியட்நாம் மீதான அமெரிக்காவின் ஆக்கிரமிப்பினையடுத்து ஸார்த்தர் அமெரிக்க விஜயத்தையும் அந்த உரை நிகழ்வையும் ரத்துச் செய்கி றார். எனினும் அந்த உரையின் கையழுத்துப்படிகள் 2002ம் ஆண்டில் ஸார்த்தர் ஆய்வாளரான எலிசபத் போமன் அவர் களால் கண்டுபிடிக்கப்பட்டதனையடுத்து ஸார்த்தர் பற்றிய விவாதங்கள்

மறுபடியும் வேகம் கொள்ளத் துவங்கியிருக்கிறது.

அமெரிக்காவில் 2002ம் வருடம் நடந்த கருத்தரங்கில் பயங்கரவாதத்தை நியாயப்படுத்த ஸார்த்தர் ஏதேனும் அறவியல்புகளை முன்வைக்கிறாரா என்ற கேள்வி பிரதானமாக எழுந்தது. ஸார்த்தர் குறிப்பிடும் ஒடுக்குமுறைக்கு எதிரான தாக்குதல் என்பது செப்டம்பர் 11 தாக்குதலுக்குப் பொருந்துமா என்கிற கேள்விகள் முன்வைக்கப்பட்டன. அறுபதுகளிலும் எழுபதுகளிலும் நிலவிய வன்முறைகளோடு ஒப்பிடும் போது, கடந்த 30 ஆண்டுகளாக நிலவி வரும் வன்முறையின் குணரூபமான வித்தியாசங்கள் என்ன என்கிற விசாரணைகளும் முன்வைக்கப்பட்டன. 1948ம் ஆண்டு வெளியான What is literature?, 1947-48களில் வெளியான Notebooks for an ethics, 1980ம் ஆண்டு வெளியான Hopes: Interviews போன்றவற்றில் வெளியான ஸார்த்தரின் வன்முறை குறித்த மேற்கோள்களை முன்வைத்து தனது நிலைப்பாட்டை ரொனால்ட் சந்தோனி குறித்துச் செல்கிறார். வன்முறை ஒரு பின்னடைவு எனக் குறிப்பிடும் ஸார்த்தர், இது தவிர்க்கவியலாத பின்னடைவாக இருக்கிறது என்றும் குறிப்பிடுகிறார். உலகம் வன்முறையால் நிறைந்திருக்க, வன்முறைக்கு முடிவு கட்ட, ஒரே வழியாக வன்முறை இருக்கிறது எனவும் ஸார்த்தர் குறிப்பிடுகிறார். ஸார்த்தர் வன்முறை பற்றிக் குறிப்பிடும் போதெல்லாம் தவிர்க்க முடியாதது, தேவையானது, மன்னிக்கப்படத்தக்கது என்று தான் சொல்கிறாரே அல்லாது, ஒரு இடத்திலும் அறவியல் ரீதியில் நியாயப்படுத்தக் கூடியது (moraly jusifiable) எனச் சொல்வதில்லை என்கிறார் சன்டானி.

இலக்கும் வழிமுறையும் தொடர்பான ஸார்த்தரது Rome Lecture இலிருந்து மேற்கோள் காட்டுகிறார் சன்டானி. இலக்கை இயல்பு கெடாமல் வைத்திருக்குமானால் எந்த வழிமுறையும் நல்லதுதான் என்கிறார் ஸார்த்தர். நியாயப்படுத்துதல் எனும் வகையில் வன்முறை தொடர்பான ஸார்த்தரது கருத்துக்கள் இருமனப்போக்கையே (ambivalence) கொண்டிருக்கிறது என்கிறார் சன்டானி. ஸார்த்தர் இன்று இருந்திருந்தால், நிச்சயமாக உலகில் நிலவும் அநீதிக்கான விளைவாகவே இந்தத் தாக்குதல் நடந்திருக்கிறது என அவர் சொல்வார் என்கிறார் சன்டானி. ஆனால் மறுபுறத்தில், ஒன்றிணைந்த மனித குலத்தை (integral humanity) உருவாக்க நினைப்பவர் எனும் அளவில் இந்நடவடிக்கை குற்றத்தன்மை வாய்ந்ததெனவே அவர் கருதுவார் எனவும் சன்டானி தெரிவிக்கிறார்.

ஸார்த்தரின் வன்முறை எழுத்துக்களைப் பற்றிக் குறிப்பிடுகிறபோது, அவரின் புனைவெழுத்தான Dirty hands, Devil and the Lord போன்றவற்றில் வன்முறையை மனித விமோசனத்திற்கான கருவி என ஸார்த்தர் குறிப்பிடுகிறார். The Communists and The Peace என்னும் நூலில் ஆர்தர் கோஸ்லர் மீதான விமர்சனத்திலும் வன்முறை சுதந்திர சமூகத்தைத் தருமானால், அது ஒரு மனிதாபிமானமுள்ள சமூகத்தை அமைக்குமானால் வன்முறையை உபயோகிக்கலாம் என ஸார்த்தர் கூறுவதாகத் தெரிவிக்கிறார், தேசிய விடுதலைப் போராட்டங்களில் வன்முறையை ஆதரிக்கும் ரொனால்ட் அரன்சன், வன்முறை பயங்கரவாதமாகிற போதுதான் பிரச்சினை வருகிறது என்கிறார் அவர். கடந்த 30 ஆண்டுகளில் நடைபெற்று வரும் வன்முறையிலான போராட்டங்கள், காலனிய எதிர்ப்புத்தன்மை கொண்டவையாகவோ, நிறவெறி எதிர்ப்புத்தன்மை கொண்டதாகவோ இருக்கவில்லை எனும் அரன்சன், இலக்கு நோக்கிய வன்முறையாக நடந்துவரும் வன்முறை இல்லை என்பதனையும் சுட்டிக்காட்டுகிறார். மனித விடுதலை என்பதற்கு மாறாக குறுகிய வகையிலான இனத்தேசியங்களை உருவாக்கவும், வலதுசாரி நோக்கங்களுக்காகவுமே தற்போதைய வன்முறைகள் நடந்து வருகின்றன எனவும் அவர் குறிப்பிடுகிறார். ஆகவே வன்முறை வழிமுறைகள், வன்முறையின் இலக்குகள் போன்றன பற்றி நாம்

குறிப்பாக விவாதிக்க வேண்டும் எனக் குறிப்பிடும் அரன்சன், ஸார்த்தர் இவ்வகையிலான வன்முறைகளை விமோசன வகையிலான (emanicipatary) வன்முறைகள் எனக் கருதுவார் எனத் தான் நினைக்கவில்லை எனவும் குறிப்பிடுகிறார். ஆல்பர்ட் காம்யூவின் அறநிலைப்பாடு, ஸார்த்தரின் ஆழ்ந்த அரசியல் தரிசனம் போன்ற வற்றின் அடிப் படையில், தீமைக்கு எதிராக மிகப்பெரும் தீமையை உருவாக்கிவிடக் கூடாததான ஒரு வழிமுறையையே நாம் தேடவேண்டும் எனவும் குறிப்பிடுகிறார் அரன்சன்.

ரோபர்ட் ஸ்டோன், ஸார்த்தர் வன்முறையை காரண காரியமற்று நியாயப்படுத்துவதில்லை எனக் குறிப்பி டுகிறார். ஆதாரமாக, Rome Lecture : 1964 படிகளிலிருந்து ஆதாரங்களை முன்வைக்கிறார். இலக்கை திசை மாற்றும் எந்த வழிமுறையும் ஒப்புக் கொள்ளத் தக்கதல்ல எனும் அவருடைய நிலைப்பாட்டை அந்த உரையில் ஸார்த்தர் முன்வைக்கிறார் எனும் ஸ்டோன், வழிமுறை நேரடியாக இலக்குடன் பிணைக்கப் பட்டுள்ளது எனவும் ஸார்த்தர் கூறுவதாகத் தெரிவிக் கிறார். மக்களிடம் அடிப்படை கொள்ளாத வன் முறையை ஸார்த்தர் நிராகரிக்கிறார். பயங்கரவாதம் என்பதை ஒரு கருத்தியலாக முன்வைக்கக் கூடாது என்றும், தேவைக்கு வெளியில் பயங்கரவாதத்தைப் பயன்படுத்தக்கூடாது என்றும் கூறுகிறார். வேறு வழிமுறைகள் இருக்கும்போது, சுலபமான வழிமுறை யாக வன்முறையைக் கையாளக்கூடாது எனவும் ஸார்த்தர் குறிப்பிடுகிறார். இலக்கானது மனிதாபி மானத்திலிருந்து விலகியதாக இல்லாதபோதும், மக்களிடமிருந்து வெளிப்படும்போதும் மட்டுமே, அவசரமான நிலையில் விடுதலைக்கு இடைத் தங்க லாக மட்டுமே வன்முறை இருக்கவேண்டும். அல்கை தாவின் தாக்குதல், ஸார்த்தர் வன்முறையை நியாயப் படுத்த முன்வைக்கும் எந்தத் தரவுகளுடனும் உட்படுத்தக்கூடியதான தாக்குதல் அல்ல எனவும், அல்கைதாவின் வன்முறைக்கு எந்த மக்களின் அடித்தளமும் இல்லை எனவும், "புனித யுத்தம்" எனும் கருத்தியலினால் உந்தப்படுவதாகவும்தான் தாக்குதல் இருக்கிறது என்கிறார் ஸ்டோன். சவுதி அரேபியா விலிருந்து அமெரிக்கப் படைகளை வெளியேற்றுவது தான் நோக்கமெனில், வேறு அரசியல் வழிமுறைகள் இருக்கவே இருக்கின்றன எனும் ஸ்டோன், விமானங் களில் இருந்த பெண்களும் குழந்தைகளும், உலக வர்த்தகக் கட்டிடத்தின் கீழ் வாழ்ந்து வந்த வீடற்றவர்களும் சேவைப்பணியில் ஈடுபட்டிருந்தவர் களும்தான் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்கிற ஸ்டோன், இந்த வகையில் செப்டம்பர் 11 தாக்குதலை ஸார்த்தர் நியாயப்படுத்தியிருக்கமாட்டார் எனவும் குறிப்பிடுகிறார்.

ஒரு மனிதன் தனது சுதந்திரத்தைத் தேர்கிறபோது அனைத்து மனிதருக்குமான சுதந்திரத்தைத் தேர்ப வனாக இருக்கவேண்டும். மனித சுதந்திரங்களின் (solidarity of human freedoms) ஒற்றுமைதான் இலக்குக்கும் வழிமுறைக்குமான உறவைக் கட்டுப்படுத்தமுடியும். எவரது சுதந்திரமும் அமைப்புரீதியிலான வன்முறை யினால் (systematic violence) சிதறடிக்கப்படக் கூடாது, ஒன்றுபட்ட மனிதகுலத்தை உருவாக்குவதற்காக வன்முறையை நியாயப்படுத்தலாம், ஆனால் இதற்கு மாறான வன்முறை இயல்புகெட்ட வன்முறையாகத் தான் இருக்கும், ஆனால் சுதந்திரங்களுக்கிடை யிலான ஒற்றுமை என்பது தற்போது நாம் வாழும் உலகத்திற்கு வெளியில்தான் நிலவ முடியும். ஏனெனில் நாம் வாழும் உலகம் பிளவுண்டதாகவும் சுரண்டல் நிறைந்ததாகவும் இருக்கிறது. ஆகவே வன்முறை தவிர்க்கப்பட முடியாதது என்பதாகவே ஸார்த்தரது நிலைப்பாடு இருக்கும் என்பதாகவே அரன்சன் போன்றவர்களின் நிலைப்பாடு அமைகிறது. கருத்த ரங்கின் இறுதி நிலைப்பாடாக அமெரிக்க நடவடிக்கை களின் எதிர்விளைவே செப்டம்பர் தாக்குதல் எனும் கருத்து முன்வைக்கப்பட்டது. ஆனால் நடைபெற்ற தாக்குதல் இலக்கற்ற பயங்கரவாதம் எனும் அளவில் குற்றத்தன்மை கொண்டது என்றே நிலைப்பாடுகள் முன்வைக்கப்பட்டது.

ஸார்த்தரை இந்தப் பின்னணியில் இருந்தெல்லாம் நாம் பார்க்கிற வேளையில், அவர் ஆயுதப் போராட்டம் மூலம் விடுதலையடைந்த கியூபாவுக்கு விஜயம் செய்ததை மறந்துவிடமுடியாது. சேகுவேராவை அவர் தன் காலத்தின் முழுமையான மனிதன் எனக் குறிப் பிட்டார். கொந்தளிப்பான காலத்தில் உயிர்வாதையின் இடையில் எழுதப்படுவதால் இலத்தீனமெரிக்க இலக் கியமே நிஜமான இலக்கியம் என ஸார்த்தர் குறிப்பிட்டார். பிடல் காஸ்ட்ரோவுடன் நட்புப் பாராட்டிய அவர், பிற்பாடு மாற்றுக் கருத்தாளர்களை கியூபா சிறையிலிட்டபோது, 1971ம் ஆண்டில் கியூபாவிலிருந்து தம்மைத் துரப்படுத்திக் கொண்டார். இஸ்ரேலை ஆரம்பம் முதல் இறுதி வரை தீவிரமாக ஆதரித்த அவர், அதே வகையில் பாலஸ்தீனர்களின் விடுதலைப் போராட்டத்தினையும் பாலஸ்தீன நாடு அமைவதையும் தீவிரமாக ஆதரிக்கவில்லை. 1952ம் ஆண்டு சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்துவிட்டு வந்த அவர் சோவியத் யூனியனில் அந்த மக்களுக்கு முழுமையான விமர்சன சுதந்திரம் இருக்கிறது என்று சொன்னதன் வழி சர்வதேச விமர்சனத்தைச் சம்பாதித்துக் கொண்டார். 1956ம் ஆண்டு சோவியத் யூனியனின் ஹங்கேரியத் தலையீட்டைக் கண்டித்தார். 1970ம் ஆண்டு சொலி டாரிட்டி தொழிற்சங்கக் கிளர்ச்சிக்கு ஆதரவாக போலந்துக்கும் செக்கோஸ்லாவாக்கியாவுக்கும் பயணம் செய்தார். 1973ம் ஆண்டு இஸ்ரேலுக்கு ஆதரவாக கெய்ரோ சென்ற அவர் 1974ம் ஆண்டு இஸ்ரேலுக்கும் விஜயம் செய்தார். 1975ம் ஆண்டுகளின் பின்பு அவருக்கு ஏற்பட்ட மாரடைப்பினாலும் கண்களில் ஏற்பட்ட ரத்தக் கசிவினாலும் அவரது உடல்நலம் முற்றிலும் சீர் குழிந்தது. 1968ம் ஆண்டு அவருக்கு அறிமுகமான பியரே விக்டர் அவரது காரியதரிசியாக பொறுப்பேற்றுக் கொண்டார். இதன் பின்பாக அவரது வெளியுலக நடவடிக்கைகள் மட்டுப் படுத்தப்பட்டன. அவரது படிப்பாள ராகவும் கவன ஈர்ப்பாளராகவும்



பியரே விக்டர் பொறுப்பெடுத்துக் கொண்டார். இக்கால கட்டத்தில் யூதமதச் சிந்தனையாராள லெவினாஸின் போதனைகளால் பாதிப்புற்ற விக்டர் அவர் குறித்து தொடர்ந்த உரையாடல்களை ஸார்த்தருடனும் மேற்கொண்டார். அவரது இறுதிக்காலத்தில் விக்டரின் அனுசரணையுடன் மட்டுமே அவர் வெளியுலகில் நடமாட முடிந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில்தான் அவர் 1979ம் ஆண்டு பாலஸ்தீன - இஸ் ரேல் பிரச்சினை தொடர்பான கருத்தரங்கொன்றினை ஏற்பாடு செய்கிறார். இஸ்ரேலுக்கு உலக அளவில் அங்கீகாரம் பெற்றுத் தருவது என்பதாகவே அந்தக் கருத்தரங்கின் நிகழ்ச்சி நிரல் இருந்ததாகப் பிற்பாடு எட்வர்ட் ஸைத் இது குறித்து எழுதினார்.

VIII

ஸார்த்தர் குறித்து மகோன்னதப்படுத்தும் செய்திகள் மட்டுமே வெளியாகி வந்த சூழலில், ஒரு சாதாரண மனிதனாக அவர் குறித்த எதிர்மறையான செய்திகளும் வெளிவந்தவண்ணமிருக்கின்றன. தனது இறக்கும் தறுவாயில், தான் மார்க்சியத்தை கை கழுவி விட்டதாகவும், தான் யூதமதத்தை விரும்புபவராக ஆகிவிட்டதையும் அவர் தெரிவித்தார்: தனது வாழ் நாள் முழுக்கவுமான நாத்திகத்தைக் கைவிட்டு விட்டதாகத் தெரிவித்தார். அமைப்பின் பகுதியாக ஆகவிரும்பாததால் 1971ம் ஆண்டு நோபல் பரிசை நிராகரித்த அவர் 1975ம் ஆண்டு மறுபடியும் நோபல் பரிசையோ அல்லது பணத்தையோ தரமுடியுமா எனக் கேட்டு நோபல் பரிசுக் குழுவுக்குக் கடிதம் எழுதினார் என்றும் அவருடைய கோரிக்கையை அது நிராகரித்து விட்டது என்றும் செய்திகள் தற்போது வெளியாகி யிருக்கின்றன. அக் குழுவின் நீண்ட நாள் உறுப்பி னரான Lars Gyllensten தனது வாழ்க்கை வரலாற்று நூலில் இந்தத் தகவலைத் தெரிவித்திருக்கிறார். ஸார்த்தர் பரிசுத் தொகையை மறுத்த சந்தர்ப்பத்தில் மிகுந்த அவமானத்துக்குள்ளான நோபல் பரிசுக்குழு ஸார்த்தருக்கு அது சாத்தியமில்லை என பதிலிறுத்து விட்டதாகவும் அவர் குறிப்பிட்டிருக்கிறார். (Sartre after literature, the free encyclopedia : wekipedia.org)

ஸார்த்தரின் சுதந்திரக் காதல், பாலுறவு தொடர் பாக சிமொன் தீ போவுவா - ஸார்த்தர் போன்றவர் களிடம் இருந்த பரஸ்பர ஒப்புதலை அறியாத நிலை யில், ஸார்த்தர் மீதான ஒழுக்கவாதக் குற்றச் சாட்டுக்களும் இருக்கின்றன. சோவியத் யூனியன் சென்றபோது அவரது மொழிபெயர்ப்புப் பெண்ணாக இருந்தவரிடம் அவர் காதலுறவு கொண்டிருந்தார் எனவும், அவர் அரசியல்ரீதியிலான தோழமையுடன் பாலுறவு கொண்டிருந்த அவரது அல்ஜீரியக் காதலியையே பின்னாளில் தனது மகளாகத் தத்து எடுத்துக் கொண்டார் எனவும் குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன. தான் மரணமுற்றபின் தனது உடலை ஸார்த்த ருக்கு அருகில் புதைக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்ட தி போவுவா, ஸார்த்தரின் புத்தக உரிமைகள் மற்றும் அவரது சொத்துக்கள் போன்றன ஸார்த்தரின் வளர்ப்பு மகளுக்கே தரப்படவேண்டும் எனக் கோரினார். தமது மாணவியரை ஸார்த்த ருடன் உறவு கொள்ள ஏற்பாடு செய்தவ ராகவும், ஸார்த்தரின் காதலியருடன் சமப் பாலுறவு கொண்டவராகவும் இருந்தார் தி போவுவா. ஸார்த்தரது இருத்தலியல் தத்துவ நிலைப்பாட்டிலிருந்து "இரண்டாம் பால்" (The Second Sex, 1949) நூலை எழுதிய தீ போவுவா, பெண் எனும் அளவில் தனது ஆளுமையையும் ஸார்த்தரின் பார்வைக்குக் கீழாகவே அமைத்துக் கொண்டார். தனக்கான சுதந்திரமான தேர்வை அவர் மேற்கொள்ள வில்லை என்கிற பெண்நிலைவாத விமர்சனமும் இருக்கிறது.

ஸார்த்தருடன் தனது உறவை நிரந்தரப்படுத்திக் கொள்வதற்காக தனது அமெரிக்கக் காதலரான நெல்ஸன் ஆரானின் காதலைக் கைவிட்டார், சுதந்தி ரமான எந்தப் பெண்ணும் செய்ய ஒப்பாத நடவடிக்கை இது எனவும் அவர் விமர்சிக்கப்படுகிறார். தனது இறுதிவரையிலும் ஸார்த்தருடன் இணைந்து வாழ்ந்த தீ போவுவாவுடன் ஸார்த்தருக்கு தனது கடைசி 20 வருடங்களில் சரீரரீதியில் எந்த உறவும் இருக்க வில்லை எனினும், அந்த நிலையிலும் தனது வாழ்வின் மிகப்பெரும் சாதனை, தான் ஸார்த்தருடன் இணைந்து வாழ்ந்ததுதான் என்கிறார் தீ போவுவா. சரீரரீதியிலான உறவு இல்லையாயினும் பரஸ்பரம் பெருமதிப்பும் அன்பும் கொண்டவர்களாகவே ஸார்த்தரும் தீ போவுவாவும் வாழ்ந்தார்கள் என்கிறார் லிசா அப்பிக்னேசி. அதேபோது தீ போவுவா தனது புனை விலக்கியங்களிலும் தத்துவ நூல்களிலும் ஸார்த்தரது பிற பாலுறவுகள் சார்ந்து ஸார்த்தர் மீதான தனது பொறாமையையும் வெளிப்படுத்தியே வந்திருக்கிறார் எனவும் குறிப்பிடுகிறார் லிசா அப்பிக்னேசி. தமக்குள் காதலுறவு வைத்துக் கொள்வது, ஆனால் அது பரஸ்பரம் பிற உறவுகளை மேற்கொள்வதிலிருந்து தம்மை கட்டுப்படுத்தக்கூடாது என ஒப்பந்தம் செய்து கொண்டவர்கள் ஸார்த்தரும் தீ போவுவாவும். தமது உறவுகளை வெளிப்படையாக இருவரும் பரஸ்பரம் தெரியப்படுத்திவிட வேண்டும் எனவும் அவர்களிடம் புரிதல் இருந்தது. பெண்களுக்குத் தம்மை அறிய வைக்கும் பகுப்பாய்வின் வழி அவர்களிடம் உறவு கொண்டவர் ஸார்த்தர். அவரிடம் இடம் கொண்ட ஆண்பெருமித உணர்வின் நீட்சியில் அவரது வளர்ப்பில் ஆதிக்கம் செலுத்திய தாய்மைசார் அனுபவங்களிலிருந்தே உருவானதாக எழுதுகிறார் அவரது வாழ்க்கை வரலாற்று ஆசிரியரான அனி. இருத்தலியல் சிந்தனையில் சுதந்திரக் காதல், தேர்வு,

சுதந்திரம் போன்ற கருத்தாக்கங்கள் வழியில் அல்லாமல், ஒருவனுக்கு ஒருத்தி அல்லது காதலுறவில் உடமையுணர்வு என்பதன் வழியில் மட்டுமே குறுக்கி ஸார்த்தர் - தி போவுவா வாழ்வைப் புரிந்து கொள்வது மிகவும் கடினம். அவர்களது சிந்தனையமைப்பில் இருந்தும் அவர்தம் ஒப்புதலிலிருந்தும்தான் அவர்களது காதலுறவைப் புரிந்து கொள்ள வேண்டுமேயொழிய நமது மனப்பிரதிமைகளை அவர்களது உறவின் மீது திணிப்பதன் மூலம் நமக்கு மிஞ்சுவது ரசாபாசமான கதைகள் மட்டுமேயல்லாது ஆளுமைகள் மீதான புரிதலாக இருக்க முடியாது. ஒடுக்கப்பட்ட மனிதர்களின் துயரத்து உலகங்களின் கதவுகளைத் திறக்க ஸார்த்தரது பெண் தோழியர்களும் மொழிபெயர்ப்பாளர்களாகப் பணியாற்றிய பெண்களும் இருந்தார்கள் என ஸார்த்தரின் வரலாற்றாசிரியரான அனி கோகன் ஸகால் குறிப்பிடுகிறார்.

ஸார்த்தர் ஒரே சமயத்தில் ஒரு பெண்நிலைவாதியாகவும் சமவேளையில் மிக மோசமான ஆண்பெருமித வாதியாகவும் இருந்தார் எனவும் அவர் குறிப்பிடுகிறார். லிசா அப்பிக்னேசியின் வார்த்தைகளில் சொல்வதானால், ஸார்த்தரின் பரிசோதனைக்கு தி போவுவா இணங்கியதால் ஸார்த்தர் பெருமகிழ்வுற்றார். ஸார்த்தர் சுமத்திய சுதந்திரத்தை தி போவுவா ஏற்றுக்கொண்டு அதனது பாதுகாவலாகவும் இருந்தார் என்பது மட்டுமல்ல, ஸார்த்தரின் பொதுப் பொறுப்புகளின் பொருட்டு, ஆரானின் மீதான காதலை உதறிவிட்டு அவர் ஸார்த்தரிடம் திரும்பி வந்தார் (Legacy of Simone de Beauvoir, 2005) என்கிறார் அபிக்னேசி.

IX

21ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நமக்கு முன்னால் மார்க்சியம், பெண்நிலைவாதம் போன்ற இலட்சியங்களின் சரிவுகள் மட்டுமல்ல, இவற்றினது சரிவை மறுமதிப்பீடு செய்யப் புறப்பட்ட அமைப்பியல், பின்நவீனத்துவம் போன்ற அறிவுத்துறைப் போக்குகளின் போதாமையும் தெள்ளெனத் தெரிகிறது. ஸார்த்தர் மறைந்து 25 ஆண்டுகளின் பின் தனி மனிதனாக அவரது தத்துவத்துக்கும் அவரது நடை முறைக்கும் இருந்த முரண்கள் நமக்கு முன்னால் இருக்கிறது. அல்ஜீரிய விடுதலையில் வன்முறையை ஆதரித்த அவரால் பாலஸ்தீன விடுதலையை அதே முனைப்புடன் ஆதரிக்க முடியவில்லை. பிரெஞ்சுக் காலனியத்தை தீரத்துடன் எதிர்த்த அவரால் அதே தீரத்துடன் இஸ்ரேலியக் காலனியத்தை எதிர்க்க முடியவில்லை. 1952ம் ஆண்டு முதல் 1956ம் ஆண்டு வரையிலும் அவர் பிரெஞ்சுக் கம்யூனிஸ்ட் கட்சியின் சக பயணியாக இருந்திருக்கிறார். கொரிய யுத்தகாலத்தில் அவர் பிரெஞ்சுக் கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினராக இருந்திருக்கிறார் (Thomas Baldwin :The Oxford Companion to Philosophy). 1956ம் ஆண்டு ஹங்கேரி மீதான சோவியத் படையெடுப்பினையடுத்தும், அதனை பிரெஞ்சுக் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரித்தமையை எதிர்த்தும் அவர் கட்சியிலிருந்து வெளியேறுகிறார். ஆயினும் கம்யூனிஸ்ட்டுகளுடன் முழுவதுமாக அவர் உறவை முறித்துக் கொள்ளவில்லை. 1968 மாணவர் - தொழிலாளர் எழுச்சி, அந்த எழுச்சியில் கட்சி முதலில் பங்கேற்க மறுத்தமை, அல்ஜீரிய விடுதலையில் கட்சியின் காலனிய ஆதரவு நிலைப்பாடு ஆகிய வற்றை எதிர்த்து அவர் கம்யூனிஸ்ட் கட்சியுடனான தனது உறவை முற்றிலுமாகத் துண்டித்துக் கொள்கிறார். மாவோயிஸ்ட்டுக்களுடனும் சட்டபூர்வமற்ற முறையில் நடவடிக்கை மேற்கொள்பவர்களுடனும் தான் அவர் அதிகமும் ஈடுபாடு காட்டுகிறார். மாவோ, குவேரா போன்றவர்களின் ஆதர்சத்தில் உருவான ஐரோப்பிய நகர்ப்புற கெரில்லா இயக்கங்களின்பால் அனுசரணையான நிலைப்பாட்டை அவர் எடுத்த கால கட்டமும் இதுதான்.

1969 மே மாதம் பாரிஸ் மாணவர் - தொழிலாளர் கிளர்ச்சியை அடுத்து மாணவர்களிடம் அதிக ஈடுபாடு காட்டிய ஸார்த்தர் பிரெஞ்சு போலிசின் தாக்குதலில் இருந்து மாவோயிஸ்ட் மாணவர்களை தப்புவிப்பதற்காகவும், பத்திரிகைத் தடையினின்று தடுப்பதற்காகவும் பின்னாளில் பெண்ணி லெவி என அழைக்கப்பட்ட அன்றைய பியரே விக்டரின் வேண்டுகோளை ஏற்று மாவோயிஸ்ட் பத்திரிகையின் ஆசிரியர் குழுவில் தன்னுடைய பெயரையும் இடம் பெறச்செய்கிறார். பியரே விக்டரின் தொடர்பின் பின் சட்டமீறல் குழுக்கள், கம்யூனிஸ்ட்டுகளுக்கும் தனக்குமான உறவுகள் என்பன குறித்து ஸார்த்தர் தொடர்ந்து உரையாடலில் ஈடுபட்டார். இந்த உரையாடலின் இரண்டு பகுதிகள் தற்போது ஆங்கில மொழியாக்கத்தில் கிடைக்கின்றன. (A Fellow Traveler of the Communist Party :1972 : Jean Paul Sartre, Pierre Victor and Philippe Gavi : Gallimard, Paris, 1974 : translated: for marxists.org by Mitch Abidor : January 2005 மற்றும் Illegalism and Ultra-Leftism :1972 : J-P Sartre, Pierre Victor and Philippe Gavi : Gallimard, Paris, 1974; : First Published: December 1972 : Translated: for marxists.org by Mitch Abidor: 2005). இந்த இரண்டு உரையாடல்களிலும் பிரெஞ்சுக் கம்யூனிஸ்ட்டுக் கட்சியுடனும் மாவோயிஸ்ட்டுகளுடனும் தமக்கு இருந்த உறவுகளை ஸார்த்தர் விளக்கிச் சொல்கிறார். நாற்பதுகளின் நாசி எதிர்ப்புக் காலகட்டத்திலிருந்தே தான் கம்யூனிஸ்ட்டுகளின் உடன்

பயணியாக இருந்ததாகவும், ஆனால் Being and Nothingness எழுதிய இருத்தலியலாளனை அவர்கள் சந்தேகக் கண்கொண்டே பார்த்தார்கள் எனவும் ஸார்த்தர் தெரிவிக்கிறார். தொழிலாளி வர்க்கத்தவர்களின் பிரதிநிதிகள் என கம்யூனிஸ்ட்டுகளைத் தான் கருதியதால் அவர்களுடன் சேர்ந்து செயல்படத் துவங்கினேன். ஆனால் மேலிருந்து கீழாகத்தான் அவர்களது கட்சி கட்டப்பட்டிருக்கிறது என்பதை ஏமாற்றத்துடன் எதிர்கொண்ட தாகவும் அவர் சொல்கிறார். கம்யூனிஸ்ட்டுகள் தம்மை, நாசி சிறையிலிருந்து உடல் நலக்குறைவால் தான் விடுதலை செய்யப்பட்ட தால், தன்னை நாசி உளவாளி என்று சொல்லியிருக்கிறார்கள், பிற்பாடு அதற்காக என்னிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடன் எப்போதுமே தான் சேர்ந்து செயல்பட முனைந்து வந்திருப்பதாகவும் அவர் தனது உரையாடலில் தெரிவிக்கிறார். நாற்பதுகளின் ஆரம்ப ஆண்டுகளிலேயே நேரடியிலான ஜனநாயகத்தை விரும்பும், அதே வேளையில் மேலிருந்து கட்டப்படும் கட்சியை எதிர்க்கும் சுதந்திர சோசலிஸ்ட்டாகத் தான் உருவாகியிருந்ததாக ஸார்த்தர் தெரிவிக்கிறார். இக்காலகட்டத்தில் மேர்லோ பொன்ரியுடன் இணைந்து ஜனநாயகப் புரட்சி இயக்கத்தில் இணைந்தோம் எனும் அவர், அதிலிருந்து சீக்கிரமே விலகியதாகவும், 1952ம் ஆண்டு கம்யூனிஸ்ட் கட்சியின் உடன்பயணி ஆனதாகவும், அக்காலகட்டத்தில் "கம்யூனிஸ்டுகளும் சமாதானமும்" எனும் நூலை எழுதியதாகவும் குறிப்பிடுகிறார். 1952ம் ஆண்டு முதல் 1953ம் ஆண்டுவரை தான் கம்யூனிஸ்டுகளுடன் நெருங்கியிருந்ததாகவும், (அவ்வேளையில் அவர் இரு முறை ரஷ்யாவுக்கும் சீனாவுக்கும் செக்கொஸ்லாவாக்கியாவிற்கும் விஜயம் செய்கிறார்) 1956ம் ஆண்டு ஹங்கேரி படையெடுப்பின் பின் கட்சியோடு தனது உறவை முறித்துக் கொண்டதாகவும் ஸார்த்தர் நினைவு கூர்கிறார்.

அல்ஜீரியாவில் சித்திர வதையில் ஈடுபடும் பிரெஞ்சு ராணுவத்திற்கு எதிராகத் தனது முதல் குரலை எழுப்புகிறார். அன்றிலிருந்து அறுபதுகளின் ஆரம்பம் வரையிலும் அல்ஜீரிய விடுதலைப் போராட்டத்திலும் மூன்றாம் உலகின் விடுதலைப் போராட்டங்களிலும் அதீத ஈடுபாடு காட்டுகிறார். சீனா. கியூபா.போலந்து, செக்கோஸ்லாவாக்கியா போன்ற நாடுகளிற்கு விஜயம் செய்கிறார். 1967ம் ஆண்டு இஸ்ரேலுக்கு விஜயம் செய்து தனது ஆதரவை வெளிப்படையாகத் தெரிவிக்கிறார். 1973ம் ஆண்டு இஸ்ரேலை அங்கீகரிக்க வேண்டும் என எகிப்திய தலைநகர் கெய்ரோவில் உரையாற்றுகிறார். 1974ம் ஆண்டு இஸ்ரேலுக்கு மறுபடியும் விஜயம் செய்து சதாத்தின் சமாதான முயற்சிகளை ஆதரிக்க வேண்டும் என இஸ்ரேலிய அரசிடம் கோருகிறார். ஜெருசலம் பல்கலைக்கழகம் ஸார்த்தருக்கு அளித்த விருதொன்றினை அமைப்பின் அங்கமாக ஆக விரும்பாத ஸார்த்தர் மறுக்கிறார். ஸார்த்தர் தனது வாழ்நாளில் மறுத்த மூன்றாவது விருதாக இது இருக்கிறது. முதன்முதலாக நாசி எதிர்ப்பு போரினை அடுத்து பிரெஞ்சு அரசு அளித்த விருதை அவர் மறுத்தார் என்பது இங்கு கவனம் கொள்ளத்தக்கது.

எழுபதுகளில் அவர் மாவோயிஸ்டுகளுக்கு ஆதரவாக இருந்தார் எனும் வகையில் அவர் மீதான விமர்சன உணர்வு கொண்டதாக ஆரியல் டோர்ப்மென் எழுதுகிறார். ஆனால் மாவோயிஸ்ட்டுகளுடன் ஸார்த்தர் முழு உடன்பாடு காட்டினார் என்பதற்கான ஆதாரமில்லை. சட்டமீறல் நடவடிக்கை என்பதனை ஒரு நிரந்தரமான சுதந்திரமான எதிர்ப்பு நடவடிக்கை என அவர் கருதியதால் அவர்களை அவர் ஆதரித்தாரேயொழிய, தனிநபர் பயங்கரவாதத்தை அவர் எந்தச் சந்தர்ப்பத்திலும் ஆதரித்தவராக இல்லை. அதுமட்டுமன்று விரைவிலேயே பியரே விக்டர் உட்பட்டவர்கள் மாவோயிசத்தை மட்டுமல்ல வன்முறையையும் கைவிட்டார்கள் என்பதற்கு வரலாறு சான்றாக இருக்கிறது. சட்டமீறல் நடவடிக்கைகள் தொடர்பான ஸார்த்தரின் உரையாடல், ஓரளவிலேனும் நிலவும் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்படும் சட்டபூர்வமான நடவடிக்கைகளை நாம் ஆதரிப்பதன் மூலம் சட்டபூர்வமற்றதற்கும் சட்டத்திற்கு உட்பட்டதற்கும் இடையிலான பதட்டத்தையும் பிளவையும் நாம் உருவாக்க முடியும் என்ற நிலைப்பாட்டுக்கு வருவதான ஓர் உரையாடலாகவே இருக்கிறது. சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட உரிமைகளைப் பாதுகாப்பதற்காக நடவடிக்கை மேற்கொள்ளும்போது, அரசுக்கும் சட்டமுறைமைக்கும் உள்ள முரணை நாம் வெகுமக்களிடம் விளக்கும் போது, அந்தச் செயல்போக்கில் சட்டபூர்வமானவற்றின் போலித்தன்மையை மக்கள் உணர்ந்து கொள்வார்கள் எனவும், ஆகவே எல்லா நடவடிக்கைகளிலும் மாற்றம் என்பதை புரட்சி என்று புரிந்து கொள்வது அதிதீவிரவாத நிலைப்பாடாகவே முடியும் என்பதாகவும், அது வெகுமக்களிடமிருந்து இடதுசாரிகளை அந்நியப்படுத்தி விடும் என்பதாகவும் அந்த இரண்டாவது உரையாடல் நீள்கிறது. மக்களைத் தயார்ப்படுத்துவதற்கான பூர்வாங்க நடவடிக்கையாகவே தாம்

கெரில்லா யுத்தமெனும் சட்டமீறல் இயக்கத்தை மேற்கொள்கிறோம் என ஆந்ரே பாதார் 1974ம் ஆண்டு ஸார்த்தரிடம் சொல்லும்போது, இந்த நடவடிக்கை காலம்மீறிய நடவடிக்கை எனவும் இடதுசாரிகளை இது பின்தள்ளிவிடும் எனவும் ஸார்த்தர் சொன்னதையும் இந்த உரையாடல்களுடன் ஒருவர் சமனாக வைத்துப் பார்க்க முடியும். "ஒருவரது கருத்தை நான் ஆதரிக்க வில்லையாயினும், அதைச் சொல்வதற்குள்ள அவரது உரிமையை நான் என் உயிரைக் கொடுத்தும் ஆதரிப்பேன்" எனும் வால்ட்டேரின் நிலைப்பாட்டின் அடிப்படையிலேயே மாவோயிஸ்டுகளை ஸார்த்தர் ஆதரித்தார். ஆபத்திலுள்ள இடதுசாரிகளை ஆதரிப்பது ஒரு இடதுசாரியின் கடமை எனும் அளவிலேயே தான் உடன்படாதபோதும் பாதாரைச் சந்திக்க வந்தேன் என்ற ஸார்த்தர், இதனை ஒரு பொதுமைப்படுத்தப்பட்ட நிலைப்பாடாக இடதுசாரிகள் கொள்ளவேண்டும் எனவும் வலியுறுத்துவதை உணர்கிறவர்களுக்கு அவர் மாவோயிஸ்ட்டுகளை ஆதரித்தமையைப் புரிந்து கொள்வது சிரமமில்லை.

ஸார்த்தர் குறித்த மறுமதிப்பீடு என்பது தனி மனிதனாக அவரது முரண்கள், தத்துவ அளவில் நடந்த போராட்டத்தில் அவரது பங்களிப்புகள், போதாமைகள் குறித்ததாகவே அமைய முடியும். அதுவன்றி அவர் காலத்தில் நாம் நினைத்திருக்கக் கூடிய அல்லது அவாவியிருக்கக்கூடிய அரசியல் தத்துவ நிலைப்பாடுகளுக்கு அப்பால் அவர் காலத்தை மீறிச் சென்றவரா என்பதனை அவதானித்து, அவர் எமது உடன்பயணியாக இருந்தாரா அல்லது எதிரிகளின் இடத்தில் நின்றாரா என்பது குறித்ததாகவே எமது மறுமதிப்பீடுகள் அமைய முடியும். பயங்கரவாதத்திற்கு எதிரான தாக்குதல் அரசியல் எனும் வகையில் அடிப்படை மனித உரிமைகள் அனைத்தும் அரசுகளின் முனைந்த தாக்குதல் நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கும் இன்றைய உலக சூழலில், அனைத்து விதமான எதிர்ப்பு இயக்கங்களதும் எதிர்ப்பு அரசியல் குற்றப்பண்பு சார்ந்ததாக (criminalising political opposition) வரையறுக்கப்படக் கூடியதான இன்றைய உலக அரசியல் சூழலில், தனிமனித சுதந்திரம், தேர்வு, மனித சுதந்திரத்தை முன்னிலைப்படுத்தும் ஸார்த்தரின் சிந்தனையமைப்பு போன்றன இன்றும் பொருத்தப்பாடு உடையதுதான். வன்முறை பயங்கரவாதம் பற்றிய அவரது கருத்துக்களின் தார்மீக பலம், அது குறித்த அவரது விரிவான கட்டுரைகள் இன்றும் நமது ஆய்வுக்கும் அக்கறைக்கும் உரியதுதான். சிந்தனையும் செயலும் வன்முறையாகக் கழிந்த காட்டுமிராண்டித் தனமான காலனியக் காலத்தில் மனித உரிமைகள் எனும் கருத்தாக்கத்தைக் கூட ஐரோப்பியர்கள் கொண்டிருக்கவில்லை என்பதைத் தான் நாம் மறுபடி ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது.

ஸார்த்தரின் சிந்தனைகளும் செயல்பாடுகளும் நமக்கு ஞாபகமூட்டும் மிகமுக்கியமான விடயமொன்றுண்டு. ஸார்த்தர் யாரோடு விவாதத்தில் ஈடுபட்டாலும், கருத்து மோதலில் ஈடுபட்டாலும், அது வெகுஜன தளத்தில் இயங்கும் மனிதனின் நடைமுறைப் பிரச்சினைகள் சார்ந்ததாக, அவனது விடுதலை சார்ந்ததாக, அவனது விமோசனம் சார்ந்ததாக, அது இருந்தது என்பதனை நாம் மறந்துவிடக் கூடாது. அவர் மேற்கொண்ட விவாதங்கள் அனைத்தும் சாதாரண மனிதனது சுதந்திரம் நோக்கியதாகவும் வெளிப்படையாகவும் அசலாகவும் இருந்தது. நிகழ்வு நடந்து முடிந்த பின்பு ஆய்வுகளை மேற்கொள்ளும் கல்வித்துறை சார்ந்த அறிவுஜீவிகளின் மங்கலான ஆய்வுகளுக்கு அப்பால், ஸார்த்தரின் சிந்தனையும் செயற்பாடுகளும் நடைமுறைப் பிரச்சினைகள் குறித்துச் சொல்வதாக இருந்தது. தன்காலத்தின் அனைத்துத் துறைகளிலும் பாதிப்புச் செலுத்திய அவர், தன் சூழலைப் பாதித்த அனைத்தும் குறித்துச் சுதந்திரமாக எதிர்வினையாற்றி, சுதந்திர மனிதனாகவும் அவர் இருந்தார்.

"ஸார்த்தரின் இரண்டாம் வருகை" எனும் தனது கட்டுரையில் ஸார்த்தரின் நிரந்தரத்துவத்திற்கான காரணமாக, கோட்பாட்டாளர் ஜோன் லிச்பீல்ட் சொல்வதுதான் ஸார்த்தரின் நூற்றாண்டில் அவர் குறித்த மிகச் சரியான மதிப்பீடாக இருக்க முடியும்.

ஸார்த்தர் எனும் சிந்தனாவதியல்ல இன்று நின்று நிலைத்திருப்பது, மாறாக, ஸார்த்தர் எனும் கலைஞன்— எழுத்தாளன்தான் நிலைத்திருக்கிறான். அவனது சிந்தனையின் சாரமாக இருப்பது, ஒருவன் தனது தானுக்கு மிகவும் அதீத உண்மையுடன் இருப்பது எனும் கருத்தாக்கம் தான். நிரந்தரமான தனிநபர் புரட்சி, அறுதி நம்பிக்கையின் நிகழ்முறையாக கடவுள் மறுப்பு என இவையனைத்தும் அராஜகவாத முனைப்பு சார்ந்தவை, நிச்சயமாக, இவை நடைமுறை அரசியல் சார்ந்தவையாக இருக்கவியலாது.



நினைவின் ஓரத்தில் ஓர் அழியாச்சுவடு

சந்துஷ்

"நாம் நினைப்பதைச் சொல்வதில்லை
சொல்வதைத்தான் நினைக்க வைக்கப்படுகிறோம்"
என்ற சூழலில்,
என்னத்தை நினைக்க?
என்னத்தைச் சொல்ல?
காலங்கள் மனிதர்களை இணைக்கின்றன.
காலங்கள் மனிதர்களைப் பிரிக்கின்றன.
இடையினில் மரணம்
கண்ணிவெடி வைத்து விடுகின்றது.

அப்படிக் காலங்கள் எம்மை இணைத்திருந்த காலமொன்றில் தூரத்தூர இருந்தபடியே கொஞ்சம் நெருங்கி உறவாட முடிந்தது உமாகாந்தனுடன்.

ஈழவிடுதலைப் போராட்டமும் புகலிடவாழ்வும் உருவகித்துத் தந்திருந்த அந்த நட்புச் சூழலில் குறுகிய காலத்தில் நாங்கள் பேசிக் கொண்டதும் ஒரு ஸ்தாபன வரையறைக்குட்பட்டதாயினும் அந்த எல்லைகளை மீறிய எமது பகிர்வும் எண்ணங்களும் இருந்திருக்கின்றன. நான் நினைக்கிறேன் உமாகாந்தனின் இயல்பே அதற்குக் காரணமாகி இருக்க வேண்டும்.

86இன் நடுப்பகுதியாக இருக்கவேண்டும். இலங்கை அரசின் இராணுவ விமானங்கள் வடகிழக்குப் பகுதியின் மேல் குண்டுகளைத் துப்பிய நேரங்கள் - அகதி முகாம்கள் கூட தாக்கப்பட்ட பொழுதுகளில் இப்போதிருப்பது போல் வானொலி, இணையத்தள வசதிகள் அற்ற நிலையில் இயக்கங்களின் பேரில் சில அக்கறையாளர்கள் ஒலிபரப்பும் தொலைபேசிச் சேவைகளும், கையால் எழுதி விநியோகிக்கப்படும் ஈழச்செய்திகளுமே நாட்டு நிலவரங்களை புகலிடத் தமிழர்களுக்கு அறிவித்துக் கொண்டிருந்தன. தேசிய விழிப்புணர்விற்கு அப்பால் ஒரு அடியும் நகராமல் புகலிடத் தமிழர் வாழ்வும் அரசியல் அக்கறையும் நடைமுறைச் சிக்கல்களுடன் மல்லுக்கட்டி ஒரு நிர்ப்பந்தச் சிறைக்குள் உறங்கு நிலையில் வைக்கப் பட்டிருந்த நிலையில்...

"விதைபோடாமலே நாற்று நடாமலே
இங்கே பாவற்காயும் முருங்கைக்காயும்
கிடைக்கிறதே பிறகெதற்கு
நாட்டின் கதையென
பேசாமல் இருப்போமா" என்ற உமாகாந்தனின் வரிகளை இராணுவ அழிவுகளைச் சித்தரிக்கும் புகைப்படங்களுடன் இணைத்துப் பிரதி பண்ணி புகலிடத் தமிழரிடையே நாங்கள் விநியோகம் செய்தது நினைவில் நிற்கின்றது.

தமிழ்த்தேசியப் போராட்டத்தில் பங்கெடுத்த அமைப்புகளில் EPRLF, PLOTE ஆகியன தென்னிலங்கை முற்போக்கு இடதுசாரி அமைப்புக்களுடன் உறவுகளையும் சில முன்னெடுப்புக்களையும் மேற்கொண்டிருந்தன. இவ்வமைப்புகளுடன் ஓர் ஒப்புக்காகவன்றி ஒரு தேடலுடனும் திறந்த மனதுடனும் தொலைநோக்குடனும் சில நடைமுறையிலான திட்டங்களுடன் சம்பாஷித்திருக்கிறார். பல தொடர்புகளை ஏற்படுத்த அவர் விழைந்திருக்கிறார். இந்த வகையில் அவர் ஒரு குறிப்பிட்ட இயக்கத்திற்குரியவராய் அல்லாது, அப்போதைய சூழலில் தமிழரது தேசியப் போராட்டத்தின் ஓர் ஆரோக்கியமான குறியீடாகவே எனக்கு அவர் தெரிந்தார்.

காலங்கள் மனிதர்களை இணைக்கின்றன.

80களின் நடுப்பகுதியில் இலங்கையிலும் இந்தியாவிலும் இயங்கி வந்த இயக்கங்களிற்கு வெளிநாடுகளில் கிளைகள் அமைக்கப்பட்டிருந்த காலங்களில், வெளிநாடுகளில் இயக்கத்திற்கு வேலை செய்பவர்களின் கடமை காசு சேர்த்துக் கொடுப்பதும் அங்கிருந்து வரும் பிரசுரங்களைப் பிரதியெடுத்து விநியோகிப்பதுமட்டுமன்றி "வேறொன்றுமறியோம் பராபரமே" என்ற 'இயக்க விதியை' அநேகமாக எல்லா இயக்க பிரதிநிதிகளும் கடைப்பிடித்த வேளையில் மாற்றுக் கருத்து, கேள்விகள் என்ற காரணங்களிற்காக சிலர் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில் தோழமையான அணுகலை அதற்கு மேலான நட்பைக் கடைப்பிடித்து அப்படியானவர்களுடன் உடன்பட்டும் முரண்பட்டும் கருத்துக்களை மதிக்கத் தெரிந்தவராக போராட்டத்தின் திசைவழியைப் புரிந்து வைத்திருந்த சிலருள் உமாகாந்தன் ஒருவர்.

1988ஆம் ஆண்டு ஜேர்மனியில் ஆரம்பிக்கப்பட்ட இலக்கியச் சந்திப்பு தொடர்ந்து ஐரோப்பாவின் பல நாடுகளில் நடத்தப்பட்டு வருகிறது. ஈழத்து, இந்திய மற்றும் மற்றைய மாற்று இலக்கியங்களைப் பரிமாறி விமர்சித்துப் பகிர்ந்து கொள்ளவும் அரசியல் சமூகம் கலையென வெவ்வேறு தளங்களில் கருத்துக்களைப் பகிரவும்/வளர்த்துக் கொள்ளவும் தளமாக இயங்கி வரும் இவ்வரங்கின் மூலம் பல படைப்பாளிளையும்

"இப்படி நிறைய நல்ல எழுத்துக்கள் — நல்ல எழுத்தாளர்கள் எம்மிடையே இருக்கினம். இதுகளைத் தேடி வெளிக்கொணர வேண்டும். இதுவும் எங்கட கடமைகளில் ஒன்று"

— உமாகாந்தன்

சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. தனிமனிதராய் தூரத்தூரப் பிரிந்து அந்நியமாகிக் கொண்டிருந்த பலருக்கு இது ஓர் ஆறுதலானது. இலக்கியச் சந்திப்பு நட்புகள் பல தனிப்பட்ட நட்புகளாகி உறவுகளாக விரிகின்றன, இலக்கியத்திற்கப்பால் வாழ்வும், வாழ்வுக் கப்பால் இலக்கியமுமென உறவுப் பரிமாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன.

காலங்கள் மனிதர்களை இணைக்கின்றன.

ஆனால், இதற்கு முந்தைய காலகட்டத்தில் (87இன் ஆரம்பம்) ஸ்ருட்காட்டில் (ஜேர்மனி) ஒரு தனியறை வீட்டில் ஓர் இயக்கப் பிரதிநிதியாக உமாகாந்தன் எனக்கு அறிமுகமாகிறார்.

கைகளைக் கொடுத்துக் கொள்கிறோம். சராசரி இயக்கப் பிரச்சார உரையாடலாக அமைந்திருக்க வேண்டிய ஒரு சந்திப்பு அது. அவர் அந்த விதிகளைக் கடைப்பிடிக்கவில்லை. அந்த எல்லைகளுக்குள் நின்று கொள்ளவுமில்லை. எம்மைச் சுற்றி நிகழும் நிகழ்வு களைப்பற்றியும் இலங்கை அரசியல் என்றும் பேச்சுத் திசைகள் மாறுகின்றன.

தான் கொண்டு வந்த 'தமிழ் முரசு' பிரதியொன்றை எடுத்து அதன் உட்பக்க அட்டையில் உள்ள கவிதையைக் காட்டி விட்டு "அருமையான கவிதை படிச்சீங்களா?" என்கிறார்.

இலக்கியம் கலை போன்ற வலிய பிரதேசங்களுடன் மக்களிற்கு இருக்கும் ஆழமான தொடர்பு பற்றி அவர் உணர்வு/அனுபவப் பூர்வமாக அறிந்திருந்ததை என்னால் உணரக்கூடியதாயிருந்தது. அவர் அந்தக் கவிதையை எனக்கு வாசிக்கிறார்,

"பிரபஞ்சமேவிய பார்வைகள்
உலகத்தையே மாற்றுவோம்
பேச்சுக்கள் செய்கைகளோ தூ!"

இயக்கங்களின் உட்கொலைகள், அரசியல் பாதையில்ஏமாற்றங்கள் பற்றி செல்வம் எழுதிய கவிதை அது.

ஒவ்வொரு பந்தியையும் வாசித்து விட்டு என்னைப் பார்க்கிறார்.

"இப்படி நிறைய நல்ல எழுத்துக்கள் - நல்ல எழுத்தாளர்கள் எம்மிடையே இருக்கினம். இதுகளைத் தேடி வெளிக்கொணர வேண்டும். இதுவும் எங்கட கடமைகளில் ஒன்று" என்றுவிட்டு கவிதையின் கடைசிப் பந்தியை சற்று அழுத்தமாய் உணர்ச்சி மேலிடப் படிக்கிறார்.

"கான மயிலாடத்
துவக்கெடுத்தோம்
ஆத்மாவைக்
குறிவைத்தோம் போ"

திரும்பி என்னைப் பார்க்கிறார். எந்த இயக்கக் காரனும் என்னிடம் வந்து இப்படிக் கவிதை வாசித்துக் காட்டியதில்லை.

சுடு, பிடி,
வாழ்க, வெல்க,
சிந்துது இரத்தம்
சிதறுது கூட்டம்
உருளட்டும் தலை

என்ற முழக்கங்களும், ஆட் சேர்த்தல்/காசு சேர்த்தல் என்ற முனைப்புடன் இருந்த புகலிட இயக்கச் சூழலில் ஒரு கவிதையைத் தன் மென்குரலால் வாசித்துக் காட்டி இயக்கங்கள் தவறவிட்ட வெவ்வேறு பரப்புக்களின் ஆழங்களை உணர்த்திய 'இயக்கக் காரன்' அவர்.

இலக்கியச் சந்திப்பு தோற்றம் கொள்வதற்கு முன் நிலவிய ஒரு வறட்சிப் பொழுதில் எனது முதலாவது 'இலக்கியச்சந்திப்பு' இப்படி உமாகாந்தனுடன் தான் நடந்தது.

அவர் ஆசிரியராகவிருந்து வெளிவந்த 'தமிழ் முரசு' 70 பிரசுரங்களைக் கண்டது. இதில் பெரும்பாலானவை கையால் எழுதி வெளிவந்தவை. எழுத்தின் பல பரிமா ணங்களைப் புகலிடவாழ்வின் பல முகங்களை, பல எழுத்தாளர்களைத் 'தமிழ்முரசு'இன் மூலம் அவர் அறிமுகம் செய்தார். பிரெஞ்சின் பல ஆக்கங்களைத் தமிழுக்குத் தந்தார்.

யுத்தத்தில் இலக்கியத் தொடர்புகள் அநேகமாகத் துண்டிக்கப்பட்டிருந்த காலத்தில் ஈழத்து/இலங்கைப் படைப்பாளிகளை இங்குள்ளவர்களுக்கும், இங்குள்ள

வர்களை ஊருக்கும் அவர் அறிமுகம் செய்து வைத்தார்.

காலங்கள் மனிதர்களை இணைக்கின்றன.

87இன் இறுதியில் அவருடன் தொடர்பு கொண்டபோது இலங்கை சென்று திரும்பியிருந்தார்.

"எத்தனையோ வயசான தோழர்களையெல்லாம் அங்க சந்திச்சன். எத்தனை அனுபவமுள்ள எங்களை விட எவ்வளவு பெரிய ஆட்கள் எங்களைத் 'தோழர்! தோழர்!' என்று விளித்துக் கதைக்கேக்க மனசுக்கு இனம் புரியாத உற்சாகமாய் இருந்திச்சு"

புதிய பரிணாமங்களை அவரது வாழ்வு தொட்டு நின்றதை அவரது குரலின் உற்சாகத்தினூடு காண முடிந்தது. காலங்கள் மனிதர்களை இணைத்திருந்த காலமது.

அண்மையில் வடபகுதியில் பழம்பெரும் தோழரும் தீண்டாமை ஒழிப்புப் போராளியுமான தோழர் வல்லி சுந்தரம் (66 வயது) புலிகளினால் சுட்டுக் கொல்லப் பட்டார். உமாகாந்தன் வயசான தோழர்கள் எனக் குறிப்பிட் டவர்களுள் வல்லிசுந்தரமும் ஒருவர். அவர் கொல்லப் பட்ட அதேவாரம் உமாகாந்தனும் இறந்து போனது ஒரு சோகமான இயல்பொற்றுமை.

காலங்கள் தான் மனிதர்களைப் பிரிக்கின்றன,

பாரிஸில் நடைபெற்ற சந்திப்புக்களில் உமாகாந் தனைச் சந்தித்த போது காலம் வேறொரு பரிமாணத்தை எட்டியிருந்தது.

இலக்கியச் சந்திப்பில் புதிய நட்புகள் இறுகியும் சிறிது விலகியும் இருந்தது. கூடிப் பிரிந்து கூடி இருந்த காலம் உமாகாந்தனை ஒரு மூலையில் இருந்து கூட்டங் களை அவதானிப்பவராயும் கருத்துச் சொல்பவராயும் கவனித்திருக்கிறேன். 'ரை, கோட்டு'டன் ஒரு பிரமுகர் போல் கைகட்டியிருக்கும் அவர் தோற்றம் எதையோ தனக்குள் புதைப்பதைப் போலவும் ஓர் இடைவெளியை நிலைநாட்டுவது போல் கிறுக்குத்தனமாய் எனக்குப் பட்டாலும் அவரை நெருங்கி உறவாடுகையில் - எங்கி ருந்தோ அந்த பழைய நட்பின் வெப்பம் வந்து சூழ்ந்து விடுவது அவரைச் சந்தித்த ஒவ்வொரு முறையும் நிகழ்ந்தது.

2000 டிசம்பரில் ஓர் இலக்கியச் சந்திப்பினில் கண்டு பேசிய வேளையில் "ஓ! நாங்கள் இப்படிச் சந்திப் புக்களில் கண்டால் ஒழிய வேறெங்க சந்திக்கிறது? ஆ...!" என்கிறார்.

அவருடன் பேச்சை வளர்க்கும் நோக்கில் "உங்க ளைப் பார்க்கேக்கை எஸ். பி. பாலசுப்பிரமணியம் மாதிரி இருக்குது" என்கிறேன்.

"அப்படியா! ஜேசுதாஸைக் கூட்டிக் கொண்டு வாங்கோ ஒரு பாட்டுப் பாடுவம்" என்கிறார்.

அதற்குப் பிறகு எனக்குச் சந்திப்புகளிற்குச் செல்ல வாய்ப்புக் கிடைக்கவில்லை. இனி எங்கே சந்திப்பு நடந்தாலும் உமாகாந்தன் வரமாட்டார்.

காலங்கள் மனிதர்களைப் பிரிக்கின்றன.

"வாழ்க்கை முடித்து வைக்க முடியாத ஒரு வழக்கை மரணம் முடித்து வைத்த துயர்கதைக்குச் சாட்சியில்லை. துயரங்களும் முடிவதில்லை" கவிஞர் சேரனின் வரிகள்.

எளிதில் விலகிச் செல்ல முடியாத, மறந்து போக முடியாத மரணம் அவருடையது.

அவர் சொற்ப காலத்தில் சாதித்தவற்றைப் போல கனமானது.



பெண்கள் சந்திப்பு மலர் - 9

2005

வெளியீடு:
பெண்கள் சந்திப்பு மலர்க்குழு

Published by:
Tamil Women's Forum
c/o SALZ
Waiblingerstrasse 59
70372 Stuttgart
Germany.

தமிழ்நாடு விநியோகம்:
விடியல் பதிப்பகம்
11 பெரியார் நகர்
மசக்காளிப்பாளையம் (வடக்கு)
கோயம்புத்தூர் 641 015

32வது இலக்கியச் சந்திப்பு பாரிஸ்

12.11.2005 13.11.2005

மானசி

புகலிட இலக்கியச் சந்திப்பின் 32வது தொடர் 2005ம் ஆண்டு நவம்பர் மாதம் 12ம், 13ம் திகதிகளில் பாரிஸில் நடை பெற்றது. காலை தொடங்கி இரவு வரை இரண்டு நாட்களும் நிறைந்த கூட்டத்துடன் உரைகள், கலந்துரையாடல்கள் என்று நடைபெற்றது. சுய அறிமுகத்துடன் சந்திப்பு ஆரம்பமாகியது.

ஆரம்ப உரை : சுசீந்திரன்

1992ம் ஆண்டு இதே கட்டிடத்தில் மிகப் பிரமாண்டமான ஆரவாரங்களுடன் இலக்கியச் சந்திப்பை நடத்திய சபாலிங்கம் இன்றில்லை. கலைச்செல்வன் இன்றில்லை. ஒருவர் கொல்லப்பட்டார். மற்றவர் மறைந்து போனார். அதுபோலவே எங்கள் மத்தியில் உமாகாந்தன் என்ற நண்பரும் இங்கில்லை. இவரும் பல்வேறு சந்திப்புகளில் கலந்து கொண்டவர்.

இது உலக நியதியாய் இருப்பினும்கூட எங்கள் இனத்தினுடைய அல்லது உலகத்தினுடைய ஜனநாயகக் குரல்களை அதனுடைய போராட்டத்தை இறைமையை மறுக்க மேற்கொள்ளப்படும் விடயங்கள். அப்படி இருப்பினும் அந்த போராட்ட ஜனநாயக மரபைப் பேணுகின்ற மரபான சாட்சியின் குரலாக இந்த இலக்கியச் சந்திப்பு என்றும் இருக்கின்றது; இருந்திருக்கின்றது. எந்த இழப்புகள் வந்தபோதும், அந்த இழப்புகளையும் மீறி ஒரு முரட்டுத் துணிச்சல் அல்லது காட்டுத் துணிச்சலில் பல சந்திப்புகளை நடத்தி ஒரு சாமான்யனின் குரலாக, ஒரு சாமான்யனின் வல்லமையாக அவற்றையெல்லாம் இந்த இலக்கியச் சந்திப்பு சந்தித்திருக்கின்றது.

ஆரம்பத்தில் இருந்து கடைசியாக நடந்த இலக்கியச் சந்திப்பு வரை கலைச்செல்வனின் பங்களிப்பு மிக முக்கியமானதாக இருந்திருக்கின்றது - அது திறம்பட நடந்து செல்லவேண்டும் என்பதிலும், எங்கள் சமூகத்தின் மத்தியில் இருக்கின்ற பல்வேறு முரண்பட்ட கருத்துகளும்கூட ஒன்றுடன் ஒன்று முட்டி மோதி எதிர்க் கருத்துக்களையும் கூறுவதற்கு அனுமதித்திருக்கின்றது என்ற திருப்தியுடனும் அவன் ஒவ்வொரு சந்திப்பிலும் இருந்திருக்கிறான்.

ஆரம்பத்திலேயே தமிழ் மக்களுக்கு மத்தியில் தோன்றிய இந்த இடப்பெயர்வு என்கிற பண்பட்டதும் பண்படாததுமான ஒரு நிலத்தினூடு ஒரு நதியாக இந்த இலக்கிச் சந்திப்பு இயங்கியிருக்கின்றது. பல்வேறு குப்பைகளும் மலர் மணங்களும் எல்லாமே சங்கமித்து ஓடிக்கொண்டுதான் இருக்கிறது. இன்றும் ஒடுங்கியும் விரிந்தும், நீண்டும் குறுகியும், தாமதித்தும் வேகத்துடனும் அது ஓடிக் கொண்டே இருக்கின்றது. ஓடிக்கொண்டே இருக்கும் என நான் நம்புகிறேன்.

அன்று தோன்றிய 'புகலிட இலக்கியம்' என்கின்ற - இடம் பெயர்ந்த எழுத்தாளர்களுக்கு மத்தியில் இருந்து தோன்றுகின்ற புலம் பெயர்ந்த இலக்கியம் - ஒரு போராட்டத்துக்கான, ஒரு ஜனநாயகத்தைப் பேணுவதற்கான, எங்களை நாங்களே பரிசீலித்தும் பரிசோதித்தும் அடையாளம் காண்பதற்காக, போராட்டத்தால் தூக்கி வீசப்பட்ட மக்களாக அடையாளம் காண்பதற்காக, அல்லது அதிகாரத்தினால் நசுக்கப்பட்டு ஆங்காங்கே சிதறவிடப்பட்ட வர்களாக எங்களை நாங்களே அடையாளம் கண்டு மனித இறைமைக்காக போராடுகிற அந்தப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்கின்ற ஒரு இலக்கியமாகப் 'புகலிட இலக்கியம்' மிளிரவேண்டும் என்று 'புகலிட இலக்கியம்' என்பதற்கான ஒரு வரைவிலக்கணத்தைத் தரவேண்டும் என்று பாடுபட்டவர்களில் கலைச்செல்வன் முக்கியமான வனாக அல்லது முன்வரிசையில் உள்ளனவாக இருக்கிறான்.

கலைச்செல்வனுக்கும் இலக்கியச்சந்திப்புக்குமான அந்தப் பிணைப்பும் உறவும் நாங்கள் மறக்க முடியாதது.

ஆனால் இந்த இலக்கியச் சந்திப்பு என்பது என்ன சமாச்சாரம் அங்கே என்னதான் நடக்கிறது என்பது குறித்த தெளிவின்மை அநேகருக்கு இருந்திருக்கின்றது. இலக்கியச் சந்திப்பை ஒரு சமன்பாட்டுக்குள் அடக்கிவிட முடியுமா அல்லது ஒரு விதிக்குள் சேர்த்துவிட முடியுமா என்னும் வினாக்கள் ஒரு புறம் கேட்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதேநேரம் இது ஒரு அமைப்பா, இது ஒரு இயக்கமா, அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான மாற்றுகளின் சங்கமிப்பா அல்லது மாற்றுகளின் கதம்பமா என்கிற கேள்விகளும் இலக்கியச் சந்திப்பை துரத்திக் கொண்டிருக்கின்றன.

இப்படிக் கேட்பவர்கள் அந்தச் சமன்பாட்டை இன்னும் கண்டுபிடிக்காமல் அல்லது இன்னும் கண்டுபிடிக்க முடியாமல் திணறிக் கொண்டிருக்கிறார்கள். இதில் சிக்கலான சமன்பாடொன்றும் இல்லை.

இலக்கியச் சந்திப்பு என்ன சாதித்திருக்கின்றது என்ற கேள்வியை அடிக்கடி கேட்கக்கூடியதாக இருக்கின்றது. ஒரு ஜனநாயகச் சூழல் நிலவுகின்ற நாட்டில் மட்டும்தான் பல்வேறு சிறு அமைப்புகள் பல்வேறு ஒன்றியங்கள் தோன்றலாம். அவை ஒன்றாக இருந்தோ அல்லது பல்வேறாக இருந்தோ மனித உரிமைகளுக்காக, ஜனநாயக உரிமைகளுக்காக குரல் கொடுக்கலாம், தொடர்ந்து போராடலாம் என்பவற்றிற்கான சாத்தியத்தை அளிக்கின்றது. ஆனால் நாங்கள் எப்போதும் 'ஒன்று' எல்லாமே ஒன்றாக இருக்கவேண்டும். கடவுள் என்றாலும் சரி, மதம் என்றாலும் சரி, மொழி என்றாலும் சரி, எல்லாமே 'ஒன்று' என்ற மனோநிலைக்கு வளர்க்கப்பட்டவர்கள். மீண்டும் மீண்டும் அதற்குப் பலியாகிக் கொண்டிருப்பவர்கள். அதில் இருந்து மீண்டு பல்லின, பன்மொழி, பல்வேறு - அதாவது எல்லாமே பல்வேறு உடையவை என்பதை அங்கீகரிக்கின்ற மனோநிலையை ஏற்படுத்துவதற் காகத்தான் இந்த இலக்கியச் சந்திப்பு.

எங்கள் சமூகத்திற்கு மத்தியில் எனக்கு ஒரு கருத்திருக்கிறது; உனக்கும் ஒரு கருத்திருக்கிறது. "உடன்படாக் கருத்தையும் உரைக்கும் உரிமையை இன்னுயிர் ஈந்தினி நாம் காப்போம்" என்கிற வோல்டேருடைய குரல்களில் எங்கள் உயிர்களை அர்ப்பணித்து இந்த இலக்கியச் சந்திப்பை தொடர்ந்து நடாத்தி வருகின்றோம்.

எனது இச்சிறு பேச்சு எங்கள் எல்லோர் நெஞ்சிலும் ஆழப்பதிந்திருக்கின்ற கலைச்செல்வனுக்கு சமர்ப்பணம்.

நூல் அறிமுகம் விமர்சனம்

தலைமை:
ஜெயா பத்மநாதன்

மா.கிறிஸ்ரியனின்
'புயலுக்குப் பின்' நாவல்

சி. புஸ்பராஜா:

தமிழ்ப்பதிப்புத் துறையில் ஏற்பட்டுள்ள மிகவேகமான முன்னேற்றம்பற்றிப் பேசியே ஆக வேண்டும். இது பிரமிப்பை ஏற்படுத்துவது.



நாவலின் களம் பெரிதும் பேசப்படாத விடயம். கடற் தொழிலார்கள்பற்றியது. நான் இந்தத் தொழிலாளர்களுக்கு மத்தியில் வாழ்ந்திருக்கிறேன் என்பதனால் அவர்களின் துயரத்தை உணர்ந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. ஒரு வகையில் மிகவும் யதார்த்தமாக கதைப்புலன் கொண்டு செல்லப்படுகின்றது. போராட்ட ஆரம்ப காலத்தில் அங்கிருந்த இளைஞர்களின் அரசியல் பிரவேசம், அந்தச் சமூகத்தில் நிலவும் சம்பிரதாயங்கள் சடங்குகள் என்பவை சரியான இடங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன.



நிறையப் பாத்திரங்களை உலவவிட்டிருக்கிற போதும் அந்தப் பாத்திரங்களுடைய விபரிப்புகள் தக்க இடத்தில், தக்க விதத்தில் கொடுக்கப்படவில்லை என்பது போன்ற நெருடல் இருக்கின்றது. கதை சொல்லியை ஆசிரியர் அடிக்கடி இடைஞ்சல்படுத்துகிறார். அதாவது தன்னுடைய அபிப்பிராயங்களையும் கதைசொல்லிக்கு இடையில் புகுந்து செலுத்துகிறார்.

நியாயங்கள் மனிதாபிமான அடிப்படையிலன்றி இனரீதியாகப் பார்க்கப்படுவதும், சாதிபற்றிப் பேசும்போது தங்கள் சாதிபற்றி ஒரு குறைவான மதிப்பீடு வந்துவிடக்கூடாதென்பதற்காக சில காரணங்கள் கொண்டு நிறுவ முயற்சிப்பதும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதவை.

ஆசிரியர் தனது நாவலை சுனாமியால் பாதிக்கப் பட்டவர்களுக்கு சமர்ப்பணம் செய்வதில் இருந்து அவருடைய மனிதநேயம் தெரிகின்றது. அத்துடன் சுனாமிபற்றிய தகவல்களையும் தந்திருக்கின்றார்.

மா. கிறிஸ்ரியன்:

கலை இலக்கிய வெளிப்பாடுகளுக்கு விமர்சனம் தான் முதல் உந்துசக்தியாக அமைகின்றது.

பாத்திரங்களின் வெளிப்பாடுகள் ஒரு சிறுகதைக்குரியன போலன்றி நீண்ட ஒரு நாவலுக்குரியதாகவே படைக்கப்பட்டிருக்கின்றன. இக்கதையாடல்களின் நடை ஈழத்தில் பெரும்பாலான நாவல்களில் கையாளப்பட்டிருக்கின்றன. மேலும் தமிழர்களும் சிங்களவர்களும் ஒற்றுமையாக வாழலாம் என்பதை இரு கதா பாத்திரங்கள் மூலம் காட்டி இருக்கிறேன்.

மெலிஞ்சி முத்தனின்
'முட்களின் இடுக்கில்' கவிதைத் தொகுப்பு

தர்மினி:

முன்னட்டை: தமயந்தியின் புகைப்படம்
2003 - 2005 காலப்பகுதியில் வரைந்த கவிதைகள் நாற்பத்தொன்று.

இருபது ஓவியங்கள்.

ஓவியங்கள் கவிதையுடன் சேர்ந்து வரும்போது ஒன்றை யொன்று தழுவிப் பார்ப்பது

தவிர்க்க முடியாததாகின்றதனால் அவற்றின் வீச்சு முழுமையாக உணரப்பட முடியாமல் போகும் அபாயமும் உண்டு. இதற்கு வாசுதேவன் முன்னுரை எழுதி இருக்கின்றார். முன்னுரையிலேயே இவர் கவிதைகளை விமர்சனப் பாங்கில் அணுகுவது வாசகர்களுக்குத் தடையாக அமைந்துவிடுகின்றது. பொதுவாக கவிதைகள் எப்படி இருக்க வேண்டும் என்று சொல்லி இருந்தால் அது வாசகர்களுக்கு உதவியாக இருந்திருக்கும். மேலும் அவர், 'கவிதைகள் ஒரு கவிஞனின் வாழ்நாள் சாட்சியமல்ல' என்கிறார்.

எனக்கு இதில் உடன்பாடில்லை. ஏனெனில் கவிஞர்களின் வெளிப்பாடுகள்தான் வரலாற்றுச் சாட்சியங்களாகின்றன.

மெலிஞ்சிமுத்தனுக்கு மொழி மிகவும் இலாவகமாக வருகின்றது. ஆனால் சில கவிதைகளில் சொற்களின் அளவுக்கு மீறிய தன்மை கவிதையின் செறிவைக் குறைக்கின்றது.

இவருடைய கவிதைகள் சிலவற்றில் ஆண் மனோபாவம் வெளிப்படுகின்றது. மேலும் இவருடைய கவிதைகளில் சமகாலப் பிரச்சினைகள் எதுவும் பெரிதாக இல்லை.

கவிதைகளை வட்டங்களுக்குள் நின்று வடிக்காது எல்லைகளைத் திறந்து விடுங்கள். பழம்பெருமை பேசுவதைவிட்டு செயற்பட்டால் மனிதர்கள் உயர்வர். இதைக் கருத்திற்கொண்டு செயற்படவேண்டும்.

மெலிஞ்சி முத்தன்:

எனது அறிவுக்கெட்டிய வரை எனது படைப்புகள் அமைந்துள்ளன. தர்மினியின் ஓவியம் குறித்த பார்வையுடன் எனக்கு உடன்பாடுண்டு. மேலும் கருப் பொருட்கள், பெண்ணொடுக்குமுறை, இன்னபிற பற்றியுமான தர்மினியின் பார்வை பற்றி நான் எதிர்காலத்தில் கவனம் செலுத்துகிறேன்.

அர்விந் அப்பாதுரையின் 'சலம்பகம்'
அருந்ததி:

சலம்பகம் என்றால் சலம்புதல் - சலம்புதல் என்றால் தொடர்ந்து பேசிக் கொண்டே இருத்தல். இது ஒரு புது வடிவம் ஆசிரியர் இதற்கு முதலில் 'அசைவுகள்' என்றுதான் பெயரிட்டார். பின்னர் தமிழகத்து விமர்சகரும் நாடகத்துறையாளருமான ப்ரஸன்னா ராமசாமி 'சலம்பகம்' என்ற சொல்லை மொழிந்ததால் 'அசைவுகள்' என்பது 'சலம்பகம்' என்றாயிற்று.

இந்தச் 'சலம்பகம்' மூலம் ஆசிரியர் இலக்கியத் தளத்தில் ஒரு அதிர்ச்சியை உண்டு பண்ணுவதற்கு முயற்சி செய்திருக்கிறார். இதனைக் கவிதை இழையோடும் உரைநடை அல்லது உரையாடல் கவிதையை நோக்கியது என்றும் சொல்லலாம். அதாவது கவிதைக்கும் உரைநடைக்கும் இடையிலான மெல்லிய எல்லைகள் உடைபடும்போது ஏற்படும் வடிவமாக இதைக் கருதலாம். இவருடைய எத்தனத்திற்கான துணிச்சல் பாராட்டப்பட வேண்டும்.

இதுவரையான வாசகர்களின் வழமையான வாசிப்பில் இருந்து இவ்வடிவம் வேறுபடுவதாலோ என்னவோ இந்த நூல் ஒரு வாசிப்புச் சிக்கலை ஏற்படுத்துவது தவிர்க்க முடியாதது.

ஏனைய கவிஞர்கள் கொள்ளும் கருப்பொருட்களைத்தான் இவரும் எடுத்துக் கொண்ட பொழுதும் கருதும் முறையில் வேறுபட்டு நிற்கிறார்.

இந்நூல் முழுவதும் உலகமயமாதல் பற்றிய கோபம் வெளிப்படுகிறது. சிலவேளைகளில் டாடாயிஸ்டுகளுடைய தன்மை புலப்படுகின்றது. தலித்தியம் பற்றியும் இவருடைய கவிதைகள் பேசுகின்றன. இவர் சாதியம் இல்லாமற் போகவேண்டும் என்று கருதுவது நிதர்சனம். ஆனால் சாதியைக் கட்டிக் காத்துக் கொண்டிருக்கிற இந்துமதம் பற்றிப் பேசத் தவறிவிட்டார்.

இடையிடையே புகுந்திருக்கும் வேற்றுமொழிச் சொற்கள் உத்திமுறைக்குள் அடங்குகின்றதா அல்லது தத்துவத்துடன் தொடர்புடையதா? டாடாயிஸமுறையில் இருந்து எந்த வகையில் உங்களுடைய கவிதைகள் வேறுபடுகின்றன?

அர்விந் அப்பாதுரை:

இது ஒரு புதுவடிவம் இல்லை. ஒரு ஆதிமனிதன் இலக்கியத்தை அணுகினால் எப்படி இருக்கும்?



அதுதான் என்னுடைய கேள்வி. நிறுவனப்படுத்தப்பட்ட வடிவங்களான சிறுகதை, கவிதை என்று வருவதற்கு முன்பு எழுதப்பட்ட ஒரு வடிவம் எப்படி இருக்கும்? அது ஒரு பாடலாக இருக்கும். சலம்பகம் ஒரு பாடல். சலம்பகம் இலக்கியத்தில் ஒரு புதுவடிவம் அல்ல. ஆனால் கவிதையின் ஒரு புதிய போக்கு.

சர்ரியலிசத்துக்கும் 'சலம்பக'த்தில் இருக்கும் படைப்புகளிற்கும் இடையில் நிறைய ஒற்றுமை இருப்பதாக சொல்கிறீர்கள். இதில் அடிப்படையில் ஒரு வித்தியாசம் இருக்கிறது. சர்ரியலிஸத்தின் படைப்புகள் நியாயப்படுத்தப்பட முடியாதவை. ஆனால் 'சலம்பக'த்தில் உள்ள ஒவ்வொரு வரியும் அரசியல் ரீதியாகவோ சமூகரீதியாகவோ நியாயப்படுத்தப் படக்கூடியவை.

'அதிர்ச்ச' இரு மாத இதழ்
தேவதாசன்:

புலம்பெயர் சூழலில் நிறைய பத்திரிகைகள் வந்து நின்று போயுள்ளன. இயந்திரமயமான வாழ்க்கை, நேரமின்மை, கருத்து முரண்பாடுகள் இப்படி ஏதோ ஒரு காரணத்தால் அல்லது இவை எல்லாமும் சேர்ந்து ஒரு பத்திரிகைத் தொடர்ச்சி பேணப்பட முடியாமல் போயுள்ளது. எல்லாப் பத்திரிகைகளும் ஊடகங்களும்

ஒரு பக்கச் சார்பாகவே இயங்கிக் கொண்டிருக்கிற நிலையில் மாறுபட்ட கருத்து சிந்தனைகளைச் சொல்வதை மறுக்கின்ற நினைவுப் போக்கில் இருந்து மாறுபட்டு அவற்றை மக்கள் மன்றத்தில் முன்வைத்து அலசிப் பார்க்க வேண்டும். இதனால் இந்தியாவிலும் பிரான்சிலும் இருக்கின்ற எமது தோழர்கள் 'அநிச்ச' என்னும் இதழைக் கொண்டு வர எண்ணியுள்ளோம்.

தமிழ்த் தேசியம்தான் தமிழ் மக்களின் அனைத்து விடுதலைகளையும் வென்றெடுக்க முடியும் என்கிற கருத்தியல் இன்றைக்கு உலகம் முழுவதுமாக பரப்பப் பட்டுள்ளது. அதை நாங்கள் மறுக்கிறோம். அதை மறுத்துச் சொல்வதற்கோ எந்தப் பத்திரிகையும் இன்று வந்து கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் அதை மறுக்காத விடயத்தைக் கூற நூற்றுக் கணக்கான ஊடகங்கள், பத்திரிகைகள் உலகெங்கும் வந்து கொண்டிருக்கின்றன. இதனால் மாற்றுக் கருத்துக்கான ஒரு களமாக 'அநிச்ச' வரவேண்டியதன் அவசியத்தை நாம் உணர்ந்தோம். தலித் மக்களுடைய பிரச்சனையை முன்வைப்பதற்கு இன்று எந்தப் பத்திரிகைகளும் இல்லை. மாற்று ஊடகங்கள் என்று ஒன்றிரண்டு இருந்தாலும் தலித்தியம் பற்றிய விடயங் களை முன்வைப்பதில்லை. நாங்கள் இவற்றை உறைக்கச் சொல்ல வேண்டிய வரலாற்றுக் கட்டா யத்தில் இருக்கிறோம்.

'தலித்துகள் தமிழர்கள்' என்ற கோட்பாட்டுக்குள் என்னால் வரவே முடியாது. தலித் சமூகங்களும் இந்து ஆதிக்க சீரழிவுக் கலாச்சாரங்களினால் உள்வாங் கப்பட்டு விட்டன. ஆண்-பெண் சமத்துவத்துடன் உழைத்து வாழ்ந்த சமூகங்கள் இன்று ஒடுக்குமுறைக் கலாச்சாரத்தில் வாழ்கின்றன. எத்தனையோ கொலைகள் தமிழ்த் தேசியத்தின் பெயரால் நடந் துள்ளன. இவற்றைத் தட்டிக் கேட்க யாரும் இல்லை. தலித்துகளுக்கென்று ஒரு பாரம்பரியம் இருக்கிறது. பெரும்பாலாக இடதுசாரிக் கருத்தியலோடு இருந்த வர்கள். இருந்து கொண்டிருப்பவர்கள். எந்தக் காலகட்டத்திலும் தமிழர் விடுதலைக் கூட்டணி போன்ற முதலாளித்துவக் கருத்தியல்களைக் கொண்ட அமைப் புகளுடன் தங்களை அடையாளம் கண்டதில்லை. ஆனால் ஆயுதப் போராட்ட காலகட்டத்தில் EPRLF போன்ற இயக்கங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். அது தவிர்க்க முடியாதது. ஏனெனில் அவர்கள்தான் அந்த மக்களிடம் சென்று அவர்களின் பிரச்சினைபற்றிப் பேசினார்கள். பின்னர் இந்த அமைப்பு திட்டமிடப்பட்டு அழிக்கப் பட்டபோது ஏன் அந்தத் தோழர்கள் கொல்லப் பட்டார்கள் என்பது இன்று வரைக்கும் தெரியாது.

இந்துமதம் இருக்கும்வரையும் இப்பிரச்சினை களுக்குத் தீர்வுகாண முடியாது. பொருளாதார சமநிலையெல்லாம் இதற்கு ஒரு தீர்வல்ல.

பெரியாருடைய கருத்துகளை நாங்கள் முன்னி றுத்துகிறோம். யாழ்குடா நாட்டைப் பொறுத்தவரை இது மிகவும் அவசியமாக இருக்கின்றது.

பின்நவீனத்துவம் போன்ற வழிகாட்டல்களையும் அந்த நெறிகளையும் பரிசீலிக்க வேண்டி இருக்கின்றது. அதனாலும் அந்தத் தோழர்களுடன் நாங்கள் கரம் கோர்த்து நிற்கின்றோம். இவைகளிற்கெல்லாம் அடிப்படையில் ஒரு மார்க்சியம் தேவைப்படுகின்றது. ஒரு மார்க்சிஸ்ட்டினால்தான் பெரியாரியத்தையும் பின்நவீனத்துவத்தையும் புரிந்து கொள்ள முடியும்; தலித்தியத்தை ஏற்றுக்கொள்ள முடியும். மார்க்சியம் என்பது ஒரு அடிப்படையான அறிவு. மார்க்சிஸ்ட் டுகளும் பின்நவீனத்துவவாதிகளும் பெரியா ரிஸ்டுகளும் தலித்துகளும் ஒன்று சேர்ந்து நடப்பதன் மூலம்தான் எமது சமூகத்தில் இருக்கக்கூடிய ஒடுக்குமுறைகளை ஒழிப்பதற்கான வாய்ப்புகள் ஏற்படும் என்று கூறுகிறேன்.

இந்தத் தமிழீழம் என்கின்ற விடுதலைப் போராட்டம் ஏன் தோற்றுப் போனதென்றால் அதன் தலைமை தலித் மக்களிடம் இல்லாமற் போனதனாலேயே - மேலாதிக்க சக்திகளின் நலன் குறித்த போராட்டமாக இருப்ப தனால்.

ஒடுக்கப்பட்ட எந்த இனம் போராடவில்லையோ எந்த இனம் தலைமை தாங்கவில்லையோ அது தோல்வியடையும். போராட்டத்தை எப்படி வெற்றி யடையச் செய்ய முடியும் என்றால் ஒரு தலித், ஒரு முஸ்லிம், ஒரு கிழக்கு மாகாணத்தான், தேவைப்படின் ஒரு யாழ் மேலாதிக்க சாதியைச் சேர்ந்த ஒருவனும் இணைந்து ஒரு கூட்டுத் தலைமை உருவாக்க வேண்டும். ஆனால் யாழ் மேலாதிக்கசாதியின் தலைமைத்துவத்தில் இருந்துகொண்டு நாங்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வென்றெடுப்போம் என்று சொல்வது பச்சைப் புளுடா!

போராடும் வாழ்வு:

மலையக மக்களின் தேசிய உருவாக்கம் பற்றிய ஒரு பார்வை

தலைமை : சிவராஜன்

பரா:

கொத்தடிமைகளாகக் கொண்டு வரப்பட்டு இன்றுவரை அந்த வடுக்கள் நீங்காது வாழ்ந்து வரும் அவர்களது வாழ்வு கொடியதுதான்.

தேசியம்-தேசிய உருவாக்கம் பற்றி கன சித்தாந்தங்கள் இருக் கின்றன. எந்த ஒரு மனிதக் குழுவும் ஒடுக்கப்படும்பொழுது அதற்கெ திராக கிளர்ந்தெழுந்து தங்களு டைய உரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஒன்றி ணைந்து போராடும். தேசியத்திற்கு இரண்டு முகங்கள் இருக்கின்றன. ஒன்று முற்போக்குப் பாத்திரத்தை வகிக்கும். அது சுதந்திரம் விடுதலை என்ற பக்கத்தில் இருக்கும். மற்றது பிற்போக்குப் பாத்திரத்தை வகிக்கும். அது தனக்கென்று ஒரு வரலாற்றைத் தேடும். பிறகு வரலாற்று வீரர்களை உருவாக்கும்.

தென்னிந்தியாவில் இருந்த வறுமைப்பட்ட மக்களை முகவர்கள் மூலமாக இங்கு கொண்டு வந்தார்கள். கொண்டு வரும்போது எஞ்சியவர்

களைவிட இறந்தவர்களே அதிகம். இவர்கள் மாட்டுத் தொழுவம் போன்ற அறைகளுக்குள் அடைக்கப்பட்டிருந்தார்கள். இந்தியாவில் இருக்கின்ற சாதிப் படிநிலையை மாற்றாத முறையில் அப்படியே இங்கு கொண்டு வந்தார்கள். கங்காணிகள் இடைநிலைச் சாதிகளாக இருந்தார்கள்.

துண்டு முறையில் தொடங்கிய அடிமைத்தனம் சிறிது சிறிதாக தொழிற்சங்கப் போராட்டங்களினால் தளர்த்தப்பட்டது. பாடசாலைக் கல்வி வாய்ப்புகள் வழங்கப்பட்டது, அதாவது எழுத வாசிக்க. இது பெரிய தொரு மாற்றத்தை ஏற்படுத்தியது. வாக்களிக்கும் உரிமை கேட்டுப் போராடினார்கள். இது ஒரு அரசியல் போராட்டத்திற்கு இவர்களை இட்டுச் சென்றது. ஆரம்பத்தில் தொழிற்சங்கங்கள் இருந்தாலும் அவை அங்கீகரிக்கப்படவில்லை. பின்னாளில் அவை அங்கீகாரம் பெற்றன.

இவர்கள் சிங்களக் குடியேற்றங்களுக்கு (கிராம விஸ்தரிப்பு) எதிராகப் போராடினார்கள். இது தொடர்பாக மேற்கு மாகாணமும் மலையக மக்களும் சேர்ந்து ஹர்த்தால் நடத்தினார்கள். இதில் இலங்கைத் தமிழர்கள் பங்குபற்றவில்லை. இவர்களின் எந்தப் போராட்டங்களிலும் மற்றத் தமிழர்கள் சேர்ந்து போராடியதாக வரலாறு இல்லை. தனித்துவமாகத்தான் போராடி இருக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தவர்கள் கல்வியை மூலதனமாகக் கொண்டவர்கள். இதனைக் கொண்டு ஆட்சியில் இருக்கும் அரசுகளுக்கு சேவகம் செய்தார்கள். மலையகத்திலும் தங்களுடைய பணிகளைச் செய்து அங்கு கிடைக்கும் பணத்தை தோட்டங்களில் முதலீடு செய்தார்கள். ஆங்கிலேயர்களிற்கு அடுத்தபடியாக முதலாளிகளாக இந்த யாழ்ப்பாணத்தவர் இருந்தார்கள்.

மாறி மாறி வந்த ஒப்பந்தங்கள் எதுவும் நிறைவேற்ற முடியாததை இவர்கள் தாங்கள் நாடற்றவர்கள் என்ற நிலையில் இருந்து செய்த வேலை நிறுத்தப் போராட்டத்தால்தான் கொண்டு வர முடிந்தது.

முஸ்லிம் மக்களும் தேசிய இனப் பிரச்சினையும்

- ஒரு வரலாற்றுப் புரிதலை நோக்கி

தலைமை: யோகரட்ணம்

எஸ். எம். எம். பஷீர்:

முஸ்லிம் மக்கள் என்று சொல்லுகின்ற பொழுது இவர்கள் ஒரு தேசிய இனமா? அல்லது தமிழ் மக்களும் சிங்கள மக்களும் மாத்திரம்தான் ஒரு தேசிய இனமா? அல்லது முஸ்லிம் மக்கள் தமிழ் மக்களுக்குட்பட்ட வெறும் குழுவா?

ஸ்டாலினியத் தத்துவத்துக்குட்பட்டு தேச வரையறைக்குட்பட்ட வரைவிலக்கணங்களுக்குள் தமிழர்களாக கருதப்பட வேண்டியவர்களா? என்ற ஒரு கேள்வி இருக்கின்றது. இது என்றுமே சர்ச்சைக்குரியதாக இருந்து வருகின்றது. 'இலங்கைச் சோனகர்களின் இனவரலாறு' என்ற புத்தகத்திலே, சேர் பொன் ராமநாதன் 1885ம் ஆண்டு முஸ்லிம்களை 'இஸ்லாமியத் தமிழர்கள்' என்று கூறியதற்கு எதிராக குரல் கொடுத்து தங்களை 'இலங்கைச் சோனகர்கள்' என்று சொல்ல வேண்டும் என்ற ஒரு நிலைப்பாடு எடுக்கப்பட்டது. சிறுபான்மை இனத்தின்மீது இன்னொரு இனம் மேற் கொண்ட ஒரு பாரதூரமான விஷயம் வடக்கில் இருந்து முஸ்லிம்களின் வெளியேற்றம் - இது வரலாற்றில் பதிவாகியிருப்பது ஒரு துரதிர்ஷ்டமான உண்மை.

இந்தப் பின்னணியில் இருந்து பார்த்தால், படிமுறையாக வடகிழக்கில் வாழும் முஸ்லிம் மக்கள் தங்களைத் தமிழ் மக்களுடன் இணைத்துக் கொண்டு தாங்களும் தமிழ் பேசும் மக்களாக அடையாளப் பட்டார்கள். ஆனால் வேறுபாடுகள் ஏற்பட்டு இப்போது எவ்வாறு அரசியல், சமூகம், பொருளாதாரம் என்று பல்வேறுபட்ட அம்சங்களில் ஊடுருவி தங்களை ஒரு தனித்த தேசிய இனம் என்று வரையறுத்துக் கொள்ளும் அளவுக்கு கூர்மையடைந்திருக்கின்றது.

இவர்கள் இப்படித்தான், ஆகவே நீங்கள் இவர்களை இப்படித்தான் அழைக்கவேண்டும் என்று சொல்லுவதும் அடிப்படையில் மனித உரிமை மீறலாகும். ஒரு சமூகம் தன்னைத்தான் எவ்வாறு அழைப்பது என்பதை அதுதான் தேர்ந்தெடுக்க வேண்டும் அதுதான் சுயநிர்ணய உரிமை.

அடையாளம் எதுவுமே இல்லாத பொழுது மதம் அவர்களுக்கு உடனடி அடையாளத்தை வழங்குகிறது. இப்படி கருத்தியல்ரீதியான பல விளக்கங்கள் உள்ளன.

இவைகளிற்கு அப்பால் முஸ்லிம்கள் தமிழ்க் கட்சிகளில் உறுப்பினர்களாக இருந்திருக்கிறார்கள். அரசியலில் போட்டி இட்டிருக்கிறார்கள் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆளும் கட்சிகளோடு மாறி தங்கள் பதவிகளைத் தக்க

வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற குற்றச் சாட்டும் உண்டு. முஸ்லிம்கள் 'தொப்பி பிரட்டிகள்' என்ற வாதங்கள் முன்வைக்கப்பட்டன. முஸ்லிம்கள் அவமானப்படுத்தப்பட்டார்கள். ஆனால் ஏன் அந்த நிலைக்குப் போனார்கள் அல்லது ஏன் அவ்வாறு ஏற்பட்டது என்பதற்கான அரசியல் காரணங்களைத் தேடவில்லை.

ஒரு ராஜதுரையும் கனகரட்ணமும் கட்சி மாற முடியும் என்றால் ஏன் ஒரு அப்துல் மஜீத் கட்சி மாற முடியாது. அப்படி என்றால் அவர்கள் என்ன பிரட்டிகள். இது ஒரு இனவாதரீதியான சிந்தனை.

என்னதான் தமிழர்களுடன் இணைந்து முஸ்லிம்கள் செயற்படுவதற்கு முன்வந்தாலும்கூட தமிழ்த் தலைவர்கள் அவர்களை முன்னுக்குக் கொண்டு வருவதற்குத் தயக்கம் காட்டினார்கள். இதற்குப் பல உதாரணங்கள் உண்டு. எனவே முஸ்லிம்கள் தாங்கள் புறக்கணிக்கப்பட்டதாக உணர்ந்தார்கள்.

முஸ்லிம் காங்கிரஸின் தோற்றத்துக்குப் பின்னரும் கூட TULFஉடன் பேச்சுவார்த்தைக்கு முற்பட்ட பொழுதும் தமிழ்க்கட்சிகள் எந்த முயற்சியும் எடுக்கவில்லை.

எல்லா சமாதானப் பேச்சுவார்த்தைகளிலும் முஸ்லிம்கள் ஒரு தரப்பினராக இதுவரையும் கருதப்படவில்லை. அவர்களுடைய அரசியல் அபிலாஷைகளை இதுவரை அரசோ அல்லது சம்பந்தப்பட்ட தரப்பினரோ கருத்தில் கொள்ளவில்லை.

இன்றைய காலகட்டத்தில், ஒரு தனித்துவத்தை வரையறுக்கும் நிலைக்கு வந்துள்ள காலகட்டத்தில், இலங்கைக்கான எந்தத் தீர்வுமானது முஸ்லிம்களை உள்ளடக்கியதாகத்தான் இருக்கவேண்டும்.

தான் புறக்கணிக்கப்படுகின்றதென்று தமிழ் சமூகம் கருதியபொழுது அந்த இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தைத் தொடங்கினார்கள். இன்றைக்கு முஸ்லிம்களும் புறக்கணிக்கப்படுவதாக உணரத் தொடங்கி தனித்துவமான ஒரு அடையாளத்தைக் கோரும் நிலையில் இருக்கிறார்கள். இது ஒரு ஆயுதப் போராட்டத்தை நோக்கியும் தள்ளக்கூடும். இதற்கு காலம்தான் பதில் சொல்ல வேண்டும். அப்படி ஒரு நிலை வருவது யாருக்குமே ஆரோக்கியமானதல்ல என்பதை எங்களுக்கு ஏற்கனவேயுள்ள அனுபவங்கள் சுட்டி நிற்கின்றன. எனவே இவையெல்லாவற்றையும் தவிர்ப்பதென்றால் இந்தத் தனித்துவம் கோருகின்றவர்கள் எதுவாகத் தங்களை அடையாளப்படுத்த விரும்புகின்றார்களோ அதுவாக அவர்களை அங்கீகரிக்க வேண்டும். அல்லாது தவிர்த்து ஒரு நெருக்கு வாரத்துக்குள்ளாக்குவார்களானால் அந்த நிலைமை பொது எதிரிக்குத்தான் சாதகமாக அமையும்.

ஒரு மனிதனுடைய அடிப்படை உரிமைகளுக் கெதிராக செயற்படமுடியாது. அவர்களுடைய அரசியல் சுதந்திரத்தை மதிக்கவேண்டும். அந்த அடிப்படையில்தான் முஸ்லிம்களுடைய தனித்துவத் திற்கான அடையாளம் வளர்ந்திருக்கின்றது. இதற்கு மேலும் தினிப்புகள் செய்வது மனித சுதந்திரத்திற் கெதிரானது. "ஒரு தேசம் இன்னொரு தேசத்தை அடக்கும்போது அது தனக்குத் தானே விலங்கு மாட்டிக் கொள்கிறது" - கார்ல் மார்க்ஸ்.

****

முதலாவது நாள் நிகழ்வின் இறுதியில் No More Tears Sister திரைப்படம் காண்பிக்கப்பட்டது. (நேரத்தடங்கல் காரணமாக இறுதிவரை காட்டப்படவில்லை)

****

குறும் திரைப்படம்- வரலாறு அழகியல் அரசியல்

தலைமை: ரஞ்சினி

யமுனா ராஜேந்திரன்:

சினிமாவுடைய வரலாறு என்பது பொதுவாக இரண்டுபேரை அடியொற்றியே இருப்பது. ஒன்று தோமஸ் ஆல்வா எடிசன் - அமெரிக்கா. மற்றது லூமியர் சகோதரர்கள் - பிரான்ஸ். முதல் குறும்படம் 1892ம் ஆண்டு தோம்ஸ் ஆல்வா எடிசனால் உருவாக்கப் பட்டது. அது 2 நிமிடப்படம். இவர் உருவாக்கிய படங்கள் எல்லாம் தனிநபர்களாலேயே வீடுகளில் பார்க்கப்பட்டன. இவர் 2000 குறும்படங்களை உருவாக்கி இருக்கிறார். முதன்முதலாக வெகுமக்கள் பார்க்கக்கூடியதாக ஒரு அரங்கில் திரையிடப்பட்டபடம் லூமியர் சகோதரர்களுடையது. இவர்கள் 1425 குறும்படங்களை உருவாக்கி இருக்கிறார்கள்.

அடுத்த கட்ட வளர்ச்சி, பிரச்சாரத்துக்காக அரசாங்கங்களால் எடுக்கப்படும் விவரணப் படங்கள். வியாபாரரீதியான விளம்பரங்கள் முன்னுக்கு வந்தபோது அவை பின்னுக்குத் தள்ளப்பட்டுவிட்டன.

இந்த விளம்பரங்கள்கூட அற்புதமான அழகியல் தன்மையோடு இருந்ததைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.இதற்கு STELLA ARTOIS பியர் விளம்பரங்களைச் சொல்லலாம்.

அதற்குப் பிற்பாடாக குறும்படங்கள் முகிழ்ச்சியடைந்த காலமாக, கணணி கண்டு பிடிக்கப்பட்டு இன்ரநெற் யுகம் தோன்றியதற்குப்பின்பாக ஒரு முக்கிய

மான காலகட்டம் வருகிறது. இன்ரநெற் யுகத்தில் மிக அதிகமாக குறும்படங்கள் தயாரிக்கப்பட்டன. இவற்றை இன்ரநெற்றிலேயே பார்க்கூடிய வசதி உள்ளது.

Godard என்ற மிகப்பெரிய மேதை ஒரு முறை சொன்னார் : "எப்போது ஒரு பேனாவை அல்லது ஒரு புத்தகத்தை வாங்கக்கூடியதைப் போல இந்தத் திரைப்படத் துறையைப் பயன்படுத்த முடியுமோ அப்போது நான் திரைப்படம் எடுத்துக் கொள்கிறேன்" என்று. அவர் அப்படிக் கூறுவதற்கு கருவிகளின் விலை காரணியாக இருந்தது. இன்று ஒரு மொபைல் போனில் நீங்கள் ஒரு குறும்படத்தை எடுத்து விடலாம்.

இந்தக் குறும்படங்களை காண்பிப்பதற்கு பெரிய திரையரங்குகள் தேவை இல்லை. அதுவும் இன்னொரு விதத்தில் இவற்றை ஊக்குவிக்கின்றது. மதுரையில் கிராமந்தோறும் கல்வியைக் கொண்டு செல்வதற்காக குறும்படங்களை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். யாரும் குறும்படம் எடுக்கக் கூடிய நிலைமை இப்போது வந்திருக்கின்றது.

இவைகள் எல்லாவற்றையும் ஒரு கூடைக்குள் போடலாமா?

அவற்றின் அழகியலுக்கென்று ஒரு விசேட விளக்கம் உள்ளதா?

அவற்றின் நேரத்தைக் கொண்டு பிரிக்கலாமா?

குறும்படம் என்னும்போது அது மிகக் கறாராக வலியுறுத்துவது என்னவென்றால் ஒரேயொரு உணர்வு, ஒரேயொரு சிறிய பிரச்சனை, ஒரேயொரு பொறி. இந்தப் பொறியை நாங்கள் திரையில் சரியாகப் பற்ற வைக்க முடியுமானால் அதை ஒரு குறும்படம் என்று சொல்லலாம். அளவு நிச்சயமாக 20 நிமிடங்களுக்குள் இருக்க வேண்டும்.

இப்போதிருக்கும் குறும் படங்களின் அழகியலை எவ்வாறு விளங்கிக் கொள்வது. எங்களுடைய அனுபவங்களை எடுத்தால் குறும்படங்கள் புகலிடத்திலேதான் அநேகமாகத் தோன்றின. முதலில் பிரான்சிலும் பின்பு சுவிஸ், கனடா, வடகிழக்கிலங்கை, தமிழகத்திலும் இருந்து வந்திருக்கின்றன. வடகிழக்கில் இருந்து கிட்டத்தட்ட 150 படங்கள் வந்திருக்கின்றன. இவற்றுள் பிரச்சாரப் படங்கள் தவிர்த்து கலைத்துவம் அழகியல் சார்ந்து நின்ற படங்கள் என்று மிகச் சிலவற்றைத்தான் சொல்ல முடிகின்றது. இதில் மிக முக்கியமான படைப்பாகக் கருதுவது 'காற்றுவெளி'. சுவிஸில் இருந்து அஜீவனுடைய படங்களைச் சொல்லாம். அஜீவன் தொழில் நுட்பத்தை எட்டிய அளவில் அதனுடைய கதைத் தேர்வு, திரைக்கதை என்பவற்றில் எட்டவில்லை.

இடம் பெற்ற உரைகளின் தெரிவு செய்யப்பட்ட பகுதிகளின் சுருக்கம் இங்கே பதிவாகியிருக்கின்றது.

முழுநீளத்திரைப்படம் என்று பார்க்கும்பொழுது பிரான்சில் இருந்து வந்த 'முகம்' படத்தைச் சொல்ல முடியும். அஜீவனின் 'நிழல் யுத்தம்', அருந்ததியின் 'முகம்' என்பவற்றைத் தாண்டிச் செல்லக் கூடிய படைப்புகள் புகலிடத்தில் இன்னும் வரவில்லை. நல்ல சிறுகதைகளைப்படமாக்குவதற்குரிய படைப்பாளிகள் இங்கு தோன்றவில்லை என்றுதான் சொல்லவேண்டும். தொழில்நுட்பம், திரைக்கதை எல்லாவற்றையும் ஒருவரே செய்து ஒரு நல்ல படைப்பைக் கொண்டு வரமுடியாது. இது ஒரு கூட்டு முயற்சியால்தான் முடியும்.

கனடாவில் இருந்து வந்த படங்களைப் பார்க்கும் போது ஒரு சில படங்களைத் தவிர கருத்தியல், அரசியல் தன்மையற்ற படங்கள்.

ஏழ்மையில் இருந்தும், இன்மையில் இருந்தும், நிராகரிப்பில் இருந்தும் கலைஞன் சுயமாக உருவாகிறான். எவன் வாழ்ந்து பெற்ற அனுபவங்களை மிக உக்கிரமாகச் சொல்கிறானோ அவன்தான் கலைஞன்.

குறும்படத்தை ரசனைக் கண்ணோட்டத்தில் அணுகுவது எப்படி என்று பார்வையாளர்களிடம் ஒரு அனுபவத்தைத் தூண்டுவது, மற்றும் குறும்படங்களை உருவாக்குகிற படைப்பாளிகள்எந்தெந்த அம்சங்களைக் கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும் என்னும் கேள்வியைத் தூண்டுவது என்பது பற்றிய கரிசனை குறும்படத் தயாரிப்பாளர்களிடம் இல்லை.

பெண்மொழி

தலைமை: இன்பா

திலகபாமா:

ஆதிக்க சமுதாயம் எதுவாக இருக்க வேண்டுமென தீர்மானிக்கின்றதோ அதுவாக இல்லாமல் போவதென்பதே பெண்விடுதலையாக நான் நினைக்கிறேன். அந்த வகையில், இதுவரையில் பார்க்கப்படாதிருந்த பெண்ணின் இன்னொரு பக்கம் இன்று ஆணுக்கு நிகராய்ப் பெண் களமிறங்க பார்க்க சாத்தியமாகின்றது. அப்படியான பார்வைகளோடு ஒலிக்கும் புதிய குரல்களை பெண்குரலாக அடையாளம்

காண்கிறேன். அந்தக் குரலும்கூட பெண்மொழி எனும் அடைமொழிக்குள் சிக்கிவிடாத மனித மொழியாக அடையாளம் காணப்படவேண்டும். பாலியல் சுதந்திரம் என்பது சமுதாய சடங்குகளில் இருந்து விடுபடுகின்ற ஒன்றாக இருக்க வேண்டுமே அல்லாது தனிமனி தத்துவம் சார்ந்த தீமையாக மாறிவிடக் கூடாது. மொழி வெறும் சொற்களின் அதிகரிப்பு மட்டுமன்று. உணர்வு களால் வலுப்பெறுகின்றது. பெண்ணியம், தலித்தியம் எனும் சொற்கள் இலக்கியத்துக்குள்ளும் பேதங்க ளைத்தான் உருவாக்கி வருகின்றன. அப்படி அல்லாது காலம் காலமாய் ஒடுக்கப்பட்ட மக்களின் குரல்களாக புரிந்துணர்வோடு அவரவர்களின் மனித இருப்புக் களைச் சொல்லுகின்ற குரல்களாக பார்க்கப்படுவது தான் வேறுபாடுகள் அகன்று பொதுமைக்குள் வர வழிவகுக்கும்.

இலங்கைச் சமூக முரண்பாட்டின் இன்றைய அரசியல்

தலைமை: உதயகுமார்

வி. சிவலிங்கம் :

எனது கருத்துகள் பொருளாதார அரசியல் அடிப்படையில் அமைகின்றன. சமூகம் மாற்றத்திற் குட்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே அணுகு முறைகளும் மாற்றத்திற்குட்படவேண்டும். அப்படி யமையாவிடில் சரியான தீர்வுகளை எட்ட முடியாது. 1978இல் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட திறந்த பொருளாதாரமும் அதற்கு ஏற்றவாறான அரசியல மைப்பும் எவ்வாறு சமூக முரண்பாடுகளைக் கூர்மைப்படுத்தின. மேலும் எங்களுடைய சிந்தனை களை, அணுகுமுறைகளை நிறுவனங்கள்தான் தீர்மானிக்கின்றன. பலமான நிறுவனங்கள் வடிவமைக்கப்படுகின்ற பின்னணியை நாங்கள் தெளிவாக விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

இன்று அரசியல்வாதிகள் படுகொலை செய்யப்படுவதற்குரிய ஒரு சிந்தனை என்னவென்று கேட்டால், அவர்களைக் கொலை செய்தவுடன் பிரச்சினைகளுக்குத் தீர்வு வந்துவிடும் என்று. நிலைமை அப்படியல்ல. ஒரு தத்துவார்த்த அடிப்படையில் கட்டப்பட்டிருக்கும் அரசியல மைப்புக்குள் கட்டுண்டிருப்பவர்கள் அவர்கள். அதைவிட்டு அவர்கள் வெளியில் வரமுடியாது. இதனைப் புரிந்து கொள்ளாதவரை எமது சுய நிர்ணய உரிமைக் கோரிக்கை சுவருடன் முட்டி மோதுவது போன்றதுதான். ஏனெனில் இது வெல்லப்பட முடியாதது.

இறைமை என்பது நிலத்தைக் கட்டுப்படுத்துவதா அல்லது மக்களைக் கட்டுப்படுத்துவதா? ஒருவர் வாக்களித்து பிரதிநிதி ஒருவரைத் தெரிவு செய்தபின் தன்னுடைய இறைமையை இழந்து விடுகின்றாரா? இல்லை. பிரதிநிதி கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றாவிடில் அவரை மீளப் பெற்றுக் கொள்ள முடியும். எனவே மக்களின் அதிகாரம்தான் இறைமையே தவிர, நிலம் அல்ல.

1948-1978 வரை ஒருவிதமான அரசாங்கம் இருந்தது. அதற்குப் பிறகு வேறொரு வகை அரசாங் கமாக மாறி இருக்கிறது. இந்தக் காலப்பகுதியில் ஒரு தமிழ் மனிதனும் ஒரு சிங்கள மனிதனும் எவ்வாறு மாற்றமடைந்து செல்கிறார்கள்? எதில் இறுக்கமாக இருக்கிறார்கள்? 1971இல் ஏற்பட்ட கிளர்ச்சியை அரசாங்கம் எவ்வாறு சந்தித்தது? இவைகளெல்லாம் பாரிய மாற்றங்களுக்கு அரசாங்கத்தையும் உள்ளாக்கி இருக்கின்றது.

எங்களுடைய நாட்டில் உள்ள லிபரல் ஜனநாயக ஆட்சி முறை, இது பிரான்ஸ், பிரித்தானியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் உள்ள ஆட்சி முறையை ஒத்தது. இவர்கள் திறந்த பொருளா தாரத்தை வற்புறுத்துகிறார்கள். தனிமனித சுதந்திரத்தை வற்புறுத்துகிறார்கள். இவர்கள் மனித உரிமை என்று வரையறுப்பது தனிமனித உரிமை யைத்தான். இந்த அடிப்படையில் இருந்துதான் நாங்கள் சுயநிர்ணய உரிமையையும் பார்க்க வேண்டும்.

இன்றைக்கு அரசாங்கத்தை எடுத்தால் நாட்டின் இறைமை விற்கப்பட்டுவிட்டது. ஆனால், தமிழர் களாகியநாம் எங்களிடம் இறைமை இருப்பது போலவும் அதை நாங்கள் பாதுகாப்பவர்கள் போலவும் ஆயிரக்கணக்கான மக்களைப் பலி கொடுப்பதற்கு நாங்கள் தயாராகி வருகிறோம்.

ஏன் இந்தக் கருத்தை நாங்கள் விவாதிக்க முடியாது? அங்குள்ள தொழிலாள நலன்களைத் தீர்மானிப்பவர்கள் வெளிநாடுகளின் NGOக்களும் அங்கு அவர்களுக்காக வேலை செய்பவர்களும்தான். நாங்கள் அங்கு மௌனமாக இருக்கிறோம். ஆனால் இறைமைபற்றிப் பேசுகிறோம்.

அரசாங்கம் இன்றைக்கு தமிழ்மக்களின் பிரச்சனைக்குத் தீர்வு சொல்லவேண்டும் என்றால் அது வெளிநாடுகளின் சிந்தனையில் இருந்துதான் சொல்ல வேண்டிய நிலையில் இருக்கின்றது. தமிழ் மக்கள் மத்தியிலும் சிங்கள மக்கள் மத்தியிலும் ஒரு மாற்றத்தை தேடிய போராட்டம் நடந்து கொண்டிருக்கின்றது. இதை இணைப்பதற்கான ஒரு சக்தி தமிழ் மக்கள் மத்தியில் இன்று இல்லை.

உதாரணமாக, விடுதலைப் போராட்டம் என்று கூறினால் அது மக்களுடைய சுதந்திரம், பொருளாதார விடுதலை என்பவற்றை மையமாக கொண்டிருக்க வேண்டும். திறந்த பொருளாதாரத்தினால் இலங்கையில் ஜனநாயகம் படுகொலை செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது - அப்படி என்றால் அது தமிழர்களுக்கும்தான்.

எங்களுடைய விடுதலைப் போராட்டம் அதற்கான மூலத்தை இழந்து விட்டது. அது இன்று வேறு திசை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. எங்களுடைய சமூகத்தின் மத்தியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சமூகமாற்றத்திற்கான போராட்டத்தில் நாங்கள் பங்குதாரர்களாகாதவரை இன்னும் பலரைப் பலி கொடுக்க வேண்டி வரும்.

எதிர்க்கிறோம் அதனால் இருக்கிறோம்

தலைமை: அருந்ததி

ரஜனி:

அத்து மீறுவோம்
அடங்க மறுப்போம்
அடித்தால் திருப்பி அடி

தன்னெழுச்சியான தலித் விடுதலை இயக்கங்கள்

1990களில் இந்தியாவில் தோன்றின. பொருளாதார விடுதலை பெற்றால் தலித் விடுதலை வந்து விடும் என்று சொல்ல முடியாது. வர்க்கத்தை மாற்றிக் கொள்ளலாம். ஆனால், ஒரு தலித் மாற முடியாது.

இன்றைக்கு தமிழக அரசியலில் ஒரு அழுத்தத்தை ஏற்படுத்தும் அளவுக்கு தலித் இயக்கங்கள் வளர்ந்துள்ளன.

பெண்கள் அமைப்பென்று எடுத்துக் கொண்டால், பெண்களுக்கென்று ஒரு பொதுவான அமைப்பு இருக்க முடியாது. ஏனெனில், தலித் பெண்களுக்கான சாதிய ஒடுக்கு முறை, அரசு ஒடுக்கு முறை என்பன ஏனைய பெண்களுக்கு இல்லை. தத்துவார்த்த ரீதியான பார்ப்பன எதிர்ப்பு, இந்துத்துவ எதிர்ப்பு என்பனவற்றுக்கான போராட்டத்துக்கு ஒரு தனித்துவமான அமைப்புத் தேவை. மார்க் சிஸ்ட் கட்சிகள் sex blind & race blind.

தலித் பெண்ணியத்தை பொதுவாக கறுப்புப் பெண்ணியத்துடன் ஒப்பிட்டுப் பேசலாம்.

தமிழ்நாட்டில் ஏற்பட்ட கொந்தளிப்புக்குக் காரணமான குஷ்பு விடயத்தில் தலித்தியம், பெண்ணியம், தேசியம் எல்லாம் அடங்கியுள்ளது. எந்தத் தேசியமும் வன்முறை சார்ந்தது. தலித் இயக்கம் என்பது ஜாதிய இயக்கம் அல்ல. அது ஒரு மனித உரிமை இயக்கம்.

உலகமயமாதல் என்பது மீளப் பெறமுடியாதளவுக்கு இன்று விஸ்தரிக்கப்பட்டு விட்டது. நிலப் பிரபுத்துவ மதிப்பீடுகளை இல்லாமலாக்குவதற்கு இது ஒரு புறத்தில் வசதி செய்து கொடுக்கிறது.

தமிழ்த் தேசியம் என்பது தலித்திய அரசியலுக்கு எதிரானது. பெரியாரை மறுவாசிப்புச் செய்வது, ஒற்றைக் கலாச்சாரம் உடைபடுவது என்பன இக்கால கட்டத்தின் தேவையாக இருக்கின்றது.

மேலவளவுக் கொலை வழக்குக்கு உதவிநிதியாக குறிப்பிட்டதொகைப் பணம் சந்திப்பில் கலந்து கொண்டவர்களால் வழங்கப்பட்டது.

தமயந்தியின்
'ஆதலினால் காதல் செய்வீர்'
ஒளிஓவியக் காட்சி

யமுனா ராஜேந்திரன்:

புகைப்படம் என்பது நினைவுகளை எடுத்துச் செல்வதாக, வரலாற்றின் சாரத்தை எடுத்துச் செல்வதாக, அதேநேரம் ஒரு கண்காணிப்புக் கருவியாக இருக்கின்றது.

இதை ஒரு புது வடிவத்தில் multimediaவைப் பாவித்து எங்களுக்கு தமயந்தி தந்திருக்கிறார். இவற்றை அத்தியாயங்களாக்கி ஒரு கருத்தமைவாக வழங்கி

இருக்கிறார். இசை கொஞ்சம் நெருடலாக இருக்கிறது.

கிருஷ்ணராஜா:

தமயந்தியின் வளர்ச்சிப் பாதையில் இப்போது என்னால் அவரை ஒரு ஓவியனாகத்தான் பார்க்க முடிகின்றது. வெளி பற்றிய பிரக்ஞை அவரிடம் நிறைய இருக்கின்றது. சில புகைப்படங்களில் perfectionக்கும் அப்பால் சென்று சிதைவுகளுக்குள் ஒரு அழகியலைக் காண முனைகிறார்.

தமயந்தி:

புகைப்படத்தை ஒரு கலையாக உணரும் நிலை எங்களுடைய சமூகத்தில் பெரிதாக இல்லை. அதனை ஒரு கலை வடிவமாக உணர வைப்பதற்கான தேவையை உணர்ந்திருக்கிறேன். அதனால்தான் இந்த புதுவடிவ முயற்சி. இப்போது நீண்ட காலமாக கவிதை எழுதுவதை நிறுத்திவிட்டேன். இப்போது புகைப் படங்களால் கவிதை எழுத முடிகிறது என்ற உணர்வு.

*****

இரு நாள் அமர்வுகளிலும் ஜெயா பத்மநாதன், சுசீந்திரன், தில்லைநடேசன், நாதன், ரஞ்சினி, தேவ தாசன், அமலதாஸ், கிருஷ்ணா, யமுனா ராஜேந்திரன், சுகன், ஞானம், அருந்ததி, ராஜேஸ்வரி பாலசுப்ர மணியம், ஜென்னி, பரா, சிவநேசன், மல்லிகா, விஜி, யோகா புத்ரா, கிருபன், யோகரட்ணம், பஷீர், கலை யரசன், இன்பா, ரஜனி, ஆறுமுகம் ஆகியோர் விவா தங்களில் கலந்துகொண்டு செழுமைப்படுத்தினர்.

இங்குநடைபெற்ற உரையாடல்களை ஒரு தொகுப் பாகக் கொண்டு வரும் உத்தேசமிருப்பதாக இச்சந் திப்பின் ஒழுங்கமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

வாசுகனின் ஓவியங்கள் பார்வைக்கு வைக்கப் பட்டிருந்தன.

நூல் விற்பனை நடைபெற்றது. தமயந்தியின் புகைப்படங்களும் பார்வைக்கும் விற்பனைக்கும் வைக்கப்பட்டிருந்தன.

*****



இந்த 32வது இலக்கியச் சந்திப்பில் (13.11.2005) ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

1. அறமிழந்த கொடிய கொலைக் கலாச்சாரச் சூழலிலும் பண்பாட்டு பாஸிசத்துக்கும் நடுவில் என்றும் இல்லாதவாறு நமது தமிழ் - முஸ்லிம் சமூகங்கள் சிக்கியுள்ளன. கொலையாளிகளுக்கும் வன்முறை யாளர்களுக்கும் பின்னால் தமிழ் - முஸ்லிம் சமூகங்களின் நலனுக்காகப் பாடுபடுவதாகக் கூறும் அமைப்புகளும் இயக்கங்களும் நின்று கொண்டி ருக்கின்றன. அனைத்துக் கொலைகளும் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என வலியுறுத்துகிறோம். அரசு அல்லது புலிகள் அல்லது வேறு எவராவது வழங்கும் கொலைத்தண்டனைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

2. யாழ்ப்பாணம் பொம்மைவெளிப் பகுதியில் வைத்து 'பாலியல் தொழிலாளி' என்ற குற்றச்சாட்டின் பேரால் கொல்லப்பட்ட சகோதரி சாந்தினியின் கொலைக்கு எமது பலத்த கண்டனங்களைத் தெரிவிக்கிறோம்.

3. யோகேஸ்வரி என்னும் சிறுமியின் மீது பாலியல் வதை புரிந்த யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் கணேசலிங்கத்தையும் மற்றும் இது போன்று பெண்கள்மீது பாலியல் வதை புரிவோரையும் நாம் கடுமையாகக் கண்டிப்பதுடன் பாதிக்கப்பட்ட பெண்களுக்கும் சிறுமிகளுக்கும் நீதி வழங்கப்பட வேண்டும் என நாம் வலியுறுத்துகின்றோம்.

4. இலங்கையின் தங்களது தாயக பூமியான வடக்கிலிருந்து பதினைந்து வருடங்களிற்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகளால் பலாத்காரமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்கள் மீளக் குடியேறுமாறு வேண்டுகிறோம். அவர்களுக்கான பாதுகாப்பு, மற்றும் ஜனநாயக உரிமைகளை வழங்குமாறு அனைத்து ஜனநாயக, மனித உரிமைச் சக்திகளையும் கேட்டுக் கொள்வதோடு, இக் கொடிய நிகழ்வுக்காக நாம் மீண்டும் வெட்கித் தலை குனிவதோடு மன்னிப்பும் கோருகின்றோம்.

5.தமிழகத் திரைப்படக் கலைஞர் குஷ்பு கூறிய கருத்துக்களுக்குப் பின்னால் குஷ்புவின் பேச்சுரிமை கருத்துரிமையை மறுத்து குஷ்புவை தமிழ் நாட்டை விட்டே விரட்டுவோம் எனக் கூறியும் குஷ்புவின் கருத்துரிமைக்காக குரல் கொடுப்போரை அச்சுறுத் தியும் குஷ்புமீது பல வழிகளிலும் அழுத்தங்களைப் பிரயோகிக்கும் கட்சிகளையும் அமைப்புகளையும் கலாச்சார அடிப்படைவாதிகளையும் நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.



காத்திருப்பு

புகைப்படம்: தயாநிதி

இதழ் 22



பாரிஸ் மாநகரில்

அறிவாலயம் புத்தகசாலை

PARIS ARIVALAYAM

- மார்க்சியம்
- பெண்ணியம்
- தலித்தியம்
- சூழலியல்
- பின்நவீனத்துவம்
- பெரியாரியம்
- நாடகம்
- நவீன சினிமா
- அரசியல்
- ஈழத்து இலக்கியம்
- போர்க்கால இலக்கியம்
- புகலிட இலக்கியம்
- ஆய்வுகள்
- அகராதிகள்
- வரலாற்று ஆவணங்கள்

அத்துடன்
தமிழக, ஈழ, புலம்பெயர்
சிற்றிதழ்கள்

உங்கள் வாசிப்பை மேலும் வளம்படுத்தும் வெளியீடுகள்,
பாடசாலை, அலுவலக தேவைக்கான உபகரணங்கள்,
தொலைபேசி அட்டைகள்
அனைத்துக்கும்

அனைத்தும் தபால்மூலமும் அனுப்பி வைக்கப்படும்

PARIS ARIVALAYAM
7 RUE PERDONNET
75010 PARIS
FRANCE.

TEL: 01 44 72 03 34
FAX: 01 44 72 03 35

M°: La Chapelle/ Gare du Nord

e-mail: arivaalayam@37.com

வெளியிடுபவர்: ஆர். கிருஷ்ணமூர்த்தி, பிளாட் எண் 7, ஸைப்ரீட் நகர், பாரதியார் சாலை
மேற்கு ஜாப்பாக்கம், பின்கோடு: 603 202

இறுதியாக ஒரேயொரு கவிதை

எனக்குள் புதைந்து போன,
உங்களுக்குள்
விதைக்கமுடியாத எனது
கவிதைகளுக்கு அஞ்சலியாகவும்,
ஒரு முடிவுரைக்காகவும்
இறுதியாக ஒரேயொரு கவிதை

அலைகளோடு
அள்ளுண்டுபோன வார்த்தைகளை
தேடிக் களைத்த சிறுதோணி
அடிபட்டு,
அலவாக் கரையொதுங்கி
பாதி உயிர் சுமந்து,
கருமுகிலின் தும்மலின்
துமித்துணிக்கைகளில்
தொண்டை நனைத்தபடி
இன்னமும் எதற்காகவோ
காத்துக்கிடக்கிறது

அது
ஒரு பயணத்தின் தொடக்கம்
ஒரு பயணத்தின் முடிவு

கருவானத்தின் கனத்தை
கடல் சுமக்கிறது

கடல் கறுப்பென்றும்
வானம் உப்பென்றும்
வாதம் நடத்துங்கள்
கடைவிரித்திருப்போர்.

ஒரு பயணத்துக்கான
முடிப்புக்கும்
இன்னொரு பயணத்துக்கான
தொடக்கத்துக்கும்
எனது சிறுதோணி
காத்துக் கிடக்கிறது

அது
உப்பையும் அறியும்,
கறுப்பையும் அறியும்.
கடலையும் அறியும்,
வானையும் அறியும்.

கழுத்திலும் கால்களிலும்
விலங்கிட்டவர்கள் சொல்லலாம்
கட்டுண்டு கிடப்பதாய்.
கட்டறுக்க நாழிகை
கனதியாய்த் தேவையில்லை.
நாளை நிகழலாம்
அடுத்த
நாழிகையும் நிகழலாம்.

மரக்கோலைப் பறித்தாலென்ன,
அணைபலகை முறித்தாலென்ன
பறித்தவரும் முறித்தவரும்
எக்காளமிட்டு சிரித்தாலென்ன
உடலம் கவிந்திருக்கும்
தோலையுரித்து
உப்புக்காற்றில் உலரவிட்டு
பாயாய் விரித்து
பறக்குமென் சிறுதோணி

இதுதான் எனது நம்பிக்கை
நம்பிக்கைமீதான நம்பிக்கை
இதுதான் எனது சன்னதம்
வாழ்வுக்கும் எனக்குமான சன்னதம்

இறுதியாக ஒரேயொரு கவிதை.
உங்களுக்குள்
விதைக்க முடியாத
அந்தக் கவிதைகளுக்கு
அஞ்சலியாய்.

இனி
பிறப்பெடுக்குமென்
கவிதையெலாம்
முன்போல்
சமரசம் பேசாது
சோகத்தை சுமக்காது
துன்பியல் நாடகமும் நடத்தாது
தீயெனப் பிரவகிக்கும்

துன்பங்களை, தோல்விகளை
வஞ்சங்களை, வாடிக் கிடத்தலை
எரித்து நீறாக்கும்.

பயங்களும்
பாசாங்குகளும்
வேண்டவே வேண்டாம்
பேரலை தாண்டும் வல்லமை போதும்

படகு சிறிதானாலென்ன
பயணம் பெரிது
முடிவற்றதும்கூட.
இந்த முடிவற்ற பயணத்தில்
நிசங்கள் மட்டும்
கை குலுக்கிக் கொள்ளட்டும்.